வரு.74 இல. 21 ★

www.vaaramanjari.lk

/Thinakaran.lk /ThinakaranLK

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

தினகரன்
# வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI
தினகரன் வாரமஞ்சரி

2022 மே 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை May 22 Sunday, 2022

24 பக்கங்கள் 80/-


## அவசரகால நிலை 20முதல் இரத்தானது

ஜனாதிபதி செயலகம் அறிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாடு முழுவதும் அமுல் படுத்தப்பட்டிருந்த அவசர கால நிலை நேற்று முன்தினம் (20) முதல் இரத்தாகி யுள்ளது. கடந்த 06ஆம் திகதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் அவசரகால நிலை பிர கடனப்படுத்தப்பட்டது. 04













காலி முகத்திடலிலுள்ள

## போராட்டக்காரர்களுடன் பிரதமர் நாளை பேச்சு



ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷவை பதவி விலகுமாறு கோரி ஆரம்பிக்கப்பட்டுள்ள காலிமுகத் திடல் போராட்டத்தின் ஆர்ப்பாட் டக்காரர்களுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சமாதானத்தை நாடி யுள்ளார். அதன்படி நாளை திங்க ளன்று காலிமுகத்திடலின் சில பிர திநிதிகளை பிரதமர் சந்திப்பாரென சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார். 04

## SLFP யிலிருந்து மேலும் ஐவர் அரசுடன் இணைவு?

பொதுவெளியில் தகவல்கள் கசிவு



அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா அரசாங்கத்தில் இணைந்துக் கொண்டுள்ளதையடுத்து, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்த மேலும் ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்தில் இணையவுள்ளதாக தக வல்கள் வெளியாகியுள்ளன. மஹிந்த அமரவீர, துமிந்த திஸா நாயக்க, லசந்த அழகியவண்ண, ஜகத் புஷ்பகுமார மற்றும் சாமர சம்பத் தசநாயக்க ஆகியோர் 04

மே 09 வன்முறைகள்

## இதுவரை 1,348 பேர் கைது 638 பேருக்கு விளக்கமறியல்

நாட்டில் கடந்த 09 ஆம் திகதி இடம்பெற்ற கலவரம், அமைதியின்மை தொடர்பாக இதுவரை 1,300 க்கும் மேற் பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரி விக்கின்றனர். அதன்படி இதுவரை 1,348 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்களில் 638 சந்தேக நபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் அறி விக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அவர்களில் 654 பேர் பிணையில் விடுவிக் கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சா ளர் தெரிவித்தார். சந்தேக நபர்களை அடையாளம் 04

## பயண ஆலோசனைகளை முறையாக முன்வையுங்கள்

வெளிவிவகார அமைச்சுக்கு சஜித் ஆலோசனை



வெளிநாடுகள் பலவற்றால் வெளி யிடப்பட்ட பயண ஆலோசனைகள் தொடர்பில் உரிய தரப்பினருக்கு வெளிவிவகார அமைச்சு முறையான விளக்கத்தை வழங்க வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேம தாச தெரிவித்துள்ளார். இதுபோன்ற பயண ஆலோசனைகளை விதிக்க வேண்டிய அவசியமில்லை என்பதை அனைவரும் ஒன்றிணைந்து வெளிநாட்டு தூதரகங்களுக்கு தெரிவிக்க வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார். 04

ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைக்கும் வகையிலான

# '21' ஆவது திருத்த சட்டமூலம் நாளை அமைச்சரவைக்கு

பதவியேற்ற கையுடன் நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ அதிரடி



**நமது நிருபர்**

அரசியலமைப்பின் 21 ஆவது திருத் தச் சட்டமூலம் இறுதிப்படுத்தப்பட்டுள் ளதையடுத்து நாளை திங்கட்கிழமை சட்டமூலம் அமைச்சரவையில் முன் வைக்கப்படும் என நீதி, சிறைச் சாலைகள் மற்றும் அர சியலமைப்பு மறுசீர மைப்பு அமைச்சரான ஜனாதிபதி சட்டத் தரணி விஜேயதாச ராஜபக்ஷ தெரிவித் துள்ளார். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் பதவிப்பிரமா ணம் செய்து கொண்ட அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ, நீதி அமைச்சில் தமது கட மைகளை நேற்று முன்தினம் பொறுப்பேற்றுக் கொண்டார். 04

**புதிய திருத்த சட்டமூலம் நிறைவேறியதும் இரட்டை குடியுரிமை கொண்டோரது பாராளுமன்ற உறுப்பினர் பதவியும் பறிபோகும்**

## சில இடங்களில் எரிபொருள் விநியோகிப்பதில் சிக்கல்

பவுசர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்தால் விநியோகம் நிறுத்தம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



**ஊழியர் பாதுகாப்பு முக்கியமென எச்சரிக்கை**

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நெருக்க டிகளை ஏற்படுத்தல், ஆர்ப்பாட்டங் களைமேற்கொள்ளுதல், 04

## பாராளுமன்றத்துக்கு விடை கொடுக்கவுள்ள அலி சப்ரி?

வெள்ளியன்று மனமுடைந்த நிலையில் உரை



நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடி குறித்து கவலை தெரிவித்துள்ள முன்னாள் அமைச்சர் அலி சப்ரி, இனி ஒருபோதும் பாரா ளுமன்றத்தில் பணியாற்றப் போவதில்லையெனவும் தெரி வித்துள்ளார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் உரையாற் றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். 04

**எங்கள் கருத்து...**

## தேசிய பேரிடருக்கு தோள் கொடுக்க வேண்டிய தருணம்

பொருளாதார நெருக்கடி உச்சம் பெற்று வந்த சமயத்தில் பிரதமராக ரணில் பதவியேற்கலாம் என்ற தகவல் முகிழ்ந் தது. அவர் பதவி ஏற்றதும், ராஜபக்ஷ குடும்பத்தைக் காப் பாற்றுபவர் என்றுதான் முன்னரேயே சொல்லி விட்டோமே என்று பல அரசியல்வாதிகள் அடித்துச் சொன்னார்கள். சரி, அவர் இச் சமயத்தில் இப்பதவியை ஏற்காது விட்டி ருந்தால் வேறொருவர் வந்திருக்க முடியும் என்ற கேள்வி எழுந்தபோது அந்த எதிர்ப்பு மங்கிப் போனது. பிரதமர் பதவி என்பது ரோஜா மலர்ப்படுக்கையாக இருக்கலாம். ஆனால் அது முள்படுக்கையான பின்னர் அதை விரும்பி ஏற்க ஒருவருக்கு எவ்வளவு துணிச்சல் இருக்க வேண்டும்! இதை உணர்ந்த பின்னர் இந்தப் புதிய அரசுக்கு அவர் குடும்பத்தை காப்பவரா இல்லையா என்பதை எல்லாம் ஒரு பக்கம் வைத்துவிட்டு ஆதரவு அளிப்பதே உண்மையான தேச பக்தி என்பதை அனைத்து அரசியல்வாதிகளும் இன்று உணர்ந்திருப்பதாகவே தெரிகிறது.

கட்சிகள் மத்தியில் கொள்கை வேறுபாடுகளும், தனி மனித வெறுப்பு, விருப்புகளும் இருக்கலாம். ஆனால் தேசிய பேரிடர் ஒன்றின்போது கட்சி அரசியலை மூட்டை கட்டிவைத்து விட்டு தேசிய நலனுக்காக அர்ப்பணிப்புடன் உழைப்பதே உண்மையான அரசியல்வாதிகளின் கடமை யாக இருக்க வேண்டும். தற்போது நாம் எதிர் கொண்டிருக்கும் பிரச்சினை தற்காலிகமானது. 04

கனேடிய பாராளுமன்றத்தில் இனப்படுகொலை பிரேரணை

## பதில் தூதுவரை அழைத்து கடும் எதிர்ப்பு தெரிவிப்பு



அரசின் கவலை, வருத்தத்தையும் தெரிவித்த பீரிஸ்

இலங்கையில் தமிழர் இனப்படுகொலை செய்யப்பட்டதாகக் கூறப் படும் பிரேரணை கனேடிய 04

பிரதமரின் கடிதத்துக்கு சாதகமான பதில்

## சர்வகட்சி அரசாங்கத்தில் ஜீவனுக்கும் அமைச்சர் பதவி

CWC கொள்கையளவில் இணக்கம்



சர்வக்கட்சி இடைக்கால அரசாங் கத்தின் அமைச்சரவையில் அங்கம் வகிக்குமாறு இலங்கை தொழிலா ளர் காங்கிரஸுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள் ளார்.

இதற்கு இ.தொ.கா தரப்பில் கொள் கையளவில் இணக்கம் 04

## எந்த நேரத்திலும் வாக்குமூலம் வழங்கத் தயார்



நாட்டில் கடந்த சில நாட்களுக்கு முன் இடம்பெற்ற வன்முறை சம்பவங்கள் தொடர்பில் பொலிஸாரிடம் எந்த நேரத்திலும் வாக்குமூலம் வழங்குவ தற்கு தான் தயாராக 04

மணல் கொள்ளைக்காரர்களால்

## சிறிதரன் எம்.பிக்கு கொலை மிரட்டல்



கிளிநொச்சி முரசுமோட்டைப் பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்டு வரும் மணல் மாபியாக்களால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனுக்கு கொலை 04

## SJB யிலிருந்து மேலும் சிலர் அமைச்சராகலாம்

கட்சியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ



அமைச்சுப் பதவிகள் மற்றும் சலு கைகளுக்காக ஐக்கிய மக்கள் சக்தி யைச் சேர்ந்த மேலும் சில எம்.பிக்கள் அரசாங்கத்தில் இணைவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக அந்தக் கட்சியின் தேசிய அமைப்பா ளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரி வித்துள்ளார். 04

## இரண்டு கப்பல்களில் ரூ. 02 பில். பெறுமதியான பொருட்கள்

தமிழக மக்களின் நிவாரண உதவி இன்று கொழும்பை வந்தடையும்




இந்திய மக்களால் நன் கொடையாக வழங்கப்படும் இரண்டு பில்லியன் இலங்கை ரூபாவுக்கும் அதிக பெறுமதி யான மனிதாபிமான உதவித்தொகுதி இன்று 04


FUN BLASTER இடமிருந்து
மாதம் முழுவதும் Fun ஆக இருக்க மிகச்சிறந்த UNLIMITED பக்கேஜ்
Facebook WhatsApp மற்றும் YouTube
உடன் மேலதிக டேட்டா*

ரூ.347/- மட்டுமே
மேலதிக வரிகள் இல்லை
செயற்படுத்தல் ரீலோட், MyDialog App அல்லது #678# மூலம்
*1GB Anytime Data மற்றும் 1GB Free Night Bonus உள்ளடக்கப்பட்டுள்ளது
SD (360p) Video தரத்தினை வழங்குகின்றது
4G SIM அட்டையுடன் 4G ஆதரவுடன் கையடக்கத் தொலைபேசி அவசியமாகும்
Dialog
எதிர்காலம் இன்றே.

# இலங்கைக்கு அமுதூட்ட வந்த தமிழக நிவாரண கப்பல்!

அருள் சத்தியநாதன்




சென்னைக்கு சென்றிருந்த ஒரு சந்தர்ப்பத்தில் இலங்கை துணைத் தூதுவரை சந்திக்கும் வாய்ப்பு கிட்டியது. உரையாடிக் கொண்டிருந்த போது, இலங்கை சிங்கள சமூகம் தமிழகத் தமிழ்ச் சமூகத்தைத் தவறாக புரிந்து வைத்திருப்பதைப் போலவே தமிழகத்திலும் சிங்களவர்களை பேய் பூதம் போல நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று அவரிடம் கூறினேன். அவர் அதை ஏற்றுக் கொண்டார். புரிந்து கொள்ளாமை தான் பிரச்சினை என்றால் ஏன் தமிழக பத்திரிகையாளர்களை இலங்கைக்கு கூட்டிச் செல்லக் கூடாது? இலங்கையின் பல பகுதிகளுக்கும் அழைத்துச் செல்லலாம்; சாதாரண சிங்களவர்களுடன் பழகச் செய்யலாம்; சிங்களம் பத்திரிகையாளர்களை தமிழ்ப் பத்திரிகையாளர்களுடன் நெருங்கி உறவாடும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தலாமே! இதேபோல சிங்கள ஊடகவியலாளர்களையும் தமிழகம் அழைத்துச் சென்று இதுதான் தமிழகம், இவர்கள் தான் தமிழர்கள் என்பதை உணர்த்தலாம் அல்லவா? என்றேன்.

அவரோ அர்த்த புஷ்டியுடன் புன்னகைத்துவிட்டு என் கேள்விக்கு பதில் சொன்னார்.

"நீங்கள் சொல்வது அத்தனையும் உண்மை. இப்படி ஊடகவியலாளர்களை பழக விட்டால் பல தப்பபிப்பிராயங்கள் களையப்பட்டு விடும். ஆனால் பிரச்சினையே அங்கேதான் இருக்கிறது. அங்கே சிங்கள அரசியல்வாதிகளுக்கும் இங்கே தமிழ்த் தலைவர்மாருக்கும் இவ்விரு சமூகங்களும் தமது தப்பப்பிராயங்களைக் களைந்து தமக்கிடையே புரிந்துணர்வை வளர்த்துக் கொள்வதில் அக்கறை கிடையாது. இரு சமூகங்களுக்கும் இடையே முரண்பாடுகளும், சந்தேகங்களும் நீடிப்பதையே அவர்கள் விரும்புகிறார்கள். அப்போதுதானே இரு பக்கத்திலும் பக்காவாக அரசியல் செய்யலாம்! எனவே அந்த சந்தேகங்களும் முரண்பாடுகளும் தொடரவே செய்யும் பிரதர்!" என்றார் துணைத் தூதுவர்.

தமிழர், சிங்களவர் என்ற பாகுபாடு அல்லது இழிவுபடுத்திப் பார்ப்பதென்பது அரசியலில் காணப்படும் அளவுக்கு இலங்கை சமூகத்தில் இல்லை. திட்டமிட்ட ரீதியாக சிங்களத்தரப்பினாலும் தமிழ்த் தரப்பினாலும் ஆண்டாண்டு காலமாக இனப்பாகுபாடு சிந்தனை போற்றி வளர்க்கப்பட்டு வருகிறது. ஆனாலும் கூட வெளிப்படையான வெறுப்புணர்வாக சமூகத்தில் இது காணப்படுவதில்லை. எனவே இனங்கள் இடையே உண்மையாகவே பாகுபாடுகள் கிடையா. அவை அரசியல்வாதிகளினால் அவர்களின் தேவைகளுக்காக உருவாக்கப்பட்டு போஷிக்கப்படுபவை என்பதே நிதர்சனம்.

இப்போது காலிமுகத்திடலில் நடைபெற்றுவரும் கோட்டா கோகம தொடர் ஆர்ப்பாட்டம் வெகுஜன அரசியல் சிந்தனையில் பல முக்கிய மாற்றங்களைக் கொண்டுவரும் என எதிர்பார்க்கப்படுகிறது. உறுதிமொழிகளை அள்ளி வீசி, இனவாதக் கருத்துகளை உதிர்ந்து, கூழைக் கும்பிடுபோடுவதால் மாத்திரம் ஒருவரை பாராளுமன்றத்துக்கு அனுப்பும் கலாசாரம் அல்லது மடத்தனத்தின் உச்சத்தை இப் பாராளுமன்றத்தில் பார்த்து வருகிறோம். கோட்டாகம அனேகமாக இக்கலாசாரத்தில் இருந்து, அரசியல்வாதிகளின் பேச்சில் கிறங்கிப்போய் விடும் தன்மையில் இருந்து, வாக்காளர்களை விடுவித்துவிடும் என நம்பலாம். அதே சமயம் சிங்கள உள்ளங்களில் படிந்திருக்கும் இனவாதக் கறையையும் இக் 'கம' அகற்றிவிட வேண்டும். ஏனெனில் இந்நாடு வங்குரோந்து நிலை அடைவதற்கு அரசியல்வாதிகளின் தொடர் சுரண்டல் மட்டும் காரணம் அல்ல; இனப்பிரச்சினை தீர்க்கப்படாமல் இழுத்தடிக்கப்படுவதும் காரணம் என்பதை மறந்துவிடலாகாது.

இந்த இனவாதத்தைப் போலவே போற்றி வளர்க்கப்பட்ட மற்றொரு சிந்தனைதான் இந்திய எதிர்ப்பு வாதம். இதுவும் பள்ளிக்கூடங்களிலேயே வளர்த்தெடுக்கப்படுகிறது. சரித்திர பாடத்தைக் கற்பித்தலின் ஊடாக.

இந்தியாவுக்கு பக்கத்தில் இலங்கை இருப்பதால் பெரியண்ணன் மனப்பான்மையுடன் சிங்கள சமூகம் இந்தியாவை சந்தேகத்துடன் பார்க்கிறது. சோழர் படையெடுப்பில் சிங்கள மன்னர்கள் ஒளிந்து வாழ வேண்டிய காலமொன்றிருந்தது. எனவே, இந்தியா மீண்டும் இலங்கையில் ஊடுருவில் நிகழ்த்தலாம் என்பது அவர்களின் சரித்திரகால அச்சம்.

1971 ஜே.வி.பி ஆயுதகிளர்ச்சிக்கு முன்பாக அந்த இயக்கம் சிங்கள இளைஞர்களுக்கு அரசியல் விழிப்புணர்வு வகுப்புகளை நடத்தியது. அதில் ஒன்று இந்திய விஸ்தரிப்பு வாதம். இந்தியா இலங்கையின் மீது ஒரு கண் வைத்திருக்கிறது. அதன் பார்வையில் மாற்றம் கிடையாது. இலங்கையில் வசிக்கும் நாடற்றவர்களான பத்துலட்சம் தமிழ் வம்சாவளி தோட்ட மக்கள் இன்றைக்கும் இந்திய விசுவாசிகளாகவே வாழ்ந்து வருகின்றனர். இந்திய ஊடுருவல் நிகழுமானால் இவர்களை இந்தியா பயன்படுத்திக் கொள்ளமுடியும் என்பது இந்திய விஸ்தரிப்பு வாதத்தில் ஒரு பகுதி. அந்த ஆயுத எழுச்சி வெற்றிபெற்றிருந்தால் தோட்டத் தமிழர்களின் கதி அதோகதியாகி இருக்கலாம்.

அதன் பின்னர் இலங்கை இந்திய சமாதான உடன்படிக்கையடுத்து இந்திய சமாதானப் படை இலங்கைக்கு அனுப்பப்பட்டது. உடனே பலருக்கும் இந்திய விஸ்தரிப்பு வாதம் தான் நினைவுக்கு வந்திருக்கும். ஆனால் இந்தியாவுக்கு இலங்கையில் நீடித்திருக்க வேண்டும் என்ற எண்ணம் இருக்கவில்லை. அதன்படியே திரும்பப் படைகளை அழைத்துக் கொண்டுவிட்டது இந்தியா. 1988 89 ஜே.வி.பி ஆயுத கிளர்ச்சியின்போதும் இந்திய நிறுவனங்களின் மீது தாக்குதல், இந்திய பண்டங்களை வாங்க வேண்டாம் என்ற பிரசாரம் என்பனவற்றை இந்திய எதிர்ப்பு மனப்பான்மைக்கு உதாரணமாகச் சொல்லலாம்.

இந்தியா பக்கத்து நாடாக இருந்தாலும், அவ்வப்போது உதவிகள் செய்து வந்தாலும், மொழி, கலாசாரம், பாரம்பரிய தொடர்புகள் என்பன மிக நெருக்கமாகக் காணப்படுகின்ற போதிலும் இந்தியா மீது சந்தேகக்கண் கொண்டு பார்ப்பது தொடரத்தான் செய்கிறது. இதற்கு இங்கே காணப்படும் அரசியல் சூழல்களும் முக்கியக் காரணம். சிங்கள மக்களுக்கு இந்தியாவுக்கு அண்மித்து இலங்கை காணப்படுவது அல்ல பிரச்சினை. இந்தியாவின் தென்பகுதியில், இலங்கையின் வட முனைக்கு அருகே ஏழரைக் கோடி தமிழர்கள் தனி மாநிலமாக வசித்து வருவதும் அவர்களின் தொகுப்புள் கொடி உறவுகளாக இலங்கையில் தமிழர்கள் வாழ்ந்து வருவதும்தான் அவர்களின் சந்தேகங்களும், அவ நம்பிக்கையும் தொடர்வதற்கான காரணம்.

இதை படிப்படியாக நீக்கலாம் என்றால் அரசியல்வாதிகளுக்கும் உயர் அதிகாரிகளுக்கும் அதில் ஆர்வம் இல்லை. இலங்கையில் இனப்பிரச்சினையைத் தீர்க்காமல் வைத்திருப்பதன் மூலம்தானே பிரதான சிங்கள மற்றும் தமிழ்க்கட்சிகள் தமது அரசியலை வெற்றிகரமாக நடத்தி வருகின்றன!

புத்தர் இந்திய பெரு நிலப்பரப்பில் தோன்றியவர் என்ற வகையில் எல்லா முக்கிய பௌத்த புனித தலங்கள் வட இந்தியாவிலேயே அமைந்துள்ளன. பெரும்பாலான இலங்கை பௌத்த யாத்திரிகர்கள் இப்பௌத்த யாத்திரையை சென்னையில் இருந்து ஆரம்பிப்பதே வழமை. சிங்கள மொழி இந்திய மொழிகளின் புணர்ச்சியால் உருவானது. மகாவம்சத்தின்படி விஜயனின் வருகையின் பின்னர் உருவான மொழி. ஒரு மொழி உருவாகி வளர்ந்து நிலைப்பதற்கு ஆயிரம் ஆண்டுகளாவது செல்லும். அதேபோல சிங்கள கலாசாரம், நடனம், இசை, பண்பாடு, மத நம்பிக்கைகள் மற்றும் கலாசார பண்புகள் என்பனவும் இந்தியாவில் இருந்து பெற்றுக் கொண்டவையே. இவ்விடயத்தில், தமது ஆதாரங்களை வட இந்தியாவில் இருந்தே

## இலங்கையில் இந்திய எதிர்ப்பு சிந்தனை எப்படித் தோன்றி வளர்ந்தது?

பெற்றுக்கொண்டதாக சிங்கள அறிஞர்கள் ஒத்துக் கொண்டாலும் தமிழர்கள் மற்றும் தமிழில் இருந்து பெற்றவை சொற்பமே என்றுதான் சொல்ல விரும்புகிறார்கள். இதை பாரம்பரிய தமிழ் வெறுப்பு, சந்தேகம் என்பதாகவே எடுத்துக்கொள்ளவேண்டும். இன்னும் ஒரு சின்ன உதாரணம். இந்திப் படங்களையும் பாடல்களையும் வெளிப்படையாகவே விரும்பி ரசிக்கும் சிங்கள மக்கள் தமிழ் சினமாவை விரும்பிப் பார்த்தாலும் அதை வெளிப்படுத்தத் தயங்குவார்கள். ஒரு சிங்களக் குடும்பம் 25 வருடங்களாக தமிழ்க் குடும்பத்துடன் நெருங்கிப் பழகினாலும் தமிழ் பேச்சு மொழியை விளங்கிக் கொள்ளாதவர்களாகவே காணப்படுகின்றனர். இதை பொதுப்படையாகவே சொல்கிறோம். தமிழர்கள் சிங்களத்தை அனாசயமாகக் கையாள்வதைப்போல சிங்களவர்களால் தமிழ்பேச முடிவதில்லை என்பதற்கு அவர்களிடையே நீண்டகாலமாகவே வளர்த்தெடுக்கப்பட்டுள்ள தயக்க உணர்வு தான் காரணமோ தெரியவில்லை.

1970 77 காலப்பகுதியில் இந்தியத் தமிழர்கள் மீதான வெறுப்பை வெளிப்படையாகவே பார்க்க முடிந்தது. அக்காலத்தில் தற்காலிக வதிவிடவிசா (Temporary Residential visa) பெற்று பல இந்திய நாட்டு வர்த்தகர்கள் இலங்கையில் வர்த்தகம் செய்துவந்தனர். அக்காலத்தில் இலங்கை வானொலி வர்த்தக சேவையில் ராஜா பீடி, கல்கி பீடி, ஐந்து பூ பீடி, சொக்கலால் ராம்சேட் பீடி ஆகிய பீடிக் கம்பனி விளம்பரங்கள் அடிக்கடி ஒலிபரப்பாகும். இவர்கள் வட இந்தியர்கள். போத்தல் வர்த்தகம் முதல் இறக்குமதி வர்த்தகம்வரை பெரிதும் சிறிதுமாக பல தமிழ் வர்த்தகர்கள் தொழிலில் ஈடுபட்டிருந்தனர். இவர்கள் இலங்கையின் பொருளாதார வளத்தை சுரண்டி இந்தியாவுக்கு எடுத்துச் செல்வதாக சிங்கள மக்கள் நம்பவைக்கப்பட்டனர். அக்காலத்தில் நாடற்றவர் நிலை காணப்பட்டதால் ஒருவர் தனக்கு பிடிக்காத ஒருவர் மீது பொலிசில், இவர் திருட்டுத்தனமாக இலங்கை வந்தவர் என்று புகார் கொடுத்தால் அவரை கைதுசெய்து கொம்பனி வீதி முகாமில் தள்ளி விடுவார்கள். ஏனெனில் மிகப்பல இந்திய வம்சாவளியினரிடம் தான் இலங்கைப் பிரஜைதான் என்று நிரூபிப்பதற்கான 'கடுதாசி'கள் இருக்கவில்லை. இக்காலப்பகுதியில் தான் 'ஒன்ன பலபங் பெனலா யனவா கள்ளத்தோணிலா' என்ற பைலா பாடல் பிரபலம் பெற்றது அனேகமாக இதைப் பாடியவர் என்டன் ஜோன்ஸ்ஆக இருக்கலாம். இப்பாடலில், எமது வருங்கால முதலாளிகள் இந்தக் கள்ளத்தோணிகள் தான் என்று ஒரு வரி வரும். ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா எழுபதில் பதவிக்கு வந்ததும் இந்த TRP நடைமுறையை நீக்கிவிட்டு இந்தத் தமிழர்களை (இந்திய முதலாளிமார்) இந்தியாவுக்கு திரும்பு அனுப்பிவிட்டார். ஆனால் இன்று சுரண்டல் மூலம் இந்நாட்டை இந்த நிலைக்குக் கொண்டு வந்தவர்கள் இந்தியர்கள் அல்ல, இந்த இலங்கைப் பிரஜைகளே என்பது ஒரு கசப்பான உண்மை.

இந்த வரலாற்றை அதாவது இந்திய எதிர்ப்புணர்வை இங்கே நினைவுபடுத்த வைத்தது தமிழகம் அனுப்பி வைத்திருக்கும் நிவாரணக் கப்பலே!

இலங்கையில் இந்திய எதிர்ப்புவாதம் காணப்படுவதைப் போலவே தமிழகத்திலும் சிங்கள எதிர்ப்புவாதம் நீண்ட காலமாகவே காணப்படுகிறது. ஆரம்பத்தில் கூறியதைப்போலவே சிங்கள எதிர்ப்பு/ வெறுப்பு வாதம் தமிழகத்தில் சிலருக்கு வருமானம், செல்வாக்கு, மற்றும் வாக்குகளைப் பெற்றுத்தரும் ஒன்றாகக் காணப்படுகிறது. இலங்கை தொடர்பான செய்திகள் திரித்து கூறப்படுவது அங்கே சர்வசாதாரணம். இலங்கை உள்நாட்டுப் போர் எரிகிற தீயில் எண்ணெய் வார்த்ததாக அமைந்தது. இலங்கைக்கு உதவ வேண்டும் என்ற தீர்மானம் கூட இலங்கை வாழ் தமிழர்களுக்கு மட்டுமே என்ற அளவிலேயே ஆரம்பமாகி பின்னர் இலங்கையர் அனைவருக்கும் என்றானதை அந்த எதிர்ப்பு வாதத்துடன் இணைத்து பார்க்க வேண்டும்.

(அடுத்த வாரமும் கப்பல் வரும்)

---

# இளமையை சிறையிலேயே தொலைத்த பேரறிவாளன்!

## எஞ்சியுள்ள ஆறு பேரின் விடுதலைக்கான கதவுகளைத் திறந்து விட்டிருக்கும் தீர்ப்பு

சகிதா





*இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலைக் குற்றச்சாட்டில் மரணதண்டனை விதிக்கப்பட்டிருந்த பேரறிவாளன், 31 ஆண்டுக்குப் பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்படும் போது இளைஞராக இருந்த பேரறிவாளன் விடுதலையாகி வெளியே வரும்போது முதுமையடைந்திருக்கிறார். அவருடைய இளமை சிறையில் முடிந்து விட்டது.*

*இதற்குள் ஏராளமான போராட்டங்கள். சட்டரீதியாகவும் சமூக ரீதியாகவும் நடைபெற்றுள்ளன. குறிப்பாக பேரறிவாளனுடைய தாயார் அற்புதம்மாள் நீண்ட பல போராட்டங்களை நடத்தியிருக்கிறார். தன்னுடைய மகனுக்காக அவர் பல நூற்றுக்கணக்கான மனிதர்களைச் சந்தித்திருக்கிறார். பல ஆயிரம் மைல் தூரம் நடந்திருக்கிறார், பயணித்திருக்கிறார். ஏறக்குறைய அவருடைய வாழ்க்கையும் இந்த அலைச்சல்களோடு முடிந்துள்ளது.*

*ஆனாலும் இறுதியில் வெற்றி கிடைத்து விட்டது. நம்பிக்கை வென்றுள்ளது. இந்த விடுதலை, இந்த வெற்றி எல்லாத் துயரையும் அலைச்சல்களையும் மகிழ்ச்சியினால் துடைத்து விட்டது.*

*பேரறிவாளனுடைய விடுதலையை தமிழகம் மகிழ்ச்சியுடன் வரவேற்றுள்ளது. தமிழக முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் தொடக்கம் பல்வேறு அரசியற் தரப்பினரும் இதை வரவேற்றுள்ளனர். சமூக வலைத்தளங்களிலும் பரவலாக வரவேற்பே காணப்படுகிறது. ஊடகங்கள் முதன்மையளித்து பேரறிவாளனின் விடுதலையைக் குறித்து எழுதியும் பேசியும் வருகின்றன.*

*இந்த விடுதலை மாநில அரசின் சிறப்பையும் முக்கியத்துவத்தையும் நிரூபித்திருக்கிறது என்கின்றனர் நோக்கர்கள். காரணம், சி.பி. ஐ (மத்திய அரசு) தொடுத்த வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்டவர்களில் ஒருவரே பேரறிவாளன்.*

*மரண தண்டனையை நீதி மன்றம் பின்னர் ஆயுள் தண்டனையாக மாற்றியபோது – குறைத்தபோது அதற்கான அதிகாரம் மாநில அரசுக்கு வந்து விட்டது. அரசியலமைப்பின் 142 ஆவது பிரிவின்படி மேற்படி குற்றச் சாட்டில் சிறையிலுள்ள எழுவருடைய விடுதலையையும் சாத்தியப்படுத்தும்படிசட்டசபையிலும் அமைச்சரவையிலும் தீர்மானமெடுத்தது தமிழக அரசு. அப்படி எடுக்கப்பட்ட தீர்மானத்தை ஆளுநருக்குப் பரிந்துரைத்தது.*

*இருந்தபோதும் இதில் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் தனக்கு இல்லை என ஆளுநர் ஜனாதிபதியிடம் அதைத் தள்ளி விட்டார். ஜனாதிபதியின் தீர்மானத்துக்காக ஏறக்குறைய மூன்று ஆண்டுகள் காத்திருக்க வேண்டியிருந்தது. இருந்தும் பதில் இல்லை. காரணம், சட்டத்தையும் விட, நீதியையும் விட அரசியலுணர்வும் அரசியல் லாபநட்டக் கணக்கும் மேலோங்கியிருந்ததேயாகும்.*

*இந்த நிலையில் மாநில அரசின் பரிந்துரையின் அடிப்படையில் பேரறிவாளனுடைய விடுதலையை அங்கீகரிப்பதற்கு – ஏற்றுக் கொள்வதற்கு சட்டத்தில் இடமில்லையா என்று மாநில அரசின் சார்பில் கேள்வி எழுப்பப்பட்டது. அந்தக் கேள்விக்கான பதிலே இப்போது பேரறிவாளனின் விடுதலையாகும்.*

*இது சில விசயங்களில் முன்னேற்றத்தையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தியுள்ளது.*

*1. மாநில அரசின் அடிப்படைத் தத்துவம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.*

*2. குற்றத்தில் பங்கோ இல்லையோ ஒருவர் 30 ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் இருந்தது போதும். அவருக்கான தண்டனை இதற்கு மேல் தேவையில்லை என்ற உணர்வைப் பலருக்கும் ஏற்படுத்தியுள்ளது. அதுவே இந்த விடுதலையை எல்லோரும் கொண்டாடக் காரணம்.*

*இதைப்போல ஏனையவர்களும் விடுதலை செய்யப்பட வேண்டும். அவர்களுடைய விடுதலையும் சாத்தியமாகும் என்ற உணர்வும் நம்பிக்கையும் ஏற்பட்டுள்ளது.*

*3. அற்புதம்மாளின் நீண்ட போராட்டம் வெற்றியடைந்திருப்பது பலருக்கும் பெரிய நம்பிக்கையை அளித்துள்ளது. இந்தியச் சிறைகளிலும் இலங்கை போன்ற நாடுகளிலும் இந்த மாதிரி குற்றத்தோடு தொடர்பு பட்டும் தொடர்பற்றும் பலர் பல ஆண்டுகளாக சிறைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களுடைய உறவுகளுக்கு இது பெரிய நம்பிக்கையைக் கொடுத்துள்ளது.*

*4. எந்த நிலையிலும் இந்தியாவில் சட்டமும் நீதியும் வெற்றியடைந்துள்ளது என்பது நிரூபணமாக்கப்பட்டுள்ளது.*

*இப்படிப் பல விசயங்கள் உண்டு.*

*ஆனால், காங்கிரஸும் பா.ஜ.கவும் இதை எதிர்த்துள்ளன. இந்த விடுதலைக்கு எதிராக காங்கிரஸ் சில இடங்களில் போராட்டங்களையும் நடத்தியுள்ளது. பா.ஜ.கவின் மூத்த தலைவர்கள் முதல் அனைத்துத் தரப்பினரும் இதைப் பகிரங்கமாகவே கண்டித்துள்ளனர்.*

*அப்படியென்றால், சட்டத்தைக் குறித்தும் அரசியல் சாசனத்தைக் குறித்தும் இவர்களுடைய நிலைப்பாடு என்ன? புரிதல் என்ன? என்ற கேள்விகள் எழுகின்றன. சட்டத்துக்கும் நீதித்துறைக்கும் அப்பால் தனிப்பட்ட உணர்வுகளும் அரசியல் நிலைப்பாடும்தான் பெறுமானமுடையதா என்ற கேள்வியும் இதனோடு உண்டு.*

*ஏறக்குறைய இதே மனநிலையைக் கொண்டவர்களிற் சிலர் இவ்வாறான நோக்குநிலையில் சில கேள்விகளை எழுப்பி விமர்சனங்களை முன்வைத்துள்ளனர்.*

*“1991ல் ராஜீவ் காந்தி மட்டும் இறக்கவில்லை. அவருடன் சாதாரண மக்களும்,போலீஸாருமாக 19பேர் கொலையுண்டனர்”. இப்படி இறந்தவர்களின் குடும்பங்களின் துயரையும் அவர்களுடைய நிலையையும் இதுவரையில் யாராது சிந்தித்திருக்கிறீர்களா? இவர்கள் என்ன தவறு செய்தனர்? எதற்காகக் கொல்லப்பட்டனர்? இந்தக் குடும்பங்கள் என்ன தவறு செய்தன? எதற்காக அவை இழப்பையும் துயரத்தையும் தாங்கிக் கொள்ள வேண்டும். அவர்களுக்கான நிவாரணம் என்ன? என்பது இவர்களுடைய வாதம்.*

*மேலும் “பூந்தமல்லி நீதிமன்றம், பேரறிவாளன் உள்பட பலருக்கு தூக்குத் தண்டனை விதித்தது. பிறகு அப்பீல் செய்து ஆயுள் தண்டனையாக்கி,இப்போது அதையும் நீக்கி விட்டு விடுவிக்க வேண்டும் என்பது என்பது சரிதானா. சோனியாவே மன்னித்து விட்டார், பிரியங்கா மன்னித்து விட்டார் என்பதெல்லாம் ஒரு வாதமாகுமா?*

*இந்த வழக்கை அரசியலாக்கி, சட்ட மன்றத்தில் குற்றவாளிகளை விடுவிக்க தீர்மானமும் போட்டு நீதியைக் கேலிக் கூத்தாக்கி இருப்பது இன்று யார் மண்டையிலும் ஏறாது. ஏனென்றால் பேரறிவாளன் விடுதலை என்பது இன்று மாஸ் ஹிஸ்ட்ரியா நிலையில் சகலரையும் பிடித்து ஆட்டுவிக்கிறது.சட்டசபையில் தீர்மானம் போட்டு தமிழக சிறையில் உள்ள எல்லா கைதிகளையும் கூட விடுவிக்க முடியுமா? பேரறிவாளனை விட அவர்கள் எந்த விதத்தில் தாழ்ந்தவர்கள்?” என்று கேள்வி எழுப்பியுள்ளார் பத்திரிகையாளரும் எழுத்தாளருமான வண்ணநிலவன் – ராமச்சந்திரன்.*

*இதைப்போல வெவ்வேறு கோணங்களில் இந்த விவகாரம் விவாதிக்கப்படுகிறது. இதனால் இது சட்டம் மற்றும் நீதித்துறையிலும் சர்ச்சைகளையும் விமர்சனங்களையும் உண்டாக்கியுள்ளது. எதிர்காலத்தில் அரசியல் ரீதியாக மேற்கொள்ளப்படும் தீர்மானங்களில் இது பாதிப்பை உண்டாக்கும்.*

(16 ஆம் பக்கம் பார்க்க)

# காலிமுகத்திடலில் போராட்டம் நடத்தியவர்கள் மீது வன்முறை கும்பல் தாக்குதல் நடத்தியது பெருந்தவறு!




## அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவுடன் சந்திப்பு

**நாட்டை பிரச்சினைகளிலிருந்து மீட்டெடுப்பதற்கு அனைவரும் கைகோர்த்து செயற்பட வேண்டும் என்று அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார். நாட்டின் தற்போதைய நிலைமைகள் குறித்து எமக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரித்தார்.**



**கே: புதிய பிரதமர் மற்றும் இடைக்கால அரசாங்கத்தின் மூலம் நாடு எதிர்கொள்ளும் எரியும் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும் என நீங்கள் நினைக்கிறீர்களா?**

பதில்: பொருளாதார நெருக்கடி, அரசியல் நெருக்கடி, சமூகப் பிரச்சினை ஆகிய மூன்றும் நாடு எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினைகளாகும். பொருளாதார நெருக்கடி என்பது நாடு நீண்ட காலமாக எதிர்கொள்ளும் பிரச்சினையாகும். கொவிட் 19 தொற்றுநோய் காரணமாக வெளிநாட்டு கையிருப்பு வெகுவாகக் குறைந்ததுடன், சுற்றுலாத் துறை கடுமையான பின்னடைவைச் சந்தித்தபோது, கடந்த பல ஆண்டுகளாக உருவாகிய பிரச்சினைகள் எம்முன்னால் காணப்படுகின்றன.

இதனால் அத்தியாவசிய உணவுப் பொருட்கள், எரிபொருள் மற்றும் மருந்துப் பொருட்களை இறக்குமதி செய்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. கொவிட்19 தொற்றுநோயைக் கட்டுப்படுத்த செலவழித்த பெரும் தொகைப் பணம் மற்றும் கடன்களுக்காக செலுத்தப்பட்ட பணத்தின் காரணமாக போதிய டொலர் எமது கையிருப்பில் இல்லை. பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில், நாங்கள் கடன்கள் மற்றும் திறைசேரிப் பத்திரங்களைப் பெறவில்லை. ஆனால் 5 ஆண்டுகளுக்குள் அடைக்க வேண்டிய கடனை நாங்கள் செலுத்த வேண்டியிருந்தது. இதனை நாம் ஒரு சாட்டாகச் சொல்லவில்லை. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியேற்றதும், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரச ஊழியர்களுக்கு வாகன அனுமதிப்பத்திரம் வழங்குவதை இடைநிறுத்தவும், வாகனங்கள் மற்றும் அத்தியாவசியமற்ற பொருட்களின் இறக்குமதியை நிறுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

பொருளாதார நெருக்கடியின் தொடக்கத்தை நாங்கள் கண்டதால், நமது வெளிநாட்டு கையிருப்புகளைப் பாதுகாப்பதற்கான முடிவுகள் எடுக்கப்பட்டன. துரதிருஷ்டவசமாக, 2020 இல் கொவிட் 19 தொற்றுநோய் உருவானது. அதன் விளைவாக நமது வெளிநாட்டு இருப்புக்கள் வெகுவாகக் குறைந்தன. சர்வதேச சமூகத்துடன் நெருக்கமாகப் பழகும் புதிய பிரதமர் ரணில் விக்ரமசிங்க இந்த நிலையைப் போக்குவதற்கு சில முயற்சிகளை மேற்கொள்வார் என நம்புகிறோம். இருப்பினும், இது முற்றிலும் தீர்க்க முடியாத ஒரு பிரச்சினை அல்ல.

இரண்டாவதாக, நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை காரணமாக எமக்கு டொலர்களை பெற்றுக் கொள்ளும் வழிகள் தடைப்பட்டுள்ளன. கடந்த சில மாதங்களில் சுமார் 100,000 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வந்துள்ளனர். தற்போது இந்த எண்ணிக்கை சுமார் மூன்றில் ஒரு பங்காகக் குறைந்துள்ளது. சுற்றுலாப் பயணிகளின் தினசரி வருகை 4,000 ஆகக் காணப்பட்ட நிலையில், இது தற்பொழுது 1000 இற்கு கீழ் குறைந்துள்ளது. எரிபொருள் பற்றாக்குறை, சமையல் எரிவாயுத் தட்டுப்பாடு மற்றும் மின்வெட்டு ஆகியவை சுற்றுலாப் பயணிகளின் வருகையை குறைப்பதில் தாக்கம் செலுத்துகின்றன. நாடு தழுவிய போராட்டங்கள் காரணமாக சுற்றுலாப் பயணிகள் பல அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்ததையும் காண முடிந்தது.

**சர்வதேச சமூகத்துடன் நெருக்கமாகப் பழகும் புதிய பிரதமர் ரணில் விக்ரமசிங்க இன்றைய நெருக்கடி நிலையைப் போக்குவதற்கு சில முயற்சிகளை மேற்கொள்வார் என நம்புகிறோம். இது முற்றிலும் தீர்க்க முடியாத ஒரு பிரச்சினை அல்ல**

மிரிஹானவில் உள்ள ஜனாதிபதியின் தனிப்பட்ட இல்லத்தின் மீது போராட்டக்காரர்கள் தாக்குதல் நடத்த முற்பட்ட போது அது உச்சக்கட்டத்தை எட்டியது. இந்தச் சம்பவங்களால் சுற்றுலாப் பயணிகள் வருகை முற்றிலும் குறைந்துள்ளது. முன்னணி சோசலிசக் கட்சி, ஜே.வி.பி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஆகியன இந்தப் போராட்டங்களின் பின்னணியில் உள்ளன. அதை அவர்கள் முகநூலில் பிரசாரம் செய்யும் விதத்தில் பார்க்கலாம். அவர்கள் கைகோர்த்து எங்கள் வீடுகளைத் தாக்க வந்தனர். எனவே, திங்கட்கிழமையும் அதன் பின்னரும் நடந்த கலவரச் சம்பவங்களின் பின்னணியில் சதி இருப்பதைப் பார்க்கிறோம்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியை சமாளிக்கவும், நாட்டில் அமைதியான சூழலை உருவாக்கவும் அரசியல் வேறுபாடுகள் இன்றி அனைவரும் கைகோர்க்க வேண்டும். கொழும்பில் அமைதியான முறையில் போராட்டங்கள் நடைபெற்ற போது கிராம மட்டத்தில் நிலைமை முற்றிலும் மாறுபட்டது என்பதை போராட்டக்காரர்களுக்கு உதவும் மதத்தலைவர்களும் உணர வேண்டும். திங்கட்கிழமை காலிமுகத்திடலில் இடம்பெற்ற சம்பவங்களையடுத்து, பாதாள உலக பிரமுகர்கள் மற்றும் போதைப்பொருள் பாவனையாளர்களின் உதவியுடன் பல அரசியல்வாதிகளின் வீடுகள் மற்றும் சொத்துகள் சிலரால் தீக்கிரையாக்கப்பட்டன. அந்த வீடுகளில் உள்ள சொத்துகளை மற்றவர்கள் சூறையாட முன்வந்து மக்களைத் தூண்டிவிட்டு ஒதுக்கி வைத்தனர்.

> **225 நாடாளுமன்ற உறுப்பினர்களும் தியாகம் செய்ய வேண்டும். முன்னாள் நல்லாட்சி அரசாங்கத்துடன் ஒப்பிடுகையில் நாம் அதிக தியாகங்களை செய்துள்ளோம். நாட்டின் சார்பாக இன்னும் பல தியாகங்கள் இருந்தால் அதைச் செய்ய வேண்டும்**

இந்த வன்முறைச் செயல்களுக்கு எதிராக மக்கள் திரள வேண்டும்.

மூன்றாவதாக, அரசியல்வாதிகள் ஊழலில் ஈடுபட்டார்களா என்ற சந்தேகம் மக்களுக்கு இருந்தால், அவர்களின் சொத்துகளை கணக்காய்வுகளுக்கு உட்படுத்த அனுமதிக்க வேண்டும். பாராளுமன்ற உறுப்பினர்களை கணக்காய்வு செய்யுமாறு கணக்காய்வாளர் நாயகத்தை கேட்குமாறும் நான் பாராளுமன்றத்தில் கோரிக்கை விடுத்தேன். எந்தவொரு அரசியல்வாதியும் மோசடி மற்றும் ஊழலில் ஈடுபட்டிருந்தால், அவர் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்று நான் கருதுகிறேன். 225 நாடாளுமன்ற உறுப்பினர்களும் தியாகம் செய்ய வேண்டும். முன்னாள் நல்லாட்சி அரசாங்கத்துடன் ஒப்பிடுகையில் நாம் அதிக தியாகங்களை செய்துள்ளோம். நாட்டின் சார்பாக இன்னும் பல தியாகங்கள் இருந்தால் அதைச் செய்ய வேண்டும்.

**கே: காலிமுகத்திடலில் அமைதியான முறையில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் திட்டமிடப்பட்ட ஒன்று, அதற்கு அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும் எனவும் எதிர்க்கட்சிகளும் பல்வேறு தரப்பினரும் குற்றம் சுமத்தியுள்ளனர். இது பற்றி உங்கள் கருத்து என்ன?**

பதில்: நாட்டில் ஒரு சம்பவம் நடந்தால் அதற்கு ஆட்சியில் இருக்கும் அரசுதான் பொறுப்பேற்க வேண்டும். அதேபோல், 2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு அப்போதைய ஆட்சியில் இருந்த அரசுதான் பொறுப்பேற்க வேண்டும். எனவே, காலிமுகத்திடலில் இடம்பெற்ற சம்பவங்களுக்கு அரசாங்கம் என்ற வகையில் நாமே பொறுப்பேற்க வேண்டும். காலிமுகத்திடலில் போராட்டம் நடத்தியவர்களை வன்முறை கும்பல் சென்று தாக்கியது முற்றிலும் தவறானது. அவர்கள் செய்தது முற்றிலும் தவறு என்று நாங்கள் கண்டிக்கிறோம். அது நடந்திருக்கக் கூடாது.

பிரதமர் இராஜினாமா செய்யப் போகும் போது அவருக்கு ஆதரவளிப்பதற்காக கட்சி ஆதரவாளர்கள் குழுவொன்று அலரிமாளிகைக்கு அழைத்து வரப்பட்டுள்ளது. அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட ஒரு குழுவினர் காலிமுகத்திடலில் அமைதிப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது தாக்குதல் நடத்த மக்களைத் தூண்டிவிட முயற்சித்தது தவறு. இது தொடர்பான விசாரணைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. சட்டத்தை கையில் எடுத்துக் கொண்டு அப்பாவி மக்களை தாக்க சில பிரிவினர் போதைக்கு அடிமையானவர்களின் துணையுடன் முயற்சிப்பதும் தவறு. அப்படியானால், 2019 உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதல்களால் 300 க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர் மற்றும் ஏராளமான மக்கள் காயமடைந்தனர்.

அச்சம்பவத்திற்குப் பின்னர் மக்கள் மத்தியில் வெறுப்புணர்வை ஏற்படுத்தி, அலரிமாளிகைக்கு மக்களை அழைத்து வந்த பேருந்துகளைத் திரும்பிச் செல்ல அனுமதிக்க வேண்டாம் என்று சிலர் மக்களிடம் கோரியதைக் காண முடிந்தது. இருப்பினும், இந்த இரண்டு சம்பவங்களிலும் அவர்கள் இரு வேறு நிலைப்பாடுகளைக் கடைப்பிடிக்கின்றனர். திங்கட்கிழமையும் அதற்குப் பின்னரும் நடந்த அந்தக் கலவரச் சம்பவங்களுக்குப் பின்னால் ஏதோ இருக்கிறது என்ற சந்தேகம் நமக்கு இருக்கிறது.

திங்கட்கிழமை நடந்த சம்பவங்கள் முற்றிலும் தவறானவை என்றும், இதுபோன்ற வன்முறைச் செயல்களில் ஈடுபட்டவர்கள் அதைச் செய்திருக்கக் கூடாது என்றும் நாங்கள் திட்டவட்டமாக கூறுகிறோம்.

(16ஆம் பக்கம் பார்க்க)




# நாம் அனைவரும் கற்றுக் கொள்ள வேண்டிய பாடமொன்று இன்றைய சூழ்நிலையில் உள்ளது!

சரியான தீர்வுகள் கிடைக்காத துறைகள் தொடர்பில் போராட்டங்கள் எமக்குள் ளன. பொருளாதார, சமூக மற்றும் கலாசார கட்டமைப்பு சிக்கலான தோற்றம் பெற்றுள்ளது. ஜனநாயக கட்டமைப்பின்படி முறையை மாற்றும் முயற்சி காணப்பட்டது. அதன் எதிர்பார்ப்பு நிறைவேறவில்லை. அண்மைக் காலமாக ஏற்பட்ட போராட்டம் மக்களின் கருத்தை எடுத்துக் காட்டுகின்றது. தாங்கள் தெரிவு செய்த அரசாங்கம் மற்றும் மக்கள் பிரதிநிதிகளிடமிருந்து ஆறுதல் கிடைக்காததால் மக்கள் புதிய அரசாங்கம் ஒன்றுக்காக வாக்குகளைப் பயன்படுத்தினார்கள். இறுதியில் முடிவில்லாத எதிர்ப்புகள்.

நீதி மற்றும் நியாயமான சந்தர்ப்பங்களை மக்கள் கேட்கின்றார்கள். கட்சிக்காரர்களுக்கு மாத்திரம் நன்மை செய்யும், ஆதரவாளர்களுக்கு மாத்திரம் நல்லது செய்யும் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் அநீதிக்கு மறுப்பு தெரிவிக்கிறார்கள். அடிக்கடி உருவாகி ஆர்ப்பரிக்கும் போராட்டங்கள் அண்மைக் காலமாக சாதாரண நிகழ்வுகளாக மாறியுள்ளன.

தீர்மானம் மிக்க சந்தர்ப்பத்தின் பின்னர் பெரும் குழப்பம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதனால் ஏற்படுத்தப்பட்ட பாதிப்பு வேறு விடயமாகும். பொதுமக்களின் குழப்பம், போராட்டம் மற்றும் ஆத்திரமூட்டும் செயல்களின் இறுதியில் எம் அனைவருக்கும் கற்றுக் கொள்ள வேண்டிய பாடமொன்றுண்டு. ஜனநாயக ஆட்சிமுறை இதுவரை வந்த பாதையின் சரி பிழை பற்றி கலந்துரையாடல், விவாதம் நடைபெற வேண்டியுள்ளது. அரசியல்வாதிகள் மாத்திரமல்ல சமூக கொள்கையாளர்கள், சிவில் சமூகத் தலைவர்கள், புத்திஜீவிகள் அதன் பல பக்கங்கள் குறித்து நுண்ணிய ஆய்வினை நடத்த வேண்டியுள்ளது. வெற்றிக்கும் தோல்விக்கும் காரணமான பிரிவுகளை வேறுபடுத்த வேண்டியுள்ளது.

ஊழல், செயல்திறனற்ற மற்றும் நீதியற்றது எனத் தெரியும் கட்டமைப்பை அழிப்பது மாத்திரம் போராட்டமாகாது. கொந்தளிப்பு மூலம் எழுப்பப்பட வேண்டிய ஒன்றுள்ளது. கொந்தளிப்பினாலேயே உலகம் மாறுகின்றது. கற்காலம் தொடக்கம் தொழில்நுட்ப காலம் வரை வந்த பாதையில் பாரிய மாற்றங்கள் உருவாகியுள்ளன. அர்ப்பணிப்பின் மூலமே நெருப்பு, சக்கரம் என்பன கண்டுபிடிக்கப்பட்டன. மாறுபடும் கருத்துகளுக்கு ஏற்ப செயல்படாவிட்டால் உலகம் உருண்டையானது என இன்றும் நம்பியிருக்க மாட்டார்கள். ஆகாயத்தில் பயணிக்க எண்ணியிருக்க மாட்டார்கள். கடல் மற்றும் விண்வெளியில் பயணிக்க எண்ணியிருக்க மாட்டார்கள். ஒரு கணத்தில் உலகம் பூராவும் தகவல்களை பரப்பும் தொடர்பாடல் தொடர்பாக ஒருபோதும் கவனம் செலுத்தியிருக்க மாட்டார்கள். தோல்வியடையச் செய்ய முடியாத புரட்சிகரமான கருத்துகளுக்காக உயிரை அர்ப்பணித்த தன்னலமற்றவர்கள் நாம் வாழும் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மக்கள் சமூகத்தை உருவாக்கியுள்ளார்கள்.

திறமை, சாமர்த்தியத்துக்கு ஏற்ப இடம் கிடைக்கும் சமூக முறைமையொன்று நாட்டுக்கு அவசியமாகும். நாம் அவ்வாறான தேவை பற்றி சிந்திக்கும் இடத்திலா இருக்கின்றோம்? கல்வி கற்க பெருமளவு பணத்தை செலவு செய்ய வேண்டிய, அதிகாரம் மற்றும் பணமுள்ளவர்களுக்கு மாத்திரம் சந்தர்ப்பம் கிடைக்கும் கல்விமுறையை இலவசமான ஒன்றாக கருத நாம் பழகியுள்ளோம். அரசாங்கத்தை வேலைவாய்ப்பு வழங்கும் இடமாக நம்புகிறோம். எல்லை இல்லாத வேலைவாய்ப்புக்கான சந்தர்ப்பங்களை வழங்கும் அரசு, சம்பளம் வழங்குவது மக்களிடமிருந்து பெறப்படும் வரியிலிருந்து என்பதை கருத்தில் கொள்வதில்லை. தேசிய வளங்களை பாதுகாப்பது என்ற மாயையில் மூழ்கியுள்ளது. நாட்டைப் பிரிக்கும்,நாட்டை விற்பதாகக் கூறும் கொள்கையை மனதிற்குள் புகுத்திக் கொண்ட அரசியல்வாதிகள் அதில் வாழும் நிலைக்கு மாறியுள்ளது எமக்குத் தெரிவதில்லை. செயல்திறன் மற்றும் உற்பத்தித்திறன் பற்றி கவனம் செலுத்தாது இருக்கின்றார்கள். அரச நிறுவனங்களில் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக பெரும் சிரமம் எடுக்க வேண்டியுள்ளதோடு தொழில்நுட்பத்துக்கு வழங்க வேண்டிய முறைகளைக் கூட மாற்றுவதற்கு எந்த ஒரு முயற்சியும் எடுப்பதில்லை. இதுபற்றி ஏன் புதிதாக சிந்திப்பதில்லை?

இளைஞர்களின் போராட்டம் நியாயமானது, ஆனால் அதில் கொள்கை ஒன்று இருக்க வேண்டும். அழித்த பின்னர் ஏற்படுத்தப்படும் சமூகமுறை என்ன என்பது பற்றிய உரையாடல் அவசியமாகும். அதிகாரவாதத்தை ஒழிக்கும், உற்பத்திக்கு வழிவிடும், தொழில்முனைவு விருத்திக்கான முடிவுகள் என்ன என்பதைப் பற்றிய யோசனைகள் எவை? நிதி நடவடிக்கைகளை மாற்றுவது எவ்வாறு? குறைந்த பட்சம் போக்குவரத்து, சுகாதாரம், கல்வி முறையை புதிதாகத் தயாரிக்கும் நடவடிக்கைகளுக்கான யோசனைகள் இருக்க வேண்டும். தாம் விரட்டும் அரசியல்வாதிகளுக்கு பதிலாக நாளை வரவிருக்கும் புதிய அணியினரும் பழைய முறைகளையே பின்பற்றுவார்களானால் போராட்டத்தால் எதுவித பலனும் இல்லை. இது பற்றி பேசுவதற்கு முதிர்ச்சியடைந்த தலைமை அவசியம். விரைவாக முடிவெடுக்க வேண்டியதோடு முறைகளை பரிசோதிப்பதற்கான கால அவகாசமும் இல்லை. சாரமற்ற, உண்மையற்ற மற்றும் தொலைநோக்கற்ற பொதுஎதிரியை விரட்டுவதற்காக உத்திகளை தயாரிக்க வேண்டும்.

தமிழில்: **வீ.ஆர்.வயலட்**

# தமிழகத்தில் ஒமிக்ரோன் வகை கொரோனா தொற்று

## தமிழக சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது

தமிழகத்தில் ஒமிக்ரான் BA 4 கொரோனா வகை கண்டறியப்பட்டுள்ளதாக அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார். சென்னையில் செய்தியாளர்களை சந்தித்த மக்கள் நல்வாழ்வுத்துறை மற்றும் மருத்துவத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறுகையில்:

சென்னையை அடுத்த நாவலூரில் உள்ள ஒருவருக்கு ஒமிக்ரான் BA 4 வகை தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஒமிக்ரான் BA 4 வகை தொற்றால் பாதிக்கப்பட்டவர் நலமுடன் உள்ளார். தாயாருக்கும் அவரது மகளுக்கும் கொரோனா பெருந்தொற்று பாதிப்பு உறுதியாகி இருந்தது. தாய்க்கும் மகளுக்கும் நடைபெற்ற பரிசோதனையில் உருமாறிய ஒமிக்ரான் வகை தொற்று பாதிப்பு உறுதியானது. தாயாருக்கு ஒமிக்ரான் BA 2, மகளுக்கு ஒமிக்ரான் BA 4 தொற்று பாதிப்பு உறுதியாகி உள்ளது. BA 4 வகை கண்டறியப்பட்ட நபர் குணமடைந்துவிட்டார். அவருடன் தொடர்பில் இருந்த யாருக்கும் தொற்று இல்லை. தமிழ்நாட்டில் கொரோனா, ஒமிக்ரான் உள்ளிட்ட 4 வகையான பெருந்தொற்று பாதிப்பு மட்டுமே உள்ளது. புதிய வகை கொரோனா பரவும் தன்மையில் இல்லை.

ஆப்ரிக்க நாடுகளில் கண்டறியப்பட்ட BA 4 கொரோனா தமிழகத்திலும் பரவியது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மற்ற மாநிலங்களில் ஒமிக்ரான் BA 4 வகை பரவி இருக்கிறதா என்பதை மத்திய அரசு தெளிவுப்படுத்தும். முன்னதாக இந்தியாவில் கடந்த வியாழக்கிழமை பிஏ4 வகை கொரோனா தொற்றின் முதல் பாதிப்பு ஐதராபாத்தில் கண்டறியப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## அவசரகால நிலை...

அவசரகால நிலையை அமுல்படுத்துவதும் நடைமுறைப்படுத்துவதும் பாராளுமன்ற சட்ட விதிகளுக்கு உட்பட்டதுடன், அது நிறைவேற்றப்பட்ட 14 நாட்களுக்குள் ஜனாதிபதியால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும் இச்சட்டம் 14 நாட்களுக்கு மேல் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத காரணத்தினால் அது இரத்துச் செய்யப்பட்டுள்ளது. அதன்படி நாட்டில் அமுல்படுத்தப்பட்டிருந்த அவசரகால நிலை நேற்று முன்தினம் நள்ளிரவுக்குப் பின்னர் நீக்கப்பட்டதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

## சர்வகட்சி அரசாங்கத்தில்...

தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. புதிய அரசில் பொதுஜன பெரமுனவைத் தவிர ஏனைய கட்சிகளுக்கான அமைச்சுக்களை ஒதுக்கும் பொறுப்பு பிரதமரிடமே கையளிக்கப்பட்டுள்ளது. அதன்படியே ஜீவன் தொண்டமானின் பெயரை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பரிந்துரைத்துள்ளார். இதற்கமைய புதிய அமைச்சரவை பெயர் பட்டியலில் ஜீவன் தொண்டமானுக்கும் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அமைச்சுப் பதவியை ஏற்பதற்கு இ,தொ,கா தரப்பு கொள்கையளவில் இணக்கம் தெரிவித்திருந்தாலும், இன்னும் இறுதி முடிவு எட்டப்படவில்லையென கூறப்படுகின்றது.

கட்சி ஒப்புதல் வழங்கும் பட்சத்தில் நாளை திங்கட்கிழமை (23) ஜீவன் தொண்டமான் அமைச்சராக பதவியேற்கக்கூடுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

அவ்வாறு அவர் பதவியேற்பாராயின் சுமார் 17 ஆண்டுகளுக்கு பின்னர் ஐ.தே.கவுடன் இ.தொ.கா. சங்கமமாகவுள்ளமை உறுதியாகிறது.

## இரண்டு கப்பல்களில் ரூ. 02 பில்...

22ஆம் திகதி கொழும்பை வந்தடையவுள்ளது.

9,000 மெற்றிக் தொன் அரிசி, 50 மெற்றிக் தொன் பால் மா மற்றும் 25 மெற்றிக் தொன்னுக்கும் அதிகமான மருந்து வகைகளும் ஏனைய மருத்துவப் பொருட்களும் உள்ளடங்கிய இத்தொகுதி, உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லேயினால் இலங்கை அரசாங்கத்தின் சிரேஷ்ட தலைமைத்துவத்திடம் கையளிக்கப்படவுள்ளன.

கடந்த18ஆம் திகதி தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இந்த உதவிப்பொருட்களை சென்னை துறைமுகத்திலிருந்து கொடியசைத்து அனுப்பிவைத்தார். தமிழக அரசாங்கத்தால் இலங்கைக்கு வழங்கப்படும் 40,000 மெற்றிக் தொன் அரிசி, 500 மெற்றிக் தொன் பால் மா மற்றும் மருந்துப் பொருட்கள் அடங்கிய பாரிய உதவித் திட்டத்தின் கீழ் இது முதற்தொகுதியாக அனுப்பி வைக்கப்படுகின்றது. அத்துடன் இந்த பங்களிப்பானது 5.5 பில்லியன் இலங்கை ரூபாவுக்கும் அதிக பெறுமதியானதென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தற்போது அனுப்பி வைக்கப்பட்டிருக்கும் இத்தொகுதி உதவிப்பொருட்கள் வடக்கு, கிழக்கு, மத்திய மற்றும் மேல் மாகாணங்கள் உள்ளடங்கிய நாடு முழுவதுமுள்ள பயனாளர்களுக்கு இலங்கை அரசாங்கத்தால் விநியோகிக்கப்படும். அத்துடன் சமூகத்தில் பல்வேறு பிரிவுகளையும் சேர்ந்த பயனாளிகளுக்கு இந்த உதவிப் பொருட்கள் வழங்கி வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பல்வேறு அவசர தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக இந்தியாவிலுள்ள தனியார் மற்றும் சமூக அமைப்புகள் பல தமது உதவிகளை இலங்கைக்கு அனுப்பியுள்ளன. இலங்கைக்காக இந்திய மக்களிடமிருந்து கிடைக்கப்பெறும் அபரிமிதமான இந்த ஆதரவு, இவ்வருடம் ஜனவரி முதல் இந்திய அரசாங்கத்தால் இலங்கைக்கு வழங்கப்பட்டிருக்கும் 3.5 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பொருளாதார உதவிக்கு மேலதிகமாக அமைகின்றது.

# இந்தியா வழங்கும் நிவாரணத்தை பெருந்தோட்ட மக்களுக்கும் முறையாக பங்கிட வேண்டும்



ஹற்றன் விசேட நிருபர்

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார பிரச்சினையில் பெருந்தோட்ட மக்கள் பாரிய பாதிக்குள்ளாகியுள்ளனர். ஆகவே இந்தியா பெற்றுக் கொடுத்திருக்கும் உணவு பொருட்களை இவர்களுக்கும் முறையான பங்கீட்டின் மூலம் பெற்றுக் கொடுத்து இவர்களுக்குரிய பாதுகாப்பை வழங்க வேண்டும் என காணி உரிமைக்கான செயற்பாட்டாளர் எஸ்.ரி. கணேசலிங்கம் தெரிவித்தார். சர்வதேச தேயிலை தினத்தினை முன்னிட்டு நேற்று (21) ஹற்றனில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன் போது அவர் மேலும் தெரிவித்ததாவது,...

தெற்காசிய நாடுகளில் தேயிலை தோட்டங்களில் தொழில் புரியும் தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகள் அடங்கிய முறைபாடு ஒன்றினை சர்வதேச தேயிலை தினமான நேற்று (21) ஐக்கிய நாடுகள் சபையிடம் முன்வைக்கப்படவுள்ளதாக தெரிவித்தார்.

இலங்கை, இந்தியா,பங்களாதேஷ் உள்ளிட்ட தெற்காசி நாடுகளில் தேயிலை தோட்டங்களில் வேலை செய்யும் தோட்ட தொழிலாளர்கள் ஒரே மாதிரியான பிரச்சினைகளுக்கே முகம் கொடுத்து வருகின்றனர் அந்நியச் செலவாணியினை தேடித்தரும் இவர்களின் அடிப்படை பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை. இவர்களுக்குரிய உரிமைகள் பெற்றுக் கொடுக்கப்படவில்லை. இது குறித்து அந்தந்த நாடுகளின் தொழிற்சங்கம் மற்றும்,அரசியல்,சமூக செயற்பாட்டாளர்கள் சிவில் அமைப்புக்கள் |ஆகியன இணைந்து சூம் தொழில்நுட்பத்தின் மூலம் கலந்துரையாடி நேற்று (21) திகதி ஐக்கிய நாடுகள் சபையிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

## SJB யிலிருந்து மேலும்...

ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த ஹரீன் பெர்னாண்டோ, மனுஷ நாணயக்கார ஆகியோர் அமைச்சர்களாக பதவியேற்றுக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இதுவரை 1,348 பேர் கைது ...

காண்பதற்கு உதவி செய்தமைக்காக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொதுமக்களுக்கு நன்றி தெரிவித்தார். அமைதி போராட்டத்தின் மீதான தாக்குதல்களை அடுத்து 70 க்கும் மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட குறைந்தது 100 அரசியல்வாதிகளின் வீடுகள் மற்றும் அலுவலகங்கள் தீயிட்டு கொளுத்தப்பட்டன.

அத்தோடு அலரி மாளிகைக்கு அரசு சார்பு போராட்டக்காரர்களை ஏற்றிச் சென்ற பஸ்கள் உட்பட 80க்கும் மேற்பட்ட வாகனங்கள் தீ வைத்து எரிக்கப்பட்டன அல்லது சேதப்படுத்தப்பட்டன.

அலரிமாளிகை, காலி முகத்திடல் போராட்டக்காரர்கள் மீதான தாக்குதல்கள் தொடர்பில் மேலும் சில சந்தேக நபர்களை கைது செய்ய பொலிஸார் மீண்டும் பொதுமக்களின் உதவியை நாடியுள்ளனர்.

## எந்த நேரத்திலும் வாக்குமூலம் ...

இருப்பதாக முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக அத்தியாவசியப் பொருட்களுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டது. அத்துடன், எரிபொருள் பற்றாக்குறையும் ஏற்பட்டது.

இதன் காரணமாக நாடு முழுவதும் நீண்ட நேர மின் வெட்டு நடைமுறைப்படுத்தப்பட்டதுடன், உணவுப் பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலையும் திடீரென அதிகரித்தது.

இதன் காரணமாக நாடு முழுவதும் அரசாங்கத்துக்கு எதிராக மக்களின் போராட்டம் வெடித்ததுடன், ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்டவர்கள் உடன் பதவி விலக வேண்டுமென்ற கோரிக்கையும் வலுபெற்றது.

அரசாங்கத்துக்கு எதிராக ஜனாதிபதி செயலகம் மற்றும் அலரி மாளிகை என்பன முற்றுகையிடப்பட்டு மக்கள் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நிலைமை இவ்வாறிருக்க, கடந்த 09ஆம் திகதி அரசாங்கத்துக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது அரச ஆதரவாளர்கள் தாக்குதல் நடத்தியதை தொடர்ந்து நாடு முழுவதும் வன்முறை வெடித்தது.

இதனையடுத்து பிரதமர் பதவியிலிருந்து மஹிந்த ராஜபக்ஷ விலகினார். மேலும், இந்த வன்முறையின் போது 10 பேர் வரையில் கொல்லப்பட்டதுடன் 100க்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்தனர்.

அத்துடன், ஏராளமான பஸ்களும் ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளும் தீவைக்கப்பட்டன. இதனையடுத்து நாடு முழுவதும் அவசர கால நிலை நடைமுறைப்படுத்தப்பட்டதுடன், ஊரடங்கு உத்தரவும் பிறப்பிக்கப்பட்டது.

தற்போது இந்த வன்முறை சம்பவம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட பலரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

இவ்வாறான பின்னணியிலேயே, இவ் வன்முறை சம்பவம் தொடர்பில் பொலிஸாரிடம் எந்த நேரத்திலும் வாக்குமூலம் வழங்குவதற்கு தான் தயாராக இருப்பதாக முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

## சிறிதரன் எம்.பிக்கு...

அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் நேற்று முன்தினம் மாலை கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றும் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் சட்டவிரோதமாக மணல் அகழ்வுகளில் ஈடுபடும் மண் மாபியாக்களால் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனுக்கு 0764482667, 0771966429, 0775538710, 0766774024 ஆகிய நான்கு தொலைபேசி இலக்கங்களிலிருந்து கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாகவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, முரசுமோட்டை மருதங்குளம் பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வுப் பணிகளில் ஈடுபடுவோருக்கு எதிராக கடுமையாக செயற்பட்டு வந்த கரைச்சி பிரதேச சபையின் வட்டார உறுப்பினர் நந்தகுமாரின் வீடும் நேற்று முன்தினம் இரவு மணல் மாபியாக்களால் சேதமாக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சேதமாக்கப்பட்ட வீட்டை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் நேற்று நேரில் சென்று பார்வையிட்டுள்ளதையடுத்தே இவ்வாறு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

## பயண ஆலோசனைகளை...

பற்றாக்குறையை ஒப்புக்கொண்டு சர்வதேச சமூகங்களுக்கு ஒரு நேர்மறையான செய்தியை தெரிவிக்க வேண்டும். வெளிவிவகார அமைச்சர் ஒரு செயலூக்கமான பாத்திரத்தை ஏற்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

பல வெளிநாட்டு விமான நிறுவனங்கள் இலங்கைக்கான பயணங்களை மட்டுப்படுத்தியுள்ளன. முக்கியமாக திரட்டப்பட்ட நிதியை திருப்பி அனுப்புவதிலுள்ள சிக்கல்கள் காரணமாக மட்டுப்படுத்தியுள்ளன. ஏனைய அமைச்சுக்களுக்கு இணையாக ஒருங்கிணைந்த வேலைத்திட்டத்தை சுற்றுலாத் துறை அமைச்சு வகுக்க வேண்டுமெனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

## SLFP யிலிருந்து மேலும்

அரசாங்கத்தில் இணையவுள்ளதாக தகவல்கள் கசிந்துள்ளன.

நிமல் சிறிபால டி சில்வா அரசாங்கத்தில் இணைந்து, துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சராக பதவியேற்றுக்கொண்டார். மஹிந்த அமரவீரவுக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சு பதவி கிடைக்குமென தெரியவருகிறது.

ஏனைய நான்கு பேரில் மூன்று பேருக்கு இராஜாங்க அமைச்சுப் பதவிகள் கிடைக்க வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்க தீர்மானித்த போதிலும் பதவிகளை பெற்றுக்கொள்வதில்லையென முடிவு செய்திருந்தது. இவ்வாறான நிலையிலேயே அந்த கட்சியை சேர்ந்த மேலும் ஐந்து பேர் அரசாங்கத்தில் இணைந்துக் கொள்ளவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

## போராட்டகாரர்களுடன்...

நாட்டில் நிலவும் முக்கியமான பிரச்சினைகளுக்கு தீர்வு காண அரசாங்கம் ஒரு போர் நிறுத்தத்தையும், நேரத்தையும் தேடும் என்றும் அவர் கூறினார். இது குறித்து அமைச்சர் ஹரின் மேலும் கூறுகையில்,

காலிமுகத்திடல் போராட்டம் தொடரலாம், ஆனால் எதிர்ப்பாளர்களும் வந்து எங்களுடன் ஈடுபட வேண்டும், எனவே அவர்களும் இக் கலந்துரையாடலில் ஈடுபடவேண்டும்.

மேலும் பாராளுமன்ற மேற்பார்வைக் குழுக்களில் இரண்டு எதிர்ப்பாளர்களை இணைத்துக்கொள்ள பிரதமர் விரும்புவதாகவும் தெரிவித்த அவர், புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்கி வருகிறோமெனத் தெரிவித்தார்.

இதேவேளை ஆர்ப்பாட்டக்காரர்களில் சிலர் 225 பாராளுமன்ற உறுப்பினர்களையும் வீட்டுக்கு செல்லுமாறு கோரிக்கை விடுப்பதாகவும் கண்காணிப்புக் குழுக்களில் இணைவதன் மூலம், எதிர்ப்பாளர்களில் சிலர் இறுதியில் புதிய கட்சியை உருவாக்கலாமென்றும் அமைச்சர் ஹரின் மேலும் தெரிவித்தார்.

## சில இடங்களில் எரிபொருள்...

விதிகளை மறித்தல் மற்றும் எரிபொருள் பௌசர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் நடவடிக்கைகள் தொடர்ந்தால் எரிபொருள் விநியோகத்தை நிறுத்த நேரிடும் என மின்சக்தி எரிசக்தி அமைச்சர் கஞ்சனா விஜேசேக்கர தெரிவித்துள்ளார்.

அத்தகைய எரிபொருள் நிலையங்களுக்கு எரிபொருள் விநியோகிக்கப்பட மாட்டாதென்ற கொள்கை ரீதியான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர்

அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு உட்பட நாடு முழுவதும் எரிபொருள் விநியோகம் தொடர்ச்சியாக நடைபெற்று வரும் நிலையில் எரிபொருள் நிலையங்களுக்கு அருகில் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டும் வீதிகளை மறித்தும் நெருக்கடி நிலை ஏற்படுத்தப்பட்டு வருகின்றமை தொடர்பில் அமைச்சுக்கு முறைப்பாடு கிடைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எரிசக்தி அமைச்சில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர்,

எரிபொருள் போக்குவரத்து மேற்கொள்ளும் பௌஸர்களுக்கு திட்டமிடப்பட்ட குழுக்களினால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வருகின்றன. மேற்படி குழுவினர் எரிபொருள் பௌஸர்களை வீதிகளில் மறித்து தமது பிரதேசத்திலுள்ள எரிபொருள் நிலையங்களுக்கு அதனை விநியோகிக்க நடவடிக்கை எடுக்காவிட்டால் பௌஸரை தீ வைத்துக் கொளுத்தப் போவதாக அச்சுறுத்தல் செய்து வருகின்றனர்.

எரிபொருள் விநியோகத்தை முறையாக மேற்கொள்ளுதல் மற்றும் எரிபொருள் பௌஸர் சாரதி மற்றும் ஊழியர்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுவதால் எரிபொருள் விநியோகத்தை நிறுத்த வேண்டியிருக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை நேற்றைய தினம் கொழும்பின் பல்வேறு பிரதேசங்களிலும் திருகோணமலை உள்ளிட்ட வெளி மாவட்ட பகுதிகளிலும் எரிபொருளுக்காகவும் மண்ணெண்ணெய்க்காகவும் சமையல் எரிவாயுவை பெற்றுக் கொள்வதற்காகவும் மக்கள் நீண்ட வரிசையில் காணப்பட்டதுடன் வீதிகளை மறித்து ஆர்ப்பாட்டங்களையும் மேற்கொண்டுள்ளனர்.

இதனால் பெரும் வாகன நெரிசல் ஏற்பட்டது. சில பகுதிகளில் வரிசையில் நின்றவர்களுக் கிடையே மோதல்களும் ஏற்பட்டுள்ளன. (ஸ)

# எங்கள் கருத்து...

## தேசிய பேரிடருக்கு தோள் கொடுக்க வேண்டிய தருணம்...

இந்த அரசும் தற்காலிகமானது. இந்த பிரதமர் பதவியும் தற்காலிகமானதே. நாட்டை தூக்கி நிறுத்தி பயணப் பாதையில் மீண்டும் பயணிக்கச் செய்யும் ஒரு கடினமான முயற்சியிலேயே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தற்போது ஈடுபட்டுள்ளார். இவருக்கு தற்போது உதவுவதை அல்லது இக்கடினமான பணியில் தோள் கொடுப்பதை குடும்பத்தைக் காப்பாற்றும் முயற்சி என்றும் அரசின் இழந்த செல்வாக்கை கட்டி எழுப்பும் சதி முயற்சி என்றும் விஷமத்தனமாக விளக்கமளிப்பது ஒரு மட்டமான அரசியலாகவே பார்க்கப்பட வேண்டும்.

இது நாட்டுக்காக கை கொடுக்க வேண்டிய தருணம். கட்சி அரசியல் செல்வாக்கை கட்டிக் காக்கும் தருணம் அல்ல. அந்த வகையில் ஹரின் பெர்ணான்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகிய பாராளுமன்ற உறுப்பினர்களை ஏனையோர் உதாரணமாகக் கொள்ள வேண்டும். அவர்கள் தாம் கட்சியைத் துறக்கவில்லை. மக்களுக்கான அரசியல்வாதி என்ற வகையில் இக்கட்டான சூழலில் அரசுக்கு கை கொடுக்கவே அமைச்சு பொறுப்புகளை ஏற்றோம் என்று தெரிவித்துள்ளனர். நாட்டுக்காக உழைப்பதுதானே அரசியல்வாதியின் பணி!

ஶ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தன் நிலைப்பாட்டைக் கைவிட்டு அமைச்சு பொறுப்புகளை ஏற்க முன்வரவேண்டும். இந்த அமைச்சு பொறுப்புகளை ஏற்போருக்கு சம்பளம், சலுகைகள் கிடையாது என பிரதமர் ஏற்கனவே அறிவித்துவிட்டார். எனவே இது ஒரு மக்கள் சேவை என்பது வெளிப்படையானது. எனவே இணைவோர் தியாகிகளாகவே பின்னர் பாக்கர்ப்படுவார்கள். அரசுக்கு வெளியில் இருந்து ஆதரவு தருவோம் என்பது வேறு அதே ஆதரவை உத்தியோகபூர்வமாகவும் தன் திறமை,அனுபவத்தை பயன்படுத்தியும் நேரடியாகத் தருவது என்பதுவேறு. சுமந்திரன், மனோ கணேசன், சி.வி. விக்னேஸ்வரன், ரிஸாத் பதியுதீன் போன்றோர் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

## பாராளுமன்றத்துக்கு விடை...

நாட்டின் தற்போதைய வருமானம் 1.4 டிரில்லியன் ரூபா எனவும், செலவு 3.4 டிரில்லியன் ரூபா எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேசத்தை நேசிக்கும் மற்றும் முறையாக வரி செலுத்திய ஒரு நல்ல மனிதர் எதிர்காலத்தில் பாராளுமன்றத்துக்குள் நுழையக்கூடிய அடுத்த தலைமுறைக்கு வழி வகுக்கும்படி அவர் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்ற உறுப்பினராக பதவியேற்கும் முன்னர் 42 மில்லியன் ரூபாயை அரசாங்கத்துக்கு வருமான வரியாக செலுத்தியுள்ளேன். நாங்கள் ஐந்து சதம் கூட திருடவில்லை அல்லது எந்த வித மோசடியிலும் ஈடுபடவில்லை.

நான் இங்கு வாதம் செய்வதற்காக வரவில்லை. என் குழந்தைகள் மற்றும் என் பெற்றோருக்காக நான் அச்சமடைகின்றேன் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இந்நிலையில், இனி ஒருபோதும் பாராளுமன்றத்தில் பணியாற்றப் போவதில்லையெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், நாட்டை கட்டியெழுப்புவதற்கும் முன்னெடுத்துச் செல்வதற்கும் அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## '21' ஆவது திருத்த சட்டமூலம்...

அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். தொடரும் அவரின் கருத்தில்,...

19 ஆவது திருத்தச் சட்டத்துக்கு புத்துயிர் கொடுப்பதற்காக 21 ஆவது திருத்தச் சட்டம் விரைவில் நிறைவேற்றப்படுமென்ற உறுதி மொழியையும் வழங்கினார்.

19 ஆவது திருத்தச் சட்டமூடாக ஜனநாயக முறைமை ஏற்படுத்தப்பட்டது. எனினும் 20 ஆவது திருத்தச் சட்டமூடாக அது இல்லாது செய்யப்பட்டது. எனவே, அரசியலமைப்பில் மறுசீரமைப்பை ஏற்படுத்துவதற்கான சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. நாளை திங்கட்கிழமை அமைச்சரவைக் கூட்டத்தில் இது முன்வைக்கப்படும். அதன்பின்னர் இதனை வெகுவிரைவில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றிக் கொள்வதற்கு எதிர்பார்க்கின்றோமென்றும் விஜேயதாச குறிப்பிட்டார்.

'19' இன் நிலை மீண்டும் ஏற்பட்ட பிறகு, நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கான அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்டு, பாராளுமன்ற ஆட்சிமுறைமை பலப்படுத்தப்படும். உயர் பதவி நியமனங்களுக்கான அரசியலமைப்பு பேரவை மீள ஸ்தாபிக்கப்படும். ஜனாதிபதி அமைச்சு பதவிகளை வகிப்பது தடைப்படும்.

அதேவேளை, இரட்டை குடியுரிமை உடையவர்கள் பாராளுமன்ற உறுப்பினராக பதவி வகிக்க அரசமைப்பின் 19 ஆவது திருத்தச்சட்டத்தினூடாக தடை விதிக்கப்பட்டிருந்தது. எனினும், இரட்டை குடியுரிமையுடைய பசில் ராஜபக்ஷ பாராளுமன்றம் வருவதற்காக இந்த சரத்து 20 ஆவது திருத்தச்சட்டத்தினூடாக நீக்கப்பட்டது. பசில் எம்.பியானார். அமைச்சரவையிலும் இடம்பிடித்தார். தற்போது 21 ஆவது திருத்தச் சட்டத்தினூடாக 'இரட்டை குடியுரிமை' தடை மீண்டும் அமுலாகுமென நீதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். எனவே, சட்டமூலம் நிறைவேற்றப்பட்ட பின்னர் பசில் ராஜபக்ஷவின் எம்.பி. பதவியும் பறிபோகும் நிலை ஏற்படும். 2015 பொதுத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்ற கீதா குமாரசிங்க, 19 ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் இரட்டை குடியுரிமை உடையவர் என்பதால், உயர்நீதிமன்ற தீர்ப்பினூடாக எம்.பி. பதவியை இழந்தார். அதே நிலை பசிலுக்கு ஏற்படும் என்பதே நீதி அமைச்சரின் தர்க்கமாகும்.

அரசியலமைப்பின் 21ஆவது திருத்தச்சட்டத்தை நிறைவேற்றிக்கொள்வதற்கு பாராளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலம் அவசியம். எனவே, 'இரட்டை குடியுரிமை தடை' என்ற சரத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு பசில் ராஜபக்ஷவின் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி ஆதரவளிக்குமா? என்ற வினாவும் எழுகின்றது.

## பதில் தூதுவரை அழைத்து...

பாராளுமன்றத்தில் கடந்த 18 ஆம் திகதி ஏற்றுக்கொள்ளப்பட்டமைக்காக இலங்கை அரசாங்கத்தின் உறுதியான எதிர்ப்பையும் ஆழ்ந்த கவலையையும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் நேற்று முன்தினம் 20ஆம் திகதி நடைபெற்ற இலங்கைக்கான கனடாவின் பதில் உயர் ஸ்தானிகர் (Amanda Strohan) அமண்டா ஸ்ட்ரோஹானுடனான சந்திப்பில், பிரேரணையின் அப்பட்டமான பொய்யான உள்ளடக்கத்தை திட்டவட்டமாக நிராகரித்த வெளிநாட்டலுவல்கள் அமைச்சர், 'இலங்கையில் இனப்படுகொலை நடைபெற்றதாகக் கண்டறியப்படவில்லை' ( "it has not made a finding that there was genocide in Sri Lanka." ) என்ற கனடா அரசாங்கத்தின் நிலைப்பாட்டுக்கு அதன் தவறான பொருள் அடிப்படையில் முரண்படுவதாகக் குறிப்பிட்டார்.

குறிப்பிட்ட சட்ட அர்த்தங்களைக் கொண்ட இத்தகைய தொழில்நுட்பச் சொற்கள் எச்சரிக்கையுடனும் பொறுப்புடனும் பயன்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தையும், அத்துடன் கனேடிய அரசாங்கத்தின் சிரேஷ்ட உறுப்பினர்கள் எவரேனும் ஒப்புதலளிப்பதாகத் தோன்றும் ஆபத்துகளையும் அமைச்சர் பீரிஸ் சுட்டிக்காட்டினார்.

இந்தப் பிரேரணையின் தவறான மற்றும் பாரபட்சமான தன்மை மற்றும் இத்தகைய நடத்தையின் விளைவாக பொதுவாக உருவாகியுள்ள இலங்கை மீதான எதிர்மறையான கருத்துக்கள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, பிரேரணையிலுள்ள தவறுகளை சரிசெய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு கனேடிய அரசாங்கத்தை வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

இலங்கைக்கும் கனடாவுக்குமிடையில் ஆறு தசாப்தங்களுக்கும் மேலாக நீடித்து வரும் வலுவான இருதரப்பு உறவுகளின் பின்னணியில் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதற்கு பதிலளிக்கும் விதமாக, பதில் உயர்ஸ்தானிகர் ஸ்ட்ரோஹான், கனடாவின் பாராளுமன்ற பொதுச் சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தனிப்பட்ட உறுப்பினர்களின் பிரேரணையின் கட்டுப்பாடற்ற, சட்டமியற்றும் தன்மையைக் குறிப்பிட்டார். தகுந்த நடவடிக்கைக்காக, அரசியல் முன்முயற்சியின் உள்ளடக்கத்தை கனடாவின் வெளியுறவு, வர்த்தகம் மற்றும் அபிவிருத்தித் திணைக்களத்துக்கு தெரிவிக்கவும் அவர் ஒப்புக்கொண்டார்.

# "நாங்கள் வங்குரோத்து நிலைக்கு வந்துவிட்டோம்!"

## ஸ்கை நீயூசுக்கு பிரதமர் அளித்த செவ்வி



### இலங்கை வரலாற்றில் ஒருபோதும் இப்படி நிகழ்ந்ததில்லை

**ஆர்ப்பாட்டக்காரர்களின் வேதனையை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. ஓகஸ்ட் மாதத்தில் உணவு நெருக்கடிக்கான சாத்தியம் உள்ளது.**



கேள்வி:- ***பிரதமராக நியமிக்கப்பட்டமைக்கு வாழ்த்துக்கள். நீங்கள் முற்றிலும் வித்தியாசமான சூழ்நிலையில் பிரதமராக பதவி ஏற்பதற்கு விரும்பியிருப்பீர்கள் என நான் நிச்சயமாக நம்புகின்றேன். மிக மோசமான சூழ்நிலைகள் ஏற்பட்டதற்கு யார் மீது குற்றச்சாட்டுகளை சுமத்தவேண்டும்?***

பதில்:- முன்னைய நிர்வாகம் பொருளாதாரத்தை வீழ்த்தியதால் தற்போதைய நெருக்கடிக்கு அவர்கள் மீதே குற்றம்சுமத்தவேண்டும்.நாங்கள் வங்குரோத்து நிலைக்கு வந்துவிட்டோம். இலங்கையின் வரலாற்றில் இது ஒருபோதும் நிகழ்ந்ததில்லை. எங்களிடம் டொலர்கள் இல்லை – ரூபாய்கள் இல்லை.

கேள்வி:- ***தற்போதைய ஆட்சியாளர்கள் மீதே குற்றம்சாட்டவேண்டும் என்றால் இதுவரையில் அவர்களுக்கு போதுமான தண்டனை வழங்கப்பட்டுள்ளதா? ஜனாதிபதி இன்னமும் பதவியில் உள்ளாளார். பிரதமர் பதவி விலகிவிட்டார். ஆனால் அவரது குடும்பத்தினர் இரண்டு தசாப்தங்களாக நாட்டை ஆண்டுள்ளனர். ஜனாதிபதி பதவி விலகவேண்டுமா?***

பதில்:- இது ஒரு சர்ச்சைக்குரிய விடயம் இந்த விடயத்தில் நாட்டில் இரண்டு கருத்துக்கள் காணப்படுகின்றது. காலிமுகத்திடலில் உள்ள அனைத்து இளைஞர்களும் ஜனாதிபதி பதவி விலகவேண்டும் என கருதுகின்றனர். காலிமுகத்திடலுக்கு வெளியேயும் சில அரசியல் கட்சிகள் மத்தியிலும் இந்த கருத்து காணப்படுகின்றது.

அதேவேளை இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை நீக்கப்படவேண்டும் என கருதுகின்றது. அவர்கள் ஜனாதிபதி பதவி விலகுவது குறித்து எதனையும் தெரிவிக்கவில்லை ஆகவே இரண்டு விதமான கருத்துக்கள் நிலைப்பாடுகள் காணப்படுகின்றன.

இலங்கை 21வது திருத்தத்தை நிறைவேற்றிய பின்னர் நாடாளுமன்றத்தை மீண்டும் வலுப்படுத்தும் 19 வது திருத்தத்தை நாடு மீண்டும் கொண்டுவரவேண்டும் என்ற யோசனையை முன்வைத்திருக்கின்றேன். இது பிரதமரின் அதிகாரங்களை வலுப்படுத்தும் நடவடிக்கை.

அதன் பின்னர் அனைத்து கட்சி தலைவர்களும் ஜனாதிபதியும் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு எதிர்காலம் குறித்த ஏற்பாடொன்றிற்கு வரவேண்டும். நாட்டில் பாரிய ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறுகின்றன. அனேகமாக ஜனாதிபதிக்கு எதிராகவே அவை இடம்பெறுகின்றன. ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

பலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கண்ணீர் புகை பிரயோகம் இடம்பெறுகின்றது. பொலிஸார் கடுமையாக நடந்துகொள்கின்றனர்.

கேள்வி:- ***ஆர்ப்பாட்டங்கள் குறித்த உங்கள் நிலைப்பாடு என்ன? உங்களால் அவர்களின் உணர்வுகளை புரிந்துகொள்ள முடிகின்றதா?***

பதில்:- ஆர்ப்பாட்டக்காரர்களின் வேதனையை என்னால் புரிந்துகொள்ள முடியும். முதியவர்களும் இளையவர்களும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இளையவர்கள் தங்கள் எதிர்காலம் பறிபோவதாக கருதுகின்றனர். நடுத்தர வர்க்கத்தை சேர்ந்த முதியவர்கள் தங்கள் வாழ்க்கை முறை வீழ்ச்சியடைவதாக கருதுகின்றனர்.

பொலிஸ்நிலையங்களுக்கும் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு வெளியேயும், வேறு இடங்களிலும் பல ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றுள்ளன. இது மக்களின் சீற்றம் விரக்தி நம்பிக்கையற்ற தன்மையை வெளிப்படுத்துகின்றது.மக்கள் தற்போது இதற்கு மேலும் சுமையை சுமக்க முடியாத நிலையில் உள்ளனர்.நாங்கள் நிச்சயமாக ஸ்திரமான நிலையில் இல்லை.

நீங்கள் தற்போது காண்பித்துள்ள ஆர்ப்பாட்டம் தீவிரவாத போக்கு கொண்ட இளைஞர் குழுவினால் மேற்கொள்ளப்பட்டது. இந்தக் குழு வருடத்திற்கு ஐந்து அல்லது ஆறு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவது வழமை.

நீர்த்தாரை பிரயோகம் தங்கள் மீது இடம்பெறுவதை உறுதி செய்வதே அவர்களின் நோக்கம்.

ஆனால் அதன் அர்த்தம் இலங்கையில் ஆர்ப்பாட்டங்கள் இல்லை என்பதல்ல. அவை சிறிய ஆர்ப்பாட்டங்கள்.

கேள்வி:- ***உக்ரைன் யுத்தத்தின் விளைவுகளை இலங்கை அனுபவிக்கின்றதா? குறுகிய காலத்திற்கு நிலைமை மோசமடையுமா?***

பதில்:- நாங்கள் எரிபொருள் விலை அதிகரிப்பின் தாக்கத்தை உணர்கின்றோம் இது இன்னமும் அதிகரிக்கும் என கருதுகின்றோம்.

விவசாயத்திற்கான போதிய உரம் இல்லை என்பதே எங்களின் முக்கிய கரிசனை எதிர்வரும் பருவகாலத்தில் முழுமையான விளைச்சல் கிடைக்காது. இதன் காரணமாக ஆகஸ்ட் முதல் இலங்கையில் உணவு நெருக்கடிக்கான சாத்தியம் உள்ளது. அக்காலப்பகுதியிலேயே உலக உணவு நெருக்கடி உருவாகும். அடுத்த வருடம் மார்ச் மாதம் வரை எப்படி எதிர்கொள்ளப்போகின்றோம் எனப் பார்க்கவேண்டும்.

கேள்வி:- ***உங்கள் உதவிக்கு வரக்கூடிய சர்வதேச நாடுகளிலிருந்து எதிர்பார்ப்பதென்ன?***

பதில்:- நாங்கள் எப்படியும் வங்குரோத்து நிலையிலேயே இருக்கிறோம். கடனை செலுத்துவதற்கான பணம் எங்களிடம் இருக்கவில்லை. நாங்கள் அதனை ஏற்றுக்கொள்ளவேண்டும் நான் அது குறித்து வெட்கமடைகின்றேன். ஆனால் இதுவே யதார்த்தம்.

நாங்கள் எங்கள் சகாக்களுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளோம். அதற்கு அவர்கள் சாதகமாக பதிலளித்துள்ளனர். நாங்கள் சர்வதேச நாணயநிதியத்துடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளோம் ஆனால் அதற்கு சிறிது காலம் எடுக்கும் என்பது உங்களிற்கு தெரியும்.

இந்தியாவே துரிதமாக உதவிகளை வழங்கியது. நாங்கள் அவர்களிடமிருந்து நிதியை பெற்றுக்கொண்டோம். அது நாங்கள் தொடர்ந்து செயற்படும் நிலையை உறுதிசெய்தது. அடுத்த சில மாதங்களில் இலங்கைக்கு உதவி வழங்கும் சமூகத்தை சேர்ந்த நாடுகளிடமிருந்து உதவிகள் கிடைக்கும் என நான் எதிர்பார்க்கிறேன்.

கேள்வி:- தற்போதைய சூழ்நிலையில் சுற்றுலாப்பயணி கள் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வது பாதுகாப்பா எனக் கருதுகிறீர்களா?

பதில்:- நாங்கள் பயணிகள் விஜயம் செய்வதை வேண்டான் என சொல்லவில்லை ஆனால் அந்நியசெலாவணி பற்றாக்குறை, ஆர்ப்பாட்டம், அத்தியாவசியப்பொருள் தட்டுப்பாடு காரணமாக அவர்கள் இந்த தருணத்தில் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளமாட்டார்கள்என்பதைநாங்கள் புரிந்துகொண்டுள்ளோம்.

கேள்வி:- ***நீங்கள் நான்கு நாட்களுக்கு முன்னர் பிபிசிக்கு வழங்கிய பேட்டியில் there is no point looking at the books. books are cooked என தெரிவித்திருந்தீர்கள். அதன் உண்மையான அர்த்தம் என்ன? ஜனாதிபதி ஊழலில் ஈடுபட்டார் என நீங்கள் வெளிப்படையாக தெரிவிப்பீர்களானால் நிச்சயமாக அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் கடும் தண்டனை வழங்கப்படவேண்டுமா?***

பதில்:- பல கூட்டுத்தாபனங்கள் சரியான கணக்கு வழக்குகளை காண்பிக்கவில்லை. திறைசேரி காண்பித்துள்ள கணக்குகள் குறித்தும் கேள்விகள் உள்ளன. 2.6 டிரில்லியன் வருமானம் 1.6 டிரில்லியனாக வீழ்ச்சியடைந்துள்ளது.

திறைசேரிக்குள் உள்ள ஏனைய அமைப்புகளின் கணக்குகளையும் ஆராயவேண்டும். ஒரு தனிநபர் செய்தாரா அல்லது பல நபர்கள் செய்தார்களா? எங்களுக்கு தெரியாது. இது பத்து வருடங்களுக்கு மேல் இடம்பெறுகின்றது என நான் கருதவில்லை. இரண்டு வருடகாலமாகவே இது இடம்பெறுகின்றது.

பல கட்டணங்கள் செலுத்தப்படவில்லை. கட்டணங்களை செலுத்த முடியதாத நிலை காணப்படுகின்றது என்பதை அரசாங்கத்திற்கு தெரியப்படுத்தவில்லை.

இதன் காரணமாகவே நான் அந்த தொடரை பாவித்தேன் நிச்சயமாக அது இடம்பெற்றுள்ளது.

பொருளாதாரம் சிறந்த நிலையில் இல்லாத போது சிறந்த நிலையில் உள்ளதாக காண்பிப்பதற்காக இது இடம்பெற்றுள்ளது.





சென்னையிலுள்ள இலங்கை தூதர் வெங்கடேஸ்வரனுடைய அழைப்பின் பேரில் ரோட்டரி பன்னாட்டு அமைப்பின் மேனாள் ஆளுநர் மற்றும் எமரால்ட்/ எழிலினி பதிப்பக உரிமையாளர் கோ. ஒளிவண்ணன், ரோட்டரி சங்கத்தின் முன்னாள் தலைவரும் அமராவதி ஹோட்டல் உரிமையாளருமான சக்ரவர்த்தி மற்றும் எம்ஜிஆர் ஜானகி கலைக் கல்லூரி தலைவர் குமார் இராஜேந்திரன் ஆகியோர் துணை தூதுவரைச் சந்தித்தனர். ரோட்டரி மற்றும் பல்வேறு தன்னார்வ தொண்டு நிறுவனங்களிலிருந்து அரிசி, கோதுமை, பருப்பு, சர்க்கரை, எண்ணெய் மற்றும் மருந்துப் பொருட்களை இந்தியாவின் பல பகுதியிலிருந்து சேகரித்து தூதரகம் வழியாக இலங்கைக்கு அனுப்ப அவர்கள் திட்டம் வகுத்தனர். ஏராளமான தொண்டுள்ளம் கொண்ட இந்தியர்கள் இத்திட்டத்தில் பங்கு கொள்கின்றனர் என்பது சிறப்பு. இந்த சந்திப்புக்கு வழிவகுத்தவர் இலங்கையைச் சார்ந்த எச்.எச். விக்ரமசிங்க ஆவார்.

## ஐந்து கவிதைத் தொகுப்புகளின் மீதான விமர்சன நிகழ்வு லண்டனில்












'யுத்தம், காதல், வாழ்வின் சலிப்பு, கையாலாகாத்தனம், காலத்தின் கொடூரம், சின்ன விஷயங்களைக் கொண்டாடும் மனோநிலை, பண்பாடு, கலாசாரம் என்பனவற்றின் கேலிக்கூத்து என்பன பற்றிய அனுபவங்கள் தர்மினியின்'அயலாள் கவிதைகள் ' நூலில் மலர்ந்திருக்கின்றன. புலம்பெயர் வாழ்வின் வலியும் இயலாமையும் விரக்தியும் தர்மினியின் கவிதைகளில் இழையோடுகின்றன. உண்மைகளுக்கு நெருக்கமாக அவரின் கவிதைகள் அமைந்திருப்பது அவரது கவிதையின் சிறப்பு' என்று விமர்சகர் கஜமுகன் லண்டனில் சென்ற சனிக்கிழமை (14.5.22) நடைபெற்ற 'கவிதை வனைத்த உலகு' என்ற நிகழ்வில் கலந்து கொண்டு பேசியபோது தெரிவித்தார்.

கோகுலரூபன் தலைமையில் கிழக்கு லண்டனில் நடைபெற்ற கவிதை விமர்சன நிகழ்வில் 'செல்வி சிவரமணி கவிதைகள்' பற்றி அஞ்சனா உரையாற்றியபோது, ' பெண்ணியவாதிகள் என்ற பதத்தை இன்று கூட சரிவரப்புரிந்து கொள்ள முடியாத சூழல் ஐரோப்பாவிலேயே நிலவும்போது எண்பதுகளில் யுத்த நெருக்கடிகளுக்குள் முற்போக்குச் சிந்தனைகளோடு போராடிய செல்வி, சிவரமணி போன்றோர் உன்னத நாயகிகளாகவே செயற்பட்டிருக்கிறார்கள். மனவலிமையுடனும், உத்வேகத்துடனும் இப்பெண்கவிகள் தங்கள் காலத்தில் செயற்பட்டவிதம் இன்றும் நமக்கு பெரும் மனவலிமையைத் தருகிறது' என்று குறிப்பிட்டார்.


'கடத்தலும் காணாமல் போதலும் கொலைகளும் மலிந்துபோன யுத்த சூழ்நிலையில் இப்பெண்மணிகள் மக்கள் போராட்டத்தை முன்னெடுத்து, மக்களிடமிருந்து வெளியேறிவிடாமல் தங்கள் உயிரை அர்ப்பணித்திருப்பது முக்கிய வரலாற்று செய்தியாகும்' என்று 'பனிமலர்' இதழாசிரியர் நா.சபேசன் தெரிவித்தார்.

'மலையக மக்கள் மீதான அக்கறை முக்கியமானது என்ற கருத்தினை வலியுறுத்தி, அந்த உறுதியை மேற்கொள்ளும் உத்வேகத்தை சி.கிருஷ்ணபிரியனின் 'மூதன்னையின் பாடல்' கவிதைகள் நமக்குள் ஏற்படுத்துகின்றன.

தொடர் 22ஆம் பக்கம்...

## மலையக அரசியல்; தலைமைகளும் தளபதிகளும் நூல் லண்டனில் வெளியீட்டு விழா

மூத்த தொழிற்சங்கவாதியும் முன்னால் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி வேலுப்பிள்ளை 1958 களில் மலைநாட்டு தமிழ் மக்கள் தலைவர்கள் என்ற தலைப்பில் நடேசஜயர், அப்துல் அஸீஸ், எஸ்.தொண்டமான், ஜார்ஜ் ஆர். மோத்தா, பெரிசுந்தரம், கே.,ராஜலிங்கம், ஐ.எக்ஸ்.பெரேரா, எஸ். பி.வைத்திலிங்கம், குஞ்சுப்பொரி சண்முகம், ஏ.எஸ். ஜோன், டி. சாரநாதன், சி.எஸ். சிவனடியான் ஆகியோர் பற்றி எழுதிய கட்டுரைகளையும், மலைநாட்டு தமிழ் மக்கள் உரிமைப் போர்த் தளபதிகள் என்ற தலைப்பில் எஸ்.எம். சுப்பையா, எஸ்.செல்லையா, கே.குமாரவேல், வி.கே.வெள்ளையன், டி.,ராமானுஜம், சிவபாக்கியம் குமாரவேல், பி.தேவராஜ், கோகிலம் சுப்பையா, போஸ் (ஆர்.எம்.) செல்லையா, எஸ்.நடேசன், கே.சுப்பையா, கே.ஜி.எஸ்.நாயர், எஸ்.மாரியப்பா, எஸ்.சோமசுந்தரம் ஆகியோர் பற்றி எழுதிய கட்டுரைகளையும் சேர்த்து மலையக அரசியல்; ; தலைவர்களும் தளபதிகளும் என்ற தலைப்பில் மு. நித்தியானத்தன், எச். எச் விக்கிரமசிங்க ஆகிய ,ருவரும் தொகுத்து வெளியிடுகின்றனர். சி.வியின் ,ந்த புதிய வரலாற்று ஆவணத்தின் வெளியீட்டு விழா லண்டன் மலையக இலக்கிய மகா நாட்டில் 11 ஜுன் 2022 இல் நடைபெறும்.




மலையக எழுத்தாளர்களும் சமூக செயற்பாட்டாளர்களுமான சி.வி. வேலுப்பிள்ளை, கோகிலம் சுப்பையா, ,ர. சிவலிங்கம், கவிஞர் தமிழோவியன், சாரல் நாடன், பேராசிரியர் சோ. சந்திரசேகரன், காத்தாயி ஆகிய ஏழு அரங்குகளில் 25 மலையக எழுத்தாளர்களின் நூல்களின் விமர்சனங்களும் இந்த மாநாட்டில் இடம்பெறுகின்றன. சென்னை தாய் பதிப்பகம் வெளியீட்டின் சார்பில் குமார் ராஜேந்திரன் இந்நூலை பதிப்பிட்டுள்ளார்.

# அரசாங்கத்தின் ஸ்திரத்தன்மையை சபையில் மீண்டும் உறுதிப்படுத்திய இரு நிகழ்வுகள்!

**புதிய பிரதமர் பதவியேற்றதைத் தொடர்ந்து நாட்டில் நிலவும் அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் தோன்றிய நிலையில், பல்வேறு எதிர்பார்ப்புகளுடன் கடந்த செவ்வாய்க்கிழமை பாராளுமன்றம் கூடியது.**



## பிரதி சபாநாயகராக அஜித் ராஜபக்ஷ தெரிவு, சுமந்திரன் எம்.பியின் பிரேரணை தோல்வி;



புதிய பிரதமர் பதவியேற்றதைத் தொடர்ந்து நாட்டில் நிலவும் அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் தோன்றிய நிலையில், பல்வேறு எதிர்பார்ப்புகளுடன் கடந்த செவ்வாய்க்கிழமை பாராளுமன்றம் கூடியது.

மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் நாட்டின் பிரச்சினைக்குப் பாராளுமன்றத்தில் ஊடாகத் தீர்வொன்றைப் பெறுவதற்கு முயற்சிப்பார்கள் என்ற சிறியதொரு எதிர்பார்ப்பு மக்கள் மத்தியில் காணப்பட்டது. இருந்தபோதும் நான்காவது பாராளுமன்ற அமர்வு வாரத்திலும் அரசியல் ஸ்திரத் தன்மைக்கான உறுதியான தீர்மானங்கள் எதுவும் எட்டப்படாமை மக்களுக்கு அதிருப்தியையே ஏற்படுத்தியது.

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் பிரதி சபாநாயகராகவிருந்த ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தனது பதவியை இராஜினாமாச் செய்திருந்தார். அவர் மீண்டும் அப்பதவிக்குப் போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்தாலும் சமூகத்தின் மத்தியில் ஏற்பட்ட அதிருப்தியைத் தொடர்ந்து அப்பதவியை ஒரே நாளிலேயே இராஜினாமாச் செய்யும் நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தார்.

இவ்வாறான பின்னணியில் வெற்றிடமாகியுள்ள பிரதி சபாநாயகர் பதவிக்குப் புதியவர் ஒருவரைத் தெரிவு செய்ய வேண்டிய சூழலில் கடந்த செவ்வாய்க்கிழமை பாராளுமன்றம் கூடியது.

குறித்த பதவிக்குப் பெண் உறுப்பினர் ஒருவரை நியமிக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்னர் கோரிக்கை விடுத்திருந்தார். இவ்வாறான பின்னணியில் தமது பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி விஜேரத்னவை பிரதி சபாநாயகர் பதவிக்கு முன்மொழிவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அறிவித்தார். இந்த நிலையில் செவ்வாய்க்கிழமை பாராளுமன்றம் கூடியதும் பிரதி சபாநாயர் பதவிக்கான பெயர்களைப் பரிந்துரைக்குமாறு சபாநாயகர் கோரினார்.

இதற்கமைய ரோஹினி விஜேரத்னவின் பெயரை எதிர்க்கட்சித் தலைவர் முன்மொழிந்ததுடன், எதிர்க்கட்சியின் முதற்கோலாசான் லக்ஷ்மன் கிரியல்ல வழிமொழிந்தார். மறுபக்கத்தில் ஆளும் கட்சி சார்பில் அஜித் ராஜபக்ஷவின் பெயரை பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் முன்மொழிந்தார்.

இரண்டு பெயர்கள் முன்மொழியப்பட்டிருந்த நிலையில், வாக்கெடுப்பை நடத்தி மக்கள் பணத்தை வீணாக்குவது மாத்திரமன்றி மக்களின் விசனத்தையும் சம்பாதித்துக் கொள்ளாது பிரதமரின் பரிந்துரைக்கு அமைய பெண் உறுப்பினரைப் பிரதி சபாநாயகராகத் தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுப்போம் என விமல் வீரசன்ச, மைத்திரிபால சிறிசேன, ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தனர்.

தமது கோரிக்கையையும் மீறி வாக்கெடுப்பு நடத்தப்பட்டால் செல்லுபடியற்ற வாக்குகளாகப் பதிவு செய்வோம் என அவர்கள் கூறியிருந்தனர். இருந்தபோதும் இரு தரப்பும் இதற்கு இணங்காதமையால் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதில் அஜித் ராஜபக்ஷவுக்கு ஆதரவாக 109 வாக்குகளும், ரோஹினி விஜேரத்னவுக்கு ஆதரவாக 78 வாக்குகளும் பதிவாகியிருந்தன. 31 மேலதிக வாக்குகளால் அஜித் ராஜபக்ஷ பிரதி சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டார்.

பிரதமர் முன்வைத்த கோரிக்கையைக் கூட நிறைவேற்றுவதற்கு ஆளும் கட்சியினர் தயாராக இல்லையென்பதை இந்த வாக்கெடுப்பு முடிவுகள் எடுத்துக் காட்டியிருப்பதாக எதிர்க்கட்சியினர் குற்றஞ்சாட்டினர். அத்துடன், பொதுஜன பெரமுன கட்சியின் உறுப்பினர்கள் தம்மிடம் இன்னமும் பாராளுமன்றத்தின் பெரும்பான்மை உள்ளது என்பதைக் காண்பிக்கும் நோக்கில் இதனைப் பயன்படுத்தியுள்ளார்கள் என்றும் அரசியல் அவதானிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இவ்வாறான நிலையில், அன்றைய தினம் பாராளுமன்றத்தில் மற்றுமொரு வாக்கெடுப்பும் நடத்தப்பட்டது. அதாவது ஜனாதிபதி மீது அதிருப்தியைத் தெரிவித்து முன்வைக்கப்பட்ட விசேட பிரேரணையை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ள நிலையியற் கட்டளைகளை ஒத்திவைப்பதா இல்லையா என்பது குறித்ததே அந்த வாக்கெடுப்பாகும்.

இது தொடர்பான பிரேரணையை பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் முன்வைத்திருந்தார். இதற்கு நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் சுமந்திரனின் பிரேரணைக்கு எதிராக 119 வாக்குகளும், ஆதரவாக 68 வாக்குகளும் பதிவாகியிருந்தன.

அரசியலமைப்பின் கீழ் ஜனாதிபதியின் தத்துவங்களையும் பணிகளையும் கடமைகளையும் முறைப்படி நிறைவேற்ற முடியாமல் போனதன் மீதான பாராளுமன்றத்தின் அதிருப்தியைத் தெரிவிக்கும் பிரேரணையை எதிர்க்கட்சி முன்வைத்திருந்தது. குறித்த பிரேரணை ஒழுங்குப் புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டு ஐந்து நாட்களின் பின்னரே அதனை விவாதிக்க முடியும்.

இருந்தபோதும் ஐந்து நாட்கள் பூர்த்தியடையாமையால் நிலையியற் கட்டளையை இடைநிறுத்தி வைத்து அதனை விவாதத்துக்கு எடுக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

இருந்தபோதும் ஆளும் கட்சியினர் இதனை எதிர்த்தமையால் குறித்த விடயத்தை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ள முடியவில்லை. இவ்வாறான நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பொதுஜன பெரமுன கட்சியின் உள்ளாட்சி மன்ற அரசியல்வாதிகள் பலரின் வீடுகள் மற்றும் சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்தப்பட்டமை குறித்து சபை ஒத்திவைப்பு விவாதம் நான்கு நாட்கள் பாராளுமன்றத்தில் நடைபெற்றது.

இந்த வன்முறைச் சம்பவங்களின் பின்னணியில் உள்ளவர்களை கைது செய்து தண்டனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் பலரும் வலியுறுத்தினர். இந்த வன்முறைகளின் பின்னணியில் ஜே.வி.பியினர் இருப்பதாக அவர்கள் குற்றஞ்சாட்டியிருந்தனர்.

இருந்தபோதும் இதனை மறுத்த ஜே.வி.பியினர் வன்முறைகளின் பின்னணியில் உள்ளவர்களுக்கு எதிராக பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்தனர்.

இவ்வாறான நிலைமைகள் எதிர்காலத்தில் இடம்பெறாமல் தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பது பற்றி அனைவரும் தமது கருத்துக்களை முன்வைத்திருந்தனர். அதே நேரம், மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து உறுதியான தீர்மானங்கள் எதனையும் எடுக்காது தமக்கு ஏற்பட்ட நஷ்டம் மற்றும் இழப்புக்கள் குறித்தே அரசியல்வாதிகள் அதிக அக்கறை காண்பிக்கின்றனர் என்றும் மக்கள் விசனம் தெரிவித்து வருகின்றமை துரதிஷ்டமானதாகும்.

**பி.ஹர்ஷன்...**

---

# சவால்களை முறியடித்தவாறு அதியுச்ச வளர்ச்சியில் இந்திய பொருளாதாரம்!

**உலகின் நான்காவது பொருளாதார வல்லரசாக இந்தியாவை சர்வதேசம் கணித்துள்ளது. பாரத தேசமானது உலகின் முக்கிய வல்லரசுகளில் ஒன்றாக மாத்திரமன்றி, பொருளாதார வல்லரசாகவும் வளர்ச்சியடைந்து வருகின்றது என்பதே சர்வதேச பொருளாதார நிபுணர்களின் கணிப்பாக உள்ளது.**

இந்தியாவின் பொருளாதாரம் 2022 ஆம் நிதியாண்டில் 7.5 சதவீதம் வளர்ச்சியடையும் என்றும், அடுத்த 2023 ஆம் நிதியாண்டில் 8 வீதம் வளர்ச்சியடையும் என்றும் ஆசிய வளர்ச்சி வங்கி கணித்துள்ளதையும் இவ்விடத்தில் சுட்டிக் காட்டுவது பொருத்தமாகும்.


இந்தியாவில் எதிர்வரும் ஆண்டுகளில் பொருளாதார வளர்ச்சியானது, அதன் உள்கட்டமைப்பில் பொது முதலீட்டை அதிகரிப்பதால் ஆதரவு பெற்று வளர்ச்சியடையும். மேலும், தனியார் முதலீடுகளை அதிகரிப்பதன் மூலமும் பொருளாதாரம் ஆதரவு பெற்று வளர்ச்சியடையும் என்று ஆசிய வளர்ச்சி வங்கி தெரிவித்திருந்தது.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பு, அதனால் ஏற்படும் எண்ணெய் விலை உயர்வு மற்றும் பொருட்களின் விலையேற்றம் ஆகியன கருத்தில் கொள்ளப்பட்டு இந்த கணிப்பு உள்ளது. இந்தக் கண்ணோட்டம், கொரோனா வைரஸ் நோய் தடுப்பூசிகளால் ஏற்பட்ட நீடித்த முன்னேற்றத்தை கருத்தில் கொண்டுள்ளது.

இந்தியா நிலையான பொருளாதார மீட்சிக்கான பாதையில் உள்ளது. தளவாடங்களின் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான இந்திய அரசின் கொள்கை, தொழில்துறை உற்பத்தியை எளிதாக்குவதற்கான ஊக்கத்தொகை மற்றும் விவசாயிகளின் வருமானத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் ஆகியவை நாட்டின் விரைவான மீட்சிக்கு துணைபுரியுமென்று நம்பப்படுகின்றது.

நாட்டில் பருவநிலை சீராக இருக்கும் பட்சத்தில், விவசாய உற்பத்தி அதிகரிக்குமென்பது உறுதியாகும். அத்துடன் விவசாயிகளின் வருமானமும் மேம்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆசிய வளர்ச்சிக் கண்ணோட்டத்தின் ஒரு பகுதியாக இந்த முன்னறிவிப்பு வெளியிடப்பட்டிருந்தது.



## எதிர்வரும் காலத்தில் இந்திய பொருளாதாரமானது வளர்ச்சிப் போக்கை காண்பிக்கும் என்பதே நம்பிக்கை

## ஜப்பான், அமெரிக்க நாடுகளை விட கூடுதல் பொருளாதார முன்னேற்றம்

அதேநேரம் இந்தியாவின் அயல்நாடான பாகிஸ்தானில் மிக மோசமான அளவுக்கு பொருளாதார வளர்ச்சி உள்ளது. அதாவது அந்நாட்டில் பொருளாதார வளர்ச்சி 4 சதவீதமாக மட்டுமே உள்ளது.

மேலும் 2021_2022 நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 8.3 வீதமாக இருக்கும் என்று உலக வங்கி தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 10.1% ஆக இருக்கும் என்றே முன்னர் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இந்தியாவில் ஏற்பட்ட கொரோனா இரண்டாம் அலை காரணமாக சிறிது சரிவு ஏற்பட்டுள்ளதாக உலக வங்கி தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆனாலும் உள்கட்டமைப்பு, கிராம அபிவிருத்தி மற்றும் சுகாதாரம் ஆகியவை மீது கவனம் செலுத்துவதன் மூலமும், அதிக தொகையை இதில் செலவு செய்வதன் மூலமும் சரிவில் இருந்து மீள முடியும் என்பதே நம்பிக்கையாகும்.

ஆனால் மறுபுறத்தில் 2022_ 23 ஆம் நிதியாண்டில் இந்திய பொருளாதாரம் 9 சதவீத வளர்ச்சி அடைந்து வேகமாக முன்னேறும் என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. எவ்வாறாயினும் அனைத்து நிறுவனங்களின் அறிக்கைகளும் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியையே எதிர்வு கூறுகின்றன.

உலக பொருளாதார நிலைவரம் குறித்து மேம்படுத்தப்பட்ட புதிய அறிக்கையை, ஐ.எம்.எப் அண்மையில் வெளியிட்டிருந்தது.

கடந்த ஆண்டு ஒக்டோபரில் வெளியிட்ட உலக பொருளாதார புள்ளிவிபரத்துடன் தற்போதைய அறிக்கையை ஒப்பிடும் போது, 2022_ 23 ஆம் நிதியாண்டில் இந்தியா, ஜப்பான் ஆகிய இரு நாடுகளின் பொருளாதாரம் மட்டுமே குறிப்பிடத்தக்க வளர்ச்சி காணும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

நடப்பு 2021_ 22 ஆம் நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 8.5 சதவீதமாக இருக்கும் என ஒக்டோபர் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இது தற்போது, 0.5 சதவீதம் அதிகரிக்கப்பட்டு 9 சதவீதமாக உயர்ந்துள்ளது. இதன்படி இந்திய பொருளாதாரம் 2022_ 23 ஆம் நிதியாண்டில் 9 சதவீதம் வளர்ச்சி காணும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(16ஆம் பக்கம் பார்க்க)

**சாரங்கன்...**

வார இறுதி
## அரசியல் குறிப்பேடு
சம்யுக்தன்

# எமக்கு முன்னால் தென்படுவது சவால்கள் நிறைந்த எதிர்காலம்!

## நெருக்கடிகள் நிறைந்த வேளையில், மாபெரும் பொறுப்பை தன்வசமெடுத்த பிரதமர் ரணில்



**பொருளாதார ரீதியிலும் ஸ்திரமற்ற அரசியல் சூழ்நிலையாலும் இலங்கை பாதிக்கப்பட்டுள்ள நிலையில், புதிய பிரதமராகப் பதவியேற்றுள்ள ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் பல்வேறு சவால்கள் காணப்படுகின்றன. குறிப்பாக எரிபொருட்கள் மற்றும் எரிவாயு தட்டுப்பாடு காரணமாக நீண்ட வரிசையில் மக்கள் காத்திருக்கும் நிலை இன்னும் முடிவுக்கு வரவில்லை. அந்நிலைமையானது மக்கள் மத்தியில் கடுமையான அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.**

இருந்தபோதும் தன் முன்னால் காணப்படும் சவால் குறித்தும் நாட்டின் உண்மையான நிலைமை குறித்தும் பிரதமர் கடந்த சில நாட்களுக்கு முன்னர் விபரமாகத் தெளிவுபடுத்தியிருந்தார்.

'நான் பொறுப்பேற்றது மிகவும் அபாயகரமான சவால். கத்தியின் மேல் நடப்பதை விட பயங்கரமான சவாலாகும். மிகவும் ஆழமானது. அதன் அடிப்பகுதியே தெரியவில்லை. பாலங்கள் மெல்லிய கண்ணாடியால் அமைக்கப்பட்டுள்ளன. கைப்பிடி இல்லை. என்னுடைய கால்களில் அகற்ற முடியாத பாதணிகள் பொருத்தப்பட்டுள்ளன. அதன் அடியில் கூர்மையான இரும்பு ஆணிகள் பொருத்தப்பட்டுள்ளன.

குழந்தையை பாதுகாப்பாக அடுத்த பக்கம் கொண்டு செல்ல வேண்டி உள்ளது. இந்தச் சவாலை நான் நாட்டிற்காகவே பொறுப்பேற்றேன். எனது நோக்கமும் அர்ப்பணிப்பும் ஒரு தனிமனிதன், ஒரு குடும்பம் அல்லது ஒரு கூட்டத்தைப் பாதுகாப்பது அல்ல. முழு நாட்டினதும் மக்களை காப்பாற்றுதே, இளைஞர்களின் எதிர்காலத்தைக் காப்பாற்றுவதேயாகும். உயிரைப் பணயம் வைத்து இந்தச் சவாலுக்கு



## கூர்மையான ஆணிகள் நிறைந்த பாதையை அர்ப்பணிப்புடன் கடந்து வெற்றி கொள்வோம்!

## எதிர்வரும் சில மாதங்களுக்கு நீங்களும் நானும் வாழ்க்கையில் மோசமான காலகட்டத்தை கடக்க நேரிடும். அதற்கு நாம் அனைவரும் அர்ப்பணிப்புடன் முகம் கொடுக்க வேண்டும்!

நான் முகம் கொடுப்பேன். அந்தச் சவாலை வெற்றி கொள்வேன். அதற்கு உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பையும் எனக்கு பெற்றுத் தாருங்கள்' எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தான் ஏற்றுக் கொண்டுள்ள சவால் குறித்து நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் விபரித்திருந்தார்.

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகியதைத் தொடர்ந்து அரசாங்கத்தைப் பொறுப்பேற்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உள்ளிட்டவர்களுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அழைப்பு விடுத்திருந்தார்.

இருந்தபோதும் அவர்கள் தரப்பிலிருந்து நிபந்தனைகள் விதிக்கப்பட்டனவே தவிர பொறுப்பை ஏற்பதற்கு அவர்கள் முன்வந்திருக்கவில்லை. இவ்வாறான நிலையிலேயே ரணில் விக்கிரமசிங்கவை அழைத்த ஜனாதிபதி, அவரை பிரதமர் பதவியில் நியமித்தார்.

நாடு மிகவும் மோசமான பின்னடைவுகளைச் சந்தித்துள்ளமை நாம் அறிந்த விடயமாகும். கடந்த காலங்களில் நாடு பொருளாதார ரீதியில் எதிர்கொண்ட சவால்கள் குறித்து உண்மையான தகவல்கள் நாட்டு மக்களுக்கு வழங்கப்படவில்லை. இவ்வாறான நிலையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாட்டின் உண்மையான நிலைமையை விளக்கிக் கூறியிருந்தார்.

அவருடைய தகவல்களுக்கு அமைய, 2022 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் கடந்த அரசாங்கத்தின் வரவுசெலவுத் திட்டத்தில் 2.3 ட்ரில்லியன் ரூபா வருமானமாக உள்ளது எனக் காட்டப்பட்டாலும், இந்த வருடத்திற்கான உண்மையான வருமான எதிர்வுகூறல் 1.6 ட்ரில்லியன் ரூபாவாகவே உள்ளது. அரசின் செலவு 3.3 ட்ரில்லியன் ரூபா. எவ்வாறாயினும் கடந்த அரசில் வட்டி வீதம் அதிகரித்தமை மற்றும் மேலதிக செலவுகள் காரணமாக 2022 ஆம் ஆண்டிற்கான அரசின் மொத்த செலவு 4 ட்ரில்லியன் ரூபாவாகும். வருடத்திற்கான வரவுசெலவுப் பற்றாக்குறை 2.4 ட்ரில்லியன் ரூபாவாக உள்ள அதேவேளை, அது சராசரி தேசிய உற்பத்தியில் நூற்றுக்கு 13 வீதமாகும்.

அதே போன்று அங்கீகரிக்கப்பட்ட கடன் எல்லை 3200 பில்லியன் ரூபாவாகும். மே மாதத்தின் இரண்டாம் வாரம் ஆகும்போது 1950 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி அண்ணளவான மிகுதி 1250 மில்லியன் ரூபா. அமைச்சரவையில் திறைசேரி முறிகளை வழங்கும் அனுமதிக்கப்பட்ட எல்லையை 3000 பில்லியனில் இருந்து 4000 பில்லியன் வரை அதிகரிக்கும் யோசனை ஒன்றை பாராளுமன்றத்தில் முன்வைக்கத் தீர்மானிக்கப்பட்டதாகப் பிரதமர் தெரிவித்தார்.

2019 நவம்பர் மாதத்தில் எமது அந்நிய செலாவணி கையிருப்பு 7.5 பில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது. ஆனால் இன்று திறைசேரியால் ஒரு மில்லியன் டொலரைக் கூட தேடிக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எரிவாயுவை கப்பலில் ஏற்றும் பொருட்டு செலுத்தத் தேவையான 5 மில்லியன் அமெரிக்க டொலர்களைக் கூட இந்த நேரத்தில் நிதியமைச்சினால் தேடிக் கொடுக்க முடியாதுள்ளது.

இவ்வனைத்து நெருக்கடிகளுக்கு மத்தியில் நாம் முகம் கொடுக்கும் மிகமோசமான சில சிக்கல்கள் உள்ளன. எதிர்வரும் சிலநாட்களில் வரிசைகளை கட்டுப்படுத்தும் பொருட்டு மிக விரைவில் சுமார் 75 மில்லியன் அமெரிக்க டொலர்களை தேட வேண்டிய உள்ளது. இப்போது நமது கையிருப்பில் ஒரு நாளைக்குத் தேவையான பெற்றோல் மட்டுமே உள்ளது. நேற்று வந்த டீசல் கப்பலால் ஒன்றினால் இருந்து உங்களின் டீசல் பிரச்சினைக்கு ஓரளவு தீர்வு கிடைக்கும். இந்திய கடனுதவி திட்டத்தின் கீழ் மே 19 மற்றும் ஜூன் 01 ஆகிய திகதிகளில் மேலும் இரண்டு டீசல் கப்பல்களும், மே 18 மற்றும் மே 29ஆகிய தினங்களில் இரண்டு பெற்றோல் கப்பல்களும் வரவுள்ளன. இன்றுவரை 40 நாட்களுக்கு மேலாக இலங்கையின் கடற்பரப்பில் பெற்றோல், மசகெண்ணெய் ஏற்றி வந்த கப்பல்கள் 3 நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. அவற்றுக்கு செலுத்தும் பொருட்டு திறந்த சந்தையில் டொலர்களை பெற்றுக் கொள்ள நடவடிகை எடுக்கப்படும்' எனவும் எதிர்காலத் திட்டம் பற்றிப் பிரதமர் குறிப்பிட்டார்.

மருத்துவ மருந்துகளுக்கான தட்டுப்பாடு. இருதய நோயாளிகளுக்குத் தேவையான மருந்துகள், சத்திரசிகிச்சைக்குத் தேவையான சிகிச்சை உபகரணங்கள் உட்பட பல மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்து வகைகளுக்கான தட்டுப்பாடு நிலவுகிறது. மருத்துவ மருந்துகள், சத்திரசிகிச்சை உபகரணங்கள் மற்றும் தேவையான உணவுகளை வழங்கும் வழங்குநர்களுக்கு 04 மாதங்களாக கட்டணம் செலுத்தப்படவில்லை. அவர்களுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகை 34 பில்லியன் ரூபாவாகும்.

அதே போன்று அரச ஒளடதக் கூட்டுத்தாபனம் இறக்குமதி செய்த மருத்துவ மருந்துகளுக்கு 04 மாதங்களாக கட்டணம் செலுத்தவில்லை. அதனால் அவர்களை கறுப்புப் பட்டியலில் சேர்க்க வெளிநாட்டு மருத்துவ நிறுவனங்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றன. 14 அத்தியாவசிய மருத்துவ மருந்துகள் தட்டுப்பாடாக உள்ளமையும், அதில் இரண்டையாவது வழங்க இந்த நேரத்தில் எமது மருத்துவ வழங்கள் பிரிவுக்கு இயலாது உள்ளமை மிகவும் வருந்தத்தக்க விடயமாக உள்ளது. இதற்கிடையில் 2022 ஆம் ஆண்டிற்காக முன்வைக்கப்பட்ட அபிவிருத்தி வரவுசெலவுத் திட்டத்திற்கு பதிலாக புதிய வரவுசெலவுத் திட்டமொன்றை முன்வைக்க திட்டமிடப்பட்டுள்ளது. அதனை சலுகை வரவுசெலவுத் திட்டமாக முன்வைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் பிரதமர் தெரிவித்தார்.

இந்த நேரத்தில் விருப்பப்படாவிட்டாலும் பணத்தை அச்சடிப்பதற்கு அனுமதி வழங்க நேரிடும். அரச ஊழியர்களின் இந்த மாத சம்பளத்தை வழங்கவும், தேவையான பொருட்கள் சேவைகளின் பொருட்டுமே அதனைச் செய்ய வேண்டியுள்ளது. எவ்வாறாயினும் பணத்தை அச்சடிப்பதால் ரூபாவின் பெறுமதி குறையும் என்பதை நாம் நினைவில் வைக்க வேண்டும். தற்போதைய நிலையில் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் மின்சாரசபைக்குத் தேவையான நிதியைக் கூட தேட முடியாதுள்ளது. எவ்வாறாயினும் எதிர்வரும் சில மாதங்களுக்கு நீங்களும் நானும் வாழ்க்கையில் மோசமான காலகட்டத்தை கடக்க நேரிடும். அதற்கு நாம் அனைவரும் அர்ப்பணிப்புடன் முகம் கொடுக்க வேண்டும் எனவும் பிரதமர் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் குறிப்பிட்டிருந்தார்.

'மக்களுக்கு விடயங்களை மறைத்து பொய் சொல்வதற்கு எந்த வகையிலும் விரும்பவில்லை. பயங்கரமாக இருந்தாலும் அசிங்கமாக இருந்தாலும் இதுதான் உண்மையான நிலைமை. குறுகிய காலத்திற்கு நாம் கடந்த காலத்தை விட மிகவும் கஷ்டமான காலத்திற்கு முகம் கொடுக்கப் போகின்றோம். இந்த நேரத்தில் நம்மால் கவலைப்பட மட்டுமே முடியும். ஆனால் இது குறுகிய காலத்திற்கு மட்டுமே. எதிர்வரும் சில மாதங்களில் எமது நட்பு நாடுகளின் உதவிகள் மற்றும் ஒத்துழைப்பு எமக்குக் கிடைக்கும். அவர்கள் எமக்கு உதவி செய்வதாக உறுதியளித்துள்ளனர். அதன் பொருட்டு எதிர்வரும் சில மாதங்கள் நாம் பொறுமையுடன் இருக்க வேண்டும். ஆனால் இதில் இருந்து நாம் மீள முடியும். அதன் பொருட்டு நாம் புதிய வழிக்கு செல்ல நேரிடும்' என்ற உண்மையை பிரதமர் கூறினார்.

பிரதமரின் இந்த உரை நாட்டு மக்களுக்கு பொருளாதாரம் குறித்த உண்மையை உரைப்பதாக அமைந்துள்ளது. கடந்த காலத்தில் மத்திய வங்கி மற்றும் திறைசேரி பொருளாதாரம் குறித்த உண்மையான தகவல்களையோ அல்லது சரியான புள்ளிவிபரங்களையோ வழங்கியிருக்கவில்லையென்ற குற்றச்சாட்டுக் காணப்படுகிறது. நாடு மோசமான நிலைக்குச் சென்றுள்ள சந்தர்ப்பத்தில் தொடர்ந்தும் உண்மையை மறைப்பதில் எவ்வித பயனும் இல்லை என்பதை அரசியல்வாதிகள் புரிந்து கொள்ள வேண்டும். அத்துடன், இந்த நிலைமையிலிருந்து மீள்வதற்கு மத்திய வங்கி உள்ளிட்ட நிறுவனங்கள் கடுமையான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## மக்களுக்கு விடயங்களை மறைத்து பொய் சொல்வதற்கு விரும்பவில்லை. பயங்கரமாக இருந்தாலும், அசிங்கமாக இருந்தாலும் இதுதான் உண்மை நிலைமை. நாம் கடந்து வந்த காலத்தை விட மிகவும் கஷ்டமான காலத்திற்கு முகம் கொடுக்கப் போகின்றோம். இந்த நேரத்தில் நம்மால் கவலைப்பட மட்டுமே முடியும். ஆனால் இது குறுகிய காலத்திற்கு மட்டுமே!



> “நான் பொறுப்பேற்றிருப்பது மிகவும் அபாயகரமான சவால். கத்தியின் மேல் நடப்பதை விட பயங்கரமான சவாலாகும். மிகவும் ஆழமானது. அதன் அடிப்பகுதியே தெரியவில்லை. பாலங்கள் மெல்லிய கண்ணாடியால் அமைக்கப்பட்டுள்ளன. கைப்பிடி இல்லை. என்னுடைய கால்களில் அகற்ற முடியாத பாதணிகள் பொருத்தப்பட்டுள்ளன. அதன் அடியில் கூர்மையான இரும்பு ஆணிகள் பொருத்தப்பட்டுள்ளன. குழந்தையை பாதுகாப்பாக அடுத்த பக்கம் கொண்டு செல்ல வேண்டி உள்ளது. இந்தச் சவாலை நான் நாட்டிற்காகவே பொறுப்பேற்றேன் ”

# திண்டாடித் தவிக்கும் நுவரெலியா மரக்கறி விவசாயிகள்



## சாண் ஏறினால் முழம் சறுக்குகிறதாம்!

## விளைச்சல் குறைவு, வெளிமாவட்ட லொறி வரத்து இல்லை உள்ளூர் வர்த்தகமும் படுத்துவிட்டது...

நுவரெலியா மாவட்டத்தின் அனைத்து விவசாயிகளும் மரக்கறி வியாபாரிகளும் பெரும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர். இந்நிலை தொடருமானால் மிக விரைவில் விவசாயிகள் தங்களுடைய தொழிலை கைவிட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டு விடலாம்.

டீசல் தட்டுப்பாடு காரணமாக மரக்கறிகளை வெளி மாவட்டங்களுக்கு கொண்டு செல்ல முடியாத நிலை ஒருபுறமென்றால் மறுபுறத்தில் இரசாயன உரவகைகள் இல்லாமை காரணமாக தங்களுடைய உற்பத்திகளை சரியான முறையில் மேற்கொள்ள முடியாத நிலைமை.

வழமையான நாட்களில் நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்தில் இருந்து ஒரு நாளைக்கு இரண்டு லட்சம் கிலோ மரக்கறிகள் வெளி மாவட்டங்களுக்கு கொண்டு செல்லப்பட்டன. ஆனால் தற்பொழுது அது 75000 கிலோவாக குறைவடைந்துள்ளது.

### விவசாயிகள் பாதிப்பு

நுவரெலியா மாவட்டத்தை பொறுத்தளவில் அதிகமானோர் விவசாயத்தை நம்பியே வாழ்கிறார்கள். நுவரெலியா மாவட்டத்தில் விவசாயத்தின் மூலமாக பலரும் தமது வாழ்க்கையை நடத்தி வருகிறார்கள்.

இரசாயன பசளை தடைவிதிக்கப்பட்ட காலம் முதல் இன்று வரை விவசாயம் என்பது ஒரு பெரும் போராட்டமாகவே மாறிவிட்டது. விவசாயத்திற்கு பயன்படுத்தப்படும் கிருமிநாசினிகள் மற்றும் ஏனைய பொருட்கள் அனைத்தும் பாரிய அளவில் விலை அதிகரித்துள்ளது. இதன் காரணமாக விவசாய உற்பத்தி செலவினம் பல மடங்காக அதிகரித்துள்ளது.

சில விவசாயிகள் விவசாயத்தை தொடர முடியாமல் தவித்து வருகின்றனர். ஒருசிலர் தங்களுடைய விவசாயத்தை முழுமையாக கைவிட்டுள்ளனர். இதன் காரணமாக பலருக்கும் தொழில் இல்லாத நிலைமை ஏற்பட்டுள்ளது. விவசாயத்தை நம்பியே வாழ்ந்தவர்



நிலைமை மிகவும் மோசமடைந்துள்ளது. தற்பொழுது விவசாயத்திற்கான உற்பத்திச் செலவினம் எல்லா வழிகளிலும் அதிகரித்துள்ளமை இதற்கு முக்கிய காரணமாக அமைந்திருக்கின்றது.

3000 ரூபாவிற்கு கொள்வனவு செய்த இரசாயன உரங்கள் தற்பொழுது 30000 ஆயிரம் ரூபா வரை அதிகரித்துள்ளது. அது மட்டுமல்லாமல் கிருமி நாசினிகள், களை கொல்லிகள், தொழிலாளர்களுக்கு வழங்குகின்ற நாளாந்த சம்பளம் இவை அனைத்தும் அதிகரித்துள்ளமை காரணமாக உற்பத்தி செலவினம் பல மடங்காக அதிகரித்துள்ளது. அதே நேரத்தில் உற்பத்தி செய்கின்ற மரக்கறிகளை

டீசல் தட்டுப்பாடு காரணமாக வெளிமாவட்டங்களுக்கு கொண்டு செல்ல முடியாத நிலைமை தொடர்கிறது.

### வியாபாரிகள் பாதிப்பு

நுவரெலியாவில் இருந்து கொழும்பு, கேகாலை, களுத்துறை, நீர்கொழும்பு, தம்புள்ளை, பேருவளை, இரத்மலானை, ஏறாவூர் கல்முனை உட்பட அனைத்து பகுதிகளுக்கும் மரக்கறி கொண்டு செல்லப்பட்டது. டீசல் இல்லாமை காரணமாக வெளி மாவட்டங்களில் இருந்து வந்து செல்ல முடியாத நிலைமை.

அத்துடன் இன்றைய நிலையில் மரக்கறிகளின் அதிகரித்த விலை காரணமாக வியாபாரிகள் தங்களுடைய முதலீட்டை அதிகரிக்க வேண்டியுள்ளது. முதலீட்டை அதிகரித்தாலும் அதற்கான இலாபத்தை பெற்றுக்கொள்வதில் நிச்சயமில்லை என்ற நிலை வர்த்தகர்களை பயமுறுத்துகிறது.

இன்றைய நிலையில் மரக்கறிகளின் விலைகள் அதிகரித்துள்ளன. லீக்ஸ் ஒரு கிலோ 140 ரூபா, கரட் 270, பீட் 250, கோவா 140 ரூபா, உருளைக்கிழங்கு 300 ரூபா, தக்காளி 800 ரூபா என்ற விலைக்கு விற்பனையாகிறது. இந்த அதிகரித்த விலை காரணமாக மரக்கறிகளின் கொள்வனவை பாவனையாளர்கள் வெகுவாக குறைத்திருக்கின்றார்கள்.

எனவே மரக்கறிகளின் விற்பனையும் வெகுவாக குறைவடைந்துள்ளது. இதன் காரணமாக சிறு வியாபாரிகள் இந்த தொழிலை செய்ய முடியாத நிலை. ஒரு சிறிய வியாபாரி கடந்த காலங்களில் 50 ஆயிரம் ரூபாவை முதலீடு செய்திருந்தால் தற்பொழுது இரண்டு இலட்சம் ரூபா தேவைப்படுகின்றது. ஆனால் அந்தளவிற்கு இலாபத்தை பெற்றுக்கொள்வதில் உத்தரவாதமில்லை.

இதன் காரணமாக பல சிறிய வியாபாரிகள் மரக்கறி விற்பனையில் இருந்து ஒதுங்கியுள்ளனர். அவர்களுடைய குடும்பங்களின் வருமானம் கேள்விக்குறியாகியுள்ளது.

அதேபோல போக்குவரத்திற்காக பயன்படுத்தப்பட்ட லொறிகள் டீசல் பற்றாக்குறை காரணமாக தங்களுடைய சேவைகளை இடைநிறுத்தியுள்ளன. இதன் காரணமாக சாரதி தொழிலை நம்பியிருந்தவர்கள் தொழில் இழந்துள்ளனர்.

இந்த நிலைமை தொடருமாக இருந்தால் நுவரெலியா மாவட்டத்தில் பாரிய பொருளாதார பின்னடைவை சந்திக்க வேண்டிய நிலைமை ஏற்படும். அதே நேரத்தில் நாடு பூராகவும் இயங்குகின்ற பொருளாதார மத்திய நிலையங்களும் ஏறக்குறைய மூடப்பட்ட நிலையில் உள்ளன. அங்கு தொழில் செய்தவர்கள் அனைவரும் பெரும்பாதிப்பை சந்தித்துள்ளனர்.

மேலும் சுற்றுலாத்துறையில் ஏற்பட்டுள்ள பாதிப்பும் இந்த மரக்கறி வியாபாரம் பாதிப்படைவதற்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது. அதற்கு காரணம் பல உல்லாச விடுதிகள் சுற்றுலா பிரயாணிகள் இல்லாமையால் அவை மூடப்பட்டுள்ளன. அங்கு தொழில் புரிந்தவர்களின் நிலைமையும் பாதிப்படைந்துள்ளது.



எனவே மிகவிரைவாக விவசாயிகளை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் எதிர்காலம் இன்னும் மோசமாக அமையலாம். தற்பொழுது ஏற்பட்டு பொருளாதார பிரச்சினை காரணமாக இந்த நிலைமை இன்னும் மோசமடைந்தால் பலரும் உண்ண உனவின்றி மிகவும் மேசமான ஒரு நிலைமை ஏற்படலாம். இதனை கருத்தில் கொண்டு விவசாயிகளுக்கு தேவையான இரசாயன உரவகைகளையும் கிருமி நாசினி உட்பட ஏனைய தேவைகளையும் பூர்த்தி செய்ய முடியுமாக இருந்தால் நிச்சயமாக உணவு பற்றாக்குறையை நிவர்த்தி செய்து கொள்ள முடியும்.

அனைத்து வளங்களையும் நாம் கையில் வைத்துக் கொண்டும் கடந்த காலங்களில் பல தேவையில்லாத மரக்கறிகளை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்தோம். அதனை அதிகரிப்பதற்கு எந்தவிதமான நடவடிக்கையையும் யாரும் மேற்கொள்ளவில்லை.

நுவரெலியா மாவட்டத்தை பொறுத்த அளவில் இங்கே அதிகமானவர்கள் விவசாயத்தையும் தேயிலையையுமே நம்பியிருப்பவர்கள்.

தேயிலையும் தற்பொழுது பாதிப்பை சந்தித்து வருகின்றது. இது தொடர்பாக விரைவாக தீர்மானங்களை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டியது அரசின் கடமை.

மேலும் விவசாயத் திணைக்களத்து அலுவலகங்களிலும் சரியான தகவல்கள், புள்ளிவிபரங்கள் இல்லை. அவர்களிடம் எந்த தகவலை கேட்டாலும் அதனை புள்ளிவிபரங்களுடன் பெற்றுக்கொள்ள முடியாது. இதற்குக் காரணம். அவர்களின் மந்த நிலையிலான செயற்பாடுகளே. விவசாய திணைக்களம் ஒரு திறமையான நிறுவனமாக மாற்றி அமைக்கப்பட வேண்டும். அப்படி செய்தால் மாத்திரமே இந்த விவசாயத்தில் காணப்படும் பின்னடைவை தடுத்து நிறுத்த முடியும்.

நுவரெலிய விவசாயிகள் மிகவும் திறமையானவர்கள். அவர்களை அழைத்து கலந்துரையாடினாலே அவர்களிடம் இருந்து பல தகவல்களை பெற்றுக் கொள்ள முடியும். அதன் மூலமாக நல்ல பல திட்டங்களை செயற்படுத்த முடியும். இதனை கடந்த காலங்களில் திட்டமிட்டு செயற்படுத்தியிருந்தால் இன்றைய நிலைமை ஏற்பட்டிருக்காது.

நூரளை தியாகு ...

# இந்திய வம்சாவளி மக்களின் நலனுக்காக தன்னலம் மறந்த கே.ஜி.எஸ். நாயர்

## மே 12 அவரது நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது

இலங்கை இந்திய காங்கிரஸ் என்னும் பாரிய இயக்கம் இந்திய வம்சாவளி மக்களின் நலன்கருதி இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என பெயர் சூட்டப்பட்டு நாளடைவில் பிற்போக்குவாதமும் முதலாளித்துவத்தைப் பாதுகாக்கும் செயற்பாடுகளும் தலைதூக்கியமையால் காங்கிரஸ் இரண்டாக பிளவுண்டு ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் என்னும் முற்போக்குதொழிற்சங்கம்உதயமாகியது.அதன் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டார் அமரர் கே.ஜி.எஸ். நாயர்.

1939ம் ஆண்டு ஜவஹர்லால் நேருவின் வருகையுடன் இங்கு ஆரம்பிக்கப்பட்ட இலங்கை இந்தியன் காங்கிரஸ் மலையக பெருந்தோட்ட மக்களின் உரிமைகளுக்காக பிரிட்டிஷ் கம்பனிகளுடன் போராடியதோடு பாராளுமன்ற தேர்தலிலும் பங்குகொண்டு நுவரெலியா, கண்டி, பதுளை மாவட்டங்களில் உறுப்பினர்களைத் தெரிவு



செய்யும் சக்தியைக் கொண்டிருந்தது.

வெற்றியீட்டிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொழிலாளர் வர்க்கத்திற்காக குரல் கொடுத்த இடதுசாரிகளை ஆதரித்தமை காரணமாக இந்திய வம்சாவளி மக்களின் குடியுரிமையைப் பறித்து பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை சூறையாடியது அன்றைய அரசு. இந்நாட்டில் வாழும் இந்திய வம்சாவளி மக்கள் நாடற்றவர்களாக்கப்பட்ட போது இலங்கை பாராளுமன்றத்துக்கு முன்பாக மாபெரும் சத்தியாக்கிரக போராட்டத்தை நடத்தி காலி முகத்திடலை போராட்ட பூமியாக புதிய பெயர் சூட்டியது காங்கிரஸ். இம் மாபெரும் போராட்டத்தை முன்னெடுத்து நடாத்தியவர் அமரர் கே.ஜி.எஸ். நாயராகும். அன்றைய அரசு இச்சாத்வீக போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தலைவர்களாகிய சௌமியமூர்த்தி தொண்டமான், அப்துல் அஸீஸ், கே. இராஜலிங்கம் உட்பட பலரை பலவந்தமாகக் கடத்தி தொலை தூரங்களில் கொண்டுபோய் வீசியெறிந்தபோது துணிவுடன் அவர்களைப் பின்தொடர்ந்து மீண்டும் அவர்களை போராட்ட பூமியில் இணைத்தவர்கள் நாயரும் அவரது நண்பர் வி. பழனிச்சாமிப் பிள்ளையுமாகும்.

பெருந்தோட்ட தமிழ் மக்களை வெளியேற்றிவிட்டு சிங்கள கிராமவாசிகளை அங்கு குடியேற்றும் நேஸ்மியர் குடியேற்றத்திட்டம், நாகஸ்தன்னை தோட்டத்தின் பழம்பாசி பிரிவிலிருந்து மக்களை அகற்றிவிட்டு 'சீபோத் குடியேற்றத்திட்டம்' என திட்டங்களை டி.எஸ். சேனநாயகா அரசு மேற்கொண்டபோது வெடித்தது மாபெரும் உருளவள்ளி போராட்டம். கே.ஜி.எஸ்.நாயரால் மேற்கொள்ளப்பட்ட போராட்டம் இதுவாகும்.

அல்கொல்ல தோட்ட பெண் தொழிலாளர்கள் கைகளில் வளையல் அணியக் கூடாதென விதிக்கப்பட்ட தடைக்கெதிராக கிளர்ந்த வளையல் போராட்டமும் நாயரின் தலைமையிலேயே நடைபெற்றது. தொண்டமான், அஸீஸ் ஆகியோருக்கு போராட்டக் களம் அமைத்துக் கொடுத்த தளபதியாக நாயர் விளங்கினார். இ.தொ.கா.வில் கூட்டுக் காரியதரிசியாக பதவி வகித்து பெரும் பணியாற்றிய அவர் ஜனநாயக தொழிலாளர் காங்கிரசின் பொதுச் செயலாளராக ஆற்றிய பணிகள் அளப்பரியன. தோட்டப் பாடசாலைகளை அரசு பொறுப்பேற்க வேண்டுமென்றும் முதல் குரல் ஜனநாயக தொழிலாளர் காங்கிரசின் மகாநாட்டிலேயே எழுப்பப்பட்டது. ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம சம்பளம், பிரசவ சகாய நிதி, ஊழியர் சேமலாப நிதி, வருடாந்த போனஸ் என பெருந்தோட்ட தொழிலாளர்களின் நலன்கருதி மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் அனைத்தும் நாயரினதும் ஜனநாயக தொழிலாளர் காங்கிரசினதும் எழுகுரல்களேயாகும்.

பொதுவுடமைக் கொள்கையை தன்னகத்தே கொண்ட நாயர், கேரள மண்ணிலிருந்து தையற் கலைஞராக இங்கு வந்து எட்டியாந்தோட்டையில் தொழில் புரிந்தார். பெருந்தோட்டத் தொழிலாளர்களின் கொத்தடிமை வாழ்வுகண்டு மனம்புளுங்கி தொழிற்சங்கவாதியாக மாறியவர் இவர். மாதாந்த இருபத்தைந்து சத சந்தாப்பணத்தை வசூலிப்பதற்காக இரவு பகலாக மலையேறி கால்நடையாக பெருந்தோட்டங்களில் வலம்வந்த அவர் தனது குடும்பம் வறுமையில் வாடுவதையும் சித்திக்காதவராக தொழிலாளர் நலனுக்காக அப்பழுக்கற்ற பணியை மேற்கொண்டார்.

அனுபவத்தின் காரணமாக ஆங்கில மொழிப்புலமை பெற்ற நாயருடன் தோட்ட முதலாளிமார் வர்க்கம் வாதாட முடியாமல் திணறிய சம்பவங்கள் அனந்தம்.

களனி நதிப்பள்ளத்தாக்கில் பரந்து விரிந்த களனிவெளி மாவட்டத்தின் தலைவராக விளங்கிய நாயரும் சக தொழிற்சங்க ஊழியர்களும் வறுமையில் வாடா வண்ணம் அவர்களைப் பாதுகாத்தவர் நாயரின் நண்பர் அமரர் வி. பழனிச்சாமிப் பிள்ளையாகும்.

நாயர் நடாத்திய வளையல் போராட்டத்தின்போது வெள்ளைக்கார தோட்டத்துரையின் கழுத்தைப் பிடித்து லயத்துக் கோடிச்சுவரில் சாத்திய துணிவுமிக்க பழனிச்சாமிப்பிள்ளையையும் நாயருடன் இணைந்தே போற்றலாம்.

இந்த இரு தளபதிகளும் நடாத்திய காலி முகத்திடல் சத்தியாக்கிரக போராட்டம் காரணமாகவே அமரர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தமிழ் காங்கிரசை விட்டு விலகி அகில இலங்கை தமிழரசுக் கட்சியை தோற்றுவித்தார்.

நாயரின் மறைவின்போது இரங்கலுரை நிகழ்த்திய தந்தை செல்வா; 'நாயரின் போராட்டமே என்னை புதிய பாதையில் இட்டது!' என்றார்.

தனக்காக வாழாது தொழிலாளர் வர்க்கத்துக்காக வாழ்ந்து மடிந்த அமரர் கே.ஜி. எஸ். நாயர் என்னும் கொட்டம்பள்ளி கோவிந்தன் செல்லப்பா நாயரை மனுதாரராகக் கொண்ட குடியுரிமை வழக்கு கொட்டம்பிள்ளை வழக்கு என இந்நாட்டு வரலாற்றில் இடம்பெற்றுவிட்டது.

சி.கே. முருகேசு ...

# நாளைய சந்தர்ப்பத்துக்காய் இன்றைய சூழ்நிலைக்கு ஒத்துழைப்போம்!

நன்மைக்காகச் செய்த காரியங்கள் நற்பெயர் பெற்ற சந்தர்ப்பங்கள் அரிதுதான். அதிலும் அரசியலில் இப்பெயரை வாங்கவே முடியாத நிலைகளே நிலைக்கின்றன. எங்கோ, என்றோ பொருளாதாரத்தில் விழுந்த நமது நாட்டை மீட்கப்புறப்பட்டிருக்கிறார் புதிய பிரதமர் ரணில். தருணம் தப்பினால் தலையில்தான் அடி என்றிருக்கையில், தலையைக் கொடுத்து நமது தோள்களை நிமிர்த்த வந்த பிரதமரின் முயற்சிக்கு முதலில் ஒரு பாராட்டு. எத்தனையோ பேரை எத்தனை தடவைகள் அழைத்தபோதும், துணிந்து வந்த தலைமகனை வாழ்த்தாமல் விடுவதற்கு பின்னாலுள்ள பின்னணிகளைச் சொல்ல வேண்டியதில்லை. வாழ்த்தியவர்களில் சிலர் வீழ்த்தக் காத்திருப்பது விளங்காத விடயமும் இல்லை. உச்சக்கட்ட ஜனநாயகவாதியான பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, குறுக்காக வந்து குந்திக் கொண்டதாகச் சிலர் காட்ட விழைவதுதான் எல்லோருக்குமான அபிலாஷைகளை அழிப்பது போலிருக்கிறது. எனவே, இதில் எதையாவது அடைய ஆசைப்படுவோர் கால அவகாசம் வழங்கவே வேண்டும். மக்களின் பசியைப் பயன்படுத்தி அவர்களை வீதிகளில் இறக்கிவிடும் அரசியல், பாரிய விபரீதங்களுக்கே வித்திடும். இதனால்தான், பொறுமை காக்குமாறு கோரப்படுகிறது. எவரையாவது அல்லது எந்தக் குடும்பத்தையாவது பாதுகாக்கும் நோக்கு இந்தப் பதவிப்பிரமாணத்தில் இருக்கலாம் அல்லது இல்லாமலும் விடலாம். ஆனால் நாமெல்லோரும் பஞ்சத்திலிருந்து பாதுகாக்கப்பட வேண்டுமே! இதற்காகவே இந்தக் கால அவகாசம் அவசியப்படுகிறது.

நமது வாழ்வாதாரத்தை வீழ்த்தி, அரசியலில் வாழப் புறப்பட்ட, புறப்படும் அரசியல் கலாசாரத்தை ஒழிக்கவே இந்தப் புரட்சி வெடித்திருக்கிறது.

இந்த வெடிப்புக்களின் வெளிப்பாடுகளால், பல வெற்றிகள் கிட்டியிருப்பதும் உண்மைதான். வென்றவர்கள் வாழ வழியைக் காட்டுவதுதான் புதிய பிரதமரின் வியூகம். இந்த வியூகங்களில் வெற்றியடைவது இன்று, நாளை சாத்தியப்படும் விடயமும் இல்லையே! இதனால்தான், பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுகண்டு, நிலைமைகள் சரியானதும் பொதுத் தேர்தலுக்குச் செல்லலாம் என்கிறார் பிரதமர்.

ஸ்திரநிலையைக் காட்டி, அரசியல் ஒன்றுபடலைக் காட்டி இன்னும் எல்லோருக்குமான தேவை ஒன்றே எனக் காட்டித்தான், சர்வதேச உதவிகளை வெல்ல வேண்டியுள்ளது. இவைகள் கைக்கு வந்த பின்னர்தான் நாம் மீண்டெழுந்து, மீண்டும் இப்படி மூழாமலிருப்பதற்கான புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்க வேண்டும். இந்தச் சந்தர்ப்பம் நிச்சயமாக இளைஞர்களின் மடியிலும், கைகளிலும் விழத்தானிருக்கின்றன. எனவே, இளைஞர்கள் இன்றைய சந்தர்ப்பத்துக்கு ஒத்துழைப்பதுதான் உள்ள வழி.

இலங்கையின் கோரிக்கைகளுக்கு எதிர்வரும் (24) பதிலளிக்கவுள்ளது சர்வதேச நாணய நிதியம். பெரும்பாலும் சாதகமான பதிலே எதிர்பார்க்கப்படுகிறது. புலம்பெயர் தமிழர்களை நாட்டில் முதலிட வருமாறு எதிர்க்கட்சி தலைவர் அழைத்திருக்கிறார். ஏற்கனவே ஏனைய தரப்பினராலும் இந்த அழைப்பு விடுக்கப்பட்டதுதான்.

இருந்தாலும் சஜித் பிரேமதாஸவின் அழைப்பும் ஒரு சமிக்கைதானே! ஏற்கனவே அழைத்தவர்களை விடவும், புலம்பெயர் தமிழர்களுக்கு நேசமானதும், நம்பிக்கையான அணியும் எஸ்.ஜே.பி தானே! இந்த அணியிலுள்ள சிறுபான்மை சமூங்களின் அரசியல் தலைமைகளுக்கும் இவ்விடயத்தில் பொறுப்புக்கள் உள்ளன.

ஐரோப்பிய ஒன்றியம் இன்னும் அரபுலீக் என்பவற்றுடன் தொடர்புள்ளோரதும் ஒத்துழைப்பும் இன்றைய நிலைமைக்கு தேவைப்படுகிறது. பொதுவாகச் சொன்னால் வற்றி, வரண்டு போயுள்ள வயல்களில் வான்மழையைப் பெறுவதற்கான கூட்டு முயற்சிகளே அவசியப்படுகிறது. இதையே, திருக்குறள் "துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத் துப்பாய தூஉம் மழை" என்கிறது.








சுஐப் எம்.காசிம்- ...✍

# நாட்டைக் காக்க முன்வராத சக்திகளை அரசியல் அரங்கிலிருந்து அகற்ற வேண்டும்



இலங்கையில் மிக அதிர்ஷ்டசாலியான ஒரு மனிதர் என்றால் அது ரணில் விக்கிரமசிங்கதான். யாருமே எதிர்பார்த்திருக்காத வகையில் பிரமராகியிருக்கிறார். ஹொலிவூட் சினிமாக்களில் வருவதைப் போல தனியொருவராக – ஒற்றை ஆளாக – நின்று ஆட்சி அமைத்திருக்கிறார்.

அவருடைய அமைச்சரவையில் இடம்பெறுகின்றவர்களும் இடம்பெறப்போகின்றவர்களும் வெவ்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள். இதுவரையும் அவரைக் கடுமையாக எதிர்த்தவர்கள், எதிர்ப்பவர்கள். அவரையும் அவருடைய ஆட்சியையும் ஆதரிக்கப் போகின்றவர்களும் கூட எதிர்த்திசையில் நிற்பவர்களே. எவராலும் எதுவுமே செய்ய முடியாது என விதி வேறு விதமாக விளையாடத் தொடங்கியிருக்கிறது. இதனால் ரணில் விக்கிரமசிங்கவையும் அவருடைய ஆட்சியையும் எதிர்க்க முடியாது என்ற நிலையில் எல்லோரும் உள்ளனர். தவிர்க்க முடியாமல் அனைவரும் ரணில் விக்கிரமசிங்கவையும் அவருடைய ஆட்சியையும் ஆதரித்தே தீர வேண்டும். அல்லது பொறுமையாக அதை ஜீரணித்துக் கொள்ள வேணும்.

மறுத்து, எதிர்த்தால் வரலாற்றுப் பழி வந்துவிடும். அது அரசியல் படுகுழியாகி விடும். நாட்டின் நிலையும் மக்கள் மனநிலையும் அந்தளவுக்கு வந்துள்ளது.

இதனால், இந்த நிர்ப்பந்தத்தால் விரும்பியோ விரும்பாமலோ ரணில் அரசாங்கத்தை ஆதரித்தே ஆக வேண்டும் என்றாகியுள்ளது.

இதை, இந்த வாய்ப்பை கடந்த தேர்தலில் வெற்றியைப் பெற்றிராத ஐக்கிய தேசியக் கட்சியோ ரணில் விக்கிரசிங்கவோ எதிர்பார்க்கவில்லை. ஏன் இலங்கையில் மட்டுமல்ல, உலகத்திலேயே கூட யாரும் இதை எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்.

ஆனால், நடந்துள்ளது.

அவருடைய ஐக்கிய தேசியக் கட்சியில் அவரைத் தவிர வேறு யாருமே தெரிவாகவில்லை. ஏன் அவர் கூடக் கடந்த (2020) தேர்தலில் தோற்கடிக்கப்பட்டிருந்தார். ஆனால் இன்று அவர் இலங்கையின் பிரதமர்.

ஆகவே காலம் அவருக்கு அளித்த பரிசு என்றே இதைச் சொல்ல வேண்டும். அதிக எண்ணிக்கையான வாக்குகளைப் பெற்றவர்களும் அதிக ஆசனங்களைப் பெற்ற கட்சிகளும் எதுவுமே செய்ய முடியாத நிலையில் இருக்கும்போது தேர்தலில் தெரிவாகியிருக்காத – நிராகரிக்கப்பட்டவர் பிரதமராகியிருக்கிறார் என்றால்!

இதற்குக் காரணம், இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியும் ராஜபக்ஸவினரின் ஆட்சித் தவறுகளுமே.

மட்டுமல்ல, எதிர்க்கட்சிகளின் தவறுமாகும்.

இவை விட்ட தவறுகளால்தான் அதிக வாக்குகளைப் பெற்றவர்களும் அதிக ஆசனங்களைப் பெற்ற கட்சிகளும் ஆட்சி அமைக்க முடியாது என்று தடுமாற வேண்டியிருந்தது.

மட்டுமல்ல, வரலாற்றின் இந்த அபூர்வ தருணத்தில் தமிழ், முஸ்லிம், மலையகக் கட்சிகள் – இனத்தவர்களிடையே இருந்து ஒருவரைக் கூட பிரதமராக்க முடியவில்லை. இதை ராஜபக்ஸவினரிடம் கேட்க முடியாதிருக்கலாம். ஆனால் எல்லா இனத்தவர்களும் இணைந்து போராடும் காலிமுகத்திடல் போராட்டக் காரர்களிடத்திலும் தேசிய நெருக்கடிக்குத் தீர்வு காண வேண்டும் என்று விரும்புகின்றவர்களிடத்திலும் கேட்க வேண்டும்.

அப்படியொரு தெரிவு நடந்திருந்தால் அது பொருளாதாரப் பிரச்சினையோடு இனப் பிரச்சினைக்கான தீர்வைக் காண்பதற்கான தொடக்கப்புள்ளியாகவும் இருந்திருக்கக் கூடும். நல்லிணக்கத்தின் மெய்யான புள்ளியைத் தொட்டதாகவும் இருந்திருக்கும்.

அதற்கான சூழல் இன்னும் கனியவில்லை என்று வைத்துக் கொள்வோம்.

இப்பொழுது உள்ள சூழலில் தனியொருவராக – எந்த ஆதரவுப் பின்னணியும் இல்லாமல் துணிவோடு ரணில் முன்வந்ததே அவருடைய வெற்றியாகும்.

இதற்கு அவருக்குப் பின்னணி ஆதரவுகள் இருந்திருக்கலாம். (அப்படிப் பலமாக ஊகிக்கப்படுகிறது). ஆனாலும் அதை மட்டும் நம்பாமல் தன்னை நம்பிக் களத்தில் ஒரு போர் வீரரைப் போல இறங்கியதே அவருடைய வெற்றியாகும்.

ஆனாலும் இந்த வெற்றியை அவருடைய ஆட்சியே உறுதிப்படுத்த வேண்டும்.

ஏற்கனவே இந்த மாதிரி அவருக்கு எதிர்நிலையில் இருந்த இரண்டு ஜனாதிபதிகளால் தன்னுடைய ஆட்சியைத் தொடர முடியாமல் பதவியை இழந்த அனுபவம் அவருக்குண்டு. அப்படியிருந்தும் மூன்றாவது தடவையும் தலையைக் கொடுத்துள்ளார் என்றால்.. அது சாதாரணமானதல்ல.

இப்பொழுது தவிர்க்க முடியாமல் அரசாங்கத்தில் பங்குபற்றப் போகும் கட்சிகளும் அரசாங்கத்தை ஆதரிக்கும் கட்சிகளுமாக (ஆதரித்தே ஆக வேண்டும் என்ற நிலையில்) ஏறக்குறைய அனைத்துத் தரப்பினரின் ஆதரவும் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்துக்குக் கிடைத்துள்ளது. இப்படி முழுமையான ஆதரவு கிடைத்தாலும் அது எந்தளவுக்குச் செல்லும்? எதுவரை தாக்குப் பிடிக்கும் என்று தெரியவில்லை.

ஏனென்றால் உருவாகியிருக்கும் பொருளாதார நெருக்கடி ஒரு தேசிய நெருக்கடியாக உணரப்படுவதைப்போல அதைத் தீர்ப்பதற்கான முயற்சிகளும் நடவடிக்கைகளும் உணரப்பட வேண்டும். அப்படி உணரப்பட்டால்தான் தீர்வைக் காண்பது இலகு. அதுதான் விரைவான மீட்புக்கு உதவும்.

இதற்கு ஒருங்கிணைந்த சிந்தனை வேண்டும். அல்லது பல நிலைப்பட்ட சிந்தனைகளை ஒருங்கிணைக்கும் ஆற்றல் வேண்டும்.

இலங்கையின் அரசியல் பண்பாட்டில் அப்படியான ஒருங்கிணைந்த சிந்தனையோ அல்லது பல நிலைப்பட்ட சிந்தனைகளை ஒருங்கிணைத்துத் தீர்மானங்களை எடுக்கும் மரபோ இல்லை.

இங்கே நிலவுவது, கட்சிகளின் இருப்பும் வெற்றியைக் குறித்த இலக்கு – நோக்குமே. கட்சிகளுக்குள்ளும் தமக்கான இடத்தை – வெற்றியை உறுதிப்படுத்திக் கொள்ளும் முனைப்புமே.

**இப்படியான ஒரு மரபுச் சூழலில் எப்படி இந்தத் தேசிய நெருக்கடிக்குத் தீர்வைக் காண்பது?**

நாடோ மிக அபாய நிலையில் உள்ளது.

ஆட்சிப் பொறுப்பேற்ற பின் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் இதை வெளிப்படையாகச்சொல்லியிருக்கிறார் பிரதமர். எதையும் மக்களுக்கு மறைப்பதற்குத் தான் விரும்பவில்லை. மக்களுக்கு உண்மைகள் தெரிய வேண்டும் என்று குறிப்பிட்ட அவர், எதிர்வரும் காலம் என்பது மிகக்கடினமான நாட்களைக் கொண்டதாக இருக்கும் என எச்சரித்துள்ளார். அல்லது அறிவுறுத்தியுள்ளார்.

நிலைமையை மாற்றியமைப்பதற்கு தான் சில நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருப்பதாகவும் பிரதமர் கூறியிருக்கிறார். குறிப்பாக சிறிலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனத்தைத் தனியாருக்கு விற்க வேண்டியிருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கிறார். இதைப்போல வேறு நிறுவனங்கள், சபைகளும் தனியார் மயப்படுவதற்கான சந்தர்ப்பமுண்டு.

இப்பொழுது நாடு வெற்றிடமாகவே உள்ளது என்பதை அவருடைய அறிவிப்பிலிருந்து நாம் உணர முடிகிறது. இதையே முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஸவும் பொறுப்பேற்ற காலத்தில் கூறியிருந்தார்.

ஆகவே, நிலைமை படு மோசமாகவே உள்ளது. இப்பொழுது இந்தக் கட்டுரையை எழுதிக் கொண்டிருக்கும்போது கோதுமை மாவின் விலை 40 ரூபாயினால் அதிகரித்துள்ளது. பாணின் விலை 30 ரூபாயினால் கூடியுள்ளது.

**தமக்கு ஏற்பட்ட நெருக்கடியை முன்னிறுத்தி, அதற்கு எதிராகப் போராடியபடியால்தான் சிறிய அளவிலான மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. இன்னும் நெடுந்தூரம் பயணிக்க வேண்டும். ஆகவே அதற்குத் தொடர்ந்து போராட வேண்டும். தொடர்ந்து விழிப்பாக இருக்க வேண்டும். மக்களே வழிப்படுத்துநர்களாக இருக்க வேண்டிய வரலாற்றுத் தருணம் இது.**

புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் எரிபொருள் விநியோகம் சீராகவில்லை. மின்தடை நீங்கவில்லை. இதெல்லாம் இப்போதைக்கு சீராகும் என்றில்லை. இதற்குக் காலம் எடுக்கும். அந்தக் காலத்தைத் தாக்குப் பிடிக்கக் கூடிய ஆட்சி வேண்டும். அல்லது விரும்பியோ விரும்பாமலோ கட்சி அரசியலுக்கு அப்பால் ஆட்சியை ஸ்திரப்படுத்த வேண்டும். அதோடு இந்த அபாய நெருக்கடிக்குத் தீர்வு காணக் கூடியவாறு ஒரு முகப்பட்டு தீர்மானங்களை எடுக்கின்ற ஒரு ஒழுக்கம் தேவைப்படுகிறது.

**இதை எப்படி உருவாக்குவது?**

மக்களின் மீது அக்கறை கொண்டு செயற்படுவதன் மூலமே இதை உருவாக்க முடியும்.

மக்கள்தான் நாடு. நாடு என்பது வெறும் நிலமும் கடலும் மலைகளும் காடுகளும் அல்ல. அது மக்களும் அவர்களுடைய வாழ்க்கையுமாகும்.

மக்களுடைய வாழ்க்கையைப் பாதுகாப்பது என்பது மக்களைப் பாதுகாப்பதாகும். மக்களைப் பாதுகாப்பது என்பதே நாட்டைப் பாதுகாப்பது என்பதாகும். இதைச் செய்ய முன்வராத சக்திகளையும் ஆட்களையும் மக்கள் இனங்காண வேண்டும். அவர்களை அரசியல் அரங்கிலிருந்து அகற்ற வேண்டும். அல்லது நிராகரிக்க வேண்டும்.

இது மக்கள் 100 வீதம் விழிப்பாக இருக்க வேண்டிய தருணம். கரணம் தப்பினால் மரணம் என்ற நிலையில் மக்களுக்கு வேறு வழியில்லை. அவர்கள் இதைச் செய்துதான் ஆக வேண்டும்.

தமக்கு ஏற்பட்ட நெருக்கடியை முன்னிறுத்தி, அதற்கு எதிராகப் போராடியபடியால்தான் சிறிய அளவிலான மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. இன்னும் நெடுந்தூரம் பயணிக்க வேண்டும். ஆகவே அதற்குத் தொடர்ந்து போராட வேண்டும். தொடர்ந்து விழிப்பாக இருக்க வேண்டும். மக்களே வழிப்படுத்துநர்களாக இருக்க வேண்டிய வரலாற்றுத் தருணம் இது.

நெருக்கடிகள் உச்சமடையும்போது மக்களின் பங்கேற்பு உருவாகுவது உலக நியதி. உலகெங்கும் இதுவே நடந்துள்ளது. ஆகவே இந்த ஆட்சியை மக்களே வழிநடத்த வேண்டும். புதிய அரசாங்கம் பொறுப்பெடுத்துள்ளது. புதிய பிரதமரும் அமைச்சர்களும் வந்துள்ளனர். ஆகவே இனிப் பிரச்சினையில்லை. எல்லாமே சீராகி விடும் என்று நம்பவோ எதிர்பார்க்கவோ முடியாது. அதையே புதிய அரசாங்கத்திலும் தொடரும் நிலையும் பிரதமரின் அறிவிப்பும் சொல்கின்றன.

மக்கள் அரசாங்கத்தை வழிநடத்தால், அதைச் சரியாகக் கண்காணிக்காமல் விட்டதன் தவறே இன்றைய அறுவடை என்பதையும் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஆகவே மக்கள் அரசாங்கத்தை வழிப்படுத்துவது, கண்காணிப்பதுடன் தம்முடைய வாழ்க்கை முறையையும் மாற்றிக் கொள்ள வேணும். நெருக்கடி நிலைக்கு ஏற்ப வாழ்க்கை முறையில் மாற்றம் தேவைப்படுகிறது. உணவு, உடை, போக்குவரத்து, பண்பாட்டு நிகழ்வுகள் என அனைத்திலும் இந்த மாற்றம் தேவை. அத்துடன் முக்கியமாக உழைப்பிலும் உற்பத்தியிலும் பன்மடங்கு ஆற்றலை வெளிப்படுத்த வேண்டும். எல்லோரும் இரண்டு அல்லது இரண்டரைமடங்கு உழைக்க வேண்டும். அரச உத்தியோகத்தர்கள் தனியே உத்தியோகம் என்று அலுவல வட்டத்திற்குள் சுற்றிக் கொள்ளாமல் களத்திலும் பணியாற்ற வேண்டும். இந்தப் பணி ஏதோ கடமைக்குச் செய்யும் பணி என்றில்லாமல் அர்ப்பணிப்புடன், புதிதாக்குகிறோம் என்ற உணர்வுடன் செய்யப்பட வேண்டும்.

இப்படி அனைத்துத் தரப்பிலும் ஒரு முகப்பட்டு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளே இந்தத் தேசிய இடரை நீக்கப்பயன்படும். இதற்கான வழியை அரசாங்கமும் காட்ட வேண்டும். புதிய பிரதமரும் அவரை அங்கீரித்துள்ள ஜனாதிபதியும் கூட்டாக இணைந்து இந்த வழிகாட்டலைச் செய்ய வேண்டும். அவர்களை நெறிப்படுத்தும் பொறுப்பு மக்களுக்கு. ஆக பரஸ்பர உறவும் பங்கேற்புமான நிலையில்தான் புதிய சூழலை உருவாக்க முடியும்.

கருணாகரன் ...✍




# இலங்கை முதற் பிரஜையின் இல்லம் எனப் பெயர்பெற்ற ஜனாதிபதி மாளிகை

கொழும்பின் பழமையான மரபுரிமை கட்டிடங்களில் ஒன்று இன்றைய ஜனாதிபதி மாளிகை. ஒரு காலத்தில் அது இராணி மாளிகை (Queen's House), அரச மாளிகை, கவர்னர் மாளிகை (Governor's house) என்றும் அழைத்தார்கள். இலங்கை குடியரசான பின்னர் ஜனாதிபதி மாளிகை (President's House) என்று இன்று அழைக்கப்படுகிறது. அது அமைந்திருக்கும் வீதியும் கூட அன்று இராணி வீதி என்று அழைக்கப்பட்டது. இப்போது ஜனாதிபதி மாவத்தை (Janadhipathi Mawatha) என்று அழைக்கப்படுகிறது.

1972 ஆம் ஆண்டு குடியரசு அரசியலமைப்பு தோன்றும் வரை இலங்கையில் மூன்று அரச மாளிகைகள் இருந்தன. கொழும்பிலும், கண்டியிலும், நுவரெலியாவிலும் அவை இருந்தன.

கொழும்பு கோட்டையில் உள்ள ஜனாதிபதி மாவத்தையில் உள்ள கோர்டன் பூங்காவில் அமைந்துள்ள இந்த கட்டிடத்தின் வரலாறு டச்சுகாலத்தில் இருந்து தொடங்குகிறது. 18ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட இந்த அரண்மனை, நாட்டின் கடைசி டச்சு ஆளுநரான யொஹான் வான் அன்கெல்பீக்கின் (15.07.1794 – 16.02.1796) தனிப்பட்ட இல்லமாக இருந்தது. அவர் இதனை 1785 ஆம் ஆண்டு 16ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பழைய போர்த்துக்கேய புனித பிரான்சிஸ் (St Francis's Church) தேவாலயத்தை இடித்துவிட்டுக் கட்டிய அரண்மனை தான் இது. இது பிரிட்டிஷ் கவர்னர்களின் உத்தியோகபூர்வ அரச இல்லமாக மாறியதற்குப் பின்னால் ஒரு சுவாரஸ்யமான மற்றும் சோகமான கதை உள்ளது.



இறுதி டச்சு ஆளுநரான யொஹான்வான் அன்கெல்பீக்கின் (Johan Gerard van Angelbeek) பேத்தியை மணந்தவர் ஆங்கிலேய வரி வசூலிப்பு சிவில் அதிகாரியாக இருந்த ஜோர்ஜ் மெல்வின் லெஸ்லி (George Melvin Leslie). தனது கடமைகளின் போது ஒரு முறை கணக்கு வழக்குகளைப் பார்த்தபோது பத்தாயிரம் பவுண்கள் குறைவாக இருந்ததற்கு அவர் பொறுபேற்க வேண்டிய இக்கட்டான நிலை ஏற்பட்டிருக்கிறது. அன்கெல்பீக்கின் குடும்பத்தினர் தான் அவரை இந்த நெருக்கடியான சூழ்நிலையில் இருந்து காப்பாற்றினார்கள். இறுதியில் பிரித்தானிய அரசால் அன்று மதிப்பிடப்பட்டிருந்த 35,000 பவுண்களுக்கு இந்த டச்சு அரண்மனையை 1804 ஆம் ஆண்டு ஜனவரி 17ஆம் திகதி பிரிட்டிஷ் ஆட்சியாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இதைப் பற்றிய தகவல்களை ப்ரூக் எலியட் (Brooke Elliott) தனது நூலில் (Real Ceylon 1937) விபரங்களைத் தந்திருக்கிறார்.

அதிலிருந்து ஆரம்பத்தில் இது கிங்ஸ் ஹவுஸ் அரச மாளிகை (kings House) என்றும் பின்னர் விக்டோரியா இராணியின் ஆட்சிக் காலத்தில் (1837 1901) இராணி மாளிகை (Queen 's House) என்றும் அழைக்கப்பட்டது.

இந்தத் தனியார் பங்களாவை இலங்கையின் முதலாவது ஆங்கிலேய ஆளுனர் நோர்த் அரசுடமையாக்கிக் கொண்டாலும் இதனை கவர்னரின் இல்லமாக ஆக்கிக்கொண்டவர் அவருக்குப் பின்னர் ஆளுநராக வந்த தோமஸ் மெயிட்லன்ட். கவர்னருக்கான இன்னொரு மாளிகையையும் அமைத்தார். அது தான் இன்றைய கல்கிஸ்ஸ ஹோட்டலாக மாறியிருக்கிறது.

போர்த்துகேய, டச்சு காலத்தில் பேரு மதில்களுடன் இருந்த கோட்டை எல்லைக்குள் இருந்த மைய கட்டிடங்களில் ஒன்று இது.


ஜேம்ஸ் கார்டினர் தனது நூலில் (Description of Ceylon 1807) ஏழு ஆண்டுகளுக்கு முன்னர் காலமான டச்சு ஆளுநர் வான் ஏஞ்சல்பீக்கின் அந்த இல்லத்தைப் பற்றிக் கூறுகிறார்:

இது கொழும்பு கோட்டையின் மிகப்பெரியதும், சிறந்த வசிப்பிடமுமாகும். இப்போது தீவின் ஆளுநரான மேஜர் ஜெனரல் தோமஸ் மெயிட்லாண்ட் வசமாக்கப்பட்டிருக்கிறது. இது பிரதான பாதையில் அமைந்திருக்கிறது, இரண்டு மாடிகளைக் கொண்ட இந்த இல்லத்தின் ஒரு பக்கத்தில் மேல் பால்கனியில் இருந்து கடல், சாலை, துறைமுகம் என்பவற்றை விசாலமாகப் பார்க்க முடியும். மறுபுறம், ஏரி, புறக்கோட்டை, கறுவாத் தோட்டங்கள் போன்றவற்றை காண முடியும் என்கிறார்.

பிரிட்டிஷ் காலத்தில் இந்த மாளிகையில் பல உயர் அதிகாரிகளின் ஆடம்பர களியாட்டங்கள் நிகழ்த்தப்பட்ட இடமாக இருந்தது. 1815 ஆம் ஆண்டு கண்டி உடன்படிக்கையைத் தொடர்ந்து ஆளுநர் சேர் ரொபர்ட் பிரவுன்ரிக் வெற்றியுடன் கொழும்புக்குத் திரும்பியபோது இங்கே பெரு விழாவாக களியாட்ட நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

புறக்கோட்டையில் பிரதான வாயிலான கைமன் வாயிலில் (Kayman's Gate) ஆங்கிலேயர்களின் வெற்றியைக் கொண்டாடும் முகமாக வாயில்வளைவு அமைக்கப்பட்டு, கவர்னர் அங்கிருந்து தனது துருப்புக்களைக் கடந்து சென்றார். மெயின் வீதியிலிருந்து அரச மாளிகைக்கு செல்லும் பாதை நெடுகிலும், கோட்டையில் பீரங்கிகளும் துறைமுகத்தில் தரித்து நின்ற போர்க்கப்பல்களில் இருந்த பீரங்கிகளும் முழங்கி அவருக்கு வணக்கம் செலுத்தின.ஆளுநர் அரச மாளிகையில் இறங்கியதும், குடியிருப்பாளர்கள் வந்து வாழ்த்து தெரிவித்தனர். வருகை தந்தோருக்கு பாணும் சூப்பும் வழங்கி அன்றைய இரவு விமரிசையாக கொண்டாடப்பட்டன.

ஆளுநர் ரொபட்ஹோர்ட்டனின் காலத்தில்(18311837)700 பவுண்டுகள் செலவில் பழுதுபார்க்கப்பட்டது. அதன் பின்னர் 1852ல் ஆளுநர் ஜார்ஜ் ஆண்டர்சனால் மீண்டும் புதுப்பிக்கப்பட்டது.



டச்சுக்காரர்கள் விட்டுச் சென்ற பல கட்டடங்களை ஆங்கிலேய உயர் அதிகாரிகள் தமது உத்தியோகபூர்வ இல்லங்களாகப் பயன்படுத்திக் கொண்ட போதும் மிகவும் உயரிய தரத்தில் கொழும்பில் இருந்த அரண்மனையாக இது காணப்பட்டதால் பிரிட்டிஷ் ஆளுநர்களின் இல்லமாக இது தொடர்ந்து பயன்படுத்தப்பட்டது. அதாவது இலங்கையின் முதற் பிரஜையின் இல்லமாக இது தொடர்ந்தது. இலங்கையை ஆண்ட 29 ஆளுநர்கள் இதில் வசித்திருக்கிறார்கள்.

1948 சுதந்திரத்துக்குப் பின்னரும் இலங்கையின் ஆளுநர் மாளிகையாகத் தான் அது தொடர்ந்தது. சுதந்திர இலங்கையின் முதலாவது ஆளுநர் நாயகம் ஹென்றி மூரின் பதவிப் பிரமாணம் 1948 பெப்ரவரி 4 ஆம் திகதி இங்குதான் இடம் பெற்றது. 1954 ஆம் ஆண்டு எலிசபெத் மகாராணியின் உத்தியோகபூர்வ வருகையின் போது தனது கணவரோடு இங்கே தங்கியிருந்தார்.

1972 ஆம் ஆண்டு ஆளுநர் பதவி ஒழிந்ததன் பின் ஆளுநர் நிலை கிட்டத்தட்ட ஜனாதிபதி பதவியாக மாறியது. ஒலிவர் குணதிலக்க 1962 மார்ச் 2 ஆம் திகதி வரை இங்கு வசித்தார். அப்போதைய இராணுவ அரச கவிழ்ப்புச் சதியில் சந்தேகிக்கப்பட்ட அவர் நாட்டை விட்டு ஓடிவிட்ட நிலையில் அந்த இடத்துக்கு கவர்னராக நியமிக்கப்பட்ட வில்லியம் கொபல்லாவ இரண்டு தடவைகள் ஆளநராக பதவி வகித்த போது இங்கே தான் வசித்தார்.1972 ஆம் ஆண்டு அவர் இலங்கையின் முதலாவது ஜனாதிபதியாக தெரிவாகியபோது இது ஜனாதிபதி மாளிகையாக அழைக்கப்பட்டது. ஜே.ஆர், பிரேமதாச, கோத்தபாய போன்ற தமது சொந்த இல்லங்களிலேயே வசித்தபோதும் உத்தியோகபூர்வ சந்திப்புகளுக்கான அரண்மனையாக இதைத் தான் பயன்படுத்தி வந்தார்கள். மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக இருந்த காலத்தில் இங்கே அவர் வசிக்கவில்லை.

இந்த மாளிகையை பழுது பார்க்கும் தேவை 80 களில் உணரப்பட்டது. அடுத்த பத்தாண்டுகள் அதன் பழுதுபார்ப்புக்காக செலவிடப்பட்டது. அதனை இலங்கையில் மிகப் புகழ்பெற்ற கட்டடக் கலைஞரான ஜெப்ரி பாவா (Geoffrey Bawa) அந்தப் பணியை அற்புதமாக செய்து முடித்தார். இந்தக் காலப்பகுதியில் ஜனாதிபதி ஜே.ஆர் .ஜெயவர்த்தன அவரின் சொந்த இல்லமான ப்றேமரில் (Braemar) குடியிருந்தனர். ஆனாலும் இந்த இடைக்காலத்தில் முக்கிய அரச சந்திப்புகளுக்கு இந்த மாளிகையைப் பயன்படுத்தினார். 1987 ஆம் ஆண்டு ராஜீவ் ஜே.ஆர் உடன்படிக்கைக்கான சந்திப்புகள் இங்கே தான் நிகழ்ந்தன. இந்த மாளிகைக்கு வெளியில் தான் ராஜீவ் காந்தி இராணுவ மரியாதை ஏற்பு நிகழ்வில் கடற்படை சிப்பாயால் தாக்கப்பட்டார்.

1993 இல் ஜனாதிபதி பிரேமதாச தற்கொலை குண்டு தாக்குதலில் கொல்லப்பட்டதும் அவருக்குப் பதிலாக டீ.பி விஜேதுங்க ஜனாதிபதியாகி இந்த மாளிகையில் தான் தனது ஓராண்டு கால ஆட்சியின் போது வசித்தார். 1994 ஆம் ஆண்டு ஜனாதிபதியாக சந்திரிகா குமாரணதுங்க ஆட்சியமைத்த வேளை அவர் ஜனாதிபதியின் வாசஸ்தலமாக அலரி மாளிகையைப் பயன்படுத்தினார். பிரதமரான சிறிமா பண்டாரநாயக்க அவருடன் அங்கேயே வசித்து வந்தார். ஆனால் 1999 ஆம் ஆண்டு அவரின் பதவிக் காலம் நிறைவுறும் வரை அங்கேயே தங்கிய போதும். மீண்டும் அவர் தெரிவு செய்யப்பட்ட போது ஜனாதிபதி மாளிகையில் வசிக்கத் தொடங்கினார்.

இந்த மாளிகையைச் சூழ அழகான பூங்காவை அமைத்தவர் 1883 –1890 காலப்பகுதியில் இலங்கையின் ஆளுநராக ஆட்சி செய்த ஹெமில்டன் கோர்டன் (Sir Arthur Hamilton Gordon). 1887 ஆம் ஆண்டு விக்டோரியா இராணியின் பொன் விழா கொண்டாட்டம் நிகழ்ந்தபோது, மாளிகையோடு அண்டிய நான்கு ஏக்கர் நிலத்தில் தனது சொந்தச் செலவில் அந்தப் பூங்காவை அவர் அமைத்தார். அன்றிலிருந்து அந்தப் பூங்கா கோர்டன் கார்டன் என்று அழைக்கப்பட்டு வருகிறது. அதை



ஒரு இரகசியப் பூங்கா என்றும் சிலர் அழைப்பதைக் கண்டிருக்கிறோம். பல்வேறு அரிதான மரங்களும், தாவரங்களும் அங்கே உள்ளன. 1970கள் வரை அந்தப் பூங்காவை பொதுமக்களும் அனுபவித்தார்கள். அதன் பின்னர் அது இந்த மாளிகையோடு இணைக்கப்பட்டு மூடப்பட்டுவிட்டது.

1920 ஆம் ஆண்டு இங்கிலாந்திலிருந்து கொண்டுவரப்பட்டு இங்கே வைக்கப்பட்டிருந்த விக்டோரியா மகாராணியின் வெண்கலச் சிலை 2006 ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்சவின் ஆட்சி காலத்தில் அகற்றப்பட்டு கொழும்பு நூதனசாலையில் வைக்கப்பட்டது. மேலும் 1505 ஆம் ஆண்டு போர்த்துகேயர் இலங்கைக் கைப்பற்றிய போது கொழும்பு துறைமுகத்தின் அருகில் 20 தொன் எடையுள்ள ஒரு கல்லில் தமது சின்னத்தை அடையாளமாகப் பொறித்தார்கள். 1875 ஆம் ஆண்டு ஆங்கிலேயர் துறைமுகத்தை மீள்நிர்மாணம் செய்தவேளை இந்தக் கல் அவர்களுக்கு கிடைத்தது. அதனை அவர்கள் கொண்டு வந்து இந்த இராணி மாளிகையின் பூங்காவில் வைத்தார்கள். ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷ பதவி வசித்த காலத்தில் இக் கல் அகற்றப்பட்டு கடற்கரையோரமாக வீசி எறியப்பட்டிருந்தது.

இலங்கையின் நில அளவையைக் குறிக்கும்போது. இந்த இராணி மாளிகையில் இருந்து தான் சகல பிரதேசங்களின் தூரங்களும் அளவிடப்பட்டு வருகின்றன. 1830 இல் கொழும்பு கண்டி வீதி அமைக்கப்பட்டதிலிருந்து இந்த வழிமுறை பின்பற்றப்பட்டு வருகிறது.

இந்த மாளிகையை எவரும் இலகுவில் அணுகமுடியாத நிலையே ஆங்கிலேயர் காலத்தில் இருந்தது. ஆளுநர்களும், காலனித்துவ அதிகாரிகளும், மாளிகைப் பணியாளர்களும் மட்டுமே அங்கு சென்று வரும் வாய்ப்பைப் பெற்றிருந்தார்கள். 1996 ஆம் ஆண்டு இந்த மாளிகையின் அருகில் இருக்கும் இலங்கையின் மத்திய வங்கியின் மீது நிகழ்ந்த பாரிய குண்டு வெடிப்பின் பின்னர் ஜனாதிபதி மாவத்தை (வீதி) மூடப்பட்டது. பின்னர் மீண்டும் 2015 ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கத்தின் போதுதான் திறக்கப்பட்டது. 2016 ஆம் ஆண்டு இது ஒரு வார காலத்துக்கு போது மக்கள் பார்வையிடுவதற்காக திறக்கப்பட்டது. பல பாடசாலை மாணவர்களும் போது மக்களும் நீண்ட வரிசையில் இந்த மாளிகையைப் பார்த்து வியந்து சென்றனர். மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் இந்த மாளிகையின் அமைப்பில் பல மாற்றங்கள் செய்யப்பட்டன. சுமார் மூன்று பில்லியன் ரூபாய் அதற்காக செலவிடப்பட்டன. யுத்த பீதியின் காரணமாக நிலக்கீழ் இரகசிய அறைகளும் கட்டப்பட்டன. அவரின் குடும்பத்தினரின் ஆடம்பர மாளிகையாகவும் மாற்றப்பட்ட செய்திகள் அப்போது வெளிவந்தன. மாதாந்த மின்சார பாவனைக்கான கட்டணம் மாத்திரம் மூன்று மில்லியன்கள் செலுத்தப்பட்டது. டச்சு,பிரிட்டிஷ் கட்டிடக் கலையின் அம்சங்களை ஒருங்கிணைத்து, இந்த இரண்டு மாடிக் கட்டடம் பல தனித்துவமான அம்சங்களைக் கொண்டிருக்கிறது. கட்டடத்தின் உட்புறம் பல உறுதியான மர வடிவமைப்புகளைக் கொண்டுள்ளது. பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் அங்கிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நேர்த்தியான தளபாடங்கள் கட்டடத்தின் பிரமாண்டத்தை மேலும் வசீகரப்படுத்துகின்றன.

கொழும்பு கண்டி வீதியை அமைப்பதற்கு வழிவகுத்த ஆளுநர் சேர் எட்வர்ட் பார்ன்ஸின் வெண்கலச்சிலை அரண்மனையின் முன்வாயிலுக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த மாளிகையில் பிரித்தானிய அரச குடும்ப உறுப்பினர்கள் மட்டுமன்றி பிற்காலத்தில் இலங்கைக்கு விஜயம் செய்த அரச விருந்தினர்களும் பல பிரமுகர்களும் தங்கவைக்கப்பட்டனர்.

இந்த மாளிகையின் நுழைவாயிலில் ஒரு பாரிய இரும்பு வாசல் உண்டு. அங்கிருக்கும் சாவடியில் காவலாளிகள் ஆயுதமேந்தி பாதுகாக்கின்றனர். லண்டனில் உள்ள மகாராணியின் அரண்மனைக் காவலாளிகளைப் போல இவர்கள் விசேடமான சீருடை அணிந்து உரிய நேரத்துக்கு அணிவகுத்து வந்து கடமையில் மாறுவதை பலர் வந்து பார்வையிடுவார்கள்.

---

## வாழ்வாதாரமா சேதாரமா 224




# கடனில்லாமல் கால்வயிறே சாப்பிட்டாலும் நல்லது

'கடனில்லாக்கஞ்சி கால்வயிறு' என்றொரு பழமொழி இருக்கிறது. இதன் அர்த்தம் அவரவர் தகமைக்கும் விருப்பத்துக்கும் ஏற்றவகையில் போட்டுக் கொள்ளலாம். கடனில்லாமல் வாழுவதாயின் கால் வயிற்றுக்கே கஞ்சி குடிக்கலாம் என்றும் கூறலாம். கடனில்லாமல் கால்வயிறே சாப்பிட்டாலும் நல்லது எனவும் பொருள் கொள்ளலாம்.

எமது வாழ்க்கையை கடன் வாங்கியே ஓட்டிவிடலாம் என்ற சிந்தனை இன்று அநேகருக்கு உண்டு. எங்கெல்லாம் கடன் கொடுக்கிறார்களோ அங்கெல்லாம் தன்னையும் ஒரு உறுப்பினளாக சேர்த்து கடன் வாங்கிக் குவிக்கும் பெண்கள் சிலரை எனக்குத் தெரியும். அவர்களிடம் சேமிப்புப் பற்றி நான் எடுத்துக் கூறிய சொற்கள் எல்லாம் குடிகாரனிடம் சொன்ன புத்திமதிகள் போல போதையில் கரைந்து போனது.

சரி கடன்தான் வாங்குகீறீர்களே அது உங்களுக்கு தேவையான வகையில் பொருளை மென்மேலும் பெருக்கக்கூடிய வகையில் அமைகிறதா என்றால் அதுவும் கிடையாது. முதலில் கோழி வளர்ப்பிற்காக கடன் வாங்கி ஒரு பென்னம்பெரிய தொலைக்காட்சிப் பெட்டியை வாங்கிய பெண், இன்று அதற்காக மின்கட்டணத்தையும், மாதாந்தம் டிஷ் கட்டணத்தையும் கட்டிக்கொண்டு கடனையும் திருப்பிக் கட்டிக் கொண்டிருக்கிறாள். அந்த கடனை வழங்கியவர்கள் கட்டுகிற கடன் முடியுமுன்பே வேறொரு பெயரில் வேறு கடனை வழங்க சித்தமாகிவிட்டனர். இப்போது அந்தப்பெண் யோசித்தாள். அதை வாங்கினால் பழைய கடனை செலுத்திவிட்டு புதியதை கட்டலாம் என்று. அவள் அதை செயற்படுத்தினாள்.. இப்போது அவளுடைய வீட்டுக்கு ஒரு காஸ் சிலிண்டரும் இரட்டை அடுப்பும் வந்தன. அவளுடைய சமையல் நேரம் மீதமாகி தொலைக்காட்சியில் கூடுதலான நேரத்தை செலவிட முடிந்தது. இதே நேரம், இன்னுமொரு விடயம் நடக்கிறது.

இதற்கு முன்னர் அவர்கள் வீட்டின் தென்னை மரங்களிலிருந்து விழும் ஓலைகளை கிடுகாக பின்னி அதையே வீடு வேயவும், வேலியடைக்கவும் பயன்படுத்தி வந்தார்கள். இப்போது அவளுக்கு அதற்கான நேரம் தொலைந்து போயிருந்தது. காரணம் கிடுகின் தேவைப்பாடும் குறைந்து போனது. சென்ற காலத்தின் வீட்டுத்திட்டமானது அவர்களுக்கொரு வீடு கட்ட உதவியிருந்தது. என் தாயார் அடிக்கடி ஒரு கிராமியப்பாடலை முணுமுணுப்பார்.

' எல்லாருந் தாலிகட்ட என் மகளோ பாத்திருக்க வாடி மகளே நாங்கள் வரணி மட்டும் போய் வருவம்' என்று. அதே போல அவர்களும் எல்லாரும் கல் வீட்டில் இருக்க நாங்க மட்டும் என்ன குறைவா என்று வீட்டைக் கட்ட ஆரம்பித்தார்கள். அந்த வீடானது அவர்களுடைய வீட்டிலிருந்த கொஞ்ச நஞ்ச நகை நட்டுகளையும், சின்னதாக வீட்டுச் செலவை சமாளித்துக் கொண்டிருந்த கால்நடைகளையும் விழுங்கி நிமிர்ந்தது.

இதன் பின்னணியில் அவர்களது சொந்த வருமானமான தென்னை பனைகளின் ஓலைகள் தேவையற்று அவை தீயிடப்பட்டன.

கிராமத்தில் பெண்களிடம் ஒரு வழக்கம் உண்டு. காலையில் சமைத்த பாத்திரங்களை வெளியே ஒரு வாழை மரத்திடியிலோ கமுக மரத்தடியிலோ போட்டு ஆசறுதியாக ஒரு குந்து பலகையில் அமர்ந்து விளக்கி கழுவுவார்கள் இதற்கு வைக்கோல் தும்புகளையோ தென்னந்தும்புகளையோ உபயோகிப்பார்கள். விளக்கும் பொருளாக சிறு துண்டு சலவை சோப், சாம்பல் என்பவை பயன்படும் பாத்திரங்கள் பித்தளையாயின் கொஞ்சம் புளியோ தேசிக்காய்களோ அதுவும் வீட்டில் விளைந்ததுதான். உபயோகிப்பர். அந்த கழுவிய நீர் வாழைக்குப் பாய்ந்து ஒரு நல்ல குலை போடும். மாதாந்தம் இந்த சட்டி பானை கழுவும் செலவு (நகரத்தில் பிளாட்டுகளில் வசிக்கும் பெண்கள் விதிவிலக்கு) இன்றைய பெண்களுக்கு எவ்வளவு என்கிறீர்கள். போட்டி போட்டுக் கொண்டு இந்த கழுவல் விளம்பரங்கள் எங்கள் பெண்களின் கழிப்பறை வரை செல்கிறது. எமது வளங்கள் போயே போச்சு. சட்டிகள் கழுவும் இடத்தில் ஒரு சட்டிச்சிறாம்பி இருக்கும் கழுவிய மண்சட்டிகள் அனைத்தும் அதில் பரவி வெய்யிலில் காயவிடப்படும். அவற்றில் இரண்டு தட்டுகள் வைத்திருப்பர் ஒன்றில் தீய சட்டிபானைகள் அதாவது மச்சம் மாமிசம் புழங்காதவை. மற்றது கலவன். இன்று கிராமத்து வீடுகளில் கூட கழுவும் தளம் வீட்டுக்குள்தான். தேங்காய் துருவும் சத்தத்தைக் கேட்டுக் கொண்டே மலசலம் கழிக்கவும் பழகிக் கொண்டோம். இவற்றுக்காக நாம் செலவிடும் பணம் வெளிநாடுகளுக்குத்தான் போகிறது. முதலில் எமக்கு வசதிகளை ஏற்படுத்தி தருவதற்காக கம்பனிகள் வரும். அந்த கம்பனிகளின் பொருட்களை நாம் பழகும் வரை நிவாரணமாகக்கூட தருவார்கள்.

அதன்பின் நாம் மீள முடியாமல் அதற்குள் மாட்டிக் கொள்வோம் . ஒரு நாடு கடன் தரும் தந்த கடனை தானே வசூலிப்பதற்காக இந்த கம்பனிகளை முன்னமே அனுப்பும் அவர்களுடைய பணம் அவர்களுக்கே போய்விடும். நாங்கள் வட்டி கட்டிக் கொண்டே இருப்போம். எங்களுடைய வளங்களுக்கு என்ன நடந்தது. ? என்ற கேள்வியே கேட்காமல் நாம் அமுந்திப் போய்க்கிடப்போம்.

எல்லா மூன்றாம் உலக நாடுகளையும் அதன் வளங்களையும் அடித்துச் சாப்பிடும் முதலாளித்துவ நாடுகளுக்கு அதை தடையின்றி வழங்கவல்ல அரசாங்கங்களும் மிக அவசியம்.

சாதாரண மக்களுக்கு கடன் வழங்கும் தனியார் வங்கிகளுக்கும் இதுவே நோக்கம் என்றால் நம்புவீர்களா? நாங்கள் ஆற்றிலே புளிகரைக்கிறோம் என்பதை அறியாமலே வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எம்மைச்சுற்றி என்ன நடக்கிறது என்பதை அறிந்தாலும் நம்மால் எதுவும் செய்ய முடியாது.

வாருங்கள் பொக்கணைக்கு ஐந்து லட்சத்துக்கும் அதிகமான மக்கள் அன்றாடம் சமைக்க இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக காஸ் சிலிண்டர்கள் இல்லை. போர் நடந்த மண்ணில் இரண்டாயிரத்து இரண்டின் சமாதான காலம் வந்த போதுதான் இந்த சிலிண்டர்கள் வந்தது.




அதுவும் இரண்டாயிரத்து ஆறுடன் நின்று போனது ஆனாலும் பெருமளவு மக்கள் இதை பழகவில்லை. எரிபொருளாக விறகு தாராளமாகவே இருந்தது. மக்கள் ஒருபுறமாக சாய்க்கப்பட்டு இரணைப்பாலை கடந்த பிறகு விறகு கிடைக்கவில்லை. ஆனால் மக்கள் சமைத்தே உண்டார்கள். நீரிலேயே கிடைக்கும் கண்டல் வேர்களை வெட்டி வெய்யிலில் உலர வைத்து பனை ஓலைகளும் பாளைகளும் கலந்து சமைத்தார்கள். அது ஒரு பாழ்வெளி. மணல் மணல் மணல் மணலைத்தவிர சாதாரண மண் கிடையாது ஆலும் பனையும் ஈச்சமரங்களுமே இருந்தன ஆனால் எனக்கு இப்போதும் ஆச்சரியமாகத்தான் இருக்கிறது லட்சக்கணக்கானவர்களில் விரல்விட்டு எண்ணக்கூடிய அளவினரிடமே மண்ணெய் அடுப்பு இருந்தது அதற்கும் மண்ணெய்யின் விலை போத்தல் ஐநூறு ரூபா. வாழ்ந்தோம் மக்களே நாங்கள் இழப்பதற்கு எமது உயிரைத்தவிர எதுவுமில்லாமலும் வாழ்ந்தோம். கடன் என்ற பேச்சே இல்லாமல் வாழ்ந்தோம். நாம் இழந்த மறந்து போன வாழ்க்கையை மீளவும் தேடிக் கண்டடைந்தால் தனிப்பட எனக்கு லாபம் என நான் நினைக்கிறேன். அதனால் முழுமையாக முடியாவிட்டாலும் இயலுமானவரை இயற்கையை பேண முயல்கிறேன். இதுவரை கடனில்லாமல் வாழ்ந்திருக்கிறேன். இனியும் அப்படியே வாழ விரும்புகிறேன். என்பதை ஒவ்வொரு பிரசையும் மன உறுதியோடு கூற முடிந்தால் எம்மை யாரால் அசைக்க முடியும்.



**கேள்வி:- நாட்டில் ஏற்பட்டுள்ள குழப்ப நிலைகள் தொடர்பில் உங்களின் நிலைப்பாடு என்ன?**

**பதில்:-** நாட்டின் குழப்ப நிலை தொடரும். புதிய பிதமரும் அவ்வாறே தெரிவித்துள்ளார். இன்னும் காலங்கள் எடுக்கலாம். பிரதமர் சரியான பாதையில் செல்வரா என்பதும் கேள்விக்குறியாக தான் எனது மனதில் தோன்றுகின்றது. 15 அமைச்சர்களைத் தான் நியமிக்கப் போவதாக கூறியிருக்கின்றார். முழுமையாக நியமிக்க அவரால் முடியவில்லை. ஜனாதிபதியிடம் யார் யார் அமைச்சர்கள் என்று சொல்ல முடியவில்லை. இவ்வாறான நிலைமை நீடிக்கின்ற பொழுது, பலமான ஒருவராக அவர் இல்லை. பிரதமர் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவராக இல்லை. பொதுஜன பெரமுனவின் உறுப்பினராக தான் இருக்கின்றார். அவரின் பெரும்பான்மையின் அடிப்படையில் தான் பிரதமராக ஜனாதிபதியால் நியமிக்கப் பட்டுள்ளார். ஆகையினால், இந்த குழப்பம் தொடரப் போகின்றது. பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதென்றால். டொலர் அதிகரிக்க வேண்டும். இன்னும் சரியான நிலைப்பாடு வரவில்லை. மூன்று வாரத்தின் பின்னர் தான் மதிப்பீட்டை செய்யலாம் என நினைக்கின்றேன்.

**தற்போதைய தென்னிலங்கை அரசியல் நிலவரம் தொடர்பாக வடக்கின் அரசியல் தலைவர்களது நிலைப்பாடு பற்றி வடக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி விக்கினேஸ்வரனும், வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சிவிகே சிவஞானமும் தெரிவித்துள்ள கருத்துக்கள்...**

# கூட்டமைப்பு அமைச்சுப் பதவிகளை ஏற்காது

## வடக்கு மாகாண சபையின் சபை முதல்வர் சி.வி.கே சிவஞானம்

**கேள்வி:- தமிழக முதலமைச்சரினால் வழங்கப்படுகின்ற உதவித் திட்டங்கள், தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி, சிங்கள மக்களுக்கும் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையினால், சிங்கள மக்கள் மத்தியில் தமிழ் மக்கள் மீது நல்லெண்ணம் தோன்றியுள்ளது. இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, சிங்கள மக்களுடன் ஏன் இணைந்து செயற்படக்கூடாது?**

**பதில்:-** நாங்கள் சிங்கள மக்களின் நல்லெண்ணத்தை பயன்படுத்தி, அரசாங்கத்துடனும், அரசாங்கம் சார்ந்தவர்களுடனும் பேசி, ஒரு தீர்வுக்கு வர வேண்டுமென்று தான் பல முயற்சிகளை முன்னெடுக்கின்றோம். அதில் தீவிரமாக இருக்கின்றோம். அதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை.

**கேள்வி:- சமஸ்டியை கைவிட்டு, 13வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி, அதனூடாக தமிழ் மக்களின் இனப்பிரச்சினை தீர்வுக்கும் , அதிகாரங்களை பெறுவதற்கமான முயற்சிகளிலும் ஈடுபடக்கூடாது?**

**பதில்:-** கட்டமைப்பு வேறாக இருக்கலாம். முறைமை கூட்டாட்சி முறைமையாக இருக்க வேண்டும். மாகாண சபை முறைமைக்குள்ளும் கூட்டாட்சி முறைமை வரலாம். இணைப்பாட்சி, அல்லது கூட்டாட்சி தான் எங்களுக்கு தேவையாக இருக்கின்றது. சின்னதொரு மாற்றத்திற்காக, எங்களது அங்கீகாரம் எமது இனத்தின் அடையாளங்கள், அதன் பாதுகாப்பு என்பனவற்றைக் கைவிட வேண்டிய அவசியமில்லை. 13வது திருத்தத்தில் இருக்க வேண்டியது கூட இல்லாமல் போய்விட்டது. மாகாண சபை முறைமை இருக்க வேண்டும் என்பதில் நாங்கள் தெளிவாக இருக்கின்றோம். அது இருக்க வேண்டும். அது பாராளுமன்றத்திற்கும், உள்ளூராட்சிக்கும் இடையில் இருக்க வேண்டிய கட்டமைப்பு . அது வேறு. எமது அரசியல் இலக்கு, நோக்கம் தன்னாட்சி. நாங்கள் பிரிவினை கோரவில்லை.

**கேள்வி:- சுமந்திரனுக்கு சட்டம் மறுசீரமைப்பு குழுவில் அங்கத்துவம் வழங்கப்பட்டுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தமிழ் கட்சிகள் ஏன் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படக்கூடாது. ஏன் அமைச்சுப் பதவிகளைப் பெறக்கூடாது?**

**பதில்:-** தமிழ் மக்கள் என்று பார்க்கும் போது, டக்ளஸ் தேவானந்தா, ஜீவன் தொண்டமான் போன்றவர்கள் அமைச்சுப் பதவிகளை எடுக்கத்தான் போகிறார்கள். எங்களைப் பொறுத்தவரை அமைச்சுப் பதவியென்பது ஒரு கூட்டுப் பொறுப்பிற்குள் செல்கின்ற விடயம். பொறுப்புக் கூறல் என்று அமைச்சுக்குள் போவதென்றால், இந்த அரசாங்கம் எல்லாவற்றையும் சரியாக செய்யுமா என்பது கேள்விக்குறி. அதன் வரலாறு அப்படித்தான். எல்லா விடயங்களுக்கும் அமைச்சுக்குள் போய் இருந்துகொண்டு பொறுப்பெடுக்க முடியாது. எம்மால் அமைச்சுப் பதவிகளை ஏற்க முடியாது. ஆனால் பங்காளியாக இருக்க முடியும். தமிழ் தேசிய கூட்டமைப்பை பொறுத்த வரையில் எங்களுக்கு அமைச்சுப் பதவிகளை எடுக்கும் எண்ணம் கிடையாது. அது எங்களுக்குப் பாதகமாக அமையும். ஆனால், நல்ல செயற்பாடுகளுக்கு நாங்கள் ஆதரவாக இருப்போம். எனவே சுமந்திரன் சட்ட மறுசீரமைப்பு குழுவில் அங்கம் வகிப்பதனால் நன்மை பயக்கும் என்று தான் நினைக்கின்றேன்.

**கேள்வி:- பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட வருமாறு கட்சிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார். அரசுடன் இணைந்து செயற்பட தமிழ் தேசிய கூட்டமைப்பு தயாரா?**

**பதில்:-** அரசாங்கத்திற்கு எதிரான நிலைப்பாட்டில், ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தில் பங்காளியாகவும் இருக்கவிரும்பவில்லை. பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு எமது கட்சி நிச்சயமாக ஆதரவு வழங்கும். அதேநேரம் பாதகமான நிலைப்பாடு வந்தால் அதை நாங்கள் எதிர்ப்போம். நடு நிலையான முடிவுகளைத் தான் நாங்கள் எடுப்போம். அமைச்சுப் பதவிகள் எடுக்காது. ஆதரவு கொடுக்க வேண்டியதற்கு ஆதரவு கொடுப்போம்.பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள ரணில் விக்கிரமசிங்க முயற்சிக்கின்றார். நிலைப்பாட்டை அவதானம் செய்து ஒரு முடிவுக்கு வரலாம். தற்போது நாங்கள் எதிரான நிலைப்பாடு எடுக்கவில்லை.

**கேள்வி:- தமிழ் தேசிய கூட்டமைப்பின் எதிர்கால அரசியல் திட்டங்கள் என்ன?**

**பதில்:-** தமிழ் தேசிய கூட்டமைப்பின் நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை. எங்களுடைய அரசியல் இலக்கு மற்றும் நோக்கம் ஸ்திரமானது. அதனால், ஆட்சி மாற்றம் வந்தாலும் சரி, தேர்தல் வந்தாலும் சரி, எமது நிலைப்பாட்டை எமது மக்கள் முன் வைப்போம். எமது இனத்தின் அடையாளத்தை இந்த நாட்டில் பாதுகாத்துக்கொண்டு, எமது தாயகத்தில் எமது கல்வி, கலாசாரம், பொருளாதாரத்தை மேம்படுத்தக் கூடிய கட்டமைப்பையும், நி லைமையையும் உருவாக்கி க்கொண்டு, இப்போது எந்த நிலைப்பாட்டில் இருக்கின்றோமோ? அந்த நிலைப்பாட்டில் இருந்து மாற மாட்டோம். தமிழ் மக்களின் உரிமைகளை மீட்க, பாதுகாக்க, தொடர்ந்தும் பாடுபடுவோம்.

இந்தக் குழுவில் எங்களுடைய பல பிரச்சினைகளைப் பேசலாம். அந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கலாம். ஆனால், அரசாங்கத்தின் பங்காளி கட்சியாக மாற தயாராக இல்லை.

**சுமித்தி தங்கராசா**



# புலம்பெயர் உறவுகள் தாயகத்தில் தடையின்றி முதலிடும் சூழல் அவசியம்

## சி.வி. விக்கினேஸ்வரன் பாராளுமன்ற உறுப்பினர்

**கேள்வி :- தற்கால அரசியல் நிலைமை தொடர்பாக உங்களின் நிலைப்பாடு?**

**பதில்:-** ரணிலின் தலைமையில் கட்சி சார்பற்ற அரசாங்கம் நடைபெறுவது வரவேற்கத்தக்கது. ஆனால் ரணிலின் இன்றைய ஆதரவாளர்கள் கோடாபயவின் ஆதரவாளர்களே. அவர்களுக்கு எதிராக ரணில் செல்ல முடியாது.

**பதில்:-** அதைத்தான் நாங்கள் தற்போது செய்து வருகின்றோம். இம் மாதம் 17ந் திகதி பாராளுமன்றத்தில் நான் இருந்த போது வாக்கெடுப்பின் போது பிரதமர் ரணில் தான் வீற்றிருந்த ஆசனத்தை விட்டெழுந்து பாராளுமன்ற முன்றிலைக் கடந்து எதிர்க்கட்சி ஆசனத்தில் இருந்த என்னிடம் வந்து தனக்கு ஆதரவு தெரிவித்தமைக்காக நன்றி தெரிவித்து, தற்போதைய நெருக்கடி நிலை கடந்த பின் தமிழர்களின் சகல பிரச்சினைகளையும் தான் ஒவ்வொன்றாகத் தீர்க்கப் போவதாகவும் அதற்கு நாம் தமக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். ரணில் வழக்கமாக தமிழ்ப் பிரதிநிதிகளுக்கு அவர்கள் கேட்கும் தனிப்பட்ட உதவிகளைத் தாராளமாக வழங்குவார். தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கமாட்டார். அவரிலும் இன்று ஒரு மாற்றம் தெரிகின்றதோ என்று சிந்திக்க வேண்டியுள்ளது! இருந்து தான் பார்ப்போமே?

இக்கட்டான நிலையிலே தான் ரணிலின் பயணம் தொடர்கின்றது. பொருளாதார அவலங்களில் இருந்து நாட்டை மீட்க ரணில் எடுக்கும் காரியங்கள் வெற்றி பெற வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பு.

**2. கேள்வி :- தமிழக முதலமைச்சரினால் வழங்கப்பட்ட உதவித் திட்டங்கள் சிங்கள மக்களுக்கும் சென்றடைய வேண்டும் என்று தமிழ் அரசியல்வாதிகள் வலியுறுத்தியதன் அடிப்படையில் சிங்கள மக்களுக்கு வழங்கப்பட்ட உதவியினால் சிங்கள மக்கள் மத்தியில் நல்லெண்ணம் உருவாகியுள்ளது. அதை தமிழ் மக்கள் சாதகமாக பயன்படுத்த முடியாதா?**

**பதில்:-** இன்று காலி முகத்திடலிலும் ஏனைய இடங்களிலும் தமிழ் மக்களை சக குடிமக்களாக நடத்தும் ஒரு இயல்பு சிங்கள மக்களிடையே பரவி வருகின்றது. அந்த மன மாற்றத்திற்கு தமிழ் நாட்டின் உதவிகளும் காரணமாக இருக்க முடியும்.

**3. கேள்வி :- சமஷ்டி கோரும் நாங்கள் சிங்கள மக்களின் தமிழ் மக்கள் மீதான நல்லெண்ணத்தை அடிப்படையாகக் கொண்டு இனப்பிரச்சினை தீர்வு விடயம் தொடர்பாக ஏன் கோரிக்கை வைக்கக்கூடாது?**

**4. கேள்வி :- சுமந்திரனுக்கு சட்டமறுசீரமைப்பு குழுவில் அங்கத்துவம் வழங்கப்பட்டுள்ள வாய்ப்பை பயன்படுத்தி அரசாங்கத்தில் ஏன் இணைந்து செயற்படக்கூடாது?**

**பதில்:-** சுமந்திரனுக்கு ஒரு தனிப்பட்ட அங்கத்துவம் கிடைத்துள்ளது. அவர் அதனை மொத்தத் தமிழ் மக்களின் விடிவுக்காகப் பாவிக்க வேண்டும். எமக்குப் பதவிகள் தந்தால் அரசாங்கத்திற்கு ஆதரவளிப்போம் என்பது வடகிழக்குத் தேசியத் தமிழ் கட்சிகளின் பொதுவான பாரம்பரியம் அல்ல. பதவி கொடுத்தால் ஆதரிப்பதும் பணம் பெற்று வாக்களிப்பதும் ஒன்று தான். வெக்கங் கெட்ட செயல்! ஆனால் நாட்டின் நலன் கருதி உடன் பயணிப்பது உத்தமர்களின் செயல்.

**5. கேள்வி :- ஏன் அமைச்சுப் பதவிகளை பெறக்கூடாது? அமைச்சுப் பதவிகளை பெறும் எண்ணங்கள் உண்டா?**

**பதில்:-** அமைச்சுப் பதவிகள் பெற்ற டக்ளஸ் தேவானந்தா போன்றவர்கள் தமிழ்ப் பிரச்சினைகளைத் தீர்த்துள்ளார்களா? எமக்குத் தமிழர் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். அமைச்சுப் பதவிகள் பெறுவது ஒரு பொருட்டல்ல. ஆனால் நிபந்தனைகள் விடுப்பதும் எழுத்து மூல உத்தரவாதங்களைக் கேட்பதும் ஆட்சியாளர்களின் மனோநிலையைக் கணித்து அடுத்த நடவடிக்கைகளில் இறங்குவதற்காகவே. அநேகமாக எனது நிபந்தனைகளுக்குச் சாதகமான எழுத்து மூலமான பதில் அரசாங்கத்திடம் இருந்து கிடைக்காது என்பது எனது கணிப்பு. வாய்ச் சொற்களை நம்பி, பிரபுத்துவ உடன்பாடுகளை நம்பி நற்றாற்றில் விடப்பட எமது கட்சி ஆயத்தமில்லை.

**6. கேள்வி :- எதிர்கால திட்டங்கள் தொடர்பில் உங்கள் கட்சியின் நிலைப்பாடு என்ன?**

**பதில்:-** திட்டங்களை முன் வைக்க உள்ளோம். புலம்பெயர் உறவுகள் முன் வந்து எமது தாயகத்தில் தடைகள் எதுவுமின்றி முதலீடுகள் செய்ய இடமளிக்க வேண்டும் என்று கோர உள்ளோம். ரணிலின் பதிலைப் பொறுத்தே திட்ட அமுல்ப்படுத்தல்களின் முன்னேற்றங்கள் இருப்பன.

**சுமித்தி தங்கராசா**



யா/ஊரெழு கணேச வித்தியாசாலையின் மாணவர் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை பாடசாலையில் இடம்பெற்றது.



விழிப்புலனற்றவர்களின் யாழ். மாவட்டக் கிளையில் பதிவுசெய்துள்ள 275 குடும்பங்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு அதன் தலைவரின் கோரிக்கைக்கமைய ரூபா 3,00,000 பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. பூமணியம்மா அறக்கட்டளையின் இலங்கைக்கான தலைவரும் யாழ் மாநகரசபை உறுப்பினரும் சமூகசேவையாளருமான லயன் கலாநிதி நா.தனேந்திரனின் தலைமையில் சமூகத்தொண்டர் அழகுராசாவால் இவை வழங்கப்பட்டன. மேற்றோலான்ட் மீடியாவின் பங்களிப்புடன் கனகரத்தினம் கோபால் அன்ட் கம்பனி உரிமையாளரும் அனுசரணை வழங்கினர்.

படம் வேலணை குறூப் நிருபர்

# CBL குழுமம் டயலொக், MAS & Hemas வழங்கும் அவசரகால நிவாரண முயற்சி

மனிதநேய ஒன்றிணைவு

Dialog | MAS | HEMAS | CBL

CBL குழுமத்தினர் நாட்டில் பொருளாதார நெருக்கடியின் காரணமாக மோசமாக பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்கள் மற்றும் சமூகங்களுக்கு அவசரகால நிவாரணம் வழங்கும் டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி, MAS Holdings, Hemas Holdings PLC, சர்வோதய சிரமதான சங்கம் மற்றும் PwC Sri Lanka ஆகியன கூட்டாக மேற்கொண்டுள்ள "மனிதநேய ஒன்றிணைவு" நிவாரண திட்டத் திட்டத்தில் தாமும் இணைந்துகொண்டுள்ளனர்.

பாதிப்பிற்குள்ளாகியுள்ள சமூகங்களுக்கு உடனடி உதவிகளை வழங்கும் நோக்கில், "மனிதநேய ஒன்றிணைவு" நிவாரண திட்டத்தை முன்னெடுப்பதற்காக அதன் நிறைவேற்று பங்காளரான சர்வோதய மற்றும் கணக்காய்வுபங்காளரான PwC Sri Lanka உள்ளிட்ட ஒத்த எண்ணம் கொண்ட பங்காளர்களுடன் டயலொக்கை கோர்த்தவாறு, டயலொக், MAS மற்றும் Hemas



ஆகிய நிறுவனங்களின் நிதியுதவி பங்களிப்பில் வழங்குகின்ற மேற்படி "மனிதநேயஒன்றிணைவு" நிவாரணத்தினூடே, 100,000 க்கும் மேற்பட்ட மோசமாக பாதிக்கப்பட்டுள்ள ஆழ்ந்த வறுமையில் உள்ள குடும்பங்களுக்கு அவசரநி வாரணங்களை வழங்குவதுடன் ,மேற்படி "மனிதநேயஒன்றிணைவு" நிவாரண திட்டத்தின் மூலம் தற்போது 25 மாவட்டங்களில் அவசர நிவாரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. பயனுள்ள பொருளாதார முன்மாதிரி திட்டத்தினூடாக நிலையான நலன் பரிமாற்றமுறையொன்று நாட்டில் நிறுவப்படும்வரை மேற்படி "மனிதநேயஒன்றிணைவு" நிவாரண வேலைத்திட்டமானது 60 முதல் 90 நாட்களுக்கு தொடர்ந்து முன்னெடுக்கப் படும் என்பது குறிப்பிடத் தக்கது.

CBL குழும முகாமைத்துவ பணிப்பாளர் ஷியாமலி விக்கிரமசிங்க தெரிவிக்கையில், CBL குழுமமானது அக்கறை, தரம், புத்தாக்கம் மற்றும் நேர்மை ஆகிய நான்கு முக்கிய மதிப்புகளின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளது. இந்த கொள்கை மதிப்பானது CBL இல்சிறப்பானஇடத்தைப்பெற்றுள்ளது. இந்தநிவாரணசெயற்றிட்டநடவடிக்கைகளில் பங்குதாரர்களாக இருப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம், மேலும் சரியான தருணத்தில் இந்த முயற்சியில் ஒருபகுதியாக இருப்பதற்கு எம்மை அழைத்தமைக்காக டயலொக் நிறுவனத்திற்கு நன்றிகளை தெரிவிக்கின்றேன். பொறுப்புள்ள பெருநிறுவனங்கள் என்ற ரீதியில், சமூகங்களை பாதிக்கும் விடயங்களில் சமூகத்திற்கு சாதகமான வகையில் ஈடுபட வேண்டிய கடமை எங்களுக்கு உள்ளதுடன், மேலும் இந்த முக்கிய தருணத்தில் உதவிகள் தேவைப்படும் பல இலங்கையர்களுக்கு எம்மால் உதவமுடியும் என்று நம்புகிறேன். ஒருநாடு என்ற ரீதியில்எங்களுக்கு ஒருபு திய நோக்கு இருத்தல் அவசியமாகும். அது அனைவருக்கும் செழிப்பை தோற்றுவிப்பதாக அமைதல் வேண்டும், அத்தகைய இலக்கை அடைவதற்காக மேலும் ஒருபடி முன்னேறுவதற்கு இந்த மனிதாபிமான முயற்சியில் பங்குதாரர்களாக இருப்பதில் CBL மகிழ்ச்சியடைகிறது" என்றார்.

# ரஷ்யாவுக்கு எதிரான நேட்டோவின் விஸ்தரிப்பு ஐரோப்பாவை நிலைகுலையச் செய்யுமா?



கலாநிதி
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

உலகளாவிய ரீதியில் ரஷ்ய உக்ரைன் போர் பாரிய உலகப் பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. அதில் ஐரோப்பாவே அதிகம் பாதிப்பினை எதிர்கொண்டுவருகிறது. ஐரோப்பாக் கண்டத்தில் ரஷ்யாவின் முக்கியத்துவம் சார்ந்து அதிக நெருக்கடியை அமெரிக்காவும் மேற்குலகமும் ஏற்படுத்தி வருகிறது. ரஷ்யாவுக்கும் அமெரிக்காவுக்குமான மோதல் மீளவும் ஏற்பட ஆரம்பித்துள்ளது. ஆனால் பனிப்போர் காலம் போலவே அமெரிக்கா ரஷ்யாவுடனான போரை நேரடியாக எதிர்கொள்ளாது ரஷ்யாவின் அயல்நாடுகளையும் புவிசார் அரசியல் ரீதியான நாடுகளையும் கொண்டு ரஷ்யாவை தாக்கி வருகிறது. இதில் உக்ரைன் மட்டுமல்ல ரஷ்யாவும் அதிக இழப்புக்களை எதிர்கொண்டது போல் சுவீடனும் பின்லாந்தும் சந்திக்கவுள்ளதாகவே கருத்துக்கள் வெளியாகி வருகின்றன. இக்கட்டுரையும் நேட்டோவின் அடுத்த கட்ட விஸ்தரிப்பான சுவீடன் மற்றும் பின்லாந்து தொடர்பில் ரஷ்யாவிற்கும் பிராந்தியத்திற்கும் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளை தேடுவதாக அமையவுள்ளது.

முதலாவது, பின்லாந்து தனது கிழக்கு பகுதியில் நீண்ட எல்லையை ரஷ்யாவோடு பகிர்ந்து கொள்வதுடன் 1955 இல் ஐக்கிய நாடுகள் அமைப்பில் சேர்ந்து கொண்டது. ரூஷ்யப் பேரரசின் அங்கமாக இருந்த பின்லாந்து ரஷ்யப் புரட்சிக்கு பின்பே தனித்தேசமாகியது. இருந்த போதும் நடுநிலைக் கொள்கையைக் கடைப்பிடித்த பின்லாந்து சோவியாத் யூனியனுக்கு எதிரான எந்த அணியிலும் தன்னைச் இணைத்தக் கொள்ளாத கொள்கையைக் கொண்டிருக்கும் உடன்பாட்டோடு செயல்பட்டது. சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்கு பின்பு அக்கொள்கையின் கீழ் ரஷ்யாவுடன் செயல்பட்டது. ஆனால் ஐரோப்பிய யூனியனிலும் ஏனைய பொருளாதார ஒருங்கிணைப்புக்களிலும் ஒன்று சேர்ந்து செயல்பட்டதுடன் ரஷ்யாவின் நலனுக்கு விரோதமாக செயல்படுவதில்லை என்ற கொள்கையை கடைப்பிடித்துக் கொண்டது. அதற்கான அடிப்படை பின்லாந்தினது புவிசார் அரசியலாகும். அதாவது ரஷ்யாவின் அயல் நாடாகவும் இராணுவ முக்கியத்துவம் மிக்க நாடாகவும் அமைந்திருந்தமையே பிரதான காரணமாகும். ரூஷ்யப் பேரரசுக் காலம் முதல் தற்போது வரை ரஷ்யாவின் செல்வாக்குப் பிராந்தியமாகவே பின்லாந்து காணப்பட்டது.

இரண்டாவது, பின்லாந்தின் அயல்நாடான சுவீடன் ரஷ்யாவுடன் எல்லையைக் கொண்டுள்ளது. சுவீடன் பேரரசுக்குள் அங்கமாக இருந்த பின்லாந்தை ரூஷ்யப் பேரரசிடம் இழந்த வரலாற்றைக் கொண்டது. கருங்கடலால் பிரிக்கப்பட்ட பகுதியைக் கொண்ட இரு நாடுகளும் ரஷ்யாவின் கருங்கடல் ஆதிக்கத்திற்கு சவால்விடும் புவியியல் அமைப்பினைக் கொண்டவையாகக் காணப்படுகின்றன. சுவீடன் தாராள ஜனநாயகத்தில் வலுவான தேசமாக அமைந்தாலும் இலகுரக ஆயுதங்களை உற்பத்தி செய்யும் நாடு என்பதுவும் குறிப்பிடத்தக்கதாகும். இவ்வகை புவிசார் அரசியல் நெருக்கத்தைக் கொண்ட இரு நாடுகளும் ரஷ்யா உக்ரைன் போரை அடுத்து தமது பாதுகாப்பை முதன்மைப்படுத்திக் கொண்டு நேட்டோவில் இணைய விண்ணப்பித்துள்ளன. அத்தகைய விண்ணப்பத்தை நேட்டோ தலைமையகத்தில் இரு நாட்டின் பிரதிநிதிகளும் சமர்ப்பித்துள்ளன. இதனை வரவேற்றுள்ள நேட்டோவின் தலைவர் ஸ்டொல்டன் பேர்க் இது ஒரு வரலாற்று தருணம் இதனை நாம் கைப்பற்ற வேண்டும் என்றார். உலகிலேயே பலமான இராணுவக் கூட்டணியாக விளங்கும் நேட்டோவில் 30 நாடுகள் அங்கம் பெறுகின்றன. அவற்றில் ஏதாவதெரு நாடு புதிதாக இணையும் நாட்டை நிராகரித்தால் அங்கத்துவம் சாத்தியமற்றும் போகும். அத்தகைய நிலையையே துருக்கிய நாட்டுத் தலைவர் எட்டோர்கன் அறிவித்துள்ளார். அதாவது சுவீடனும் பின்லாந்தும் நேட்டோவில் இணைவதை துருக்கி தடுத்து நிறுத்தியுள்ளது என்றே தெரிகிறது. அதற்கு துருக்கி கூறும் காரணம் குர்திஸ் பேராளிகளுக்கு எதிராக துருக்கி இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளும் போது சுவீடன் மற்றும் பின்லாந்து துருக்கிக்கு எதிரான தடைகளை ஏற்படுத்திய நாடுகள் எனக் குற்றம் சாட்டியுள்ளது. இத்தகைய குற்றச்சாட்டை விட வேறு ஏதும் காரணங்கள் உண்டா என்பதே பிரதான கேள்வியாகும். குறிப்பாக துருக்கி ரஷ்யாவின் எஸ்400 ரக ஏவுகணைகளை அமெரிக்க தயாரிப்பான எப்17 விமானங்களுக்கு பதிலாக பெற்றுக் கொண்டமை கவனத்திற்குரியதாகும். அதாவது அமெரிக்க தயாரிப்பு போர் விமானங்களை நேட்டோவின் அங்கத்துவ நாடு என்ற அடிப்படையில் துருக்கி கோரிய போதும் அமெரிக்கா வழங்க மறுத்திருந்தது. அதனை அடுத்தே ரஷ்யத் தயாரிப்பான ஏவுகணையை துருக்கி பெற்றுக் கொண்டது. இது அமெரிக்கா துருக்கி மோதல் மட்டுமல்ல நேட்டோவுடனான துருக்கியின் முரண்பாடும் ஏற்பட காரணமாகியது. அதிலும் டொனால் ட்ரம்ப் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த காலத்தில் அதிக முரண்பாடுகளை இரு நாட்டுக்கும் இடையில் அதிகமாகக் காணப்பட்டது கவனத்திற்குரியதாகும். எனவே இத்தகைய எதிர்ப்பினூடாக துருக்கி ரஷ்யாவை ஆதரிப்பதன் விளைவாக அமையலாம் அல்லது அமெரிக்காவிடம் மீளவும் எப்17 ரக விமானங்களை கொள்ளவனவு செய்ய துருக்கி முனைய வாய்ப்புள்ளது. இதில் எது நிகழ்ந்தாலும் துருக்கிக்கு இலாபகரமானதாகவே அமையும். காரணம் ஈரான் மற்றும் இஸ்ரேலுடனான பகைமையை எதிர்கொள்வதற்கான ஆயுத தளபாடங்கள் அவசியமானவை. இதில் ரஷ்யாவுடனான உறவு இரு நாடுகளையும் மேற்காசியாவில் எதிர்கொள்ள அவசியமானவையாகவே துருக்கி கருதுகிறது. அதனையே இஸ்ரேலும் கருத்தில் கொண்டு ரஷ்யாவை உக்ரைன் போரில் ஆதரித்தது என்பது நினைவு கொள்ளத் தக்கதாகும். ஆனால் இத்தகைய நடவடிக்கை ரஷ்யாவிற்கு பாரிய விளைவைத் தரப்போகின்ற விடயமாகவே தெரிகிறது.

மூன்றாவது, சுவீடனை விட பின்லாந்து ரஷ்யாவுடன் மிக நீண்டகாலமாகப் ஒன்றித்து பயணித்த நாடு. உலக வரலாற்றில் சோவியத் யூனியனுக்கு எதிரான நாடுகளுடனோ ரஷ்யாவுக்கு எதிரான நாடுகளுடனோ அல்லது அணிகளுடனோ இணையாது நடுநிலை வகுத்த நாடு பின்லாந்து என்பது குறிப்பிடத்தக்கதாகும். அது மட்டுமன்றி இரு நாடுகளும் ரஷ்யாவின் பாதுகாப்பு அரண்களாக புவியியல் ரீதியில் காணப்படும் நாடுகள் என்பது கவனத்திற்குரியதாகும். கருங்கடலை பங்கிடும் நாடுகளில் பிரதான இடத்தில் அமைந்துள்ளன. ரஷ்ய கடற்படையின் இருப்பு அதிகம் கருங்கடலில் தங்கியுள்ளது என்பதுவும் கவனத்திற்குரியதாகும். இதனால் நேட்டோவில் இரு நாடுகளும் இணைவதென்பது ரஷ்யாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவே அமைய வாய்ப்புள்ளது.

நான்காவது இரு நாடுகளுக்கும் எதிராக இன்னோர் போர் முனையை ரஷ்யா திறக்குமாயின் ரஷ்யாவின் இருப்பு பாரிய கேள்விக்குரியதாக அமையும். அதனையே மேற்கு நாடுகளும் நேட்டோ அணியும் விரும்புகின்றன. அதிலும் அமெரிக்கா போரில் நேரடியாக ஈடுபடாது ரஷ்ய நட்பு நாடுகளையும் அயல் நாடுகளையும் முன்னகர்த்தி ரஷ்யாவின் வலுவை தோற்கடிக்க முயன்று வருகின்றது. அதற்குள் ஏற்கனவே உக்ரைன் பலியிடப்பட்டுவிட்டது. தற்போது பின்லாந்தும் சுவீடனும் அகப்பட்டுள்ளன. ரஷ்யா மேற்குக்கு எதிராக போரையே முதன்மைப்படுத்தும் நாடாக உள்ளதனால் இரு நாடுகளுக்கும் எதிராக போரை நிகழ்த்த திட்டமிட வாய்ப்பு அதிகமுண்டு. துருக்கி மேற்குடன் சமரசம் செய்ய மறுக்குமாயின் மட்டுமே போர் தவிர்க்கப்பட வாய்ப்புள்ளது. அல்லது ரஷ்யாவின் மேற்குப் பகுதியிலும் போர்க் களமொன்றுக்கான சூழல் உருவானாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. ஏனெனில் ரஷ்யா மேற்குக்கு எதிராக தந்திரங்களை கையாள்வதை விட போரையே முதல் தெரிவாகக் கொள்ள விளைகிறது.

ஐந்தாவது, பொருளாதமார ரீதியில் உலகம் வேகமாக நெருக்கடியை எதிர்கொள்வது போல் ரஷ்யாவும் போர்களால் அதிக நெருக்கடியை எதிர்கொள்ள வாய்ப்புள்ளது. குறிப்பாக ரஷ்யாவின் நாணயம் வளர்ச்சியடைந்தாலும் எரிவாயு மற்றும் பெற்றோலியத்தால் மேற்கு ஐரோப்பா பாதிப்படைந்தாலும் மேற்கு ஓரணியாகச் செயல்படுகிறது. அதன் இராணுக் கூட்டு மட்டமல்ல பொருளாதாரக் கூட்டும் பலமானது. தற்போதைய நெருக்கடியை வெற்றி கொண்டுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது பின்லாந்துடனான உறவை படிப்படியாக ரஷ்யா தகர்க்க ஆரம்பித்துள்ளது. மின்சார விநியோகத்தை நிறுத்தியதனால் 30 சதவீத அதிகரிப்பை பின்லாந்து எதிர்நோக்கியுள்ளது. அடுத்து எரிவாயுவை நிறுத்துவது பற்றிய முடிவை அறிவிக்கவுள்ளது. படிப்படியாக உக்ரைன் நிவைமையை நோக்கி பின்லாந்து செல்லவுள்ளதை கோடிட்டுக் காட்டுகிறது.

ஆறாவது, உகரைனின் மரியப்போ நகரம் முழுமையாக ரஷ்யாவின் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளமை உக்ரைனுக்கு மட்டுமல்ல இப்பிராந்திய நாடுகளுக்கே ஆபத்தானதாக அமைய வாய்ப்புள்ளது. ரஷ்யா தோற்கிறது என மேற்கு ஊடகங்கள் கூறிக் கொண்டாலும் போரில் மூலோபாய நிலங்கள் கைப்பற்றப்படுவது முக்கியமான திருப்பமாக அமையும். அது சுவீடன், பின்லாந்து மற்றும் ஜோர்ஜியாவுக்கும் ஆபத்தானதாகவே அமையும்.

எனவே ரஷ்யாவின் போர் முனையை அதிகரிப்பதன் மூலம் மேற்கு நாடுகள் ரஷ்யாவை இலகுவில் தோற்கடித்துவிடலாம் எனக் கணக்குப் போடுகின்றன. ஆனால் ரஷ்யாவின் நேட்டோவுக்கு எதிரான போர் என்பது அதிக மாற்றத்தை பிராந்திய மட்டத்தில் ஏற்படுத்தப் போகிறது. மேற்கு ஐரோப்பா பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுக்க ஆரம்பித்துள்ளது. பின்லாந்தினதும் சுவீடனதும் நகர்வு ரஷ்யாவை கட்டுப்படுத்துவதற்கு பதிலாக எழுச்சி பெற வைப்பதற்கான வாய்ப்பையே அதிகரிக்கப் போகிறது. இதனால் போர் விஸ்தரிக்கவும் ஐரோப்பா நிலைகுலையவும் வழிவகுக்கப் போகிறது. இது அமெரிக்காவுக்கு வாய்ப்பானதாகவே அமையவுள்ளது. அமெரிக்கா மட்டுமல்ல சீனாவுக்கும் இலாபகரமானதாகவே தெரிகிறது. ஆனால் உலகளாவிய பொருளாதார வீழ்ச்சி அனைத்து எதிர்பார்க்கையையும் தலைகீழாக மாற்றிவிடக் கூடியது. அதனை நோக்கியே உலக நாடுகள் பயணிக்கின்றன.




---

(கடந்த வாரத் தொடர்)

## அரசியல்–பொருளாதார நெருக்கடிக்கெதிரான போராட்டங்கள்

# புதிய இலங்கை தேசத்தினைக் கட்டியெழுப்ப உதவுமா?

## சில அவதானிப்புகள்

இதன் காரணமாகவே இந்தப் போராட்டங்கள் எந்த ஒரு அரசியல் தலைமைத்துவமும், பின்னணியும் இல்லாமல் இடம்பெறுகின்றது. போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இளைஞர்கள் 'நாம் யாவரும் தலைவர்கள்' என்ற செய்தியினை வழங்குகின்றார்கள். போராட்டத்தை நடத்துவதற்கு மரபுரீதியாக நாம் பார்க்கும் தலைமைத்துவம் அவசியம் இல்லை என்பதனை இந்தப் போராட்டங்கள் வெளிப்படுத்துகின்றன. முறையான தலைமைத்துவம் அல்லது அரசியல் பின்புலம் இல்லாமல் இப்போராட்டங்கள் இடம்பெறுவதால் இதனைப் பலரும் கேலி செய்தார்கள். இளைஞர்களின் பொழுதுபோக்குக்கான களமாக காலிமுகத்திடலை விமர்சித்தார்கள். உணவு, குடிநீர் மற்றும் ஏனைய வசதிகள் இல்லாமல் போகும்போது சுயமாகவே கலைந்து செல்வார்கள் எனப் பலரும் எதிர்பார்த்தார்கள். கடந்த காலங்களில் இலங்கையில் அவ்வப்போது இடம்பெற்ற போராட்டங்களில் ஒன்றாக இதனைப் பார்த்தார்கள். போராட்டத்தை குழப்புவதற்கு அரச தரப்பினரால் பல முயற்சிகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன. அவை தொடர்கின்றன. ஆயினும் அவை யாவற்றையும் போராட்டக்காரர்கள் வெற்றிகரமாக முறியடித்து போராடி வருகின்றார்கள். இதன் காரணமாக இப் போராட்டங்கள் மீதும், அதில் ஈடுபட்டுள்ள இளைஞர்கள் மீதும் பெரும் நம்பிக்கை, மரியாதை மற்றும் ஏற்புடைமை அதிகரித்துள்ளது. இதன் காரணமாக பல்வேறு பின்புலங்களைக் கொண்டவர்கள் இப்போராட்டங்களுக்கு ஆதரவு அளித்து வருவதனை காணமுடிகின்றது. அதில் உணவு அடிப்படை வசதிகள் என்பனவும் அடங்கும். இவை இந்தப் போராட்டத்தினை மேலும் சக்திபடுத்தியுள்ளது. அரசியல் கலப்பற்ற போராட்டமாக இது தொடர்வதற்கு பிறிதொரு காரணமுண்டு. அதுவே அரசியல்வாதிகள் தலையிட்டால் ஒட்டுமொத்த போராட்டத்தினையும் தமது நலன்களுக்காக திசை திருப்பி விடுவார்கள் என்ற அச்சம் இளைஞர்கள் மத்தியில் நிலவுகின்றது. எந்த ஒரு அரசியல் பின்புலமும் இல்லாது ஒரு மாதகாலத்திற்கு மேலாக பல தடைகளைத் தாண்டி இடம்பெறும் போராட்டம் இது. இது மக்கள் போராட்டத்திற்கான புதிய கலாசாரத்தை வழங்கியுள்ளது. மக்களே தலைவர்கள் என்ற செய்தியினை மீள நினைவூட்டுகின்றது.

இப்போராட்டங்களில் காணக்கூடிய பிரிதொரு விடயம் யாதெனில், தகவல் தொழிநுட்பத்தினையும் டிஜிட்டல் ஊடகங்களையும் வினைத்திறன் மிக்க வகையில் கையாள்வதாகும். பாதுகாப்பு கெடுபிடிகள் மற்றும் ஏனைய தடைகள் மற்றும் அச்சுறுத்தல்களை போராட்டக்காரர்கள் வெற்றிகரமாக முறியடித்து வருவதற்கு இவை பெரியளவிலான பங்களிப்பினை வழங்கி வருகின்றன. இவை இளைஞர்கள் ஆக்கத்திறனுடன் சிந்திப்பதற்கும் புத்தாக்க செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கும் மற்றும் கவர்ச்சிகரமாக, யாவரையும் ஈர்க்கும் வகையில் போராட்டத்தினை கொண்டு நடாத்துவதற்கும் இந்த விஞ்ஞான தொழிநுட்பத்துடன் அவர்களுக்கு இருக்கும் பரிட்சயம் முக்கிய காரணமெனலாம். கடந்த காலங்களில் ஏனைய நாடுகளில் இடம்பெற்ற மக்கள் போராட்டங்களில் இருந்து பாடங்களை கற்று அதனை இங்கு நடைமுறைப்படுத்தி வருவதனை அவதானிக்க முடிகின்றது.

மக்கள் போராட்டம் தொடர்பாக எந்த ஒரு முன் அனுபவமும் இல்லாத லட்சக்கணக்கான புதிய வாக்காளர்கள் காலிமுகத்திடலில் அணிதிரண்டு இருப்பது முக்கிய விடயமாகும். இவர்கள் ஜனநாயகத்தின் விழுமியங்களை, ஜனநாயகப் போராட்டம், அகிம்சா வழிப்போராட்டம் தொடர்பாக பிரயோக ரீதியான அனுபவத்தினை, அறிவினைப் பெற்று வருகின்றனர். இதனை இந்தப் போராட்டம் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள விதத்தினை நோக்கும்போது தெளிவாகின்றது. சிறப்பான நூலகம் ஒன்று தாபிக்கப்பட்டிருப்பது இதனை மேலும் உறுதி செய்கின்றது.



**போராட்டங்களில் வெளிப்படும் பிரதான முழக்கங்கள்**

இந்தப் போராட்டங்களின் ஊடாக எழுப்பப்படும் மிக முக்கிய கோசங்களாக காணப்படுவது பின்வரும் விடயங்களாகும்.

(1) இருக்கின்ற ஆட்சி முறையில் மாற்றம் கொண்டுவரப்பட வேண்டும்.

(2) ஊழல், மோசடி இல்லாத இலங்கையினை உருவாக்குதல் மற்றும் ஊழலில் ஈடுபட்ட அரசியல்வாதிகள் சட்டத்தின் முன் தண்டிக்கப்பட வேண்டும்.

(3) ராஜபக்ச குடும்பத்தினர் உட்பட ஏனைய அரசியல்வாதிகள் கொள்ளையடித்த பொதுமக்களின் பணம் மீளப்பெறப்படுதல் வேண்டும் மற்றும் அவர்களின் சொத்துக்கள் பொதுவுடைமை ஆக்கப்படுதல்.

(4) பொது நிறுவனங்கள் மிகவும் பலவீனமாக காணப்படுவதால் அவை மறுசீரமைக்கப்பட வேண்டும், சுதந்திரமாக செயல்பட வேண்டும் என்பது பிரிதொரு கோரிக்கை. இங்கு சட்டமா அதிபர் காரியாலயம், கணக்காய்வாளர் நாயகம் காரியாலயம், இலஞ்ச ஊழல் ஆணைக்குழு,மனித உரிமை ஆணைக்குழு மற்றும் ஏனைய சுயாதீன ஆணைக்குழுக்களை வலியுறுத்தி வருகின்றனர்.

(5) அரசியல்வாதிகள் கொள்ளையடித்த சொத்துக்களை மீளப்பெறுவதற்கான சட்டங்களை அறிமுகம் செய்தல் மற்றும் சொத்துக்களை பகிரங்கப்படுத்துதல் தொடர்பான சட்டங்களை பலப்படுத்துதல்.

(6) குற்றவியல் நீதி முறைமை மறுசீரமைக்கப்பட வேண்டும் இதன் மூலம் சட்டத்தினை யாவருக்கும் சமமாக நடைமுறைப்படுத்துதல் மற்றும் சட்டத்தினை அமுல்படுத்தும் நிறுவனங்களை அரசியல் கலப்பற்ற சுயாதீனமான நிறுவனங்களாக மாற்ற வேண்டும்.

அதிகாரம் ஆட்சியில் இருப்பவர்களின் அதிகாரத்தினை விட உயர்வானது என்ற கோசம் தொடர்ந்தும் முன்வைக்கப்படுகின்றது. இது மக்கள் இறைமையின் முக்கியத்துவத்தினை, மக்களே ஆட்சி அதிகாரத்தின் மூலாதாரம் என்பதனை மீண்டும் ஒரு முறை மக்களுக்கும் ஆட்சியாளர்களுக்கும் நினைவுபடுத்துவதாக அமைந்துள்ளது.

இச்செய்தி மக்களை விழிப்புணர்வு அடையச் செய்துள்ளதுடன் வெறுமனே இவ்வளவு காலமும் வாக்காளராக இருந்த மக்கள் பிரஜைகளாக மாறுவதற்கு வழி செய்துள்ளது. இது ஒரு முக்கியமான மாற்றமாகும். ஜனநாயகத்தினை மற்றும் நல்லாட்சியினை பேணுவதற்கு செயலூக்கமுள்ள பிரஜைகள் மற்றும் தர்க்க ரீதியாக சிந்திக்கும், அரசாங்கத்தின் செயல்பாடுகளை கண்காணிக்கும், விமர்சிக்கும் ஆட்சிமுறை செயல்பாடுகளில் ஈடுபாடு காட்டுகின்ற பிரஜைகள் பெரிதும் அவசியம் என ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தின் உலகறிந்த அரசியல் விஞ்ஞான பேராசிரியையான பிப்பா நொறிஸ் குறிப்பிட்டுள்ளார்.

இதுவரை காலமும் குறுகிய இலாபங்களுக்காகவும், பொருள் சார்ந்த நன்மைகளுக்காக வெறும் வாக்காளர்களாக இருந்த இலங்கை மக்கள் இன்று பிரஜைகளாக மாறி வீதிகளை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து தீவிர மாற்றத்தை கோரி நிற்பது ஒரு புதிய அரசியல் கலாச்சாரத்திற்கான ஆரம்பமாக அமைந்துள்ளது எனலாம். வெறும் உணர்ச்சிகளுக்கும், இன, மத தேசியவாத சிந்தனைகளாலும் ஆட்கொள்ளப்பட்டிருந்த தென்னிலங்கை மக்கள் மாத்திரமின்றி ஏனைய சமூகத்தவர்களும் இவ்வாறான மாற்றத்தினை தழுவியிருப்பது வரவேற்கத்தக்க விடயமாகும்.

(7) இவை எல்லாவற்றையும் விட பிறிதொரு முக்கிய செய்தி இந்த போராட்டத்தில் வலியுறுத்தப்பட்டு வருகிறது. இது சிறுபான்மை மக்களை பொறுத்தவரை மிக முக்கியமான விடயமாகும். அது வேற்றுமையில் ஒற்றுமை' என்ற செய்தியாகும். சகல சமூகத்தவரும் ஒன்றாக போராடுவது, உறங்குவது, உணவுண்பது, ஒன்றாக கைகோர்த்துக் கோசம் இடுவது, பிரச்சாரம் செய்வது போன்ற செயற்பாடுகள் யாவும் நாம் இலங்கையர் இங்கு சிங்களம், தமிழ், முஸ்லீம் என்ற வேறுபாடு இல்லை என்ற செய்தியினை வெளிப்படுத்தி உள்ளது. இன மற்றும் மதவாதமற்ற இலங்கை வேண்டும் என்பது சிறுபான்மை இனத்தவரது நீண்ட கால கனவாகும். அதற்கான ஆரம்பமாக இதனை நாம் நோக்க முடியும்.

இந்தப் போராட்டம் முழுவதும் இனவாதத்திற்கு எதிராக கோசம் எழுப்பப்படுவது, பன்மைத்துவம் மதிக்கப்படுவது, ஏற்றுக்கொள்ளப்படுவது, சமத்துவம், சமவாய்ப்பு ஆகிய சித்தாந்தங்கள் பேணப்படுவது தொடர்ச்சியாக காணக் கூடியதாக உள்ளது. மறைந்த எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவின் உருவச்சிலையின் கண்கள் கறுப்பு துணியால் கட்டப்பட்டமை இனவாதத்திற்கு எதிரான முக்கிய செய்தியை பறைசாற்றுகிறது. 1956ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட 'சிங்களம் மட்டுமே' சட்டம் இந்த நாட்டினை சீர்குலைந்துள்ளது என்பதனையும், இனவாதம் இலங்கை தேசத்தினை சுதந்திரத்திற்குப் பின் 74 ஆண்டுகளாக மிக மோசமான அழிவுக்கு இட்டுசென்றுள்ளது என்பதனையும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சிங்கள இளைஞர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள் என்பது இதன் மூலம் புலப்படுகின்றது. ஆயினும் இத்தகைய போக்குகள் எவ்வளவு காலம் நீடிக்கும் என்பது சிறுபான்மை சமூகம் முன்வைக்கும் பிரதான கேள்வியாகும். இதற்கு அவர்களின் கடந்தகால அனுபவங்கள் காரணமாக அமையலாம்.

பேராசியர் ஜயதேவ உயன்கொட நாடுதழுவிய ரீதியில் இடம்பெறும் போராட்டங்களின் ஊடாக கோரப்படும் System change என்பது பின்வரும் விடயங்களை வலியுறுத்துவதாக வாதிக்கின்றார். 1. ஆதிக்கமிக்க அரசியல் கலாசாரத்தினை மாற்றுதல் 2. பொதுக்கொள்கை உருவாக்க செயன்முறை மற்றும் நடைமுறையினை மாற்றுதல். 3. ஆளும் வர்க்கம் அரசு சார்ந்த செயற்பாடுகளை மேற்கொள்ளும் நடைமுறையினை மாற்றுதல் 4. இலங்கையினுடைய பிரதிநிதித்துவ அரசாங்கம் வீழ்ச்சியடைந்து செல்லுதல் 5. அசமத்துவம் மற்றும் அநீதிகளுக்கு காரணமாக அமைந்துள்ள சமூக, பொருளாதார முறையில் மாற்றத்தினை ஏற்படுத்த விரும்புகின்றார்கள்.

**போராட்டக்காரர்கள் முன்னுள்ள சவால்கள்**

எவ்வாறாயினும் இந்தப் போராட்டங்கள் ஒரு பக்கம் மகிழ்ச்சியளிப்பதாக இருந்தாலும் மாறாக பிறிதொரு முக்கிய கேள்வியினையும் எழுப்புகிறது. இலங்கையினுடைய கடந்தகால நிகழ்வுகள், ஆழமாக வேறுன்றியுள்ள இன,மத, தேசியவாதம் என்பவற்றினை வைத்து நோக்கும் போது ஒரு தீவிர ஜனநாயக மறுசீரமைப்பு இந்தப் போராட்டங்கள் மூலம் ஏற்படுமா என்ற வினாவிற்கு இன்னும் விடைகாண முடியாமல் உள்ளது. இப்போராட்டம் வெறுமனே ராஜபக்ச குடும்பத்தினரை விரட்டியடிப்பதுடன் மட்டுப்படுத்தப்படுமா? நிறுத்தப்படுமா? அல்லது அதற்கு அப்பால் சென்று இந்த நாட்டின் ஆட்சிமுறையில் மற்றும் ஜனநாயக கட்டமைப்பில் நீண்டகாலமாக நிலவி வரும் அடிப்படை பிரச்சனைகளுக்கான தீர்வுகளை நோக்கி இப் போராட்டங்கள் நீடிக்குமா என்பது சிந்திக்க வேண்டிய விடயமாகும். இவை சிறுபான்மை மக்களைப் பொருத்தவரை முக்கியமான கேள்விளாகும். காரணம் ராஜபக்சக்களை விரட்டியடிப்பதன் முலம் மாத்திரம் இந்த நாட்டில் சகல சமூகத்தவர்களும் சம உரிமைகளுடன் வாழக்கூடிய இலங்கை தேசத்தினைக் கட்டியெழுப்ப முடியாது.பன்மைத்துவம், சுதந்திரம், சமவாய்ப்பு, யாவரையும் உள்வாங்கும் ஆட்சி, சிறுபான்மையினருக்கான நீதி, அரசியல் தீர்வு என்பன கிடைக்கப்போவதில்லை.அவர்களை விரட்டியடிப்பதன் மூலம் மாத்திரம் நாட்டின் தற்போதைய நெருக்கடிகளுக்கு தீர்வினை காணமுடியாது.

ஆகவே தற்போதையப் போராட்டங்களில் இந்த விடயங்களும் பிரதிபலிக்கப்பட வேண்டும். இது குறித்து புரிதலை சிங்கள இளைஞர்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும். இது தமிழ், சிங்களம், முஸ்லிம் மக்கள் சம உரிமைகளுடன் வாழக்கூடிய புதிய இலங்கையினை கட்டியெழுப்புவதற்கான நல்லதொரு வாய்ப்பாக தென்படுகின்றது.

(தொடரும்)

கலாநிதி இரா. ரமேஷ்...
சிரேஸ்ட விரிவுரையாளர்,
அரசியல் விஞ்ஞானத்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்

மங்கையர் முற்றம்

# மெனோபாஸ்



''ஒரு பெண்ணின் வாழ்க்கையில் வயதுக்கு வருவதும், இளமைப் பருவமும் கல்யாணமும் குழந்தை பிறப்பும் எத்தனை முக்கியமோ அத்தனை முக்கியம்தான் மெனோபாஸ் எனப்படுகிற இந்த மாதவிலக்கு நிற்கும் காலகட்டமும். ஆனால், காலம்காலமாக, 'இது அசிங்கம். இதைப் பற்றிப் பேசக் கூடாது' என்றே போதிக்கப்பட்டுள்ளதால் பெண்களாகிய நாம் இழப்பது எத்தனை அதிகம்?''

மாதவிடாய் நிற்பதற்கு முந்தைய காலமான ப்ரீ மெனோபாஸ் (pre menopause) பருவத்தில் பெண்களுக்கு சொற்களை நினைவில் கொள்வதில் சிரமம் ஏற்படும்.

மாதவிடாய் நிற்கும் காலத்தில், ஈஸ்ட்ரோஜன் ஹோர்மோன் உற்பத்தி தடைபடுவதால், ஹிப்போகாம்பஸ் மற்றும் மத்திய நரம்பு மண்டலத்தின் சில செயல்பாடுகள் பாதிப்புக்குள்ளாகும்.

பருவம் அடைந்த பெண்களுக்கு ஒவ்வொரு மாதமும் ஏற்படும் மாதவிடாய் உதிரப்போக்கு, குறிப்பிட்ட வயதை கடந்தப் பின்பு நிரந்தரமாக நின்றுவிடும். இதையே மாதவிடாய் நிறுத்தம் (மெனோபாஸ்) என்கிறோம்.

பெரும்பான்மையான பெண்களுக்கு 45 முதல் 55 வயதிற்குள் மாதவிடாய் நிற்கிறது. இந்தக் காலகட்டத்தில், பெண்கள் பல்வேறு உடல் மற்றும் மன ரீதியான பாதிப்புகளுக்கு உள்ளாகிறார்கள். மாதவிடாய் நின்ற காலத்தில் உடலில் ஈஸ்ட்ரோஜன் உற்பத்தியில் சரிவு ஏற்படுவதால், எலும்புகளில் உள்ள கால்சியத்தின் அளவு குறையும். இதன் காரணமாக எலும்புகள் வலுவிழத்தல், தசை மற்றும் மூட்டு வலி, இதயத் துடிப்பில் மாற்றம் என பல பிரச்சினைகள் ஏற்படும். இதில் நரம்பியல் தொடர்பான பிரச்சினைகள் முக்கியமானவை. மெனோபாஸ் ஏற்படுவதால் மனநிலை மாற்றங்கள், கோபம் மற்றும் மனச்சோர்வு ஆகியவை அதிகரிப்பதாக பல ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இந்தக் காலகட்டத்தில் மூளை அமைப்பு, நரம்பு இணைப்பு மற்றும் ஆற்றல் வளர்சிதை மாற்றம் ஆகியவை குறிப்பிடத்தக்க மாற்றங்களுக்கு உட்படும்.

மூளையின் ஹிப்போகேம்பஸ் (hippocampus) எனும் பகுதியில் பல ஈஸ்ட்ரோஜன் ரெசெப்டர்கள் உள்ளன. இந்தப் பகுதி நினைவுத் திறனுக்கு முக்கியமான ஒன்று.

மாதவிடாய் நிற்கும் காலத்தில், ஈஸ்ட்ரோஜன் ஹார்மோன் உற்பத்தி தடைபடுவதால், ஹிப்போகாம்பஸ் மற்றும் மத்திய நரம்பு மண்டலத்தின் சில செயல்பாடுகள் பாதிப்புக்குள்ளாகும். அத்துடன் நடுத்தர வயது மற்றும் வயதான காலத்தில் பெண்களை பாதிக்கும் பல நரம்பியல் கோளாறுகள், நினைவாற்றல் இழப்பு, லேசான அறிவாற்றல் குறைபாடு, இஸ்கிமிக் பக்கவாதம், பார்கின்சன் மற்றும் அல்சைமர் நோய் போன்ற பிரச்சினைகள் வருவதற்கும் வாய்ப்பிருக்கிறது.

மாதவிடாய் நிற்பதற்கு முந்தைய காலமான ப்ரீ மெனோபாஸ் (pre menopause) பருவத்தில் பெண்களுக்கு சொற்களை நினைவில் கொள்வதில் சிரமம் ஏற்படும். ஒரே நேரத்தில் பல பணிகளில் கவனம் செலுத்துவதிலும், பேசுவதிலும் சிரமம் உண்டாகும்.

**மெனோபாஸ் தீர்வுகள்:**

மெனோபாஸ் ஏற்படுவதற்கு முன்னதாகவே உணவு முறையில் கவனம் செலுத்த வேண்டும். கால்சியம் நிறைந்த உணவுகளை அதிகமாக சாப்பிட வேண்டும். தினமும் மாதுளம் பழம் சாப்பிடுவதன் மூலம், உடலில் ஈஸ்ட்ரோஜன் ஹார்மோன் சீராக சுரக்கும்.

மென்மையான உடற்பயிற்சிகளை செய்யுங்கள். மனதை எப்போதும் மகிழ்ச்சியாக வைத்துக்கொள்ளுங்கள்.

## முட்டை ஷெம்பூ செய்வது எப்படி?

முட்டையைக் கொண்டு இரண்டு முறையில் ஷெம்பூ தயாரிக்கலாம். முட்டை ஷெம்பூ வை எப்படி தயாரிப்பது என்று ஒவ்வொரு வழிமுறையாகப் பார்க்கலாம்.

சத்துகள் அதிகம் உள்ள முட்டை உடலின் உள்ளே மட்டுமல்ல, உடலுக்கு வெளியேவும் பல நன்மைகளை செய்கிறது. முகத்திற்கு பொலிவு தருவதில் இருந்து கேசத்துக்குத் தேவையான ஊட்டச்சத்துகள் வரை அளிக்கிறது. குறிப்பாக, அதிகம் உலர்ந்து, வறண்டு, வலிமையிழந்து போன கேசத்தை மிருதுவாகவும், வலிமையுடையதாக மாற்றவும் முட்டை உதவும். கேச ஆரோக்கியத்துக்குக் கைகொடுக்கும் முட்டையைக் கொண்டு வீட்டிலேயே எப்படி ஷெம்பூ தயாரிக்கலாம் என்று பார்ப்போம்.

முட்டையைக் கொண்டு இரண்டு முறையில் ஷெம்பூ தயாரிக்கலாம். முட்டை ஷெம்பூவை எப்படி தயாரிப்பது என்று ஒவ்வொரு வழிமுறையாகப் பார்க்கலாம்.

**தேவையான பொருள்கள்:**

1 முட்டை
1 டீஸ்பூன் ஆலிவ் எண்ணெய்
1 டீஸ்பூன் எலுமிச்சை சாறு
1 டேபிள் ஸ்பூன் மைல்டு/ஹெர்பல்/பேபி ஷெம்பூ (நறுமணமற்றது பரிந்துரைக்கத்தக்கது)
1/2 கப் தண்ணீர்

**செய்முறை**

மேலே கூறப்பட்டுள்ள அனைத்துப் பொருள்களையும் ஒரு பிளெண்டரில் சேர்த்து, நன்றாகக் கலக்கவும். கலந்து வைத்துள்ள இந்தக் கலவையை தலைக்கு ஷெம்பூ வாகப் பயன்படுத்தவும்.

வறண்ட மற்றும் சேதமடைந்த கேசம் உள்ளவர்களுக்கு இந்த ஷெம்பூ சிறந்தது. குறிப்பாக சூரிய ஒளி அதிகமாகத் தலையில் படுவதன் காரணமாக தலைமுடி சேதம் ஏற்பட்டவர்களுக்கு, இந்த ஷெம்பூ எளிமையான தீர்வாக அமையும்.

தலைமுடி மிகவும் நீளமாக இருந்தால், மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு மூலப்பொருளையும் கூடுதலாகச் சேர்க்கவும். ஷெம்பூ எஞ்சியிருந்தால் குளிர்சாதனப் பெட்டியில் வைத்து 36 மணி நேரத்திற்குள் பயன்படுத்திக்கொள்ளலாம்.



## நகப்பூச்சு



கை மற்றும் கால் விரல்களின் நகங்களை நெயில் பொலிஷ் கொண்டு அழகுப்படுத்தி பார்ப்பது பெரும்பாலான பெண்களுக்கு பிடித்தமான பொழுது போக்காக இருக்கிறது. அணியும் உடைகளுக்கு பொருத்தமாக நெயில் பொலிஷ்களை தீட்டி அழகுபார்ப்பார்கள்.

அதில் இருந்து வெளிப்படும் வாசனையும் பலருக்கு பிடிக்கும். அதனை நுகர்ந்து பார்த்து இரசிக்கவும் செய்வார்கள். ஆனால், நெயில் பொலிஷ்கள் உடல் நலத்திற்கு தீங்கு விளைவிக்கும் தன்மை கொண்டவை என்பதை பலரும் அறிவதில்லை. அதன் வாசனை உடல் ஆரோக்கியத்திற்கு கேடு பயக்கும்.

கூடுமானவரை நெயில் பொலிஷை அடிக்கடி பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும். சில வகை நெயில் பொலிஷ்களை பயன்படுத்தும்போது நகங்கள் உலர்ந்து மஞ்சள் நிறத்திற்கு மாறத்தொடங்கிவிடும். அதில் சேர்க்கப்படும் இரசாயனங்கள் உடல் நலத்திற்கு கடும் பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடியவை.

மென்மை தன்மையை தக்கவைப்பதற்கும், நிறங்களின் பொலிவுக்கும் டோலுன் பயன்படுத்தப்படுகிறது. எனினும் இது நகத்தின் வழியே ஊடுருவி உடல்நல பாதிப்புகளையும் ஏற்படுத்திவிடும். தொடர்ந்து பயன்படுத்தும்போது நரம்பு மண்டலம், மூளை போன்றவை பாதிப்புக்குள்ளாகக்கூடும். தலைவலி, மயக்கம், தலைச்சுற்று, குமட்டல், உடல் பலவீனம் போன்ற பிரச்சினைகளையும் எதிர்கொள்ள நேரும்.

நக பொலிஷ்களின் ஆயுட்காலத்தை நீட்டிப்பதற்கு போர்மல்டிஹைட் எனும் இரசாயனம் சேர்க்கப்படுகிறது. ஒவ்வாமை பிரச்சினை கொண்டவர்கள் போர்மல்டிஹைட் கலந்திருக்கும் நக பொலிஷை தவிர்ப்பது நல்லது.

தோல் நோய்கள், மன அழுத்தம், புற்றுநோய், இதயம் சார்ந்த நோய் பாதிப்புகளும் ஏற்பட காரணமாகிவிடும்.

டிபூட் பத்தாலேட் என்ற இரசாயனம் சாயங்கள் மற்றும் பெயிண்டிங் போல செயல்பட்டு நக பொலிஷுக்கு பொலிவு சேர்க்கும் தன்மை கொண்டது. இதுவும் நாளமில்லா சுரப்பிகள், சுவாச கோளாறுகள் சார்ந்த பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும். ஆகையால், இத்தகைய இரசாயனங்கள் கலந்த நக பொலிஷ்களை தவிர்க்க வேண்டும்.

'5 பிரீ நெயில் பொலிஷ், 3 பிரீ நெயில் பொலிஷ்' போன்ற இரசாயன கலப்பு அதிகம் இல்லாத நெயில் பொலிஷ்களை தேர்ந்தெடுத்து பயன் படுத்தலாம். நக பொலிஷ்களை அடிக்கடி உபயோகப்படுத்தாமல் விஷேட நாட்களில் மட்டும் பயன்படுத்தலாம். அன்று இரவே நக பொலிஷை அகற்றி நகங்களை சுத்தப்படுத்தி விடுவதும் நல்லது.

Ladies Fashion



## சமையல் எரிவாயுவை சிக்கனமாக பயன்படுத்துவோம்

நாட்டில் தற்போது பாரியளவில் சமையல் எரிவாயு தட்டுப்பாடு நிலவி வருகிறது. இதற்காக மக்கள் தொடர்ந்தும் ஆங்காங்கே வரிசையில் நிற்பதை பார்க்கலாம்.

நான்கு பேர்களைகொண்ட ஒரு குடும்பத்திற்கு சராசரியாக 35 நாட்களுக்கு ஒரு சமையல் எரிவாயு போதுமானது. அதைவிட குறைந்த நாட்களில் எரிவாயு தீர்ந்து விட்டால், அளவுக்கு அதிகமாக செலவாகிக்கொண்டிருப்பதாக அர்த்தம்.

எனவே தற்போதைய சூழ்நிலையை கவனத்தில் கொண்டு சமையல் எரிவாயுவை சிக்கனமாக பயன்படுத்துவது எப்படி என்று பார்ப்போம்.

காஸ் அடுப்பு, சமையல் செய்யும் பாத்திரங்கள் போன்றவைகளை எப்போதும் சுத்தமாக வைத்திருங்கள். பாத்திரங்களின் அடியில் இருக்கும் கரியும், பர்னரில் இருக்கும் அழுக்கும் காஸ் செலவை அதிகரிக்கும்.

எப்போதும் தரம் உயர்ந்த அடுப்பை வாங்குங்கள். பர்னர், ரெகுலேட்டர் போன்றவைகள் வழியாக மிகக்குறைந்த அளவில் காஸ் லீக் ஆக வாய்ப்பிருக்கிறது. அதனை பரிசோதனை செய்யுங்கள்.

கொப்பர் மற்றும் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்கள் வேகமாக சூடாகும். அதுபோல் சூடு அனைத்து பகுதிகளுக்கும் சீராக பரவவும் செய்யும். ஒருமுறை சூடாகிவிட்டால் அந்த சூடு அதிக நேரம் நிலைத்து நிற்கவும் செய்யும். அத்தகைய பாத்திரங்களை சமையலுக்கு பயன்படுத்துவது அவசியம்.

சமையல் செய்யும் பாத்திரத்தை கழுவி, துடைத்த பின்பு அடுப்பில் வைக்கவும். துடைக்காவிட்டால் பாத்திரத்தில் தண்ணீர் ஒட்டியிருக்கும். அது சூடாகி, ஆவியாகவும் காஸ் அதிகம் செலவாகும்.

லைட்டரை கையில் எடுத்துவைத்துக்கொண்டு அடுப்பில் காஸை திறந்தால்போதும். காஸை திறந்துவைத்துக்கொண்டு லைட்டரையோ, தீப்பெட்டியையோ தேடிக்கொண்டிருந்தால் காஸ் வீணாகும்.

சமையலுக்கு தேவையான அனைத்தையும் தயாராக்கி அருகில் வைத்துவிட்டு சமையலை தொடங்குங்கள். தேவையில்லாமல் ஸ்டவ்வை எரியவிட்டால் காஸ் வீணாகிக்கொண்டிருக்கும். இடையில் வேறு வேலைகள் செய்யவேண்டியிருந்தால், சிறிது நேரத்திற்கு காஸை அனைத்து செய்துவிடுங்கள்.



உணவுப் பொருள் கொதிக்கத் தொடங்கியதும், அடுப்பை மெல்லிய நெருப்பில் வைத்துவிட்டு பாத்திரத்தை மூடிவைத்திடவேண்டும். அந்த குறைந்த அளவு தீயே உணவு நன்றாக வேகுவதற்கு போதுமானது. இப்படி செய்தால் 25 சதவீதம் காஸ் மிச்சமாகும்.

குழம்பு வகைகளில் அளவுக்கு அதிகமாக தண்ணீர் சேர்க்கவேண்டாம். அதிகமாக தண்ணீர் சேர்த்தால் அது வற்றுவதற்கு அதிக நேரமாகும். அதனால் காஸ் வீணாகும்.

பிரஷர் குக்கரின் பயன்பாடு எரிவாயு செலவைக் குறைக்கும். அத்தோடு சமையல் செய்யும் நேரத்தின் அளவையும் குறைத்துவிடும். சாதாரண பாத்திரத்தில் பயறு வேகுவதற்கு தேவையான காஸைவிட, பிரஷர் குக்கரில் வேகவைத்தால் 46 சதவீத எரிவாயு மிச்சமாகும்.

சமைக்கும் பொருள் எந்த அளவுக்கு வேகவேண்டும் என்ற கணக்கு சமைப்ப வருக்கு தெரிந்திருக்கவேண்டும். தேவையில்லாமல் அதிக நேரம் பொருட்களை வேகவைத்தால் சமையல் எரிவாயு அதிகமாக செலவாகுவதோடு, உணவுப் பொருளின் சுவையும் குன்றிவிடும்.

## பருப்பு போலி



**தேவையான பொருட்கள்**

கடலை பருப்பு ஒரு கப், உப்பு 1/4 tsp,

**பாகு தயாரிக்க**

வெல்லம் 1 1/2 கப், தண்ணீர் 1/4 கப், மைதா மாவு 2 கப், மஞ்சள் ஒரு சிட்டிகை, உப்பு 1/4 தே.க, நெய் 1 tsp, எண்ணெய் 2 தே.க, துருவிய தேங்காய் 1/4 கப், வாழை இலை

செய்முறை :

கடலை பருப்பை அரை மணி நேரம் ஊற வைக்க வேண்டும். பின் பருப்பை கால் கப் தண்ணீர் மற்றும் கால் ஸ்பூன் உப்பு சேர்த்து குக்கரில் மூன்று விசில் வரும் வரை வேக விடவும்.

வெல்லப்பாகு தயாரிக்க பாத்திரத்தில் வெல்லம் மற்றும் நீர் சேர்த்து உருக விடவும். உறுகியதும் வடித்து தனியாக எடுத்துக்கொள்ளவும்.

அடுத்ததாக மற்றொரு பாத்திரத்தில் வடிகட்டிய வெல்லத்தை கொட்டி அதோடு வேக வைத்த பருப்பை நன்கு மசித்து அதில் கொட்டிக் கிளறவும். அதோடு துருவிய தேங்காய் சேர்த்துக்கொள்ளவும். வெல்லமும் பருப்பும் நன்கு கலந்து சற்று கெட்டிப் பதத்திற்கு வந்ததும் அணைத்துவிடவும்.

மாவு பிசைய மைதா மாவு, மஞ்சள், உப்பு , நெய் ஊற்றி பிசைந்துகொள்ளவும். அதோடு இரண்டு தே.கரண்டி எண்ணெய் ஊற்றி பிசையவும். மாவு இலகிய பதத்தில் இருக்க வேண்டும். அப்போதுதான் மென்மையாக இருக்கும்.

பிசைந்த மாவை கால் மணி நேரம் மூடி ஊற வைக்கவும்.

பின் வாழை இலையில் எண்ணெய் தடவில் அதில் பிசைந்த மைதா மாவை தட்டி அதோடு கடலைப் பருப்பையும் உருண்டையாகப் பிசைந்து அதில் வைத்து உருட்டிக்கொள்ளவும். பின் விரல்களால் தட்டையாக தட்டிக் கொண்டே இருங்கள்.

உங்களுக்கு தேவையான பதத்தில் தட்டையாகத் தட்டிக்கொள்ளவும். பின் அதை அப்படியே எடுத்து தோசைக் கல்லில் போட்டு நெய் தடவி வாட்டி எடுக்கவும்.

# பஜாஜ் அசல் உதிரிப்பாக விற்பனை நிலையங்கள் பிரதான நகரங்களில்





இந்நாட்டிலுள்ள பஜாஜ் வாகன உரிமை யாளர்களின் வசதியை மேலும் உறுதிப்படுத்தும் நோக்கில் பஜாஜ் அசல் உதிரிப்பாக விற்பனை நிலையங்களைக் குருநாகல், யாழ்ப்பாணம் மற்றும் நீர்கொழும்பு ஆகிய நகரங்களில் திறப்பதற்கு டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி (பிரைவட்) லிமிடெட் நிறுவனம் அண்மையில் நடவடிக்கை எடுத்தது.

இல 226,புத்தளம் வீதி,குருநாகல், இல 405,பிரவுண் வீதி,கொக்குவில் கிழக்கு,யாழ்ப்பாணம், இல 394,கொழும்புவீதி, நீர்கொழும்பு ஆகியமுகவரிகளில் புதிய பஜாஜ் அசல் உதிரிப்பாக விற்பனை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பஜாஜ் முச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள்கள், கியூட் வாகனம் மற்றும் KTM மோட்டார் வாகனம் ஆகியவற்றுக்கானஅசல் உதிரிப்பாகங்கள் மற்றும் பஜாஜ் ஜெனுயின் ஒயில்,ஒராயன் மற்றும் MRFடயர், DP Accessories முச்சக்கரவண்டி மற்றும் மோட்டார் சைக்கிள்களை அலங்கரிக்கும் துணைப்பாகங்கள் மோட்டார் வாகனங்கள், மற்றும் வர்த்தக வாகனங் களுக்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள அட்லஸ் டயர் போன்றவற்றை இந்த உதிரிப்பாக விற்பனைநிலையங்களில் மிகவும் சௌகரியமானமுறையில் பெற்றுக்கொள்ளமுடியும்.

பஜாஜ் அசல் உதிரிப்பாக விற்பனை நிலையங்களில் அமைக்கப்பட்டுள்ளவளாகத்திலேயேனும் வேர்க்ஷொப் அமைக்கப்பட்டிருப்பதால் வாடிக்கையா ளர்களுக்குத் தேவையானஅசல் உதிரிப்பாகங்களைஅங்கேயேவாகனங்களில் பொருத்திக்கொள்ளவதற்கான வாய்ப்பும் இங்கு காணப்படுகிறது.

## ஒன்லைன் கொடுக்கல் வாங்கல் பாதுகாப்பை மேம்படுத்தியுள்ள செலான் வங்கி



அன்புடன் அரவணைக்கும் வங்கி செலான் வங்கி, தனது வழங்கல் மற்றும் கொள்முதல் கட்டங்களுக்கான ஒன்லைன் கொடுக்கல் வாங்கல் பாதுகாப்பு கட்டமைப்பை EMV 3DS 2.0க்கு மேம்படுத்தியுள்ளதாக அறிவித்துள்ளது. இதனூடாக, இலங்கையில் இந்த பாதுகாப்பு மெருகேற்றத்தை மேற்கொண்டுள்ள முதலாவது வங்கிகளில் ஒன்றாக அமைந்துள்ளது. இந்த மேம்படுத்தலினூடாக உயர் மட்ட மோசடி தவிர்ப்பு ஆற்றல் உறுதி செய்யப்பட்டுள்ளதுடன், செலான் வாடிக்கையாளர்களுக்கு தமது Mastercars மற்றும் VISA கார்ட் அடிப்படையிலான கொடுக்கல் வாங்கல்களுக்கு ஒப்பற்ற அனுபவத்தை வழங்குவதாகவும் அமைந்துள்ளது.

தற்சமயம், கணனிகள், ஸ்மார்ட்ஃபோன்கள், டெப்கள் மற்றும் Alexa மற்றும் Google Home போன்ற பல்வேறு சாதனங்களினூடாக டிஜிட்டல் முறைகளில் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெறுகின்றன. இந்த கொடுக்கல் வாங்கல் முறைகள் கொடுப்பனவு செயற்பாடுகளை வேகமானதாகவும், அதிகளவு சௌகரியமானதாகவும் திகழச் செய்வதுடன், ஈடுபாட்டுக்கு அதிகளவு வாய்ப்புகளை ஏற்படுத்துவதுடன், கொடுக்கல் வாங்கல்களில் மோசடி இனங்காணல், உறுதி செய்தல் மற்றும் அங்கீகரித்தல் போன்ற ஆழமான பாதுகாப்பு செயன்முறைகளையும் தேவையாக கொண்டுள்ளன.

வங்கியின் பிரதான செயற்பாடுகளில், வாடிக்கையாளர் பாதுகாப்புக்கு முன்னுரிமையளிக்கப்படும் நிலையில், வாடிக்கையாளர்களின் மேம்பாட்டையும் கொடுக்கல் வாங்கல் செயற்பாடுகளுக்கு சிறந்த முறையில் பொருந்தக் கூடியதாக செயற்பாடுகள் மற்றும் செயன்முறைகள் அமைந்திருப்பதை செலான் வங்கி உறுதி செய்கின்றது. அதற்கமைய, வங்கியினால் தனது சகல அட்டைகளையும் Three Domain Secure (3DS) கட்டமைப்பினூடாக முன்பு செயற்படுத்தியிருந்தது. இதனூடாக அட்டைதாரர்கள் eவணிக இணையத்தளங்களில் கிரெடிட் மற்றும் டெபிட் அட்டைகளைப் பயன்படுத்தி cardnotpresent (CNP) கொடுக்கல் வாங்கலை மேற்கொள்ளும் போது நம்பகத்தன்மை உறுதி செய்யப்படுகின்றது. 3DS 2.0க்கு மேம்படுத்தப்பட்டுள்ளதனூடாக, வாடிக்கையாளர்களின் அட்டை கொடுக்கல் வாங்கல்களின் பாதுகாப்பு மேலும் உறுதி செய்யப்பட்டுள்ளதுடன் சிறந்த வாடிக்கையாளர் அனுபவத்தையும் வழங்கி, குறைந்தளவு போலியான நிராகரிப்புகள் மற்றும் குறைந்தளவு உறுதிப்படுத்தல்களை வழங்குகின்றது.

## DFCC வங்கியின் இணையத்தளத்துக்கு உயர் விருது



புத்தாக்கமான முறையிலும் நுட்பமான வகையிலும் வடிவமைக்கப்பட்ட அனைவருக்குமான இலங்கையின் வங்கியான DFCC வங்கியின் இணையத்தளத்துக்கு BestWeb.lk விருதுகள் வழங்கும் நிகழ்வில் 3 வெள்ளி விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தன. 2009 ஆம் ஆண்டு முதல் LK Domain Registry இனால் வருடாந்தம் இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

வங்கி மற்றும் நிதியியல் பிரிவில் சிறந்த வங்கி இணையத்தளம் என்பதற்கான தங்க விருது வழங்கப்படாத நிலையில், DFCC வங்கியின் இணையத்தளத்துக்கு வெள்ளி விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டிருந்தது. அத்துடன் ஒட்டுமொத்த சிறந்த தமிழ் இணையத்தளம் மற்றும் சிறந்த சிங்கள இணையத்தளம் ஆகிய விருதுகளும் வழங்கப்பட்டிருந்தன.

எதிர்காலத்தில் சிறந்த வாடிக்கையாளர்களை மையப்படுத்திய மற்றும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட வங்கியாகத் திகழ்வது எனும் DFCC வங்கியின் நோக்கத்துக்கமைவாக, வாடிக்கையாளர் சேவை, வாடிக்கையாளர் அனுபவம் மற்றும் ஒப்பற்ற பயன்படுத்தல் இலகுத் தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் வங்கியின் இணையத்தளம் இலங்கையின் சிறந்த இணையத்தளங்களில் ஒன்றாக வடிவமைக்கப்பட்டிருந்ததுடன், அதனூடாக சிறந்த பாவனையாளர் அனுபவத்தைப் பெற்றுக் கொடுப்பதற்காக, துரிதமாக இயங்கக்கூடிய திறன் அம்சங்கள், சிறந்த வடிவமைப்பு மற்றும் கட்டமைப்புகள் போன்றன ஏற்படுத்தப்பட்டிருந்தன. இந்த தெளிவான மற்றும் எளிமையான கட்டமைப்புடன், இலகுவான மற்றும் ஒரு அழுத்தலில் பார்வையிடக்கூடிய தன்மை மற்றும் நிபுணத்துவ உணர்வு போன்றன DFCC வங்கியின் இணையத்தளத்தை அனைவர் மத்தியில் சிறந்த வகையில் தென்பட ஏதுவாக அமைந்துள்ளன.

துல்லியமான, பிந்திய மற்றும் பொருத்தமான தகவல்களை ஒவ்வொரு பாவனையாளரின் தெரிவு மொழியிலும் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில், வங்கியினால் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலுவும் இணையத்தளம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த விருதின் மூலமாக DFCC வங்கியின் இணையத்தளம் பரிபூரண, நவீன, பாவனையாளருக்கு நட்பான இணையத்தளமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன், சாதாரண வங்கியியல் இணையத்தளம் ஒன்றினால் வழங்கப்படும் சேவைகள் மற்றும் தீர்வுகளுக்கு அப்பாலான தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் அமைந்துள்ளது.

## சிறப்பாக நடைபெற்ற ICBM Campus இன் பட்டமளிப்பு விழா



IIC தொழில்நுட்ப பல்கலைக்கழகத்துடன் இணைந்த ICBM Campus இன் பட்டமளிப்பு விழா அண்மையில் BMICH இல் வெகு விமரிசையாக நடைபெற்றது. பிரதம விருந்தினராக கலாநிதி அஜித் கொலொன்னே, கம்போடியாவின் IICUT இன் தொழில்பாட்டு முகாமைத்துவம் தொடர்பான பேராசிரியரும் இலங்கையின் ICBM Campus இன் தலைவரும் முகாமைத்துவப் பணிப்பாளருமான பேராசிரியர் ரசிக அபொன்சு மற்றும் இதர சிரேஷ்ட அறிஞர்கள் பலரும் பங்கேற்ற இந்த பட்டமளிப்பு விழாவில் 60 பட்டதாரி மாணவர்கள் தமது பட்டப்படிப்பு சான்றிதழை பெற்றுக்கொண்டனர்.

கலாநிதி பட்டப்படிப்பு (Ph.D.), வர்த்தக முகாமைத்துவம் தொடர்பான முதுமானி பட்டப்படிப்பு (MBA), முகாமைத்துவம் தொடர்பான வர்த்தக நிர்வாகத்துக்கான முதல் பட்டப்படிப்பு, வங்கிகள் மற்றும் நிதி தொடர்பான முதல் பட்டப்படிப்பு, கல்வியியல் முதல் பட்டப்படிப்பு,வழங்கல் முகாமைத்துவம் தொடர்பான முதல் பட்டப்படிப்பு ஆகிய பட்டப்படிப்பு சான்றிதழ்கள் இதன்போது மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. IIC தொழில்நுட்ப பல்கலைக்கழகம் 2008 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதோடு 1999 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட சர்வதேச கம்போடிய நிறுவனத்தின் வளர்ச்சியின் ஊடாகவே அது ஆரம்பிக்கப்பட்டது. IICUT இன் சகல பட்டப்படிப்பு பாடநெறிகளும் இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் கீழ் வழங்கப்படுகின்றது. நெகிழ்வுப் போக்குத் தன்மையுடனும் நியாயமானதுமான கட்டணங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ICBM Campus இன் பட்டப்படிப்பு பாட

## CTC இல் சிறப்பாக செயற்பட்ட பணியாளர்களுக்கு விருது வழங்கி கௌரவம்



Ceylon Tobacco Company PLC (CTC) தனது வருடாந்த Pinnacle விருது விழாவை, நிறுவனத்தின் சிறந்த செயல்திறன் கொண்டவர்க ளின் சாதனைகளைக் கௌரவிக்கும் வகையில் அண்மையில் நடத்தியது.

தொடர்ந்து இரண்டாவது வருடமும் ஒரு மெய்நிகர் நிகழ்வாக நடத்தப்படும் CTC Pinnacle Awards என்பது ஒவ்வொரு ஆண்டும் நிறுவனத்திற்கு சிறந்த பெறுபேறுகளை பெற்றுக்கொள்வதற்கு கடினமாக உழைக்கும் ஊழியர்களின் முயற்சிகளை அங்கீகரிக்கும் ஒரு உள்ளக விருது வழங்கும் தளமாகும். இந்த ஆண்டு, வர்த்தக சந்தைப்படுத்தல் பிரிவில் மொத்தம் ஏழு பணியாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

2021 ஆம் ஆண்டின் வர்த்தக சந்தைப் படுத்தல் நிறைவேற்று அதிகாரிக்கான முதன்மை விருது RoutetoMarket Executive விஷான் வீரசிங்கவுக்கு வழங்கப்பட்டதோடு வர்த்தக சந்தைப்படுத்தல் அதிகாரிகளான தினுஷாத ஸ்ரீ கஹவிட்ட மற்றும் புத்திம விக்கிரமாரத்ன ஆகியோருக்கு இரண்டாம் மற்றும் மூன்றாம் இடத்தை வென்றனர். முதன்மை விருதுக்கு மேலதிகமாக, 2021 ஆம் ஆண்டில் விசேஷித்த சிறப்பை வெளிப்படுத்திய ஊழியர்களுக்கு நான்கு விருதுகள் வழங்கப்பட்டன.

வர்த்தக சந்தைப்படுத்தல் நிர்வாகிகளான ஸ்ரீஹரி இல்லமநாதன் மற்றும் லசித தர்மதாச ஆகியோர் '2021 ஆம் ஆண்டின் வளர்ந்து வரும் வர்த்தக சந்தைப்படுத்தல் நிறைவேற்று அதிகாரி பிரிவுக்கான விருதினைப் பெற்ற அதேவேளை சேனல் முகாமையாளர் MT/HoReCa, தானியா பத்திரகே '2021 ஆம் ஆண்டின் சிறந்த உதவி முகாமையாளருக்கான விருதைப் பெற்றார்.

இதேவேளை நவீன வர்த்தக மற்றும் HoReCa நிர்வாகி, ரமாலா விஜேசேகர, 'பிராண்டுகள், மூலோபாய திட்டமிடல் மற்றும் நுண்ணறிவு, வணிக மேம்பாடு 2021' பிரிவில் ஆண்டின் சிறந்த நிர்வாகிக்கான விருதை வென்றார்.

## உட்கட்டமைப்பு திட்டங்களுக்கு ஒளியூட்டும் DIMO Lighting Solutions





இலங்கையின் முன்னணியில் உள்ள பல்வகைப்பட்ட கூட்டு நிறுவனங்களில் ஒன்றான DIMO நிறுவனம், கட்டட முகாமைத்துவம், திரவ முகாமைத்துவம், பொது பொறியியல் தீர்வுகள் உள்ளிட்ட பல பிரிவுகளில் உலகத்தரம் வாய்ந்த ஒரு முனையிலிருந்து மறு முனைக்கான இறுதித் தீர்வுகளை வழங்குவதன் மூலம் இலங்கையில் பொறியியல் துறையில் சிறந்து விளங்குவதோடு, இத்துறையில் முன்னணியில் திகழ்கின்றது.

DIMO Lighting Solutions மூலம், பாரிய உட்கட்டமைப்பு திட்டங்களை ஒளிரச்செய்வதற்கான அதிநவீன தீர்வுகளை வழங்குவதன் மூலம், DIMO நாட்டிலுள்ள லைட்டிங் தீர்வுகளின் முன்னணி வழங்குனராக வேகமாக வளர்ந்து வருகின்றது. விமான நிலையங்கள், அதிவேக நெடுஞ்சாலைகள், பார்வையாளர் அரங்குகள் அத்துடன் பெரிய அளவிலான வணிக கட்டடங்கள் போன்றன இதில் அடங்குகின்றன.

DIMO Lighting Solutions ஆனது, மக்கள் வசிக்கின்ற, வேலை செய்கின்ற, பயணம் செய்கின்ற, விளையாடுகின்ற, ஓய்வெடுக்கின்ற இடங்களில் மனதுக்கு இதமான காட்சி விளைவுகளை உருவாக்கும் வகையிலான வணிக ரீதியான செயற்பாட்டை மேற்கொள்கிறது.

## நான்கு தங்க விருதுகளை சுவீகரித்துள்ள SSL



E.B. Creasy அன்ட் கம்பனி பிஎல்சியின் முழு உரிமையாண்மையின் கீழ் இயங்கும் லங்கா ஸ்பெஷல் ஸ்டீல் லிமிடெட் (லங்கா SSL), உயர் தரம் வாய்ந்த கம்பிகள் விநியோகத்தில் வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை வென்ற நாமமாகத் திகழ்வதுடன், தனது அவன்தியா, டார்கெட், சக்தி மற்றும் வேர்ஜ் ஆகிய அணிகளினூடாக தனது வெற்றிப் பயணத்தை தொடர்ந்து, தரம் மற்றும் உற்பத்தித் திறன் தேசிய மாநாடு (NCQP) 2021 இல் நான்கு விருதுகளை வென்றிருந்தது.

தரம் மற்றும் உற்பத்தித்திறன் முன்னேற்றத்துக்கான இலங்கை சம்மேளனத்தினால் (SLAAQP) வருடாந்தம் ஏற்பாடு செய்யப்படும் இந்த நிகழ்வு, இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மிசுகொஷி ஹிதேகியின் பங்கேற்புடன் இடம்பெற்றது. இந்நிகழ்வில் இதர அதிதிகளாக கலாநிதி. சுனில் ஜயந்த நவரட்ன, சுனில் ஜி விஜேசிங்க மற்றும் SLAAQP இன் தலைவர் விபுல் குலரட்ன ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் நாட்டின் சகல பாகங்களிலிருந்தும் 250 க்கும் அதிகமான அணிகள் இந்நிகழ்வில் பங்கேற்று வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறன் ஆகியவற்றை மேம்படுத்துவது தொடர்பில் முன்னெடுக்கக் கூடிய பல்வேறு செயற்பாடுகளை வெளிப்படுத்தி போட்டியிட்டிருந்தன. லங்கா SSL இன் நான்கு அணிகளினால் சிறந்த வலிமைகள் மற்றும் பெறுமதிகள் போன்றன இந்தப் பிரிவுகளில் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன், அவர்களின் நம்பிக்கை, கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்பு போன்றவற்றுக்கு உயர் கௌரவிப்பு வழங்கப்பட்டிருந்தது.

## தாய்மாருக்கு வலுவூட்டும் குளோபல் லைஃப்ஸ்டைல் லங்கா



Nalika S Wijebandara Bharathy Ganeshanantham

நேரடி விற்பனையானது ஒரு தொழிலாக உலகின் பல கண்டங்களில் தொழில்முயற்சியாளர்களை மேம்படுத்துகிறது. Tupperware மற்றும் Avon போன்ற பிரபலமான வர்த்தக நாமங்கள் நேரடியாக பெண்களுக்கு பொருளாதார சுதந்திரத்தை வழங்கும் நேரடி விற்பனை செயல்பாடுகள் மூலம் வெற்றிகரமாக விளம்பரப்படுத்தப்பட்டுள்ளன; உலகெங்கிலும் உள்ள வீடுகளில் Tupperware நிகழ்வுகள் நடத்தப்பட்டன, மேலும் Avon அழகுசாதனப் பொருட்கள் Avon பெண்கள் மூலம் தலைமுறை தலைமுறையாக பிரபலமடைந்தன.இலங்கையில், முன்னணி நேரடி விற்பனை அமைப்பான குளோபல் லைஃப்ஸ்டைல் லங்கா (GLL) க்கு தாய்மார்களாக திகழும் பெண்களை வலுவூட்டுவது ஒரு முக்கிய அக்கறைக்குரியவிடயமாக திகழ்கிறது . தொழில்முயற்சி மற்றும் நெகிழ்வான வேலை நேரங்களை மதிக்கும் தாய்மார்களுக்கு மற்றும் குடும்பங்களுக்குபொருளாதார சுதந்திரத்தை வழங்குவது முன்னுரிமையாக உள்ளது, இதனால் அவர்கள் தங்கள் வீடுகளையும் வணிகத்தையும் நிர்வகிக்க முடியும்.

# கோழிப்பண்ணை

(கடந்தவாரத் தொடர்)

புழுவை சொண்டுக்குள் எடுத்துக் கொண்ட சிறிய குஞ்சின் பின்னால் 10, 12 குஞ்சுகளும் சிறகுகளை இரு பக்கமும் விரித்து ஒன்றன்பின் ஒன்றாக ஓடும் காட்சி பார்ப்பதற்கு அழகானது. பார்வதி குஞ்சுகளின் விளையாட்டின் மூலம் பெரும் மகிழ்ச்சி அடைந்தார்.

எனினும், எவ்வளவு தான் காவல் காத்தாலும் சாம்பல் நிற பருந்து ஒரே நேரத்தில் கீழே வந்து இரு குஞ்சுகளையும் தூக்கிச் சென்ற பின் அவள் குஞ்சுகளை வெளியே விடுவதனை நிறுத்திவிட்டார். இச்சம்பவம் அவருக்கு பெரும் வேதனையை ஏற்படுத்தியது. இரு மாதங்கள் வயதுடைய குஞ்சுகள் மிக அழகாக வளர்ந்திருந்தன.

எனினும், இன்னும் மூன்று மாதங்களின் பின் இளம் வயதுடைய மூன்று கோழிகள் ஒரு வாரத்தில் காணாமல் போயின. முதல் கோழி காணாமல் போன நாளிலிருந்து அவள் பலத்த அவதானத்துடன் இருந்தாலும் இன்னும் இரு கோழிகள் காணாமல் போகும் வரை அவளுக்கு என்ன நடந்தது என்பது பற்றிய தகவல் எதுவும் பெற்றுக் கொள்ள முடியவில்லை.

அதிக மதுபானம் குடிப்பதற்கு பழக்கப்பட்டுள்ள சிவநேசன் டேஸ்ட்டுக்காக நாலாவது கோழியைப் பிடிக்கும் போது பார்வதி சிவநேசனை கையும் மெய்யுமாகப் பிடித்துக்கொண்டார்.

அத்தினத்தன்று முழுநாளும் பார்வதி சிவநேசனை திட்டித் தீர்த்தார். சிவநேசன் மூன்று நாட்களாக வீட்டுக்கு வரவில்லை.

★★★

தமது களப் பரிசோதனையின் போது வழங்கப்பட்ட உத்தரவு சட்ட ரீதியானதா? இல்லையா? என்பதன்றி அப்போது பொலிஸ் பரிசோதகர் எழுப்பிய 'பி' அறிக்கை பற்றிய குறிப்பு காரணமாக அம்மணிக்கு அச்சந்தர்ப்பத்தில் உடன் கோபம் ஏற்பட்டது. நீதவான் சோபாவின் மேல் பக்கமாகச் சாய்ந்து அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்தார்.

★★★

கோழிகள் முட்டை இட ஆரம்பித்தன. அதற்கு இரு வாரங்களுக்கு மட்டும் முன் மாதர் சங்க ஊழியர்கள் வந்து கோழிப்பண்ணையில் Loying box ஐப் பொருத்தினார்கள். Loying box இன் கருத்து என்ன என்றும் இது எதற்குப் பொருத்தப்பட்டது என்றும் பார்வதிக்கு விளங்கவில்லை. எனினும் கோழிகள் முட்டை இடுவதற்கு ஆரம்பித்த பின் அவள் அதனால் ஏற்படும் வசதிகளை விளங்கிக் கொண்டார்.



நாளொன்றுக்கு 45 முட்டைகள். வாரத்துக்கு 315. மாதத்திற்கு 1260. வாரத்துக்கு ஒருமுறை வீட்டுக்கு வந்து 12 ரூபாய் 50 சதவீதம் முட்டையைக் கொள்வனவு செய்தார்கள். பார்வதி கொப்பி, புத்தகம் ஒன்றில் கணக்குச் செய்து பார்த்தார். வாரத்திற்கு 3937 ரூபா 50 சதம். மாதத்துக்கு 15,770 ரூபா. இரு வருடங்களுக்கு 378,480.00 ரூபா. அதன்பின் கோழி இறைச்சியை விலை கொடுத்து வாங்குவார்கள். .

கோழிப்பண்ணை வருமானத்தினால் பார்வதியின் அநேகப் பிரச்சினைகள் தீர்ந்தன. வாழ்க்கையில் முதன்முறையாக அவருக்கு நிம்மதி கிடைத்தது. அவள் மகிழ்ச்சியுடன் காலத்தைக் கழித்தார். ஓர் இராத்தல் பாண்,100 சீனி, 50 கிராம் தேயிலை வாங்குவதற்கு அவள் சிவநேசனுடன் சண்டை சச்சரவு செய்ய வேண்டியதில்லை.

சிவப்புப்பட்டியுடனான உயர்ந்த சப்பாத்து ஜோடி ஒன்று, பட்டரியில் இயங்கும் 12 நிறத்தொலைக்காட்சி, அவளது அடுத்த கனவாக இருந்தது. அப்போது தனுஷ் நடிப்பதனை கண்களால் பார்க்கக் கூடியதாக இருக்கும்.

அவளுக்கு சிவநேசன் நினைவுக்கு வந்தது.

★★★

கோழிகள் முட்டை இட ஆரம்பித்தன. 10 மாதங்களுக்குப் பின் முக்தார் பார்வதியைச் சந்திப்பதற்கு வந்தார். சலுகைக் காலம் முடிவடைந்துள்ளதனால் பெற்றுக் கொண்ட கடனை வட்டித்தவணையுடன் அடுத்த மாதம் முதல் செலுத்த வேண்டும் என அவர் தெரிவித்தார். தான் பெற்றது உதவியே தவிர, கடன் பணமல்ல. பார்வதி எவ்வளவு தர்க்கித்தாலும் அவள் கையொப்பமிட்ட ஒப்பந்தப் பத்திரத்தை வாசித்துக் காட்டிய பின் அவள் மயங்கி விட்டாள். இவ்வளவு பெரும் கடன் தவணைத் தொகையைச் செலுத்துவது எப்படி?

இளம் பார்வதியின் மெலிந்த உடலைப் பார்த்த முக்தார் கூறியது பார்வதிக்கு பெரும் நிவாரணமாக அமைந்தது. கடன் தவணையைப் பெற முக்தார் மாதாமாதம் வந்தார். அவ்வாறு அவர் வரும் சந்தர்ப்பத்தில் சிவநேசன் வீட்டில் இருந்தால் சிவநேசன் வெளிக் கதவினால் வெளியேறி விடுவார். முக்தாரின் இட மாற்றத்தின் பின் ஜனகன் வந்துபோவது அவ்வாறே இடம்பெற்றது.

ஒரு சந்தர்ப்பத்தில் ஓரளவு பணத்தைச் செலுத்த வேண்டிய நிலை பார்வதிக்கு ஏற்பட்டது.

சிவநேசன் மனதைக் கடுமையாக்கி கொண்டே இருந்தார். எனினும், எந்த ஒரு நாளும் அவன் இது பற்றிப் பேசியதில்லை.

கோழிகள் முட்டையிடும் காலம் முடிவினை நெருங்கிக்கொண்டிருந்தது. அப்போது கடனை அறவிட வந்தவர் பண்டார. அழகானவர் தடித்த உயரமானவர். இன்னும் இரு மாதங்கள் கழிந்துவிட்டன. நிலுவைத் தொகையைச் செலுத்துவதற்குத் தவறியதனால் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வது தொடர்பான ஆரம்ப கடிதத்துடன் அத்தினத்தன்று பண்டார வந்தார்.

★★★

'இந்த சம்பவத்தைக் கண்ட எவராவது இங்கு இருக்கின்றீர்களா?'

பொலிஸ் உத்தியோகத்தர் உயர்ந்த குரலில் கூடியிருந்தவர்களை விளித்துக் கேட்டார். எவரும் பேசவில்லை. பின்பு நீதவான் பார்வதியை தன்முன் அழைத்தார்.

'உமக்கு இது குறித்து ஏதாவது கூறுவதற்கு இருக்கின்றதா?'பொலிஸ் உத்தியோகத்தர் அவளிடம் கேட்டார்.

பார்வதி சற்று நிலத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார். பின் மிக சோகமாகவும் அன்புடனும் சிவநேசனை நோக்கினாள்.

தன் கதையை ஆரம்பித்தாள்.

பண்டார ஏனைய நாட்களைப் போன்று அன்றும் கடனைக் கேட்டு வந்தார். இனியும் காலம் தர முடியாது. வழக்குத் தாக்கல் செய்ய வேண்டும் என்றார். என்னால் இதற்கப்பால் எதுவும் செய்ய முடியாது என்றார். பிறகு மற்ற நாட்களைப் போன்று அவர் நிலத்தில் படுத்தார். அவர் கூரையில் வைத்திருந்த கிரிஸ்கத்தியை எடுத்து

பண்டார துரையின் வயிற்றில் குத்தினார்.

சதா சரண பினான்ஸ் நிறுவனத்தின் உரிமையாளரை கொலைக் குற்றச்சாட்டுக்காக நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு பொலிஸாருக்கு நீதவான் உத்தரவிட்டார். நீதவான் கடும் தொனியில் விடுத்த கட்டளையினால் அசைந்து போன பொலிஸ் உத்தியோகத்தர் வசனங்களை வெளிப்படுத்த தயங்கிய நிலையில் மடம்... மடம் .. பி அறிக்கை என்று சொல்லும் போது நீதவான் அவரைக் கடும் பார்வையில் பார்த்தார்.



கமல் மெண்டிஸ்

தமிழில்: என்.எம். அமீன் ...✍

# சந்திர மண்ணில் வளர்ந்த செடிகள் அறிவியல் சொல்லும் செய்தி என்ன?

விஞ்ஞானிகள் முதன்முறையாக நிலாவின் மண்ணில் தாவரங்களை வளர்த்துள்ளார்கள். நிலவில் நீண்ட காலம் தங்குவதைச் சாத்தியமாக்குவதற்கான ஒரு முக்கியமான முன்னேற்றமாக இது பார்க்கப்படுகிறது.

1969 முதல் 1972 ஆம் ஆண்டு வரையிலான அப்போலோ பயணத்தின் போது சேகரிக்கப்பட்ட சிறிய அளவிலான மண் மாதிரிகளை கிரெஸ் எனப்படும் தாவரத்தை வளர்க்கப் பயன்படுத்தினார்கள்.

அவர்களுக்கு ஆச்சர்யம் தரும் விதமாக, அந்த மண்ணில் இரண்டு நாட்களுக்குப் பிறகு விதைகள் முளைத்துள்ளன.

"நாங்கள் எவ்வளவு ஆச்சர்யப்பட்டோம் என்பதைச் சொல்லவே முடியாது," என்று ஃப்ளோரிடா பல்கலைக்கழக பேராசிரியர் ஆன்னாலிசா பால் கூறினார். இவர், இந்த ஆய்வின் கண்டுபிடிப்புகள் குறித்த ஆய்வுக் கட்டுரையின் இணை ஆசிரியராவார்.

"ஒவ்வொரு தாவரமும், நிலவின் மண் மாதிரியில் இருந்தாலும் சரி கட்டுப்பாட்டில் இருந்தாலும் சரி, ஆறாவது நாள் வரை அவை ஒரே மாதிரியாக இருந்தன," என்று அவர் கூறுகிறார்.

அதன் பிறகு, அவற்றில் வித்தியாசங்கள் தோன்றின. நிலவு மண்ணில் வளர்க்கப்படும் தாவரங்கள் வளர்ச்சியில் அழுத்தத்தைக் காட்டத் தொடங்கி, மெதுவாக வளர்ச்சி குன்றியது.கால் ரெக்கார்டிங் செயலிகளுக்குத் தடை: கூகுள் ப்ளேஸ்டோரின் முயற்சி தகவல் திருட்டைத் தடுக்குமா?இணையத்தை முடக்குவதில் 'டிஜிட்டல்' இந்தியா முதலிடம்: 'அரசிடம் தரவுகள் இல்லை'மனு நீதி என்றால் என்ன? அது என்ன சொல்கிறது, ஏன் வந்தது? ஆனால், இந்த ஆய்வில் சம்பந்தப்பட்டவர்கள், இதுவொரு திருப்புமுனை என்றும் பூமிக்குரிய தாக்கங்களில் ஒன்றைக் கொண்டிருப்பது தெரியவருவதாகவும் கூறுகிறார்கள்.

"இந்த ஆராய்ச்சி நாசாவின் மனிதர்களை நிலவுக்குக் கொண்டு செல்வது குறித்த நீண்டகால ஆய்வு இலக்குகளில் முக்கியமானது. ஏனெனில், எதிர்கால விண்வெளி வீரர்களுக்கு, நிலவிலும் செவ்வாய் கிரகத்திலும் காணப்படும் வளங்களை உணவுக்கான ஆதாரங்களாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்," என்கிறார், நாசா தலைவர் பில் நெல்சன்.

"இந்த அடிப்படை தாவர வளர்ச்சி ஆய்வு, பூமியில் உணவுப் பற்றாக்குறை உள்ள பகுதிகளில் தாவரங்கள் எவ்வாறு அங்குள்ள அழுத்தங்களைச் சமாளிக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள உதவுகிறது. மேலும், இது வேளாண் கண்டுபிடிப்புகளை உருவாக்க நாசா எவ்வாறு செயல்படுகிறது என்பதற்கான ஒரு முக்கிய உதாரணம்.

ஆராய்ச்சியாளர்களுக்கு இதிலுள்ள சவால் என்னவென்றால், பரிசோதனை செய்வதற்கு அதிகளவிலான நிலவின் மண் இல்லை. 1969 முதல் மூன்று வருட காலப்பகுதியில், நாசா விண்வெளி வீரர்கள் சந்திர மேற்பரப்பில் இருந்து நிலவின் பாறைகள், கூழாங்கற்கள், மணல் மற்றும் தூசு ஆகியவற்றை 382 கிலோ அளவுக்குச் சேகரித்து வந்தார்கள்.

பல்லாண்டுக் காலமாக பூட்டி வைக்கப்பட்டிருந்த மாதிரிகளில் இருந்து பரிசோதனைக்காக ஃப்ளோரிடா பல்கலைக்கழக குழுவிற்கு ஒரு செடிக்கு ஒரு கிராம் மண் என்ற விகிதத்தில் நிலவின் மண் மாதிரி வழங்கப்பட்டது.

1972ஆம் ஆண்டுக்குப் பிறகு முதன்முறையாக 2025ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டுள்ள ஒரு பயணத்தில் மனிதர்களை நிலவில் தரையிறக்க நாசா திட்டமிட்டுள்ளது.

2019ஆம் ஆண்டு ஜனவரியில், சீனாவின் சாங்'இ4 ரோபோட்டிக் ஆய்வு விண்கலம் மூலம் நிலவுக்கு எடுத்துச் செல்லப்பட்ட விதைகள் முளைத்ததாக சீனாவின் தேசிய விண்வெளி முகமை தெரிவித்தது.

நிலவில் உயிரின வளர்ச்சி முதன்முறையாகக் காணப்பட்டது மிக முக்கியமான முன்னேற்றமாகக் கருதப்பட்டது. விண்வெளி ஆராய்ச்சியில் நீண்டகால நோக்கில் குறிப்பிடத்தக்க ஒரு முன்னேற்றமாக இது கருதப்பட்டது.


சாங்'இ4 நிலவின் மறுபக்கத்தில் தரையிறங்கிய பின் மேற்கொள்ளப் பட்ட முதலாவது ஆய்வு முயற்சியில் கிடைத்த இந்த வெற்றியைத் தொடர்ந்து, தற்போது நிலவின் மண் மாதிரிகளைப் பயன்படுத்தி தாவரங்கள் முளைவிடுவதோடு, அவற்றின் வளர்ச்சியைச் சாத்தியப்படுத்துவதற்கான முயற்சியிலும் முன்னேற்றம் கிடைத்துள்ளது.

பூமியை நோக்கியே இருக்கும் நிலவின் பக்கத்தில் அல்லாமல், மறுபுறத்தில் இருளாக இருக்கும் பகுதியில் தரையிறங்கி சீனாவின் சாங்'இ4 விண்கலம் ஆய்வு மேற்கொண்டது.

சீனாவின் சாங்'இ4 விண்கலம் 2019ஆம் ஆண்டில் நிலவில் தாவரம் வளர்க்கும் முயற்சியை நிலவில் சாத்தியப்படுத்தியது

2019ஆம் ஆண்டு, ஜனவரி 3 ஆம் திகதி தரையிறங்கிய இந்த விண்கலத்தில், அந்தப் பகுதியில் உள்ள நிலவின் மண்ணை ஆய்வு செய்வதற்கான கருவிகள் இருந்தன.

அதற்கு முன்பாக, சர்வதேச விண்வெளி ஆய்வு நிலையத்தில் தாவரங்கள் வளர்க்கப்பட்டுள்ளன. ஆனால் சீனாவின் சாங்'இ4 விண்கலம் 2019ஆம் ஆண்டில் அதே முயற்சியை நிலவில் சாத்தியப்படுத்தியது.



நிலவின் மண்ணில் தாவரங்கள் வளர்வதற்கான திறன் இருப்பது, நீண்டகால விண்வெளித் திட்டங்களுடன் ஒருங்கிணைக்கப்பட்ட செயல்பாடுகளுக்கு உதவும். இரண்டரை ஆண்டு காலம் வரை பிடிக்கக்கூடிய, செவ்வாய் கிரகப் பயணம் போன்ற, விண்வெளித் திட்டத்துடன் இணைந்ததாக இது இருக்கும்.

விண்வெளி வீரர்கள் உணவுத் தேவைக்காக பூமிக்குத் திரும்பி வருவதற்கான தேவை இல்லாமல், விண்வெளியிலேயே தங்களுக்கான உணவை அறுவடை செய்து கொள்வதற்கான வாய்ப்பு இந்த ஆய்வுகளின் மூலம் கிடைக்கும்.

அ.கனகசூரியர் ...✍

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல: 24

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | | 02 | | 03 | | 04 | 05 |
| | | | | 06 | 07 | | |
| 08 | 09 | | 10 | | 11 | | |
| | 12 | | | | | | |
| 13 | | | 14 | 15 | | 16 | |
| 17 | | 18 | | 19 | 20 | | 21 |
| | | 22 | | | 23 | | |
| 24 | | | | 25 | | | |

திரு/திருமதி.செல்வி ..............................................
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)
முகவரி ..............................................
..............................................
..............................................

.............................. ..............................
திகதி கையொப்பம்

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி
போட்டி இல. 24
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல :24

**இடமிருந்து வலம்**

(01) மதிப்பு, புகழ்.
(04) ஓர் உறவுமுறை.
(06) ஒரு சிற்றுண்டி. (திரும்பியுள்ளது)
(08) கள்வன்.
(11) ஒருவகை மீன். (குழம்பியுள்ளது)
(12) வீண் அகராறு அல்லது வீண் பேச்சு.
(13) ஒரு காட்டு மிருகம் திரும்பிவிட்டது.
(14) தகுதி, உயரிய தன்மை.
(17) பெரு விருட்சங்களுள் ஒன்று.
(19) இனிமையான பாடல். (திரும்பியுள்ளது)
(22) பணம்.
(23) குலம்
(24) பெண்கள்.
(25) மெதுவாகச் செல்லும் பிராணி.

**மேலிருந்து வலம்**

(01) சமாச்சாரம், தகவல்.
(02) சோர்வுத் தன்மை.
(03) மழைக்கு மட்டுமல்ல, வெயிலுக்கும் பயன்படும்.
(05) மரணம்.
(07) ஆண்டொன்று போனால் இதுவும் உயரும்.
(09) கண் இமைக்கு மேலுள்ள பகுதி. (குழம்பியுள்ளது)
(10) ஏழு நாட்களில் ஒன்று. (குழம்பியுள்ளது)
(13) வீடு அல்லது காணிக்கு பாதுகாப்பு தருவது. (தலைகீழ்)
(15) குறிப்பால் அல்லது கைகளின் அசைவுகளால் உணர்த்துவது. (தலைகீழ்)
(16) கேள்விக்குறியாக அமைந்த சொல்.
(18) முறைப்பாடு.
(20) தித்திப்பு. (குழம்பியுள்ளது)
(21) இப்பிறப்பு.

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 23

### விடைகள்

**இடமிருந்து வலம்**
01. புராதனம் 04. பகை 06. கரும்பு
07. விமானி 09. வெல்லம் 12. பாணம்
14. ஆம்பல் 16. நீக்கு 18. பாதம்
19. மாசு 20. சருகு 21. குளம்

**மேலிருந்து கீழ்**
**01. புரவி** **02. தனிமை** **03. வெட்கம்**
**04. பம்பல்** **05. புகை** **08. மாகாணம்**
**10. நீலம்** **11. கும்மாளம்** **12. ஆபாசம்**
**13. கும்பம்** **15. பால்** **17. சுக்கு**

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 22

### பரிசு பெறுவோர்

**முதலாம் பரிசு**
**திருமதி இ. ஞானச்சந்திரன்,**
இல. 40, முதலியார் வீதி,
மட்டக்களப்பு.

**இரண்டாம் பரிசு**
**திருமதி யு.எச். நஜிமுதீன்,**
155, அம்பாறை வீதி,
அக்கரைப்பற்று 19.

**மூன்றாம் பரிசு**
**மங்களம் மனோரஞ்சன்,**
இல. 69, வட்டைவிதானை
வீதி, கல்முனை 02.

### பாராட்டு பெறுவோர்

**1. ஆர். ராஹினி,**
கோவிலடி,
மொரகொல்ல வீதி,
வெளிமடை.

**2. ஏ. சந்தியாகு,**
34/12, செமினரிவத்தை வீதி,
தென்னக்கும்புர.

**3. எப்.ஆர்.. ஷக்கூர்,**
145, கனேபென மடிகே,
மடவளை பஸார்.

**4. கே. கஸ்தூரி,**
வெலிக்கந்தை,
கண்டி.

**5. திருமதி வி. பாலேந்திரா,**
15/2, தயா வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு 06.

**6. எம்.ஆர். இப்திகார்,**
பி 9/4, ஒவத்த,
ஹிங்குல.

**7. ஏ.எச்.ஏ. அலீம்,**
தபாலக விடுதி,
ஏறாவூர்.

**8. சி. அருந்ததி,**
241/15,
ரொக்ஹில்,
பதுளை.

★★★

# குரங்கம்மையின் அறிகுறிகள் என்ன? – உலகெங்கும் 11 நாடுகளில் பரவல்

உலகெங்கும் பதினோரு நாடுகளில் சுமார் 80 பேருக்கு குரங்கம்மை நோய் தொற்று உண்டாகி உள்ளது உறுதி செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ள உலக சுகாதார நிறுவனம் இன்னும் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்று எச்சரித்துள்ளது.

இதுமட்டுமல்லாமல் வெவ்வேறு நாடுகளில் உள்ள மேலும் 50 பேருக்கு குரங்கம்மை பாதிப்பு ஏற்பட்டிருக்கலாம் என்று சந்தேகத்தின் அடிப்படையில் சோதனைகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ள உலக சுகாதார நிறுவனம், அவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதைத் தெரிவிக்கவில்லை.

முன்னதாக இத்தாலி, ஸ்பெயின், போர்ச்சுகல், அமெரிக்கா மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகளில் குரங்கம்மை பாதிப்பு இருப்பது உறுதி செய்யப்பட்டது. சமீபத்திய பரவலின்போது ஐரோப்பிய கண்டத்தில் முதல் முறையாக பிரிட்டனில்தான் உறுதியானது.

மத்திய மற்றும் மேற்கு ஆப்பிரிக்க நாடுகளில் தொலைதூர பகுதிகளில் குரங்கம்மை பாதிப்பு மிகவும் சாதாரணமானது. குரங்கம்மை என்பது ஒரு வைரஸ் தொற்றாகும். இந்த வைரஸ் தொற்று உண்டாவது மிகவும் அரிதானது. 21ஆம் நூற்றாண்டை அதிர வைத்த சில வைரஸ் தாக்குதல்களீரக்குமிழ் வெப்பநிலை என்றால் என்ன? நாம் ஏன் கவலைப்பட வேண்டும்?

இந்த வைரஸ் தொற்றின் பாதிப்பு பெரும்பாலும் மிதமாகவே இருக்கும். இதனால் பாதிக்கப்பட்டவர்கள் சில வாரங்களிலேயே குணமடைந்து விடுவார்கள் என்று பிரிட்டனின் தேசிய சுகாதார சேவை கூறுகிறது. குரங்கம்மையின் அறிகுறிகள் என்ன?

குரங்கம்மை ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு அவ்வளவு எளிதில் பரவாது; இதனால் பொதுமக்களுக்கு ஏற்படும் அபாயம் என்பது மிகவும் குறைவு என்று வல்லுநர்கள் கூறுகிறார்கள். குரங்கம்மை பாதிப்புக்கு என்று தனியாக ஒரு தடுப்பூசி இதுவரை கிடையாது. பெரியம்மை தொற்றை உண்டாக்கும் வைரஸ் கிருமியை போன்றே குரங்கம்மையை உண்டாக்கும் வைரசும் இருப்பதால் பெரியம்மை தடுப்பூசியே குரங்கம்மை பாதிப்பில் இருந்து 85 சதவிகிதம் வரை பாதுகாப்பு வழங்கும்.

மேற்கு ஆப்பிரிக்க வகை மத்திய ஆப்பிரிக்க என்று குரங்கம்மை வைரஸ்களில் இரண்டு வகைகள் உள்ளன.

இந்த தொற்று பாதித்த மாணவர்களுக்கு ஆரம்பகட்டத்தில் காய்ச்சல், தலைவலி, வீக்கம், முதுகு வலி, தசை வலி, சோர்வு ஆகிய அறிகுறிகள் தென்படும். காய்ச்சல் ஏற்பட்டதும் தடிப்புகள் ஏற்படும். இவை பெரும்பாலும் முகத்தில் உண்டாகும். இந்த சிறிய தடிப்புகள் உடலின் பிற பகுதிகளுக்கும் பரவும்.

பொதுவாக உள்ளங்கை மற்றும் பாதங்களில் இந்த தடிப்புகள் வரும். கடைசியாக சிரங்கு போல உண்டாகி உதிர்ந்து விடும். இந்தக் காயங்களால் தோலில் தழும்பு ஏற்படும். 14 முதல் 21 நாட்கள் வரை இந்தத் தொற்று, தாமாகவே சரியாகிவிடும்.

## காலிமுகத்திடலில் போராட்டம் நடத்தியவர்கள்... 

(03ஆம் பக்கத் தொடர்)

AUTOWHEEL
FAMILY RESTAURANT IS NOW OPEN
AA CEYLON
SRI LANKAN LUNCH
NOW AVAILABLE
TAKEAWAY RS. 350/- PER PACK
Automobile Association of Ceylon
40, Sir Mohomed Macan Marker Mawatha, Colombo 03
Contact : 0774369013 - KRISHAN

அந்தச் சம்பவங்களின் பின்னணியில் பாதாள உலகக் குழுவினர், போதைப்பொருள் மற்றும் சட்டவிரோத மதுபான வியாபாரிகள் உள்ளனர் என்பதை பொறுப்புடன் கூற விரும்புகின்றேன். எனவே, நான் முன்பே கூறியது போல், சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடியை போக்க நாம் அனைவரும் கைகோர்க்க வேண்டும். உண்மையில், நான் அலரிமாளிகையில் நடைபெற்ற அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை அல்லது அந்த எதிர்ப்பாளர்களைத் தாக்குவதற்காக காலிமுகத்திடலுக்குச் செல்லவில்லை. அந்தச் சம்பவங்களுடன் எந்தத் தொடர்பும் இல்லாத ஒருவன் நான். பிறகு எப்படி என் வீட்டுக்குத் தீ வைக்கப்பட்டது? அவர்கள் என் வீட்டிற்கு தீ வைப்பதற்கு முன் உடைமைகள் கொள்ளையிடப்பட்டன.

**கே: முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் முழு அமைச்சரவையும் இராஜினாமா செய்துள்ள நிலையில், ஜனாதிபதி பதவி விலகும் வரை போராட்டத்தை கைவிடப் போவதில்லை என காலிமுகத்திடலில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்துள்ளனர். இது பற்றி நீங்கள் கருத்துத் தெரிவிக்க விரும்புகிறீர்களா?**

பதில்: ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் ரணில் விக்ரமசிங்க புதிய பிரதமராக நியமிக்கப்பட்ட போது, கர்தினால் மற்றும் வண. ஓமல்பே சோபித தேரர் ஆகியோர் இதனை விமர்சித்தனர். உண்மையில், மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெற்ற ஒரு அரசாங்கத்தின் பிரதமர்தான் தனது இராஜினாமாவைச் சமர்ப்பித்தார். மேலும், கடந்த ஜனாதிபதித் தேர்தலில் 6.9 மில்லியன் வாக்குகளைப் பெற்ற ஜனாதிபதியை பதவிநீக்கம் செய்யுமாறு சில பிரிவினர் கோருகின்றனர். அப்படியானால் அதுவும் தவறு. இது அவர்களின் இரட்டை வேடத்தை தெளிவாகக் காட்டுகிறது. இந்தச் செயல்களின் பின்னணியில் யார் இருக்கிறார்கள் என்பதை மக்கள் கண்டறிய முயற்சிப்பார்கள். அங்கு அமைதியான போராட்டம் நடத்தப்படுவதாக மக்கள் நினைக்கின்றனர். அந்த இடங்களுக்குச் செல்பவர்களுக்கு அங்கு உண்மையில் என்ன நடக்கிறது என்பது தெரியும். கிராமங்களில் உள்ளவர்கள் இதுபோன்ற போராட்டங்களை ஏற்பாடு செய்திருக்கிறார்களா?

நாட்டில் நெருக்கடியான சூழலை உருவாக்குவதே அவர்களின் நோக்கமாகும். நாடு அராஜகமாக மாறினால், மக்களின் வாக்குகளால் ஆட்சிக்கு வர முடியாத அரசியல் கட்சிகள் புரட்சிகரமான அரசியல் நெருக்கடியை உருவாக்கி அதிகாரத்தை உறுதிப்படுத்த முடியும். ஜே.வி.பி.யின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க, காலிமுகத்திடல் போராட்டக்காரர்களைச் சந்திக்கச் சென்ற போது, அவர் வரவேற்கப்பட்டதே தவிர, தாக்கப்படவில்லை. எவ்வாறாயினும், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவோ அல்லது நாமோ அங்கு சென்றால், நாங்கள் தாக்கப்படுவோம். எனவே, இது ஏன் நடக்கிறது என்பதை நாம் கண்டுபிடிக்க வேண்டும்.

## ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான வேண்டுகோள்

**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு**
**நீர்ப்பாசன அமைச்சு**

**உலக வங்கியினால் நிதியிடப்பட்ட ஒருங்கிணைந்த நீரேந்தும் பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ செயற்றிட்டம் (IWWRMP)**

**செயற்றிட்ட முகாமைத்துவ பணிமனை**
**(கடன் இல. : IDA 66210)**

**தெரிவு செய்யப்பட்ட திட்டங்களுக்கான சாகுபடியில்லாத காலப்பகுதிக்கான வாழ்வாதார ஆதரவு உதவி (LSA) திட்டத்தை தயாரிப்பதற்கான ஆலோசனைச் சேவை**

**ஒப்பந்த இல.: LK-MOMDE-138825-CS-CQS**

01. இலங்கை அரசாங்கமானது ஒருங்கிணைந்த நீரேந்தும் பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ செயற்றிட்டத்திற்காக நிதியிடலொன்றைப் பெற்றுள்ளதுடன் பெறுகைகளின் பகுதியொன்றை ஆலோசனைச் சேவைகளுக்கு செலவிட உத்தேசித்துள்ளது.

02. ஆலோசனை சேவைகளின் நோக்கமானது வளவை வலது கரை கால்வாய், நாகதீப குளம், அரவத்த குளம், இலுக்குச்சேனை கால்வாய், பாவற்குளம் அணைக்கட்டு, மாவிலாறு நீர்த்தேக்க வேலைகள் மற்றும் தேவஹூவ கால்வாய் மற்றும் அணைகட்டு, புணருத்தாபனங்களுக்கான LSA திட்டங்களை IWWRM செயற்றிட்டத்தின் கீழ் தயாரிப்பதாகும். மதிப்பீடு செய்யப்பட்டுள்ள செயற்படுத்தல் காலப்பகுதியானது ஆறு மாதங்கள் என்பதுடன் எதிர்பார்க்கப்படும் பணியின் ஆரம்ப காலப்பகுதியானது 2022 ஓகஸ்ட் மாதம் ஆகும். இந்த சேவைகளின் மேலதிக விபரங்களானது குறிப்பு விதிமுறைகளில் (TOR) விளக்கப்பட்டுள்ளது.

3. மேற்குறிப்பிட்ட பணிக்கான விளக்கமான குறிப்பு விதிமுறைகள் www.iwwrmp.lk/advertisements என்ற இணையதளத்தில் பார்வையிடலாம்

4. LSA செயற்றிட்டத்தை தயாரிப்பதில் நிரூபிக்கப்பட்ட அனுபவத்துடன் அல்லது நிகரான அனுபவத்துடன் சேவைகளை வழங்குவதில் தங்கள் ஆர்வத்தை வெளியிட தகுதியான ஆலோசனை நிறுவனங்களை IWWRMP அழைக்கிறது.

5. ஆர்வமுள்ள ஆலோசகர்கள் அவர்கள் சேவைகளை செயற்படுத்துவதற்காக தேவைப்படுத்தப்படும் தகைமை மற்றும் உரித்தான அனுபவத்தையுடையவர்களென நிரூபிப்பதற்கான தகவலை வழங்கல் வேண்டுமென்பதுடன் பின்வருவனவற்றையும் சமர்ப்பித்தல் வேண்டும். (அ) கம்பனி சுயவிபரம் மற்றும் சபை அங்கத்தினர்களின் தகைமைகள், கம்பனி பணியாட்களின் கடந்த அனுபவம் அடங்கலாக கம்பனியின் பெயர்கள் மற்றும் பிரதான பணி நிலை அலுவலர்களின் சுருக்கமான சுயதரவு (காலப்பகுதி முழுவதும் பிரதான பணி நிலை அலுவலர்களின் இருப்பு நிலையை தயவு செய்து உறுதி செய்யவும்), சிறுவெளியீடுகள் போன்றவை. (ஆ) கடந்த ஐந்து வருடங்களில் வெளிநாடுகளினால் நிதியிடப்பட்ட செயற்றிட்டங்களில் பூர்த்தி செய்யப்பட்ட நிகரான செயற்றிட்டங்கள் மனித மாதம் மற்றும் அமெரிக்க மதிப்பில் ஒப்பந்த தொகைகள் (சேவை நாடுனரின் தொடர்பு விபரங்கள்) மற்றும் இணைந்த ஆலோசனை ஒப்பந்தங்களின் அளவு (இ) கடந்த ஐந்து வருடங்களில் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியிடல் கணக்குகள் (ஈ) ஏனைய வளங்கள் மற்றும் புதிய தொழில் தொழில்நுட்பம் ஆகியன.

06. ஆலோசனையாளர்கள் ஏனைய கம்பனிகளுடன் தமது தகைமைகளை மேம்படுத்துவதற்காக இணையலாம் ஆனால் இணைப்பானது கூட்டுமுயற்சி மற்றும் / அல்லது உப - ஆலோசனையின் வடிவத்தில் உள்ளதா என்பதனை தெளிவாக குறிப்பிடல் வேண்டும். கூட்டு முயற்சியென்றால் கூட்டுமுயற்சியுள்ள அனைத்து பங்குதாரர்களும், தெரிவு செய்யப்பட்டால், முழுமையான ஒப்பந்தத்திற்கு இணைந்தும், தனித்துவமான பொறுப்பையுடையவர்களாகவிருப்பர், தெரிவு செய்யப்படின், கம்பனி/ அமைப்பொன்று ஒரு முன்மொழிவிற்கு மாத்திரம் ஏக - ஆலோசனையாளராக, கூட்டு முயற்சி பங்குதாரராக அல்லது ஒரு உப - ஆலோசனையாளராக பங்குபெறுவதற்கு அனுமதிக்கப்படுவர்.

07. நலன்களின் முரண்பாடு தொடர்பாக உலக வங்கியின் கொள்கையில் விளக்கியுள்ளவாறு 2017 நவம்பர் மற்றும் 2018 ஓகஸ்ட் ஆகிய வருடங்களில் திருத்தப்பட்டதும் 2016 ஜூலை திகதியிடப்பட்டதும் IPF கடன்பெறுனர்களுக்கான உலக வங்கியின் பெறுகை ஒழுங்கு விதிகளான 3.14, 3.16 மற்றும் 3.17 ஆகிய பந்திகளில் III ஆம் பிரிவிற்கு ஆர்வமுள்ள ஆலோசர்களின் கவனத்திற்கு முன்வைக்கின்றது.

08. 2016 ஜூலை மாதம் திகதியிடப்பட்டதும் 2017 நவம்பர் மற்றும் 2018 ஓகஸ்ட் மாதங்களில் திருத்தப்பட்ட உலக வங்கியின் "IPF கடன் பெறுனர்களுக்கான பெறுகை விதிமுறைகள்" வழிகாட்டியின் பிரகாரம் ஆலோசகரின் தகுதித் தேர்வு (CQS) முறைக்கு ஏற்ப பெறுகை ஒழுங்கு விதிகளின் பிரகாரம் ஒரு ஆலோசனை நிறுவனம் தெரிவு செய்யப்படும்.

09. ஆர்வமுள்ள ஆலோசர்கள் மேலதிக தகவலை கீழேயுள்ள முகவரியில் அலுவலக நேரங்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் வேலை நாட்களில் மாத்திரம் Social Safeguard Specialist இடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். (+94 112691163) தொலைநகல்: 0094-11-2691163. மின்னஞ்சல்: iwwrmp@sltnet.lk

10. ஆர்வ வெளிப்பாடானது எழுத்து வடிவில் இரு பிரதிகளில் 2022 ஜூன் 13 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு (உள்ளூர் நேரம்) பிந்தாமல் கீழேயுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

**செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**செயற்றிட்ட முகாமைத்துவ பணிமனை,**
**ஒருங்கிணைந்த நீரேந்தும் பிரதேசங்கள் மற்றும்**
**நீர் வளங்கள் முகாமைத்துவ செயற்றிட்டம்,**
**2 ஆம் மாடி, மஹாவலி நிலையம்,**
**இல.: 96, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை,**
**கொழும்பு-07, இலங்கை.**

**தொலைபேசி : +94-112691163**
**தொலைநகல் : +94-112691163**
**மின்னஞ்சல் : iwwrmp@sltnet.lk**

## இளமையை சிறையிலேயே...

(02ஆம் பக்கத் தொடர்)

அது நீதித்துறையிலும் சில மாற்றங்களை ஏற்படுத்தக் கூடும்.

ஆனால் அதற்கெல்லாம் வாய்ப்பே இல்லை என்று மறுத்துரைக்கின்றனர் சென்னையைச் சேர்ந்த வழக்குரைஞர் ஒருவர். "இந்தியாவில் சட்டம் வலுவானது. நீதித்துறை பலமானது. அது குற்றவாளிகளாக அடையாளம் காண்போரை நடவடிக்கைக்கு உட்படுத்தியே தீரும். முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா தொடக்கம் சசிகலா வரையில் இதற்கு நிறைய உதாரணங்கள் உண்டு. தமிழ் நாட்டில் மட்டுமல்ல, இந்தியா முழுவதிலும் இதுதான் உண்மை" என்கின்றார் அவர்.

ஆகவே பேரறிவாளனின் விடுதலை ஒரு தொடர் நடவடிக்கைக்கான தொடக்கப் புள்ளியாக இருக்கும். இது பல விதங்களில் முன்மாதிரிகளை உருவாக்கியுள்ளது.

ஆனால், துரதிருஸ்டவசமாக தமிழ் நாட்டில் இந்தச் சம்பவம் நிகழ்ந்தது. அதற்கப்பால் அப்படி ஒரு சம்பவம் நிகழ்ந்ததே தவறு. அதனோடு தெரிந்தும் தெரியாமலும் சிக்கிக் கொண்டவர்கள் இவ்வளவு காலம் சிறைக்குள்ளிருக்க வேண்டி வந்தது துயரம். இருந்தாலும் பேரறிவாளனின் விடுதலை பலருக்கும் வெற்றியே. இது அடுத்த கட்டமாக எஞ்சியுள்ள ஆறு பேருடைய விடுதலைக்கான கதவுகளைத் திறந்து விடக் கூடும். சிலவேளை நிரந்தரமாக மூடி விடும் அபாயமும் உண்டு" என்கிறார் அவர்.

இதைத்தான் நாமும் எதிர்பார்க்கிறோம். அடுத்து என்ன நடக்கும் என்று தெரியாத நிலையில்.

பேரறிவாளனும் அவருடன் சிறைப்படுத்தப்பட்டிருந்த ஏனைய அறுவரும் தங்கள் இளமையை சிறைக்குப் பரிசளித்துள்ளனர். அல்லது அவர்களுடைய இளமையை – வாழ்க்கையை சிறை குடித்து விட்டது. இதற்குக் காரணம் அரசியல் படுகொலையே. விடுதலைப்புலிகள் ராஜீவ் காந்தியைக் கொல்ல முற்பட்டதன் விளைவே இதுவாகும். இதனால் ராஜீவ் காந்தியும் இல்லை. இறுதியில் புலிகளும் அவர்களுடைய தலைமையும் இல்லை. மிஞ்சியது இந்த மாதிரி சிறையிருப்புகளும் அலைக்கழிப்புகளும் துயருமே.

காலம் மாறி, காட்சிகள் மாறினாலும் துயரங்களின் நீட்சி மாறவில்லை.

சீட்டிலுக்கப்பட்ட திகதி 19.05.2022 வியாழக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4760
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 8,796,210.00
அச்சிடப்பட்ட திகதி : 12.05.2022
ஆங்கில எழுத்து K வெற்றி இலக்கங்கள் 5 8 3 6 1 2
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 24,972,436.00

கொவிசெத Govisetha
டிக்கெட் அச்சிடப்பட்ட திகதி 2022.05.12 சீட்டிழுப்பு இலக்கம் 3002
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,288,920.00
ஆங்கில எழுத்து P வெற்றி இலக்கங்கள் 19 47 51 67
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 63,166,362.96

தன நிதானய
டிக்கெட் அச்சிடப்பட்ட திகதி : 2022 /05 /12
சீட்டிழுப்பு இலக்கம் : 790
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,407,360.00
G 36 57 67 74
வெற்றி இலக்கினம் வெற்றி இலக்கங்கள்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 110,729,363.60

ராசீ சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 0069
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,438,900.00
லொத்தர் சீட்டு அச்சிடப்பட்ட திகதி 12.05.2022
இலக்கினம் ரிஷபம் வெற்றி இலக்கங்கள் 12 25 38 54
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,614,000.40

கோடி 25+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1108
டிக்கெட் அச்சிடப்பட்ட திகதி: 2022.05.12
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,931,880.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 251,849,906.00
N 25 14 23 41 56
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

## சவால்களை முறியடித்தவாறு...

(06ஆம் பக்கத் தொடர்)

இதனால் தொடர்ந்து வேகமான பொருளாதார வளர்ச்சி அடைந்து வரும் நாடு என்ற சிறப்பை இந்தியா தக்க வைத்துக் கொள்ளும்.

இதேகாலத்தில் புதிய மதிப்பீட்டின்படி ஜப்பான் பொருளாதாரம் 3.2 சதவீதத்திலிருந்து 3.3 சதவீதமாக அதிகரிக்கும். நடப்பு நிதியாண்டில் அமெரிக்க பொருளாதாரம் 5.2 சதவீதம் வளர்ச்சி காணும் என முந்திய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இது, தற்போது 4 சதவீதமாக குறைத்து நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆகவே இந்திய பொருளாதாரத்தின் வளர்ச்சியானது ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் உச்ச அளவிலேயே உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேபோல சீனாவின் பொருளாதார வளர்ச்சி, 5.6 சதவீதத்தில் இருந்து 4.8 சதவீதமாக சரிவடைந்துள்ளது. அடுத்த ஆண்டு இந்தியாவின் கடன் வளர்ச்சி எதிர்பார்க்கும் அளவிற்கு மேம்படும். மேலும் எதிர்பார்த்ததற்கும் மேலாக நிதித் துறையின் செயல்பாடு சிறப்பாக இருக்கும் என்பதால் முதலீடுகளும், நுகர்வு மற்றும் தேவைப்பாடும் அதிகரிக்கும்.

கொரோனா பாதிப்பு காரணமான வேலை இழப்பு, தொழில் முடக்கம், வருமான இழப்பு, ஏழை_பணக்கார ஏற்றத் தாழ்வு அதிகரிப்பு, கல்லூரிகள் மூடப்பட்டதால் கேள்விக்குறியான இளைஞர்களின் எதிர்காலம் போன்ற பல்வேறு சவால்களுக்கும் மத்தியில் இந்திய பொருளாதாரத்தின் வளர்ச்சி வியக்க வைக்கின்றது என்கிறார்கள் பொருளாதார நிபுணர்கள்.

கொரோனா பாதிப்பு ஏற்படுத்திய நெருக்கடிகளால் இந்தியா தனது பொருளாதாரத்தில் பல்வேறு சவால்களை சந்திக்க நேர்ந்தது. இதனால் அனைத்துத் துறைகளும் பாதிக்கப்பட்டன. ஆனாலும் இந்த நெருக்கடிகளிலிருந்து விவசாயம், தொழில்துறை மீண்டு வந்திருக்கின்றன.

விநியோகச் சங்கிலியில் சீர்திருத்தங்களை மேற்கொள்ளுதல், மூலதன செலவினங்கள் மற்றும் ஏற்றுமதி உள்ளிட்டவற்றில் கவனம் செலுத்துவது ஆகியவை அடுத்த நிதியாண்டுகளில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் முக்கிய காரணிகளாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் எதிர்வரும் காலத்தில் தொற்றுநோய் தொடர்பான பொருளாதார சீர்குலைவு இருக்காது என்பதால் இந்திய பொருளாதாரமானது வளர்ச்சிப் போக்கையே காண்பிக்கும் என்பதே நம்பிக்கையாகும்.

இந்தியாவில் தொழில்துறை, நுகர்வு, ஆகியவற்றில் நிதிநிலையை சமநிலையில் வைத்திருக்க தேவையான நிதி நிலை அரசிடம் இருப்பதாகவும், எனவே தேவைப்படும் போது மூலதனச் செலவினங்களை அதிகரிக்க அரசு திறனுடன் இயங்கும் எனவும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

பொருளாதாரத்தில் கொந்தளிப்பான நிகழ்வுகள் நடக்கும்போது நிதி சந்தைகள் அழுத்தத்துக்குள்ளாவது வழக்கம். ஆனால் இந்திய நிதி சந்தைகள் கொரோனா காலத்தில் விதிவிலக்காக சிறப்பாகச் செயல்பட்டு உச்சங்களை எட்டின.

தற்போதுள்ள சவாலான பொருளாதார சூழலில் நாடு முழுவதும் 2020_2025 காலகட்டத்தில் உலகத் தரம் வாய்ந்த உட்கட்டமைப்பை உருவாக்கி, தொழில் சூழல் மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவது அவசியம். இதன் மூலம் உள்கட்டமைப்பில் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் முதலீடுகளை ஈர்க்கவும் இந்திய அரசு திட்டமிட்டுள்ளது.

**மேல் நீதிமன்றம் - கல்முனை**

## கேள்வி அறிவித்தல்

கல்முனை மேல் நீதிமன்ற வலயத்திற்குட்பட்ட நீதிமன்ற வளாகங்களில் சுத்திகரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்குரிய கேள்விப் பத்திரங்கள் தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து இத்தால் கோரப்படுகின்றன.

**தொகுதி 01**

01. மேல் நீதிமன்றம் கல்முனை
02. மாகாண மேன்முறையீடு மேல் நீதிமன்றம் கல்முனை
03. மாவட்ட நீதிமன்றம் கல்முனை
04. நீதவான் நீதிமன்றம் கல்முனை

**தொகுதி-02**

01. மாவட்ட/ நீதவான் நீதிமன்றம் அக்கரைப்பற்று
02. மாவட்ட/ நீதவான் நீதிமன்றம் பொத்துவில்
03. நீதவான நீதிமன்றம் சம்மாந்துறை

எனவே சுத்திகரிப்பு பணிகளை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள விரும்புவோர் உரிய விண்ணப்பப்படிவங்களையும், மேலதிக விபரங்களையும் கல்முனை மேல் நீதிமன்ற கணக்குப் பிரிவில் மீளளிக்க முடியாத வைப்பாக ரூபா. 1,000/- யும் மீளளிக்கக்கூடிய வைப்பாக ரூபா 2,500/- யும் செலுத்தி 19.05.2022 செவ்வாய்க்கிழமை பி.ப. 12.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் 03.06.2022 பிற்பகல் 2.00 மணி வரை ஏற்றுக்கொள்வதுடன் பிற்பகல் 3.00 மணிக்கு விலைமனுக்கள் கேள்விதாரர் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒவ்வொரு நீதிமன்றங்களுக்கும் சுத்திகரிப்பு பணிகளை மேற்கொள்வதற்காக தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும்.

**மேல் நீதிமன்ற நீதிபதி,**
**மேல் நீதிமன்றம்,**
**கல்முனை.**
**மேலதிக தொடர்புகளுக்கு: 0672224984/ 0672225458**



## ஈழத்து நவீன இலக்கிய முன்னோடிகள் 6

மூத்த எழுத்தாளர் தி. ஞானசேகரன்

# ஈழத்து நாவல் இலக்கிய முன்னோடி சித்திலெப்பை

ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியம் என்ற ஆய்வு நூலினை எழுதிய கலாநிதி நா.சுப்பிரமணியம், ஈழத்து தமிழ் நாவலிலக்கிய முதன் முயற்சிகள் பற்றித் தனது நூலில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

'பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கிய முதன் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு விட்டன. 1856ஆம் ஆண்டில் வெளிவந்த காவலப்பன் கதையே தமிழில் வெளிவந்த முதலாவது நாவலென்று மு. கணபதிப்பிள்ளை கருதுகிறார். Parly the Porter என்ற ஆங்கில நாவலின் தமிழாக்கமாக அமைந்த இது யாழ்ப்பாணம் ரிலிஜஸ் சொசையிட்டியின் வெளியீடாகும். ஸன்னா மூர் என்பார் இதன் ஆசிரியர். இந்த நூல் பார்லே என்ற சுமைதாங்கி (1869), பார்லே என்னும் சுமையாளியின் கதை (1876) ஆகிய தலைப்புகளுடன் தமிழ்நாட்டிலே வெளிவந்துள்ளது. இந்த நூற்பிரதிகள் கிடைக்கவில்லை. இதனை நாவல் என்று கொள்ளலாமா என்பது ஆய்வுக்குரியது. காவலப்பன் கதை மேலை நாட்டுச் சமயக் கதைகளிலொன்றாக விருக்கலாம்.

கலாநிதி சுப்பிரமணியனின் ஐயம் சரியானதே என்பதாக அமைந்துள்ளது ஆய்வாளர் என். சரவணன் என்பார் எழுதிய ஷகட்டவிழ்க்கப்படாத காவலப்பன் கதை இலங்கையின் முதலாவது நாவல் எது? என்ற கட்டுரை. இக்கட்டுரை கார்த்திகை 2020 ஜீவநதியில் வெளிவந்தது.

'காவலப்பன் கதையானது மூர் ஹன்னாஹ் என்பவர் 1796இல் இயற்றிய Paley Poter என்னும் நாவலின் மொழிபெயர்ப்பு என்றே பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் அதன் மூலப்பிரதியை இக்கட்டுரைக்காகத் தேடி எடுத்தபோது அந்த நூலானது அட்டையோடு சேர்த்து 12 பக்கங்கள் மட்டுமே கொண்ட சிறு நூல் என்பதைக் காண முடிந்தது. 1856ஆம் ஆண்டு மூர் எழுதிய படைப்புகள் அனைத்தும் மீண்டும் ஒரே நூலாகத் தொகுக்கப்பட்டபோது அந்த நூலில் இந்தக்கதை வெறும் நான்கே பக்கங்களுக்குள் அடங்கிவிட்டன. இன்னும் சொல்லப்போனால் மொத்தமே சுமார் 4500 சொற்களை மட்டுமே கொண்ட கதை. அதை ஒரு சிறுகதை என்று வேண்டுமென்றால் கூறலாமேயொழிய ஒரு நாவலாக தமிழில் எப்படி அடையாளப் படுத்தினார்கள் என்று தெரியவில்லை. ஆங்கில உலகில் எங்குமே இக்கதையை ஒரு நாவலாக அடையாளப் படுத்தியதில்லை. குறைந்தபட்சம் ஒரு குறு நாவல் உள்ளடக்கத்தைக்கூட இது கொண்டிருக்கவில்லை. ஆகவே காவலப்பன் கதை என்கிற நூல் வெளிவந்திருந்தாலும்கூட அது நாவலாக இருக்க வாய்ப்பே இல்லை என்பது தெளிவாகிறது'

இந்நிலையில், 1885இல் வெளிவந்த அசேன்பேயுடைய கதை ஈழத்தின் முதலாவது தமிழ் நாவல் என்பது நிரூபணமாகின்றது. இந்நாவல் பற்றி நா. சுப்பிரமணியன் தனது நூலில் பின்வருமாறு பதிவு செய்துள்ளார்

'இலங்கை சுப்றீம் கோட்டுப் பிறக்றரும் முஸ்லிம் நேசன் பத்திரிகைப் பத்திராதிபரும் ஆகிய சித்திலெப்பை மரைக்கார் இயற்றிய அசன்பேயுடைய கதை 1885ஆம் ஆண்டு முஸ்லிம் நேசன் அழுத்தகத்தில் அச்சிடப்பட்டு வெளிவந்தது. இந்த நூலின் புதிய பதிப்பொன்று அசன் பேயுடைய சரித்திரம் என்ற தலைப்புடன் 1974இல் திருச்சிராப்பள்ளி இஸ்லாமியத் தமிழ் இலக்கிய கழக வெளியீடாக வந்துள்ளது. இதன் கதை மத்திய கிழக்கு நாடுகள் இந்தியா ஆகியவற்றை நிலைக்களனாகக் கொண்டது। எனக் குறிப்பிட்டதோடு நாவலின் கதைச்சுருக்கத்தையும் தந்துள்ளார்:

மிசுறு தேச (எகிப்து) காயீர் பட்டினத்து யூசுபு பாக்ஷா என்னும் இராஜவம்சத்தவருக்குப் பிறந்த மகன் குழந்தைப் பருவத்திலேயே கடத்தப்பட்டு பம்பாயில் ஜகுபர் என்பவரிடம் வளருகிறான். இக்குழந்தைக்கு அஸன் என்ற பெயரிட்டனர். பதினான்னு வயதில் ஜகுபரை விட்டுப்பிரிந்து வஞ்சகரின் சூழ்ச்சிக்காளான இவன் அவற்றினின்று தப்பிக்க கல்கத்தா நகருக்குச் சென்று அங்கிருந்த ஆங்கில தேசாதிபதி நாயகத்தின் ஆதரவில் கற்று மேம்படுகிறான். லார்டு டெலிங்டனின் மகள் பாளினாவின் காதலனாகிறான். மிசுறு தேசத்திலிருக்கும் தனது பெற்றோரைக்காணச் செல்கிறான். அங்கும் பல சூழ்ச்சிகட்கு ஆட்பட்டுத் தப்பித் தீயோரைப் பிடித்துக் கொடுக்கிறான். இவ் வீரச் செயல்களுக்காக, பே என்னும் கௌரவ விருதைப் பெறுகிறான்.

இக்கதையம்சம் மர்மச் சம்பவங்களுடனும் வீரசாகச் செயல்களுடனும் இஸ்லாமிய பண்பாட்டு அம்சங்களுடனும் சித்தரிக்கப்பட்டுள்ளது.


பேராசிரியர் எம். ஏ. நுஃமான் சித்திலெப்பையின் அசன்பே சரித்திரம் என்ற தனது கட்டுரையில் (ஞானம் டிசம்பர் 2011 இதழ்) பின்வருமாறு பதிவு செய்துள்ளார்.

'சித்திலெப்பையின் நாவல் வெளிப்படையாகவே அறப்போதனை நோக்கம் கொண்டது. இஸ்லாமிய வாழ்க்கை முறையின் உயர்வைக் காட்டுவது ஆசிரியரின் நோக்கம் என்று தெரிகிறது. தனது பிரதான பாத்திரமான அசனை இஸ்லாமிய நம்பிக்கையில் ஆழ வேரூன்றிய ஒரு நவீன இளைஞனின் மாதிரி உருவாக அவர் படைத்திருக்கிறார்.... அசனுக்கும் பாளினுக்கும் இடையிலான திருமணத்தை இஸ்லாத்துக்கும் மேற்குலகிற்கும் இடையிலான திருமணம் பற்றிய ஒரு 19ஆம் நூற்றாண்டுப் பார்வையாக நாம் விளக்க முடியும். சித்திலெப்பை தனது கதாநாயகனுக்கு அவனது மத பண்பாட்டுச் சூழலில் வளர்ந்த ஒரு பெண்ணையன்றி மேலைத்தேயப் பண்பாட்டில் வளர்ந்த ஒரு பெண்ணைச் சோடியாக்குவது அன்றைய சூழலில் மிகுந்த முக்கியத்துவம் உடையது. சித்திலெப்பை பழமைவாத அல்லது மரபுவழி இஸ்லாத்தையும் மேற்குமயமாதலையும் நிராகரிக்கிறார். அவர் இஸ்லாம் மயப்படுத்தல் மூலமான ஒரு நவீன மயப்படுத்தலை விரும்பினார் என நாம் கருதலாம். அவரது காலத்தைப் பொறுத்தவரை இதை ஒரு முற்போக்கான கருத்துநிலை எனக் கருத முடியும்'

அறிஞர் சித்திலெப்பை கண்டியில் பிறந்தவர். இவரது தந்தை முகம்மது லெப்பை அக்காலத்தில் ஆங்கிலம் கற்ற மிகச் சிலருள் ஒருவர். பிரித்தானிய ஆட்சியாளரால் 1833ஆம் ஆண்டில் இலங்கையின் முதல் முஸ்லிம் வழக்கறிஞராக நியமனம் பெற்றவர். இவருக்கு மூன்றாவது குழந்தையாக 1838 ஜூன் 11இல் கண்டியில் பிறந்தவர்தான் முகம்மது காசிம் சித்தி லெப்பை.

இவர், திண்ணைப் பள்ளிக் கூடத்தில் கல்வி பயின்ற காலகட்டத்தில் குர்ஆன் ஓதல், மார்க்க சட்ட திட்டங்கள் பற்றிய அறிவு பெற்றதோடு, அரபு, தமிழ், ஆங்கிலம் சிங்களம் ஆகிய மொழிகளிலும் சிறப்புத் தேர்ச்சி பெற்றார். இவர் தந்தையைப் போன்றே சட்டக் கல்வியிலும் சிறந்து விளங்கினார்.





கண்டி மாவட்ட நீதி மன்றத்திலே 1862இல் வழக்கறிஞராக நியமனம் பெற்ற சித்திலெப்பை 1864ஆம் ஆண்டில் உயர் நீதிமன்ற வழக்கறிஞராக நியமனம் பெற்றார். சமகாலத்தில் பிரசித்த நொத்தாரிசாகவும் பணிபுரிந்தார். கண்டி மாநகரசபை நீதிமன்றத்தில் நீதிபதியாகவும் கடமையாற்றிய இவர், சிறிது காலம் மாநகரசபை உறுப்பினராகவும் பணிபுரிந்துள்ளார்.

கல்வியை முன்னிறுத்தி சமுதாயத்தை மேம்படச் செய்யும் முயற்சிகளில் தீவிரமாக இவர் ஈடுபட்டார். முஸ்லிம்கள் கல்வியில் முன்னேற வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்த 1882ஆம் ஆண்டு டிசம்பர் 21ஆம் திகதி முஸ்லிம் நேசன் என்ற பெயரில் அரபு தமிழ் வார இதழ் ஒன்றினை ஆரம்பித்தார். தமது வாரப்பத்திரிகை மூலமாகத் தமது சமுதாயத்தின் முன்னேற்றத்துக்கு தாம் ஆற்றவிருந்த தொண்டுகள்பற்றி விளக்கினார். 1884 ஜூலை மாதத்திலிருந்து இவரது நாவல் அசன்பேயுடைய கதை முஸ்லிம் நேசனில் தொடராக வெளிவந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. இஸ்லாத்தின் மீது அவர் கொண்டிருந்த பக்தியானது தமது சமுதாயத்தின் மறுமலர்ச்சிக்கான பரிகாரங்களைத் தேட அவரைத் தூண்டியதால் அவர் தமது சட்டத் தொழிலையும் கண்டி மாநகர சபையில் உறுப்பினர் என்ற வகையில் தமக்கிருந்த தகுதியையும் தூக்கி எறிந்தார். தமது பிற்கால வாழ்க்கை முழுவதையும் தமது சமுதாயத்தின் மேம்பாட்டிற்கும், முன்னேற்றத்திற்கும் தீவிரமாக ஈடுபடுவதற்காக 1984இல் அவர் தலைநகர் கொழும்பைத் தனது வாழ்விடமாகக் கொண்டார்.

1884ஆம் ஆண்டில் கொழும்பு, புதிய சோனகத் தெருவிலே முதலாவது ஆங்கில முகமதிய பாடசாலையை அவர் தோற்றுவித்தார். இப்பாடசாலை பின்னர், 'அல்மதரசதுல் கைரியா' என்னும் பெயரில் இயங்கியது. இதுவே பிற்பாடு கொழும்பு சாஹிரா கல்லூரியாக மலர்ந்தது. அடுத்துவந்த ஆண்டுகளில் பல பிரதேசங்களிலும் முஸ்லிம்களுக்கான பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. சித்திலெப்பை பெண்கள் கல்வியிலும் அதிக அக்கறை காட்டினார். 1891இல் பெண்களுக்கான பாடசாலை ஒன்றை இவர் கண்டியில் ஆரம்பித்தார்.

முஸ்லிம் மறுமலர்ச்சி இயக்கத்தின் தந்தை, முஸ்லிம் பத்திரிகைத்துறை முன்னோடி, ஈழத்தின் முதலாவது நாவலை எழுதியவர் போன்ற பல்துறை சிறப்புகளைக் கொண்ட சித்திலெப்பை 05.02.1898இல் அமரத்துவம் அடைந்தார்.

(தொடரும்)




"என்னால் உங்களுக்கு எந்த விதமான பிரச்சினையும் இருக்காது... காலையில் போனால் இரவுதான் திரும்பிதான் வருவேன். சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் படிப்பதற்காக லைபரிக்கும் போய்விடுவேன்!"

பச்சைப் பொய்யை பதறாமல் சொன்னாள் சரண்யா.

எப்படியாவது அந்த வீட்டில் தங்கி விட வேண்டுமென்று அவள் முடிவு செய்திருந்தாள்.

"ம்.... நீங்க இவ்வளவு சொல்றதா இருந்தா நாங்கள் கொஞ்சம் யோசித்துப் பார்க்கிறோம்.... என்ன... மனைவி மாதுரி..?" என்று மனைவியின் பக்கம் திரும்பினார்.

"ஆமாம்.... மகளே எங்களுக்கும் குழந்தை இல்லை.... அதனால் தான் பிரசாந்தினியை இங்கே வைத்துக் கொண்டோம். நீங்க விரும்பினா அவளுடன் அந்த அறையில் தங்கிக்கலாம்.

எங்கள் வீடு சிறிதாக இருப்பதால் வேறு அறைகள் எதுவும் இல்லை!

"ம்.... அதுக்கு பரவாயில்ல நான் எப்படி வேண்டுமானாலும் அஜஸ்ட் பண்ணிக்குவேன்...!"

"உங்களிடம் ஐடன்டி கார்ட் எல்லாம் இருக்கா?"

"ஆமாம்...!" என்று சொல்லி விட்டு,

தனது அடையாள அட்டையை எடுத்துக் கொடுத்தார் சரண்யா.

அதைப் பார்த்து விட்டு அவனிடமே திருப்பிக் கொடுத்து விட்டாள்.

நல்ல வேலை அவர் அலுவலக அடையாள அட்டையைக் கேட்கவில்லை.

அப்படி கேட்டிருந்தால், சரண்யாவுக்கு அது பெரிய பிரச்சினையாக இருந்திருக்கும்.

ஆனால்,

அவர் அதற்கு பதிலாக வேறு ஒரு கேள்வியைக் கேட்டார்.

"உங்களுக்கு சகோதர சகோதரிகள் யாராவது இருக்குறாங்களா?"

"எனக்கு ஒரே ஒரு அண்ணன் மட்டும்தான் இருக்கிறார். அவர் ஒரு பொலிஸ் இன்ஸ்பெக்டர்!"

"ஓ... அப்படியா... அப்ப ஏன் பயப்பட வேண்டும்... நாங்க இதுக்கு முந்தி யாரையுமே இந்த விட்டுல போர்டிங்கா வச்சிக் கொண்டதில்லை... தெரியாதவங்கள வெச்சிக் கொள்றது பிரச்சினைதானே அதனால்தான் அப்படி கேட்டேன்... நீங்க தப்பா நெனச்சிக்காதீங்க... "வேணுமுன்னா என் அண்ணனுக்கு போன் செய்து கடுவல பொலிஸில் இருந்து ஒருவரை அழைத்து வந்து உங்களுடன் பேசவைக்கட்டுமா?"

"ஐயையோ... அதெல்லாம் வேண்டாம் மெடம்... உங்கள் முகத்தைப் பார்த்தாலே தெரியுது, நீங்க ஏமாற்றுக் காரி இல்லைன்னு" என்றாள் மாதுரி.

"அந்த வார்த்தைகளுக்கு ரொம்ப நன்றி அம்மா... அப்போ நான் இப்ப பொயிட்டு எனது உடுப்பு பேக்கை எடுத்துக் கொண்டு அந்திக்கு வாறேன்!"

"கொஞ்சம் நேரத்தோடயே வாங்க... பிரசாந்தினியும் இன்டைக்கி நேரத்தோட வருவதாகச் சொன்னாள். அவளையும் உங்களுக்கு அறிமுகப்படுத்தி வைக்கிறேன்!"

"எத்தன மணிக்கு அம்மா அவ வருவா?" "இன்னிக்கு மூனுமணிக்கெல்லாம் வருவதாக அவ சொன்னா?"

"சரி... அப்ப அந்த மூனு மணிக்கே நானும் வரப்பாக்குறேன்"

பிரசாந்தினியுடன் பேசுவதற்கு வாய்ப்பு கிடைத்து விட்டதே எண்ணி மகிழ்ந்து போன சரண்யா அவர்களிடமிருந்து விடை பெற்றுச் சென்றாள்.

சுமார் நாலு மணி அளவில் தனது பயணப் பையையும் எழுத்துக் கொண்டு, பிரசாந்தினி தங்கி இருந்த வீட்டுக்குச் சென்றாள் சரண்யா.

"ஓ... வாங்க வாங்க... மூன்று மணியில் இருந்தே உங்களை எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம்!"

தம்பதியர் மகிழ்ச்சியுடன், சரண்யாவை வரவேற்றார்கள்.

"பஸ் கொஞ்சம் தாமதமாக வந்துவிட்டது... அதனால் தான் தாமதமாகிவிட்டது.

"ம்... அதுக்கு பரவாயில்ல... மாதுரி இவங்களுக்கு அந்த அறையைக் காட்டுங்களேன்..." என்று மனைவியைப் பார்த்து சொன்னார்.

"வாங்க... இதுதான் உங்கள் அறை இன்னும் கொஞ்ச நேரத்திலும் பிரசாந்தினி வந்து விடுவாள். குளியல் அறைக்குச் சென்று நீங்கள் உடைகளை மாற்றிக் கொள்ளலாம். நான் போய் ரெண்டு பேருக்கும் டீ போட்டுக் கொண்டுவாறேன்!"

"சரி அம்மா...!" என்று சொல்லி விட்டு,

அறைக்குள் நுழைந்தாள் சரண்யா"

பாத்ரூமுக்குள் சென்று முகம் கழுவிட்டு,

உடைகளை மாற்றிக் கொண்டாள்.

அதே நேரம்.

இரண்டு கப்களில் டீயை எடுத்துக் கொண்டு,

உள்ளே வந்தாள் மாதுரி.

"ம்... இந்தாங்க டீ சூடா இருக்கு குடிங்க..!"

"ரொம்ப நன்றி அம்மா!"

"இப்போ பிரசாந்தினியும் இங்கே வருவாள்... அவளுக்கு இந்த டீயைக் குடுங்க... அறைக்குள் இருப்பது பெரிய கட்டில் என்பதால் இருவருக்கும் அதில் தூங்கிக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன்... என்ன நான் சொல்றது சரி தானே...!"

"ஐயோ... நல்லாவே போதும் அம்மா... கொஞ்ச நேரம் தூங்குவதுக்குத்தானே... நான் சமாளித்துக் கொள்வேன்!"

"சரி... நான் வாறேன்!" அவள் சென்றதும், தலையை துடைத்த படியே,

அறைக்குள் நுழைந்தாள் பிரசாந்தினி.

சிரித்த படியே,

அவளை உற்றுப்பார்த்தாள் சரண்யா.

தீபனின் நண்பர்கள் சொன்னதைப் போல் அவள் அழகாகத்தான் இருந்தாள்.

(இளமை வளரும்)

## இன்ஸ்பெக்டர் கண்டு பிடித்து விட்டாராம் கொலைகாரனை முடிவடையப் போகிறதாம் அவரது விசாரணை!

28

### கொலைகாரனைக் கண்டுபிடித்தால் பரிசு!

கொல்லுவதோ இளமை தொடர்கதையை வாசித்துக் கொண்டு வரும் வாசகர்களுக்கு ஓர் இன்ப அதிர்ச்சி.

ஆமாம்,

இந்த துப்பறியும் கதையில் கொலைகாரன் யார் என்று கண்டு பிடித்து எழுதும் வாசகர்களில் மூன்று பேருக்கு நம் நாட்டு எழுத்தாளர்களின் விலை மதிப்புள்ள நூல்கள் பரிசாக வழங்கப்படும்.

நீங்கள் செய்ய வேண்டியது கொலைகாரன் யார் என்று கண்டுபிடித்து எழுதி அனுப்புவது மட்டும்தான். ஒருவர் ஒரு பதிலை மட்டும்தான் எழுதமுடியும்.

கொலைகாரனை கண்டுபிடியுங்கள் நூல்களை பரிசாக வெல்லுங்கள்

அனுப்பவேண்டிய முகவரி:

**கொல்லுவதோ இளமை**
தினகரன் வாரமஞ்சரி லேக்ஹவுஸ்
கொழும்பு10.





# சினி பஜார் கேள்வி பதில்

மொழிவாணன்

**ஆர். ராமன், வத்தளை.**

**கேள்வி:** *நடிகர் பிரசாந்தைக் காண வில்லையே... அவர் இப்போதும் படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறாரா?*

**பதில்:** அவர் இப்போது கதாநாயகனாக நடித்துக் கொண்டிருக்கும் படம் 'அந்தகன்'. இந்தப்படத்தை அவரது தந்தையும் நடிகருமான தியாகராஜன் தயாரித்து இயக்குகிறார்.

இந்தப்படத்தில், கார்த்திக், சிம்ரன், பிரியா ஆனந், ஊர்வசி, வனிதா விஜயகுமார், சமுத்திரகனி, கே.எஸ்.ரவிகுமார், யோகி பாபு, மனோபாலா, மோகன் வைத்யா போன்ற நடிக நடிகையர்கள் நடிக்கிறார்கள்.






'அந்தகன்' படத்தைப் பற்றி படக்குழுவினர் கூறியதாவது' அந்தாதுான்' தெலுங்கு படத்தின் தழுவல்தான் 'அந்தகன்'. இந்தப்படத்தின் கதாநாயகன் ஒரு பியானோ கலைஞன். பிரசாந்த் பியானோ கற்று அதில் ஒரு நிபுணராக இருப்பதால் இந்த கதாபாத்திரத்தில் பிரசாந்த் நடித்தால் சிறப்பாக இருக்குமென்று முடிவு செய்த தியாகராஜன், மிகவும் சிரமப்பட்டு அந்தப் படத்தின் உரிமையை வாங்கி இருக்கிறார்.

முக்கியமான ஒரு சம்பவத்தை சொல்வதென்றால், ஒரு காட்சியில் பிரசாந்த் பியானோ வாசித்திருக்கிறார்.

அந்த வாசிப்பில் உண்மையிலேயே மயங்கிப் போன படக் குழுவினரும், நடனம் அமைத்த கலா மாஸ்டரும் கை தட்டி ஆரவாரம் செய்தனர். அந்த பியானோவில் அப்படி அற்புதம் செய்கிறார். படத்திற்கு மிகப் பெரிய பலமே அதுதான். திகில் திரில்லர் சம்பவங்களைக் கொண்டு படம் தயாராகி வருகிறது.

வருகிற ஜூலை 1ஆம் திகதி படத்தை வெளியிடுவதற்கு ஏற்பாடு செய்திருப்பதாக படக்குழுவினர் நம்பிக்கையோடு தெரிவித்தனர்.

**எம்.எம். பைரூஸ், கல்முனை.**

**கேள்வி:** *தனுஷ் நடித்த 'ஜகமே தந்திரம்' படத்தில் லண்டனில் வாழும் பெண்ணாக நடித்த நடிகை ஐஸ்வர்யா லட்சுமி இப்போது படம் தயாரிக்கிறாராமே உண்மையா..?*

**பதில்:** உண்மைதான். 'ஜகமே தந்திரம்' படத்தில் தன்னுடைய சொந்தக்குரலில் தமிழைப் பேசி நடித்து அனைவரின் மனதையும் கவர்ந்திருந்தார் நடிகை ஐஸ்வர்யா லட்சுமி. தற்போது மணிரத்னம் இயக்கத்தில் தயாராகி வரும் பொன்னியின் செல்வன்' படத்தில் முக்கிய வேடத்தில் நடித்து வரும் இவர் தமிழில் இரண்டு படங்களில் நடிக்க ஒப்புக் கொண்டிருக்கிறார். நடிகையாகவும், மொடலிங் மங்கையாகவும், வைத்தியராகவும் பணியாற்றி வரும் நடிகை ஐஸ்வர்யா லட்சுமி தற்போது தயாரிப்பாளராகவும் எடுத்திருக்கிறார். இயக்குநர் கௌதம் ராமச்சந்திரன் இயக்கத்தில் நடிகை சாய் பல்லவி கதையின் நாயகியாக நடித்து வரும் 'கார்கி' படத்தைத் தயாரித்து வருகிறார்.

திரைத்துறையில் சம்பாதித்த பணத்தை மீண்டும் திரைத்துறையில் முதலீடு செய்யும் நடிகை கீர்த்தி சுரேஷ், நடிகை நயன்தாரா ஆகியோரின் பட்டியலில் ஐஸ்வர்யா லட்சுமியும் இணைந்திருக்கிறார்.



**எஸ்.எல். ராஜகோபால், யாழ்ப்பாணம்.**

**கேள்வி:** *நடிகர் உதய நிதி ஸ்டாலின் திரை உலகில் இருந்து விடை பெறும் போகிறாராமே?*

**பதில்:** நடிகர் உதயநிதி ஸ்டாலின் தற்போது மாரி செல்வராஜ் இயக்கத்தில் 'மாமன்னன்' என பெயரிடப்பட்டிருக்கும் படத்தில் நடித்து வருகிறார். இந்தப் படம் தான் அவரது கடைசிபடம் என அவருக்கு நெருங்கியவர்கள் தெரிவித்து வருகிறார்கள்.

இந்நிலையில் அவர் இந்தியில் வெளியாகி வெற்றி பெற்ற' ஆர்ட்டிக்கள் 15' படத்தின் தமிழ் பதிப்பான 'நெஞ்சுக்கு நீதி' படத்தில் நாயகனாக நடித்திருக்கிறார். இப்படத்தின் முன்னோட்டம் அண்மையில் வெளியானது. இதில் உதயநிதி பொலிஸ் சீருடை அணிந்து கம்பீரமாகக் தோன்றியிருக்கிறார்.

அத்துடன் அவர் பேசும் வசனங்கள் சமூக நீதியை வலியுறுத்துவதால், திரை உலக ரசிகர்களை கடந்து அனைத்து தரப்பு மகான்களின் கவனத்தையும் கவர்ந்திருக்கிறது!



**எம்.மாகிரட், எலபடகம.**

**கேள்வி:** *இயக்குநர் ஹெச் வினோத் இயக்கத்தில் அஜித்குமார் நடித்து வரும் படத்தின் நாயகி யார்?*

**பதில்:** இதுவரை பெயரிடப்படாத இந்தப் படத்தில் அஜித்துக்கு ஜோடியாக நடிப்பதற்கு ஒப்பந்தமாகி இருக்கிறார் மஞ்சு வாரியர். இந்தப்படத்தில் அஜித் இரட்டை வேடங்களில் நடித்தாலும் நாயகனான அஜித்துக்கு ஜோடியாக மஞ்சு வாரியர் நடிப்பதாக படக்குழுவினர் விளக்கமளித்திருக்கிறார்கள். அஜித்குமார் மஞ்சுவாரியர் ஜோடி திரையில் புதிது என்பதால் இந்த ஜோடிக்கு வரவேற்பும் கூடுதலாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



**எம்.மலர் ராணி, கொழும்பு13.**

**கேள்வி:** *எனது அபிமான நடிகை ஆன்ட்ரியா நடித்து அடுத்து வெளிவர இருக்கும் படங்கள் எவை?*

**பதில்:** 'பிசாசு 2', 'கா', 'மாளிகை', 'நோ என்ட்ரி' ஆகிய படங்கள் தயாராகி வெளியீட்டுக்காக காத்திருக்கிறது.



**எல்.எம்.இஸ்மத், மல்வான.**

**கேள்வி:** *கமலஹாசன் நடித்து அடுத்து வெளிவர இருக்கும் படம் எது?*

**பதில்:** 'விக்ரம்' இந்தப் படம் ஜூன் மாதம் 3ஆம் திகதி வெளி வருகிறதாம். நீண்ட இடைவெளிக்குப் பிறகு கமல் ஒரு பாடலையும் பாடியிருக்கிறார்.

சினி மஞ்சரி

# ஆதி–நிக்கி கல்ராணி ஜோடியின் திருமணம்

தமிழ் சினிமாவின் முன்னணி திரை பிரபலமான ஆதி நிக்கி கல்ராணி ஜோடியின் திருமணம் சிறப்பாக நடந்து முடிந்துள்ளது.

தமிழில் டார்லிங் படம் மூலம் கதாநாயகியாக அறிமுகமானவர் நிக்கி கல்ராணி. தொடர்ந்து யாகாவா ராயினும் நாகாக்க, வேலைன்னு வந்துட்டா வெள்ளைக்காரன், நெருப்புடா, கலகலப்பு2, சார்லி சாப்ளின் உள்பட பல படங்களில் நடித்து இருக்கிறார். நிக்கி கல்ராணியும், நடிகர் ஆதியும் காதலிப்பதாக ஏற்கனவே கிசுகிசுக்கள் வந்தன. இருவரும் யாகவா ராயினும் நாகாக்க படத்தில் இணைந்து நடித்த போது காதல் வயபட்டதாக கூறப்பட்டது. இதனை அவர்கள் மறுக்கவில்லை. ஆதி வீட்டில் நடந்த குடும்ப நிகழ்ச்சிகளில் நிக்கி கல்ராணி பங்கேற்ற புகைப்படங்கள் வலைத்தளத்தில் வெளியாகி நெருக்கத்தை உறுதிப்படுத்தியது. மிருகம் படத்தில் ஆதி அறிமுகமாகி ஈரம், அய்யனார், அரவான், மரகத நாணயம், யு டர்ன் உள்ளிட்ட பல படங்களில் நடித்து இருக்கிறார்.

நிக்கி கல்ராணிக்கும், ஆதிக்கும் திருமண ஏற்பாடுகள் நடப்பதாக ஏற்கனவே தகவல் வெளியாகி பிறகு நிச்சயதார்த்தம் நடந்து விட்டதாக நிக்கி கல்ராணி கூறியிருந்தார்.

அதுகுறித்த புகைப்படங்களை தனது சமூக வலைத்தள பக்கத்தில் பதிவு செய்திருந்தார். இந்நிலையில், ஆதி நிக்கி கல்ராணி ஜோடியின் திருமணம் நேற்று நடைபெற்றுள்ளது. இதில் ஆர்யா சாயிஷா, மெட்ரோ சிரீஷ் என ஏராளமான திரைபிரபலங்கள் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினர். இது குறித்த புகைப்படங்கள் சமூக வலைத்தளத்தில் வைரலாகி வருகிறது.



# நான் சேட்டைக்கார 'டான்'



ஹே ஜலபுல ஜங்கு... டேய் டம டம டாங்கு... தப் லைப்ல கிங்கு டான் செட்டிங்கு'... என சேட்டை, கொமெடி, காதல் காட்சிகளில் கலக்கி ஜாலியான நடிப்பால் ரசிகர்களிடம் 'எங்கள் வீட்டு பிள்ளை' என பட்டம் வாங்கிய சிவகார்த்திகேயன் 'டான்' குறித்து மனம் திறக்கிறார்..

**'டான்'... டைட்டிலே பயமா இருக்கே...?**

ஆமா... ஜாலியான கொலேஜ் கதைக்கு தான் பயப்படுற அளவுக்கு டைட்டில் வைச்சிருக்கோம். படம் முழுக்க அந்த டைட்டிலின் எனர்ஜி இருக்கும், கொலேஜில் ஒரு மாணவனை 'டான்' போல காட்டி கதை பண்ணியிருந்தார் இயக்குனர் சிபி. படத்தில் எஸ்.ஜே.சூர்யா, சமுத்திரக்கனி, சிவாங்கி, காளி வெங்கட், முனீஷ்காந்த், பாலா நடிச்சிருக்காங்க.

**முதல் பட அறிமுக இயக்குனரோடு வேலை...?**

இயக்குனர் சிபிக்கு சினிமா மேல் பெரிய வெறி, காதல். ஜெயிக்குற ஆர்வம் இருக்கு. அவரோட பயணிக்கும் போது எனக்கும் அந்த எனர்ஜி வந்த மாதிரி பீல் பண்றேன். நம்ம இத்தனை படம் பண்ணி இருக்கோம்ங்குறதை மறந்து நாமும் இவங்க வேகத்துக்கு ஓடுவோம்.

**எப்படியெல்லாம் கதை இருக்கணும்னு நினைப்பீங்க...?**

குடும்பத்தோடு பார்க்குற மாதிரி இருக்கணும். என் கல்லுாரி வாழ்க்கையில் நண்பர்களோடு நடந்த சம்பவங்களை நினைத்துப் பார்த்துத் தான் டான் ஓ.கே. பண்ணினேன். 'டான்'னா அடிதடி எல்லாம் பண்ற பெரிய ஆள் கிடையாது. சேட்டை பண்ற கடைசி பெஞ்சில் இருக்கிற ஒருத்தன் தான் டான்.

**அனிருத், சிவா கூட்டணி ஹிட்... ?**

பாட்டு ஹிட்டாக என்ன தேவையோ அதை தான் டிஸ்கஸ் பண்ணுவோம். அனிருத்துக்கு ஜாலியா பாட்டு பண்ண பிடிக்கும். வார்த்தைகள் கூட போட்டு கொடுப்பார். 'செல்லம்மா செல்லம்மா' கூட அவர் சொன்ன வார்த்தை தான். அதுக்கப்புறம் நான் எழுதினேன்.

**ஸ்ரீதிவ்யா, பிரியங்கா மோகனுக்கு 2 படங்கள் வாய்ப்பு... ?**

ஒரு படத்தின் பாடல்கள் ஹிட் ஆகும் போது ரசிகர்களுக்கு அந்த ஜோடி பிடிக்க ஆரம்பிக்கிறது அப்படிதான் ஸ்ரீதிவ்யா, கீர்த்தி, பிரியங்கா வரை நடக்குது. இதுல ஒரு பெரிய விஷயம் அந்த 3 பேருக்குமே தமிழ் நல்லா தெரியும் ..கொமெடியும் வரும்.

**நடிகர்கள் சம்பள உயர்வு குறித்து... ?**

முதல் பட வெற்றி சம்பளம் நிர்ணயிக்கும். அப்போ தான் தயாரிப்பாளர்களே அடுத்த படத்துக்கு அதிக சம்பளம் கொடுப்பாங்க. சம்பளத்திற்கு ஏற்ப எப்படி உழைக்கிறதுனு தான் பார்க்கணும். படம் எப்படி ஓடுதோ அதை வைச்சு தான் நடிகர்களின் மார்க்கெட் இருக்கும்.

**நடிகர்கள் தயாரிப்பாளராகி கடன் சுமையில் இருக்காங்களே ....?**

நடிகனா மட்டும் இருக்கேன்னு ரிஸ்க் எடுக்காம எதுவும் பண்ண முடியாது, நான் கூட டிவியில் நல்ல சம்பளம் வாங்கினேன். அடுத்த கட்டம் போக முடிவு எடுத்ததே பெரிய ரிஸ்க் தான்.

# புதிய பரிணாமத்தில் விமல்

தமிழில் பல படங்கள் நடித்து பிரபலமடைந்த விமல் தற்போது நடித்துள்ள அடுத்த படத்தின் அறிவிப்பு வெளியாகி உள்ளது. நடிகர் விமல் கதாநாயகனாக நடித்து உருவாகியுள்ள படம் 'துடிக்கும் கரங்கள்'. இப்படத்தின் கதாநாயகியாக மும்பையை சேர்ந்த மனிஷா அறிமுகமாகிறார். இவர் இதற்கு முன் தெலுங்கு, கன்னட மொழி படங்களில் நடித்துள்ளார். இவர்களுடன் சுரேஷ் மேனன், சதீஷ் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இப்படத்தை 'ஒடியன் டாக்கீஸ்' சார்பாக கே.அண்ணாத்துரை தயாரிக்கிறார். இதனை வேலுதாஸ் என்பவர் இயக்கியுள்ளதுடன், இணை தயாரிப்பாளராகவும் பொறுப்பேற்றுள்ளார்.. இவர் கனவு என்கிற குறும்படத்தை இயக்கியதற்காக கனடா சர்வதேச திரைப்பட விருது பெற்றிருக்கிறார்.

இப்படத்தில் மும்பையை சேர்ந்த 'இந்தியன் சகீரா' என அழைக்கப்படும் சினேகா குப்தா ஒரு பாடலுக்கு நடனமாடி இருக்கிறார். பிரபல இசையமைப்பாளர் மணிசர்மாவுடன் 23 வருடங்கள் உதவியாளராக பணியாற்றி வரும், அவரது சகோதரர் மகன் ராகவ் பிரசாத் இந்தப் படத்தின் மூலம் இசையமைப்பாளராக அறிமுகமாகிறார். இந்தப்படத்தில் ஒளிப்பதிவாளராக 'யாமிருக்க பயமே' படத்தில் பணியாற்றிய ராம்மி இணைந்துள்ளார். இதன் படப்பிடிப்பு சென்னையில் 45 நாட்கள் நடைபெற்றுள்ளது. இதன் பிற அறிவிப்புகள் விரைவில் வெளியாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.






# படித்ததும் பகர்வதும் 96



சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்

### வாய்ப்புகளைத் தவறவிடாதீர்கள்!

ஒவ்வொரு மனிதனும் முன்னேறுவதற்கும், உயர்ந்த அந்தஸ்துக்களை பெற்றுக் கொள்வதற்கும் அவனுக்கு கிடைக்கும் வாய்ப்புக்களை அவன் சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியமாகும். இறைவன் தான் படைத்துள்ள ஒவ்வொரு மனிதனுக்கும் சமமான அளவில் ஏதோ ஒரு வகையில் வாய்ப்புகளை வழங்கியிருக்கின்றான் அவற்றை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்பவர்கள் முன்னேற்றமடைகிறார்கள் மற்றவர்கள் தோல்வியைத் தழுவுகிறார்கள்.

கல்வி கற்பதற்கான வாய்ப்புகள், உயர்கல்விக்கான வாய்ப்புகள், தொழில்களை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகள், வியாபாரங்களை ஆரம்பிப்பதற்கான வாய்ப்புகள், அவற்றை அபிவிருத்தி செய்வதற்கான வாய்ப்புகள், உயர் பதவிகளையும் பதவி உயர்வுகளையும் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகள், தலைமைத்துவத்தை தரக்கூடிய வாய்ப்புகள், ஆட்சி அதிகாரங்களை பெறக்கூடிய வாய்ப்புகள், என எண்ணற்ற வாய்ப்புகள் ஒவ்வொருவருக்கும் வந்த வண்ணமே இருக்கின்றன என்பதை மறுக்க முடியாது.



தமது அசாக்ரதையால், கவனயீனத்தால், சோம் பேறித்தனத்தால், தாழ்வு மனப்பான்மையால், 'இயலாது' என்ற தவறான எண்ணத்தால், 'பிறகு பார்த்துக் கொள்ளலாம்' என்ற பொடுபோக்கால் இவ்வாறான வாய்ப்புகளில் பலவற்றை பலரும் நழுவ விட்டுவிடுகிறார்கள். இத்தகைய வாய்ப்புகள் மீண்டும் தமக்குக் கிடைக்காது என்பதை அவர்கள் புரிந்துகொள்ள மறந்து விடுகிறார்கள்.

வாயிலிருந்து வெளிவந்த சொல், வில்லிலிருந்து புறப்பட்ட அம்பு, துப்பாக்கியிலிருந்து வெளியான குண்டு, கடந்து போன நேரம் என்பன எவ்வாறு மீண்டும் மீளாதோ அவ்வாறு தான் தவற விடப்பட்ட வாய்ப்புகளும் என்பதை ஒவ்வொருவரும் நன்கு புரிந்து உணர்ந்து கொள்ள வேண்டும்.

"போன பஸ்சுக்கு கைநீட்டி பிரயோசனம் இல்லை" என்ற சாதாரண கிராமியப் பழமொழி வாய்ப்புகளை தவற விட்டு பின்னர் கைசேதப்படக்கூடாது என்பதற்கு எச்சரிக்கை விடும் மிகச் சிறந்த படிப்பினையூட்டும் பழமொழியாகும்.

நாம் எமது வாழ்வில் எத்தனையோ வாய்ப்புகளை கைவிட்டு கவைளப்பட்டிருப்போம் 'நானும்கூட எத்தனையோ அரிய வாய்ப்புகளை தவறவிட்டிருக்கிறேன். அந்த முட்டாள்தனத்தை எண்ணி இன்றும் என்னையே நான் நொந்துகொள்கிறேன். அதே போல் பலரும் வாய்புகளை பயன்படுத்தாது விட்டுவிட்டு பின்னர் கவலைப்படுவதையும் கண்டிருக்கிறோம். எனவே மீளப்பெற முடியாத இத்தகைய ஆழமான இழப்பின் பாதிப்பை சரியாகப் புரிந்து கொண்டு வாழ்க்கையில் எந்தவொரு வாய்ப்பினையும் தவறவிடாது உரிய முறையில் சிறப்பாக, நிறைவாக, முறையாக பயன்படுத்தி வெற்றி கொள்ள உறுதிபூண வேண்டும்.

## நெஞ்சுக்கு நீதி

வாய்ப்பொன்று வாழ்க்கையிலே ஒருதரம்தான் வரும்
பொறுப்பின்றி தவறவிட்டால் கவலைகள்தாம் மிகும்
மெய்யோடு வாய்ப்புகளை நீ பற்றித்தான் பிடித்தாலே
பேருயர் வெற்றிகள் தாம் உன் காலடியே வந்து விழும்

## பாராட்டுகிறோம்! வாழ்த்துகிறோம்!!

### பிரதமர் கௌரவ ரணில் விக்ரமசிங்க

இலங்கையின் புதிய பிரதமராக கௌரவ ரணில் விக்ரமசிங்க பதவி ஏற்றுள்ளார். நாடாளுமன்றத்தில் ஒரே ஒரு ஆசனத்தை மட்டுமே வைத்துக்கொண்டு ஒருவர், ஒரு நாட்டின் பிரதமரான சந்தர்ப்பம் உலகிலேயே இதுவே முதல் நிகழ்வாக இருக்குமெனக் கருதலாம்.



இவரது பதவி ஏற்பினை ஆதரித்தும், எதிர்த்தும், விமர்சித்தும் பல்வேறு கருத்துக்கள் மக்கள் மத்தியில் பரவியுள்ளன. இவற்றில் எதிர்மறையான கருத்துக்களே அதிகம் எனலாம். எனினும் நாடு மிக மோசமான பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள இவ்வேளையில் அதிலிருந்து நம் நாட்டை மீட்டு, நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பி, மக்களுக்கு நிவாரனத்தை வழங்குவதற்காகவே தான் இந்த பிரதமர் பதவியை பொறுப்பேற்றதாக கௌரவ ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மீது எத்தகைய எதிர்மறையான விமர்சனங்கள் வைக்கப்பட்ட போதிலும், மற்றவர்களைப் போல் பின் நிற்காமல் துணிச்சலாக எடுத்த இத்தீர்மானத்தை, நாம் பாராட்டுகின்றோம். இவ்விடயத்தில் பிரதமரது முயற்சிகள் வெற்றிபெற்று இலங்கையின் பொருளாதாரம் சீரடைந்து நாட்டு மக்களின் கஷ்டங்கள் தீர்ந்து, நிவாரணங்கள் பெற்று மகிழ்வோடு வாழும் நிலை உருவாக வாழ்த்துகிறோம்.

புதிய பிரதமர் கௌரவ ரணில் விக்கரமசிங்க தொடர்பில் பெரும்பாலும் பலரும் அறிந்திராத சில குறிப்பிடத்தக்க விடயங்களை உங்களுக்காக இங்கே தருகிறோம்.

(1) இவர், க.பொ.த (உ/த) பரீட்சையில் தேசிய மட்டத்தில் 02ம் இடம், (2) க.பொ.த (சா/த) பரீட்சையில் தேசிய மட்டத்தில் 07வது இடம், (3) கொழும்பு ரோயல் கல்லூரி விவாதக் குழு மற்றும் நாடகக் குழுவின் தலைவர். (4) இலங்கை சட்டக் கல்லூரியில் முதல் பிரிவில் சித்தி பெற்றவர். (5) ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் சட்டம் தொடர்பான முதுகலைப் பட்டம் பெற்றவர். (6) தனது 15 வயதில் ஐக்கிய நாடுகள் சபையில் உரையாற்றிய உலகின் ஒரே ஒரே மாணவர், (7) ஜப்பான் பாராளுமன்றத்தில் ஜப்பான் மொழியிலேயே உரையாற்றிய உலகின் வெளிநாட்டு அரச தலைவர், (8) இலங்கையின் முதலாவது வயது குறைந்த அமைச்சர்.

(9) உலகில் அமைச்சர்களுக்காக வழங்கப்படும் "பிலென் டி ஓர்" விருதை இரண்டு தடவைகள் பெற்ற ஒரேயொரு இலங்கை அரசியல்வாதி, (10) "நோபல்" பரிசுக்கு பரிந்துரைக்கப்பட்ட முதலாவது இலங்கையர் (1989ல்), (11) இலங்கையில் கையடக்கத் தொலைபேசியையும், இணையத்தளத்தையும் அறிமுகப்படுத்தியவர், (12) தேசிய இளைஞர் சேவை மன்றத்தை ஆரம்பித்தவர், (13) இலங்கையில் அறநெறிக் கல்விக்கு வித்திட்டவர், (14) கல்வியியற் கல்லூரிகளை (college of education) ஆரம்பித்தவர், (15) போட்டிப் பரீட்சை மூலம் ஆசிரியர் நியமனம் வழங்கலை ஆரம்பித்தவர், (16) தேசிய கல்வி நிறுவகத்தை நிறுவியவர், (17) 1994 முதல் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர், (18) இலங்கையில் அதிக தடவைகள் பிரதமரானவர்,

## நெஞ்சோடு நெஞ்சம்



'படித்ததும் பகர்வதும்'
வாரமஞ்சரியின்
வாசனைத் திரவியம்!
இதய இனிய
நல் வாழ்த்துகள்!

பேராசிரியர் **சேமுமு முகம்மதலி**
இஸ்லாமிய இலக்கிய கழக தலைவர்
சென்னை, தமிழ் நாடு, இந்தியா.



உங்களது 'பெரியவரும் fபெராரி காரும்' குறிப்பினைப் படித்தேன் ரசித்தேன். இருபது ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்கா சென்றிருந்தபோது, நியுயோர்க் நகரில் ஒரு உணவகத்துக்கு எனது நண்பர் அழைத்துச் சென்றார். நாம் சென்ற காரை ஒரு வாகனத் தரிப்பிடத்தில் நிறுத்திவிட்டுத் தான் சென்றோம்.

உணவருந்தி முடித்து இரண்டு மணிநேரம் கழித்து காரில் ஏற வந்தோம். உணவுக்குச் செலவானது 25 டொலர்கள். ஆனால், கார் தரிப்பிடத்தின் வாடகை 20 டொலர்கள். அந்த நீங்காத நினைவை இரைமீட்டிப் பார்க்க உங்கள் பதிவு உதவியது.

**உலக அறிவிப்பாளர் பீ. எச். அப்துல் ஹமீத்**

## பிரிந்தார் பெருமை

### ஷெரின் அபூ அக்லஹ்

அல் ஜெஸீரா செய்தி சேவையின் பிரபல பெண் ஊடகவியலாளர் ஷெரின் அபூ அக்லஹ் கடந்த 11ம் திகதி (11.05.2022) இஸ்ரேலிய பாதுகாப்பு படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். 1971ல் பெத்லஹெமில், பாலஸ்தீன அராபிய கிறிஸ்தவராக பிறந்த இவர், ஊடகத்துறை பட்டதாரியாவார்.

ஆரம்பத்தில் மொண்டேகார்லோ வானொலியின் ஊடகவியலாளராக கடமையாற்றிய ஷெரின், சமகாலத்தில் 'UNRWA' எனும் பாலஸ்தீன அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் நிவாரண நிறுவனத்திலும் பணிபுரிந்தார். 1997ல் அல் ஜெஸீராவில் ஊடகவியலாளராக இணைந்த இவர் தனது



51வது வயதில் இறக்கும் வரை அப்பதவிலேயே தொடர்ந்தார். பாலஸ்தீனரின் விடுதலை போராட்டம் சம்மந்தமான செய்திகளை போராட்ட களத்திலிருந்து நேரடியாக தொகுத்து வழங்குவதில் அதிக அக்கறை செலுத்தினார்.

இஸ்ரேலிய சிறைக் கூடங்களில் அடைக்கப்பட்ட பாலஸ்தீன கைதிகளை நேர்காணல் செய்து ஒளிபரப்பினார். 2002 ஜெனின் யுத்தம் உட்பட காஸாவில் நடைபெற்ற பல்வேறு யுத்தங்களின் போதும், ஆக்கிரமிப்பு தாக்குதல்களின் போதும் நேரடியாக இவர் வழங்கிய செய்தி அறிக்கைகள் முக்கியத்துவம் பெற்றன. பல பெண்களுக்கு முன்மாதிரியாக இருந்த இவரது செயற்பாடுகளால் ஈர்க்கப்பட்ட பல பெண்களும்கூட ஊடகத்துறையில் ஆர்வம் செலுத்தத் தொடங்கியாமை விசேடமாகக் குறிப்பிடத்தக்கது.

இஸ்ரேலிய இராணுவத்தினர் பாலஸ்தீன அகதி முகாம் ஒன்றில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட போது அத்தகவல்களை திரட்டிக்கொண்டிருகையிலேயே, எந்தவித காரணமுமின்றி, இவர் இஸ்ரேலியப் படையினரால் அநியாயமாக சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். பாலஸ்தீனத்தில் இஸ்ரேலியரின் மனிதாபிமானமற்ற அடாவடித்தன செயற்பாடுகளுக்கு இது மற்றுமொரு சான்றாகும்.

இவரது படுகொலையை ஐக்கிய நாடுகள் சபை உட்பட உலகின் பல நாடுகளும், பல்வேறு ஊடக அமைப்புகளும் வெகுவாக கண்டித்துள்ளன. இஸ்ரேலின் கொடூரத்தால் அநியாயமாக தன்னுயிரை இழந்த ஷெரின் அபூ அக்லஹ், பாலஸ்தீன போராட்ட சரித்திரத்தில் மறக்க முடியாத ஒரு அங்கமாக இடம் பெறுவார் என்பது திண்ணம்.

## காண வேண்டிய காட்சியொன்று



மே 18ம் திகதி சர்வதேச அருங்காட்சியகத் தினம். அதனை முன்னிட்டு, பழங்காலப் சீனாவின் சான்சிங்துய் எனும் சிதிலத்தில் கண்டறியப்பட்ட விலங்கு வடிவிலான வெண்கலத் தொல் பொருளின் இந்தப் படம் உங்கள் பார்வைக்கு. ஆயிரக்கணக்கான ஆண்டுகள் பழமையானது. நவீன மின்சார நாய் ஒன்றைப் போன்ற இந்தத் தொல் பொருள் பலதரப்பட்ட மக்களின் கவனத்தை ஈர்த்துள்ளது.

இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எழுத விரும்புவோர், "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்எப் (WhatsApp): 0777314207

# முடிவெடுத்த பிறகு காலந்தாழ்த்துவது தீதாக முடியும்



திருவள்ளுவர் எனும் தெய்வீக முகாமையாளர்



கே. பத்மானந்தன் 08

தனி நபராக இருந்தாலும் சரி அல்லது குடும்பத்தலைவராக இருந்தாலும் சரி அல்லது நிறுவனத்தலைவராக இருந்தாலும் சரி அல்லது ஏன் நாட்டின் தலைவராக இருந்தாலும் சரி முடிவெடுத்தல் என்பது மிகவும் பிரதானமான செயற்பாடாகும். எடுக்கப்படும் முடிவுகளே தனி வாழ்க்கையாக இருந்தாலும் சரி பொது வாழ்க்கையாக இருந்தாலும் சரி தொழில் வாழ்க்கையாக இருந்தாலும் சரி அரசியல் வாழ்க்கையாக இருந்தாலும் சரி வெற்றி தோல்விகளைத் தீர்மானிக்கிறது. சரியான நேரத்தில் சரியான முடிவுகளைக் கால தேச வர்த்தமானங்களுக்கு ஏற்ற விதத்தில் எடுக்க வேண்டும். அப்போதுதான் சரியான இலக்குகளை நோக்கிச் செல்ல முடியும்.ஒரு நிறுவ னத்தின் முகாமையாளரைப் பொறுத்த வரையில் சரியான நேரத்தில் சரியான முடிவுகளை எடுத்தல் என்பது மிகவும் முக்கியமான தொன்றாகும். அப் போதுதான் அவர் தான் சார்ந்த நிறுவனத்தின் செயற்பாடுகளைச் சரியான முறையில் ஒழுங்கமைத்து சரியான இலக்கில் கொண்டு செல்ல முடியும் என்ற கருத்துக்களை கீழ்வரும் ஈரடியில் திருவள்ளுவர் விளக்குகின்றார்.

**எண்ணித் துணிக கருமம்**
**துணிந்தபின்**
**எண்ணுவம் என்பது இழுக்கு.**
(குறள் 467)

ஒருவர் ஒரு செயலில் இறங்குமுன் நன்றாகச் சிந்தித்து முடிவெடுத்த பிறகே செயலில் இறங்க வேண்டும். செயலில் இறங்கிய பிறகு அச்செயலைப் பற்றிச் சிந்திக்கலாம் என்பது தவறு என்கிறார் திருவள்ளுவர். எனவே நிறுவன மொன்றின் முகாமையாளர் போதுமான தகவல்களைச் சேர்த்து அந்தத் தகவல்களை ஆராய்ந்து நன்றாகச் சிந்தித்த பின்பே எதனை எப்படி எங்கு எவ்வாறு செய்வதென்று முடிவெடுக்க வேண்டும் . செயலில் இறங்கிய பின் சிந்திக்கலாம் என்று அந்த முகாமையாளர் நினைப்பாராயின் அவர் சார்ந்த நிறுவனத்தின் எதிர்பார்த்த இலக்குகளை அடைவதில் பிரச்சனைகள் ஏற்படலாம் அது மட்டுமல்ல அந்த நிறுவனத்தை நடத்திச் செல்வதிலும் பிரச்சினைகள் ஏற்படாலம் என்பதுடன் இது ஒரு தவறான முகாமைத்துவம் என்கிறார் திருவள்ளுவர்.

சரியான தகவல்கள் இன்றி ஆராயாமல் எடுக்கப்பட்ட முடிவுகளினால் அல்லல்பட்ட தனிநபர்களை, குடும்பங்களை, நிறுவனங்களை, நாடுகளை நாங்கள் பார்க்கிறோம். தலைவர்களால் எடுக்கப்பட்ட தவறான தூர நோக்கற்ற முடிவுகளினால் எத்தனையோ நாடுகள் சமூக, பொருளாதரா, அரசியல் நெருக்கடிக்குள் உள்ளாகி மக்களின் வெறுப்புக்கு ஆளாகி அரசாங்கங்கள் மக்களால் தூக்கி எறியப்பட்ட சமபவங்கள் வரலாற்றில் நிறையவே நடந்து இருக்கின்றன.

திருவள்ளுவரின் இக்கருத்து ஹேபர்ட் சைமனின் (Herbert Sim on, 1916 2001) வினைத்திறனான முடிவெடுத்தல் (Effective Decision Making) என்ற கருத்துடனும் பீட்டர் ட்றக்கரின் ".(Peter Ferdinand Drucker 1909 –2005 ) துணிந்து முடிவெடுத்தல் என்ற கருத்துடனும் ஒத்துப்போவதைக் காணலாம். சைமன் ஒரு செயல் பற்றி முடிவெடுக்கமுன் அது தொடர்பான தகவல்களைச் சேகரிக்க வேண்டும் என்கிறார். சைமனின் கருத்துப்படி முடிவெடுத்தலென்பது மூன்று வகைப்படும். அவையாவன, புத்தி சாலித்தனமான நடவடிக்கை (Intelligence Activity), வடிவமைக்கப்பட்ட நடவடிக்கை (Designed Activity) மற்றும் தெரிந்தெடுக்கும் நடவடிக்கை (Choice Activity) என்பனவாம். முடிவெடுத்தல் தொடர்பான சைமனின் இந்தக் கருத்துக்களைக் கீழ்வரும் ஈரடியில் திருவள்ளுவர் சிறப்பாக வெளிப்படுத்துகின்றார்.



**ஒல்வ தறிவது அறிந்ததன்**
**கண்தங்கிச்**
**செல்வார்க்குச் செல்லாதது**
**இல்.**
(குறள் 472)

ஒருவர் தனக்குப் பொருந்தும் என நினைத்து தெரிவு செய்து ஒரு செயலில் ஈடுபடும்போது அச்செயல் பற்றிய அனைத்தையும் ஆராய்ந்தறிந்து அச்செய லைப் புத்திசாலித்தனமாக வடிவமைக்கப்பட்ட முறையில் செய்ய முயற்சி மேற் கொண்டால் முடியாதது என்று எதுவுமில்லை என்கிறார் திருவள்ளுவர் . தனது நிறுவனத்தில் ஒரு செயலில் ஈடுபட முகாமையாளர் முடிவெடுக்கும்போது அச் செயலால் விளையக்கூடிய சாதக பாதகங்கள் பற்றி நன்கு கலந்தாய்வு (Consultation) செய்து பொருத்தமான நிறுவனத்தின் வெற்றிகரமான இயக்கத்தை உறுதி செய்யும் வகையில் முடிவெடுக்க வேண்டும் என்கிறார் திருவள்ளுவர். அவ்வாறு ஒரு முகாமையாளர் ஆராய்ந்து முடிவெடுத்த பிறகு தான் எடுத்த முடிவினை நிறைவேற்ற (Execution) வேண்டும் அவ்வாறு இல்லாது நிறைவேற்றுவதை ஏதாவது காரணங்களைக் காட்டி காலந்தாழ்த்துவது எப்போதும் தீதாக முடியும். இக்கருத்துக்களை கீழ்வரும் ஈரடியில் திருவள்ளுவர் சிறப்பாக விளக்குகின்றார் .

**சூழ்ச்சி முடிவு**
**துணிவெய்தல்**
**அத்துணிவு**
**தாழ்ச்சியுள் தங்குதல்**
**தீது.**
(குறள் 671)

அதாவது ஒரு செயலில் ஈடுபட முடிவெடுக்கும் போது அச்செயலால் விளையும் சாதக பாதகங்கள் பற்றிய ஆராய்ச்சியும் முடிவடைந்திருக்க வேண்டும். அதே போல் முடிவெடுத்த பிறகு காலந்தாழ்த்துவது தீதாக முடியும் என்கிறார் .அதாவது ஒரு நிறுவன் முகாமையாளர்அல்லது நாட்டின் தலைவர் என்பவர் தான் முடிவெடுக்கும்போது சமூக பொருளாதார அரசியல் சூழ்நிலைகளை கவனமாக ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டும் அதேபோல எடுத்த முடிவினை மாற்றம் செய்ய முயலாமல் செயல்படுத்தவேண்டும் என்கிறார் திருவள்ளுவர்.

இவ் ஈரடியில் நிதானித்து யோசித்தல் (Deliberationசூழ்ச்சி), முடிவெடுக்கும் திறன் (Decision Makingமுடிவு துணிவெய்தல்), சரியான நேரத்தில் நிறை வேற்றுவது (Timely Execution –அத் துணிவு தாழ்ச்சியுள் தங்குதல் தீது) ஆகிய முகாமைத்துவம் பற்றிய கருத்துக்களை திருவள்ளுவர் வெளிப்படுத்துகிறார். எனவே வெற்றிகரமான முகாமையாளர் அல்லது தலைவர் என்பவர் நிதானித்து யோசிப்பவராகவோ அல்லது யோசித்து முடிவெடுப்பவராகவோ மட்டும் அல்லாமல் எடுத்த முடிவை அமுல்படுத்துபவராகவும் இருக்க வேண்டும்.

உண்மையில் ஒரு செயலைக் குறித்து கலந்து ஆலோசனை செய்து தெளிவு பெற்று முடிவு எடுத்தபின்பு அதனை செயலில் செய்வதில் காலந்தாழ்த்துதல் எப்போதும் தீதாகும் என்கிறார் திருவள்ளுவர். உதாரணமாக ஒரு பெரிய திட்டத்தைத் தொடங்குவதற்கு முன் அதனுடன் தொடர்புடைய அனைவருடனும் அது பற்றித் தெளிவு ஏற்படும்வரை நன்கு கலந்து ஆலோசித்து உறுதியான முடிவு எட்டப்படவேண்டும். அம்முடிவு திட்டம் தொடங்குவதாகவும் இருக்கலாம் அல்லது கைவிடுவதாகவும் இருக்கலாம். எப்படியிருந்தாலும் அந்த முடிவை அதாவது செய்யத் துணிந்த செயலைச் செயல்படுத்துவதில் காலம் தாழ்த்தினால் எதிர் பாராத விளைவுகள் உண்டாகி தீமைகள் விளைக்கும்.

கால தாமதம் செய்யும் போது முடிவு எடுக்கும்போது உள்ள சூழ்நிலை மாறக்கூடும். இத்தகைய மாறிய சூழல் பாதகமான விளைவுகளைத் தரக்கூடிய ஒன்றாகவும் இருக்கக் கூடும். ஏற்படும் சூழல் மாற்றங்களுக்குக் ஏற்ப சில வேளைகளில் செயல்படுத்த முடிந்த காரியங்களைத் திரும்பவும் முதலிலே இருந்து செய்ய வேண்டிய ஒரு நிலையம் ஏற்படக்கூடும். சில வேளைகளில் கால நீடிப்பை அறிந்து கொள்ளும் போட்டியாளர்கள் அதனை தமக்குச் சாதகமான முறையில் பாவிக்கக்கூடும். இதனால் கிடைத்த வாய்ப்புகள் மீண்டும் கிடைக்காமல் போகலாம். எனவேதான் திருவள்ளுவர் எடுத்த முடிவுகளை கல நேரத்தோடு அமுல்படுத்த வேண்டும் என்று விதந்துரைக்கிறார்.

அதேபோல முகாமையாளர் அமுல்படுத்தக் கூடிய முடிவுகளையே எடுக்க வேண்டும் என்பதுவும் திருவள்ளுவரின் கருத்தாகும். எனவே ஒரு முகாமையாளர் அமுல்படுத்தமுடியாத முடிவுகளை எடுப்பாராயின் அவரின் முடிவுகளினால் நிறுவனத்திற்கு எந்தப் பிரயோசனமும் கிடையாது என்பதை திருவள்ளுவர் வலியுறுத்துகிறார். பல நிறுவனங்களினதும் நாடுகளினதும் தலைவர்கள் ஏன் குடும்பத்தலைவர்கள் கூட அமுல்படுத்த முடியாத முடிவுகளை எடுத்து அவதிப்பட்டதையும் அடுத்தவர்களையும் அவதிக்கு உள்ளாக்கியதையும் நாங்கள் பார்க்கிறோம்.

உதாரணமாக அவசரநிலைமைகளின் (Emergency Situation) போது அல்லது பேரிடர்கள் அனர்த்தங்கள் (Disaster) நிகழும்போது முகாமையாளர் அல்லது தலைவர் என்பவர் நிலைமைக்கேற்ப துரிதமாக முடிவெடுக்கத் தெரிந்தவராகவும் பின் அம்முடிவை செயல்படுத்தக் கூடியவராகவும் இருக்க வேண்டும். அப்போதுதான் நிவாரணப் பணிகளை அல்லது மீட்புப் பணிகளை செவ்வனே செய்ய முடியும். நிறுவனத்தை அல்லது மக்களை அனர்த்தங்களின் பாதக விளைவுகளில் இருந்து பாதுகாக்க முடியும். எனவே தகவல்களை சேகரித்தலும் சேகரித்த தகவல்களைக் கவனமாக ஆராய்தலும் அதன் அடிப்படையில் முடிவெடுத்தலும் எடுத்த முடிவுகளைச் சரியான முறையில் தாமதமின்றி முன்னுரிமை அடிப்படையில் அமுல்படுத்தலும் ஒரு முகாமையாளரின் அல்லது தலைவரின் பணி என்கிறார் திருவள்ளுவர்.

(தொடரும் )

தினகரன் வாரமஞ்சரி THINAKARAN VAARAMANJARI

# சிறு விளம்பரங்கள்

**சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை**

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

## வர்த்தகம்

### 207 வியாபார ஸ்தலம் விற்பனைக்கு

கண்டி குண்டசாலை 80 பேர்ச் சதுர வடிவ காணி கென்டோஸ் சொக்ளட் தொழிற்சாலைக்கு முன்னால் 180 அடி அகலமான கார்பட் பிரதான வீதியில் இருந்து 100 மீற்றருக்கு அப்பால், 21730 சதுர அடி காணி. காணியைச் சுற்றி 15 அடி உயர பாதுகாப்பு சுவர் இரும்பு கேட்டுடன் வர்த்தக வங்கிகள், BOI, பல்லேகெலே விளை யாட்டரங்கு, அரச அதிகார சபைகள் மற்றும் ரி ஜென்ட் ஹோட்டலுக்கு அருகில். நடைதூரம் ஐந்து நிமிடம் காணியில் இருந்து டொக்டர்களுக்கு பொருத்தமானது. மின்சாரம், நீர் உண்டு. பெறுமதி ரூ. 85 மில்லியன். 0777438169, 07772 82147 031616

## வேலைவாய்ப்பு

### 316 வெற்றிடங்கள் ஆடை தயாரிப்பு/ புடவைகள்

திறமையான மெடின் கோட் பாஸ் தேவை. தங்குமிட வசதியுண்டு. கொட்டாவ. 077 5698582. 031412



தினகரன் வாரமஞ்சரி
சிறு விளம்பரங்கள்
சிறந்த பெறுபேறுகளுக்காக - விளம்பரம் செய்திடுவீர்
முதல் 15 சொற்களுக்கு 150/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
011 2 429 342 / 011 2 429 343
classified@lakehouse.lk

### 319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்

கம்பஹா உடுகம்பள நோயுற்றிருக்கும் பெண்மணி ஒருவரை தங்கியிருந்து பார்த்துக் கொள்வதற்கு பெண் ஒருவர் தேவை. 071 6392095 என்ற இலக்கத்தை அழைக்கவும். 031091

கெஸ்பாவவில் வீட்டு வேலை செய்வதற்கான பெண் ஒருவர் தேவை. (வயது 30 55 இற்கு மிடையில்) 071 0458783. 031306

வீட்டில் தங்கியிருந்து சமையல் செய்யும் பெண் தேவை. சம்பளம் 35,000/ லக்ஷ்மி மான்பவர் W.A. சில்வா மாவத்தை, வௌ்ளவத்தை. 031374

கொழும்பு தலவத்துகொடவீ டொன்றில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு 55 வயதிற்குட்பட்ட பெண்ணொருவர் தேவை. சம்பளம் 30,000 35,000 அனுபவத்தின் பிரகாரம். 0777584961/ 0777456579 030807

### 321 வெற்றிடங்கள் தோட்டத்துறை

கம்பஹா வெலிவேரிய ஐந்து ஏக்கர் தென்னந் தோட்டத்தில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு ஒருவர் தேவை. தங்குமிடம் உண்டு. 076 3279169, 033 2259143. 031087

50 ஏக்கர் தே யிலை தோட்டத்தில் வேலை செய்வதற்கு தொழிலாளர்கள் தேவை. சுமார் 30 ஏக்கர் வரையில் ஒப்பந்த வேலைகள் உள்ளன. 0713523634. 030545

### 325 தொழில்துறை பொது

சில்லறைக் கடைக்கு வேலைக்கு ஆண்கள் தேவை. கூடுதல் சம்பளம். உணவு, தங்குமிடம் உண்டு. பிலியந்தலை. 077 1744973. 031474

தெஹிவளையில் அமைந்துள்ள பிரபலமான Catering Service நிறுவனத்திற்கு அனுபவமுள்ள அனுபவமற்ற kitchen helpers உடன் வேலைக்கு தேவை. உணவு தங்குமிடம் இலவசம். சம்பளம் பேசித்தீர்மானிக்கலாம். 077 2655252, 077 2613231, 077 0412989. 031786

தொழிற்சாலை வெற்றிடங்கள், ஹ ங்வெல்ல நிரந்த ர சேவைக்கு ஒரு நாளைக்கு ரூ. 1500, பெண் ஊழியர் 1100 (வார முற்பணம், தங்குமிடம் இலவசம் + உணவுக் கொடுப்பன வு) 60 வயதிற்கு கு றைந்தோர். 077 3077813, 0722 273273. 031613

0718653781 பாதுகாப்பு ஊழியர்கள் வெற்றிடங்கள். இரத்ம லானை, பிலியந்தலை, பெபி லியான, பொரலெ ஸ்கமுவ, கொ ஹுவல, நுகேகொட, மொரட்டுவ, கல்கிஸ்ஸ, பாணந்துறை, ஒருகொடவத்த, கட்டுநாயக்க, சீதுவ, வத்தளை, பேலியகொட, எலகந்த, கொழும்பு, ரணால, கடுவளை, இராஜகிரிய, சேதவத்த, ஹொரண, கோணபொல, கோவின்ன, தெரணியகல, தெஹியோவிட்ட, இரத்மலானை 0718379981, கல்கிஸ்ஸ 0706991637, பாணந்துறை 0704545051, வத்தளை 0718653779, கொழும்பு 0718653780, இராஜகிரிய 0712125238, ஹொரண 070251341 8, அலுவலகம் 0760989129, 0763155331. 031818



## காணி/தோட்டம்

### 601 சொகுசு வசிப்பிடங்கள்/ வீடுகள் தொடர் வீடுகள் விற்பனைக்கு

கொழும்பு 02 பாதுகாப்புக் கல்லூரிக்கு முன்னால் ஆடம்பர வீடமைப்பு திட்டத் தொகுதியில் 4ஆம் மாடியில் 800 ச. அடி வீடு விற்பனைக்கு. 011 2927235, 0775 787400. 031595

### 616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

கொழும்பு15, பிரதான வீதிக்கு மு கப்பாக 6 பேர்ச் ஒரு பேர்ச் 2 மில்லியன் 0773988235 031617

பொரலஸ்கமுவ 3 மாடி வீடு 9.5 பேர்ச் 05 படுக்கையறைகள் 12 அடி சுற்றுச்சுவர் 02 x பெரிய ஓய்வுப் பிரதேசம் 03 x வாகன நிறுத்துமிட வசதிகள் சிங்கர் பென்றி கப்போட் ரூப்டொப் உடன் அழகான சுற்றாடல் தொடர்பு 077 8510282/ 070 4644640 விலை 48 மில்லியன். 031362

### 617 வீடு சொத்து கம்பஹா மாவட்டம் விற்பனைக்கு

கம்பஹா கடவத்தை கிராமிய சுற்றாடலில் கண்டேனர் ஒன்றை சிக்கலின்றி உள்ளே எடுப்பதற்கான இடவசதியுள்ள 04 வீடுகள் 04 கராஜ்கள் 02 கழிவறைகள் வீதம் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. கொழும்புக்கு 10 கி.மி. தொலைவில் சிக்கலற்ற 45 வருட தனி உறுதிப்பத்திரம் தொ. பே. 070 1121966. R. D. ஆரியதாஸ். 031078

### 641 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு

நுகேகொடை வீடு வாடகைக்கு. மேம்பாலத்திற்கு 300 மீட்டர், 3 படுக்கையறைகள் , 2 கழிப்பறைகள், ஓய்வறை, சமையலறை வாகன நிறுத்துமிடம் ரூ. 55,000/ மாதாந்தம் 0777644254. 031338

43/ 4A HAKBOTY RD களு போவில சரணங்கர பாதை சந் தைக்கு முன்னால் 2 படுக்கை அறைகள் பெரிய சாலை, 2 வாகனத் தரிப்பு சீமெந்துத் தரை கொண்ட வீடு 25,000/ குடியிருக்கும் நிலையில் வாடகைக்கு உண்டு. 077 0482400. 031052






தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.
முதல் 15 சொற்களுக்கு 100/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65

தினகரன் வாரமஞ்சரி BUDGET aDz
It suits your budget
Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067 / Umanga - 077 727 0845







VALAMPURI
SAFETY WAX MATCHES
Maximum Rs. 20/-
LOT NO. 18, I.D.B. ZONE PANNALA
VALAMPURI MATCH INDUSTRIES

தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும
classified@lakehouse.lk
உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.
முதல் 15 சொற்களுக்கு 100/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
- ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
- ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்
அனுஷா - 077 7 278 948 ரமணி - 011 2 129 347
பியுமி - 011 2 429 383 கயனி - 011 2 429 342

# வாரபலன்



22.05.2022 - 28.05.2022

கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா
ஸ்ரீ வித்தியா ஜோதிடம்

## மேஷம்

வைகாசி 3 ம் திகதி (17/05/2022) மீன ராசியில் செவ்வாய் சஞ்சரித்துள்ளார். அட்டமாதிபதியாக இரு க்கும் செவ்வாய் 12ஆம் இடத்திற்கு செல்லும் போது திட்டமிடாது செய்யும் சில காரியங்களில் வெற்றி கிடைக்கும். வீண் பழிகளில் இருந்து விடுபடு வீர்கள். என்றைக்கோ வாங்கிப் போட்ட இடம் விலை உயர்ந்து உங்கள் தேவைகளை பூர்த்தி செய்யப்போ கிறது. விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து இணைவர். வாகன மாற்றம் செய்ய முன்வருவீர்கள்.

## ரிஷபம்

வைகாசி 3ம் திகதி (17/05/2022)மீன ராசியில் செவ்வாய் சஞ்சரித்துள்ளார். உங்கள் ராசிக்கு விரயா திபதியான செவ்வாய் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் போது விரயதிற்கேற்ற பணம் வந்து சேரும். காரியங் கள் கடைசி நேரத்தில் எப்படியாவது கைகூடி விடும். நண்பர்கள் உதவுவார்கள். ஊர் மாற்றம், வீடு மாற்றத் துக்கான முயற்சி கைகூடும். பயணங்களால் அலைச்ச லும் ஆதாயமும் உண்டு.

## மிதுனம்

வைகாசி 3ம் திகதி (17/05/2022) மீன ராசியில் செவ்வாய் சஞ்சரித்துள்ளார். உங்கள் ராசிக்கு 6 க்கு அதிபதியான செவ்வாய் 10ல் சஞ்சரிக்கும் பொழுது தொழில் பிரச்சினை அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் கோபத்திற்கு ஆளாக நேரிடும். நிம்மதி குறையும்.வாய்தாக்கள், வழக்குகள் வந்த வண்ணம் இருக்கும். மனக்குழப்பம் ஏற்படலாம். உத் தியோகத்தில் சக ஊழியர்களால் தொல்லை அதிகரிக் கும். சுய தொழில் செய்வது பற்றி சிந்திப்பீர்கள்.

## கடகம்

வைகாசி 3ம் திகதி (17/05/2022)மீன ராசியில் செவ்வாய் சஞ்சரித்துள்ளார். அவர் பாக்கிய ஸ்தானத் திற்கு வருவதால் உடன்பிறப்புகளின் ஒத்துழைப்பு கிடைக்கும். கடன் சுமை குறையும். உத்தியோகத்தில் புதிய பொறுப்புகள் கிடைக்கும். பொருளாதார சிக் கல்களிலிருந்து விடுபடுவீர்கள்.

## சிம்மம்

வைகாசி 3ம் திகதி (17/05/2022) மீன ராசியில் செவ்வாய் சஞ்சரித்துள்ளார். அவர் உங்கள் இரா சிக்கு 8ம் இடத்திற்கு செல்வது அவ்வளவு நல் லதல்ல. ஆரோக்கியத்தையும் மனக் குழப்பத் தையும் உண்டாக்கும். குருவோடு இணைந்து குரு மங்கல யோகம் ஏற்படுவதால் இல்லத்தில் சுப காரியங்கள் நடைபெறும். பொருளாதார பற்றாக் குறை நிலவும். இடம் பூமியால் கிடைக்க வேண்டிய லாபம் தாமதமாகும். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலாது.

## கன்னி

வைகாசி 3ம் திகதி (17/05/2022)மீன ராசியில் செவ்வாய் சஞ்சரித்துள்ளார். உங்கள் ராசிக்கு 3 ,8 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய் சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது சகோதரர்களால் சங்கடம் வரலாம். தொழிலில் இழப்புகளை சந்திக்க நேரிடும். பிறரை நம்பி செய்த காரியம் மனவாட்டம் தரும்.

## துலாம்

வைகாசி 3ம் திகதி (17/05/2022) மீன ராசியில் செவ்வாய் சஞ்சரித்துள்ளார். உங்கள் ராசிக்கு 2, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய் 6ம் இடத்திற்கு செல்லும் பொழுது சில எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மருத்துவம் சார்ந்த தொழிலில் இருப் பவர்களுக்கு மகத்தான பலன் கிடைக்கும். அடகு வைத்த நகைகளை மீட்பீர்கள்.

## விருச்சிகம்

வைகாசி 3ம் திகதி (17/05/2022)மீன ராசியில் செவ்வாய் சஞ்சரித்துள்ளார். உங்கள் ராசிநாதனாக வும் 6க்கு அதிபதியாகவும் விளங்கும் செவ்வாய் பூர்வ புண்ணிய ஸ்தானத்திற்கு செல்லும் போது புதிய பொறுப்புகள் கிடைக்கும். அங்கு உள்ள குருவோடு செவ்வாய் சேர்ந்து குரு மங்கள யோகத்தை உருவாக்கு வதால் இல்லத்தில் மங்கல ஓசை கேட்கும். ஆகாரத் தில் அக்கறை செலுத்துங்கள்.

## தனுசு

வைகாசி 3ம் திகதி (17/05/2022) மீன ராசியில் செவ்வாய் சஞ்சரித்துள்ளார். உங்கள் ராசிக்கு 5 ,12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய் சுக ஸ்தானத்திற்கு செல்லும்போது ஆடம்பரச் செலவு அதிகரிக்கும். வெளிநாட்டில் இருந்து அழைப்புகள் வரலாம். கூட்டுக் குடும்பத்தில் உள்ளவர்கள் தனித்து இயங்க முற்படுவர். அரசியல் ஈடுபாடு கொண்டவர்க ளுக்கு பொறுப்பு அதிகரிக்கும்.

## மகரம்

வைகாசி 3ம் திகதி (17/05/2022) மீன ராசியில் செவ்வாய் சஞ்சரித்துள்ளார். உங்கள் ராசிக்கு 4 ,11 ஆ கிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய் சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது வருமா னம் திருப்தி தரும். வெளிநாட்டிலிருந்து எதிர்பார்த்த காரியம் தாமதப்படலாம். உத்தியோகத்தில் உள்ளவர் களுக்கு திடீர் இடமாற்றம் ஏற்படலாம். வாக்குவாதங் களை தவிர்ப்பது நல்லது.

## கும்பம்

வைகாசி 3ம் திகதி (17/05/2022) மீன ராசியில் செவ்வாய் சஞ்சரித்துள்ளார். உங்கள் ராசிக்கு 3 ,10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் தனஸ்தானத்தில் செல்லும் பொழுது உடன்பி றப்புகளின் முன்னேற்றம் திருப்தி தரும்.செவ்வாய் குருவோடு இணைவதால் குருமங்கள யோகம் உருவா கின்றது. எனவே நல்ல காரியங்கள் இல்லத்தில் நடை பெறும்.

## மீனம்

வைகாசி 3ம் திகதி (17/05/2022) மீன ராசியான உங்கள் ராசியில் செவ்வாய் சஞ்சரித்துள்ளார். உங்கள் ராசிக்கு 2 ,9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய் உங்கள் ராசியிலேயே சஞ்சரிக்கும் பொழுது நினைத்த காரியம் நினைத்த நேரத்தில் முடியும். தைரியம் தன்னம்பிக்கை கூடும். பொறுப்புச் சொல்லி வாங்கிக் கொடுத்த தொகை வந்து சேரும். இடம் பூமி வாங்கும் முயற்சி கைகூடும்.

# சமையல் எரிவாயுத் தட்டுப்பாடு: பழமைக்கு திரும்பியுள்ளோம்

## கைகொடுக்கும் விறகு, தூசு அடுப்பு; சோபை இழக்கவில்லை எமது உணவகம்

### ● இளம் பெண் சுயதொழில் முயற்சியாளர் வாசுகி சிவராஜா



யுத்த சூழ்நிலை நிலவிய காலப்பகுதியில் எனது தந்தை திடீரெனக் காணாமல் போனபோது, எமது குடும்பம் வருமா னத்தை இழந்து தவித்தது. அவ்வேளையில் வறுமையால் வாடிய நாம், ஒருவேளைச் சாப் பாட்டுக்கு மிகவும் கஷ்டப்பட்டோம். இளமை யில் பசியின் கொடுமையை அனுபவித்த நான், உணவகமொன்றை உருவாக்கி அதன் மூலம் வருமானம் ஈட்டுவதோடு மாத்திரமின்றி, பசியால் வாடுவோருக்கும் உதவியளிக்க வேண் டுமென்று எண்ணினேன். இவ்வாறானதொரு எதிர்பார்ப்பே தற்போது உணவகமொன்றை தலைமை தாங்கி நடத்துவதற்கு என்னை உந் தியதாக, இளம் பெண் சுயதொழில் முயற்சியா ளரான திருமதி வாசுகி சிவராஜா தெரிவித்துள் ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் செங்கலடி, குமாரவேலியார் கிராமத்தைச் சேர்ந்த 37 வயதுடைய வாசுகி, கொம்மாதுறைக் கிரா மத்தில் 'அமிர்தம்' எனும் பாரம்பரிய உணவ கமொன்றை சிறந்த முறையில் நடத்தி வருகின் றார். சகலவிதமான பாரம்பரிய உணவுகளையும் தயாரித்து அவர் விற்பனை செய்வதால், 'அமிர் தம்' என்றால் 'வாசுகி', 'வாசுகி' என்றால் அமிர் தம் எனும் அளவிற்கு அவ்வுணவகமும் சிறந்த முறையில் இயங்கி வருகின்றது.

இந்நிலையில், 'அமிர்தம்' உணவகத்தில் சிறந்த சுகாதார தரத்தை பேணியமைக்காக, கடந்த 2017ஆம் ஆண்டில், கிழக்கு மாகாண ரீதியில் இளம் பெண் தொழில் முயற்சியாள ருக்கான விருது, 'காவியா' பெண்கள் அபிவி ருத்தி அமைப்பின் அனுசரணையுடன், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தினால் வாசுகிக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டது.

தமது உணவகம், இளமையில் தான் பட்ட கஷ்டம். அக்கஷ்டத்திலிருந்து தான் முன்னேறி வருகின்றமை பற்றி தினகரன் வாரமஞ்சரி வாச கர்களுடன் அவர் பகிர்ந்துகொள்கின்றார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது குடும்பம், நான்கு அங்கத்தவர்களைக் கொண்ட சிறிய குடும்பமாகும். எனது பெற் றோருடன், எனக்கு ஒரு தம்பி இருக்கின்றார். இவ்வாறு நாம் இருந்து வருகையில், யுத்த சூழ்நிலை நிலவிய காலப்பகுதியான 1990ஆம் ஆண்டில் எனது தந்தை காணாமல் போனார். அப்போது எனக்கு 10 வயதேயாகும். எனது தந்தை காணாமல் போனதை எண்ணி, எனது





தாயுடன் சேர்ந்து பிள்ளைகளாகிய நாமும் வேத னையால் துடித்தோம்.

தந்தை காணாமல் போன துயரம் ஒருபக்கம் எம்மை வாட்டி வதைக்க, மறுபுறம் குடும்ப வருமானமின்றி அவதிப்பட்டோம். இந்நிலை யில், எமது குடும்பச் செலவைச் சமாளிப்பதற் காக எனது தாயார் மத்திய கிழக்கு நாடொன் றிற்கு வீட்டுப் பணிப்பெண்ணாகச் சென்று, அங்கு சுமார் இரண்டு வருடகாலம் பணியாற் றியிருந்தார். அதன் பின்னர், எமது ஊர் திரும் பிய எனது தாயார், அப்பம் சுட்டு விற்கும் தொழிலை ஆரம்பித்தார்.

அப்போது எனது பாடசாலைக் கற்றல் நட வடிக்கைகளையும் கவனித்துக்கொண்டு, தாயாரின் அப்பம் சுட்டு விற்கும் தொழி லுக்கு நான் ஒத்தாசையாக இருந்தேன். இச் சூழ்நிலைக்கு மத்தியில், எனது பாடசாலைக் கல்வியில், க.பொ.த. சாதாரணதரத்தில் சித் தியடைந்து, க.பொ.த. உயர்தரத்தில் கலைப் பிரிவில் கல்வியைத் தொடர்ந்த நான், தாயாரு டன் சேர்ந்து குடும்ப பாரத்தை சுமக்க வேண்டி ஏற்பட்ட நிர்ப்பந்தத்தால், க.பொ.த. உயர்தரக் கல்வியை இடைநடுவில் கைவிட நேர்ந்தது என்கின்றார் அவர்.

இதனைத் தொடர்ந்து, தாயாரின் அப்பம் சுட்டு விற்கும் தொழிலுக்கு ஒத்தாசையாக இருந்து வந்ததோடு, ஏனைய உணவுகளைத் தயாரிப்பது பற்றியும் தாயாரிடம் பழகிக்கொண் டேன்.

உணவுகளைத் தயாரிக்க நன்கு பழகிக் கொண்ட நான், கடந்த 2017ஆம் ஆண்டு 'காவியா' பெண்கள் அபிவிருத்தி அமைப்பின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட 'அமிர்தம்' பாரம் பரிய உணவகத்தை நடத்துவதற்கு தலைமை தாங்கினேன். இதில் என்னுடன் சேர்த்து 15 பெண்கள் வேலை செய்கின்றார்கள். நாங்கள். 15 பேரும், 15 வகையான உணவுகளைத் தயா ரிப்போம்.

எமது உணவகத்தில் வேலை செய்யும் அத்தனை பெண்களும் கணவரின்றி நலிவுற்ற பெண்களேயாவர் என்கின்றார் அவர்.

'அமிர்தம்' உணவகம் ஆரம்பிக்கப்பட்ட போது, வியாபார நுட்பம் பற்றிய அறிவு எனக்கு போதியளவாக இருக்கவில்லை. 'அமிர்தம்' உணவகம் ஆரம்பிக்கப்பட்டு, சுமார் 6 மாத காலத்தில். 'காவியா' பெண்கள் அபிவிருத்தி அமைப்பினால் 35 பெண்களைத் தெரிவு செய்து 'வியாபாரம் என்றால் என்ன' எனும் தலைப்பில் 7 நாள் பயிற்சிப்பட் டறை நடத்தப்பட்டது. அதில் கலந் துகொண்ட நான், வியாபாரத்தின் நுட்பம் பற்றிய அறிவை அறிந்து கொண்டதோடு, அதை எமது வியாபாரத்திலும் நடைமுறைப்படுத்த தொடங்கினேன். அதிலி ருந்து உணவகத்தை நான் சிறந்த முறையில் நடத்தி வருவதோடு, இலாபத்தையும் பெற்று வருகின்றேன் என்கின்றார் அவர்.

இது இவ்விதமிருக்க, எமது உணவகம் ஆரம் பிக்கப்பட்ட நிலையில் நான் பல சவால்களை எதிர்நோக்கினேன். எமது உணவகமானது சுமார் 2 வருடகாலம் இலாபத்துடன் சிறந்த முறையில் இயங்கி வந்தபோதிலும், பின்னர் போட்டி மனப் பான்மை காரணமாக வீழ்ச்சியடையத் தொடங் கியது.

இவ்வாறான நிலையில், நான் புதியதொரு உத்தியைக் கையாண்டேன். அதாவது, கடின மென்று ஏனையோர் செய்யத் தயங்கும் உண வுகளை நான் தயாரிக்கத் தொடங்கினேன். இதனைத் தொடர்ந்து, எமது உணவகம் மீண்டும் முன்னேற்றம் காணத் தொடங்கியது.

சைவ உணவுகள் மாத்திரமே விற்பனை செய் யப்படும் எமது உணவகத்தில், இலைக்கஞ்சி யிலிருந்து சகலவிதமான உணவுகளும் மூன்று வேளைகளிலும் விற்பனை செய்யப்படுகின் றன. அத்தோடு, சிற்றுண்டிகளும் விற்பனை செய்யப்படுகின்றன. மேலும், அசைவ உணவு களுக்காக வாடிக்கையாளர்கள் என்னிடம் ஓடர் செய்யும் பட்சத்தில், அவற்றை எனது வீட்டில் வைத்து தயாரித்து விற்பனை செய்கின்றோம் என்கின்றார் அவர்.

எப்போதும் எமது உணவகத்தில் உணவுக ளுக்கு கேள்வி அதிகம் காணப்படுவதோடு, மிகவும் பரபரப்பான இக்காலகட்டத்தில் பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாண வர்கள், வேலைக்குச் செல்வோர் என்று அனைவ ரும் வந்து தங்களுக்கு விரும்பிய உணவுகளை எம்மிடம் வாங்கிச் செல்கின்றனர்.

மேலும், தற்போது சமையல் எரிவாயுவுக்கு தட்டுப்பாடு நிலவும் இக்காலப்பகுதியில் எமது பிரதேசத்தில் அனேக மான உணவகங்கள் மூடப்படு வதும் திறப்பதுமாக காணப்படு கின்றன. ஆனால், எமது உணவக வியாபாரமானது சோபை இழந் துவிடவில்லை. தற்போது நிலவும் சமையல் எரிவாயுத் தட்டுப்பாட்டினால் வீடுகளில் உணவுகளைத் தயாரிக்க முடி யாதவர்கள் கூட, எமது உண வகத்தில் உணவுகளை வாங் குகின்றனர். இதனால் எமது வியாபாரம் பெருகுகின்றது என்கின்றார் அவர்.

நாமும் வரிசையில் காத்தி ருந்து சமையல் எரிவாயுவை பெற்றுக்கொண்ட சந்தர்ப்பங் களும் உள்ளன. தற்போது மாற்றீடாக, விறகு அடுப்பிலும் தூசு அடுப்பிலும் உணவுகளை சமைக்கத் தொடங்கியுள்ளோம் என்கின்றார்.

நான் ஒரு பெண்ணாக இருந் துகொண்டு கடினமான முயற்சிக்கு மத்தியில் எமது வியாபாரத்தை கவனித்து வருகின்றேன். நேர முகாமைத்துவத்தைக் கையாள்வதே எனக்கு பெரிய விடயமாக இருக்கும். வீட்டுக் கடமைக ளையும் கவனித்துக்கொண்டு எமது வியாபாரத் தையும் சிறந்த முறையில் கவனிக்கின்றேன்.

எமது வியாபாரத்திற்கு நான் தலைமை தாங்கி யபோது, ஒரு வகையான பீதியை, வெட்கத்தை உணர்ந்தேன். இருந்தபோதிலும், அவற்றை ஒருபு றம் தூக்கி எறிந்துவிட்டு எனது காலில் நான் நிற்க வேண்டுமென்று மனஉறுதியை ஏற்படுத்தினேன். ஏனையோருக்கு பயந்தால், எனது வாழ்க்கையில் முன்னேற முடியாது என்பதை உணர்ந்தேன்.

ஆகையால், என்னைப் போன்ற பெண்களுக்கு நான் கூற விரும்புவது யாதெனில், பெண்களா கிய அனைவரினுள்ளும்; ஏதோவொரு திறமை ஒளிந்துகொண்டிருக்கின்றது. அத்திறமையை நாம் அடையாளம் கண்டு, உரிய முறையில் பயன்படுத் திக்கொள்ள வேண்டுமென்பதே எனது எதிர்பார்ப் பாகும்.

எனது வாழ்க்கையில் முன்னேறி வரும் எனக்கு, சமூகத்தில் நலிவுற்ற பெண்களை முன்னிலைக்கு கொண்டுவர வேண்டுமென்று மனோ தைரியம் ஏற்பட்டுள்ளதோடு, அதற்கான நடவடிக்கையி லும் நான் ஈடுபட்டு வருகின்றேன் என்கின்றார் அவர்.

**யோகமலர் அஜித்குமார்**

ஆரம்பத்தில் ஓர் ஆசிரியையாக கடமையாற்றி வந்த எனக்கு, சமூகத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் வாழும் மக்களுடன் பழகுவதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. அவ்வேளையிலேயே, அச்சமூகத்தை வலுவூட்ட வேண்டுமென்று எண் ணினேன். இந்நிலையில், எனது ஆசிரியைத் தொழிலைக் கைவிட்டு, பெண்களுக்கான சமூகப் பணியை முதற்கட்டமாக முன்னெடுக்க தொடங் கினேன் என, 'காவியா' பெண்கள் அபிவிருத்தி அமைப்பின் ஸ்தாபகர் திருமதி யோகமலர் அஜித் குமார் தெரிவித்துள்ளார்.

கடந்த 2002ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட 'காவியா' பெண்கள் அபிவிருத்தி அமைப்பா னது, நலிவுற்ற பெண்களுக்காக மாத்திரமின்றி, சமூகத்தில் நலிவுற்ற ஆண்களின் முன்னேற்றத் திற்கும் கைகொடுக்கத் தொடங்கியது. 'ஆண், பெண் இருவருக்கும் சமமான முன்னுரிமை' எனும் கொள்கையுடன் இவ்வமைப்பு இயங் கத் தொடங்கியது. ஆரம்பத்தில், மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேச செயலகத்தை மையப்படுத்தி தனது சமூகப் பணியை தொடங் கிய 'காவியா' பெண்கள் அபிவிருத்தி அமைப் பானது, தற்போது கிழக்கு மாகாணம் முழுவதும் அதன் பணியை முன்னெடுக்கும் வகையில் விரி வடைந்துள்ளது.

தற்போது இவ்வமைப்பினால், 75 சதவீதமான பெண்களும் 25 சதவீதமான ஆண்களும் பயன டைந்து வருவதாகவும், அவர் தெரிவித்துள்ளார்.

யுத்த சூழ்நிலையால் பாதிக்கப்பட்ட குடும் பங்கள், கணவனை இழந்த மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், ஏழ்மையில் வாழும் குடும்பங்கள், இளவயதுத் திருமணம், சிறார் களின் பாடசாலை இடைவிலகல் உள்ளிட்ட பிரச்சினைகளை கவனத்திற்கொண்டு, அப்பி ரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண் டுமென்பதன் அடிப்படையில் எமது அமைப்பு செயற்படத் தொடங்கியது.

பெண்களின் பிரச்சினைகளை நோக்கிய போது, பெண்களின் தலைமைத்துவ பண்பு குறைவாக காணப்பட்டமை, சமூக, பொருளா தாரத்தில் பெண்கள் மந்தகதியில் காணப்பட் டமை, ஆண்களில் பெண்கள் தங்கி வாழ்தல், வீண் பொழுதுபோக்கல் உள்ளிட்ட பிரச்சினை கள் அடையாளம் காணப்பட்டன.

இந்நிலையில் ஆண்களுக்கு ஒத்தாசையாக பெண்களும், பெண்களுக்கு ஒத்தாசையாக ஆண்களும் இருக்கும் வகையில், வேலைத் திட்டங்கள் எம்மால் முன்னெடுக்கப்பட்டன.

பெண்களின் வீட்டுக் கடமைகளுக்கான நேரம் போக, எஞ்சிய நேரத்தை பெறுமதி மிக் கதாக மாற்றியமைத்தல், சிறுதொழில் முயற்சி, அதில் பணம் சம்பாதித்தல், சேகரித்தல், கல்வி யறிவூட்டல் போன்ற விடயங்களை கற்றுக்கொ டுத்து, அவர்களை வளமாக்கினோம்.

இதில் பெரும்பாலான பெண்கள் முன்னே றியதோடு, சுயதொழில் செய்து சேமிக்கத் தொடங்கினார்கள். இவ்வாறு முன்னேறிய வர்களில் ஒருவரே, இளம் பெண் சுயதொழில் முயற்சியாளரான திருமதி வாசுகி சிவராஜா. அவரே 'அமிர்தம்' உணவகத்தின் தலைவ ராவார். தற்போது எமது நாட்டில் நிலவும்; பொருட்களின் விலையேற்றம், மூலப்பொ ருட்களின் தட்டுப்பாடு போன்ற பொருளாதார தொய்வு நிலை, எமது சமூகப் பணியிலும் சற்று தொய்வை உருவாக்கியுள்ளது. இத் தொய்வு நிலைக்கு மத்தியிலும் எமது சமூகப் பணியை முன்னெடுப்பதே எமது தற்போ தைய சவாலாக காணப்படுகின்றது என்கின் றார் அவர். 'காவியா' பெண்கள் அபிவிருத்தி அமைப்பை நான் உருவாக்க முற்பட்ட வேளையில், என்னால் இப்பாரிய சமூகப் பணியை முன்னெடுக்க முடியுமா என்ற தயக் கம் காணப்பட்டது. இருந்தாலும், அத்தயக் கத்திற்கு இடங்கொடுக்காமல், திடமான மன நம்பிக்கையுடன் இவ்வமைப்பை உருவாக்கி னேன்.



அத்தயக்கம் கூட எனக்கு சாதிக்கக்கூடியதாக அமைந்து விட்டது. எத்தடைகள் வந்தா லும் வென்று செல்வோம் என் கின்றார் அவர்.

ஆர். சுகந்தினி ...✍

## ஐந்து கவிதைத் தொகுப்புகளின்... 05ஆம் பக்க தொடர்...

ஒரு பொறுப்பற்ற சமூகத்தின்மீதான கோபத்தை வெளி ப்படுத்தும் இவரது கவிதைகள், சிறியது யரத்தையேனும் கடந்து செல்லமுடியாத எமக்கு எப்படி பசித்தவனை, நைந்து மெலிந்தவனை கடந்து செல்லமுடிகிறது என்ற ஏக்கத்தில் முடிகின் றன.

ஆற்றாமைகளும் துயரங்களும் வாழ்வில் நிறைந்து போய்க்கிடந்தாலும், எல்லாத் துயரங்க ளுக்குப் பிற்பாடும் ஒரு வாழ்க்கை மீதமிருக்கிறது என்றும் அது மகிழ்ச்சிக்காக மாத்திரமே காத்திருக் கிறது என்றும் இவது கவிதைகள் ஒலிக்கின்றன.

நம்பிக்கை என்ற ஒற்றைக்கயிற்றைப் பிடித் துக்கொண்டுதான், இதுவும் கடந்து போகும் என்ற நம்பிக்கையை நம்முள் கிருஷ்ணபிரியன் விதைக்கிறார்' என்று வேணி சதீஸ் தனது விமர் சன உரையில் தெரிவித்தார்.

'மலையகத்தின் இடதுசாரிக்கவிஞராகத் திகழும் கிருஷ்ணபிரியன் மலையக மக்களின் விடுதலை நோக்கிய பயணத்தை வலியுறுத்தி, எளிமையான மொழியில், அனைத்து தரப்பினரையும் சென் றடையும் நோக்கில் தனது கவிதைகளை ஆக்கி யிருப்பது சிறப்பானதாகும். மூதன்னை என்ற படிமம் மனதில் எத்தனையோ உணர்வுகளை எழுப்பிச் செல் கின்றன. மூதன்னையின் பாடல் என்ற தலைப்பே அற்புதமான உணர்வுகளை ஏற்படுத்துகின்றன' என்று 'நிறமற்ற மனிதர்கள்' சிறுகதைத் தொகுப்பின் ஆசிரியை பூங்கோதை தனது உரையில் தெரிவித்தார்.

'கருணாகரனின் காட்சிப்படுத்தல்களும் அலா தியான கற்பனையும் புதுமை நோக்கும் அழகி யலும் அவரது கவிதைகளுக்கு புதிய மெருகு சேர்க்கின்றன. இரவு என்பதையே ஒரு மனித னாக உருவகித்து தனது கற்பனை வீச்சை தனது 'இரவின் தூரம்' என்ற கவிதைத்தொகுப்பிலே நன்கு வெளிப்படுத்தியிருக்கிறார். கவிதையின் வடிவமும் பாடுபொருளும் வாசகனை நன்கு ஈர்ப் பனவாய் உள்ளன ' என்று மாதவி சிவலீலன் தனது விமர்சன் உரையில் குறிப்பிட்டார்.

'ஈழத்துக் கவிஞர்களை மக்கள் மத்தியில் கொண்டு செல்லும் அரிய பணியை இம்மா திரி விமர்சன அரங்குகளே முன்னெடுக்கின் றன. யாப்பு சிம்மாசனத்தில் வீற்றிருந்த காலம் போய், கருத்துகள் ஜனநாயகப்படுத்தப்பட்டு , புதிய வீச்சுடன் எழுந்திருக்கும் புதுக்கவிதையின் செழுமையை கருணாகரனின் 'இரவின் தூரம்' கவிதைகள் புலப்படுத்துகின்றன. கருணாகரனின் கவிதைகள் இத்தொகுப்பில் புதிய களத்தில், விபத் திற்குள்ளாகி மருத்துவமனையில் வலியோடும் துயரோடும் போராடும் மனநிலையில் எழுதப்பட் டுள்ளன.

மோதலில் ஆரம்பித்து, காதலாகிக் கசிந்து முடிகிற தன்மையில் இயல்பான வரிகளில் வந்தி ருக்கின்றன. விரிந்து பரந்த ஈழத்துப் பூங்காவில் 'இரவின் தூரம்' நிலைபெற வல்லது' என்று விமர் சகர் மயூரன் கருத்துத் தெரிவித்தார்.

'அகதிகளை சட்ட விரோதக் குடியேறிகளாகக் கருதி, தமிழகத்தில் அமைக்கப்பட்டுள்ள தடுப்பு முகாம்களில் முப்பது ஆண்டுகளாக வாழும் விஜி தரனின் கொடூர வாழ்வின் பாடுகளை 'குருதி வழியும் பாடல்' கவிதைத்தொகுப்பு வெளிக் கொண்டு வந்திருக்கிறது. 'மொழி கொண்டு ஒன் றாவோம் என்று கூவித்திரிகையில், மொழி ஒன் றாகினும் நிலம் வேறான பரதேசிகளில் நானும் ஒருவன்' என்று குரல் தரும் தமிழகத்து மலையக அகதி ஒருவரின் குருதி வழியும் பாடல் இந்தக்க விதை. உலகின் மிக இழிந்த வர்க்கமாக தொழிற் படும் கியூ பிராஞ்சின் வதைகள் சகித்துக்கொள்ள இயலாதவை.

இவர்களின் கைகளில் ஈழத்து அகதிகள் படும் அவஸ்தையை விஜிதரன் தனது அனுபவத்திலி ருந்து கவிதைகளாக வடித்திருக்கிறார்' என்று அரசியல் செயற்பாட்டாளர் தோழர் வேலு தனது விமர்சன உரையில் தெரிவித்தார்.

கவிதைத்தொகுப்புகளின் வித்தியாசமான தேர்வும், பெண் விமர்சகிகள் பெருமளவு பங்கு கொண்டதும், பெருந்தொற்று நோய்க்குப்பின்ன ரான கூட்ட ஒழுங்கும் குறிப்பிட்டுக்கூற வேண்டிய அம்சங்களாகும்.

மயிலங்கூடலூர் நடராஜன், 'நடு' கோமகன், ஐ.தி.சம்பந்தன் ஆகியோரின் மறைவிற்கு கூட்டத் தில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

பதினெட்டு ஆண்டுகளாக கலை, இலக்கியம், சினிமா, ஓவியம் என்று கனதியான செயற் பாட்டை மேற்கொண்டுவந்த விம்பம் அமைப்பு, பெருந்தொற்றுக்குப் பின்னர் லண்டனில் நிகழ்த் திய இரண்டாவது தொடர் இலக்கிய நிகழ்வு இது என்பது குறிப்பிடத்தக்கது.

---

சூழல் அமைச்சு

## புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகம் (புஅசுப)

# பதவி வெற்றிடங்கள்

1992 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க சுரங்கங்கள் மற்றும் கனிப்பொருட்கள் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகத்தில் நிலவும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| 01. | புவி இயற்பியலாளர் | 02 |
| 02. | பதிவாளர் | 01 |
| 03. | உதவிப் பணிப்பாளர் (பெறுகை) | 01 |
| 04. | துளையிடல் அலுவலர் | 01 |

### 01. புவி இயற்பியலாளர் (எம்எம் 1-1)

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்:**

***கல்விரீதியானது:***

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பௌதீகவியலை துணைப்பாடமொன்றாக புவிச்சரிதவியலில் பெற்ற விஞ்ஞானமாணி (விஷேட) (1 ஆம் அல்லது 2 ஆம் வகுப்பு) பட்டம்.

**மற்றும்**

***சேவை அனுபவம்:***

முதலாம் பட்டதாரிப் பட்டத்தைப் பெற்ற பின்னர், பதவிக்கு உரித்தான வகையில் புவி இயற்பியல் முறைமைகள் துறையில் பெற்ற ஆகக் குறைந்தது ஒரு (01) வருட பட்ட பின் தகைமைப் பட்ட அனுபவம்.

**உள்ளக விண்ணப்பதாரிகள் (கீழேயுள்ள 1 அல்லது 2 இற்கானது)**

***கல்விரீதியானது:***

1. வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு மேற்குறிப்பிட்டுள்ள தேவைப்படுத்தப்பட்டுள்ள தகைமைகளை பெற்றிருத்தல்.

***சேவை அனுபவம்:***

2. புவி இயற்பியல் முறைமைகள் துறையில் 'கனிஷ்ட முகாமையாளர் வகையிலுள்ள' (ஜேஎம் 1-1) பதவியொன்றில் ஆகக் குறைந்தது ஐந்து (05) வருட திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

### 02. பதிவாளர் (எம்எம் 1-1)

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்:**

***கல்விரீதியிலானது:***

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட புவியியலில் (1 ஆம் 2 ஆம் வகுப்பு) பெற்ற விஷேட பட்டதாரிப் பட்டம்.

**மற்றும்**

***சேவை அனுபவம்:***

முதலாம் பட்டதாரிப் பட்டத்தைப் பெற்ற பின்னர், Mineral Titling/GIS and remote Sensing/ Cartography ஆகியவற்றில் ஆகக் குறைந்தது ஒரு (01) வருட பட்டப்பின் தகைமைப் பட்டம்.

**உள்ளக விண்ணப்பதாரிகள் (கீழேயுள்ள 1 அல்லது 2 இற்கானது)**

***கல்விரீதியிலானது:***

1. வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு மேற்குறிப்பிட்டுள்ள தேவைப்படுத்தப்பட்டுள்ள தகைமைகளை பெற்றிருத்தல்.

***சேவை அனுபவம்:***

2. பதவிக்குரித்தான Mineral Titling துறையில் 'கனிஷ்ட முகாமையாளர் வகையிலான' பதவியில் ஆகக் குறைந்தது ஐந்து (05) வருட திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

### 03. உதவிப் பணிப்பாளர் (பெறுகை) - எம்எம் 1-1

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்:**

***கல்விரீதியிலானது***

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட முகாமைத்துவம் / பொருளாதாரம் / சந்தைப்படுத்தல் / கணக்கியல் அல்லது பெறுகை தொடர்பான ஏதாவதொரு பட்டதாரிப் பட்டம்.

**மற்றும்**

***சேவை அனுபவம்:***

முதலாம் பட்டதாரிப் பட்டத்தைப் பெற்ற பின்னர், பதவி தொடர்பான பெறுகை துறையில் ஆகக் குறைந்தது ஒரு (01) வருட பட்டப்பின் தகைமைப் பட்டம்.

**உள்ளக விண்ணப்பதாரிகள் (கீழேயுள்ள 1 அல்லது 2 இற்கானது)**

***கல்விரீதியிலானது:***

பதவி தொடர்பான பெறுகை துறையில் 'கனிஷ்ட முகாமையாளர் வகுதியில்' (ஜேஎம் 1-1) இற்கான பதவியொன்றில் ஆகக் குறைந்தது ஐந்து (05) வருட திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

***வயதெல்லை:*** (01, 02 மற்றும் 03 இற்கானது) வயதானது 22 வயதிற்கு குறைவில்லாமலும் 45 இற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு மேல் வயதெல்லை பிரயோகப்படுத்தப்பட மாட்டாது.

சம்பள மட்டமானது 02/2016 என்ற இலக்கமுடைய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரமானது.

**MM-1-1 53,175-10x1,375-15x1,190-95,575** ரூபா

### 04. துளையிடல் அலுவலர் - ஜேஎம் 1-1

வெளிவாரி விண்ணப்பதாரிகள் (கீழேயுள்ள 1 அல்லது 2 அல்லது 3 இற்கானது)

***தொழிற்பயிற்சித் தகைமை:***

1. பொறிமுறை துறைக்கு உரித்தான மூன்றாம் நிலை மற்றும் தொழிற்பயிற்சி கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி பயிற்சி நிலையத்தினால் வழங்கப்பட்ட தேசிய வாழ்தொழில் தகைமை 7 ஆம் மட்டத்திற்கு குறையாத தேர்ச்சி சான்றிதழொன்று பெறப்பட்டிருத்தல் வேண்டும்.
2. பொறிமுறை துறைக்கு உரித்தான மூன்றாம் நிலை மற்றும் தொழிற்பயிற்சி கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி பயிற்சி நிலையத்தினால் வழங்கப்பட்ட தேசிய வாழ்தொழில் தகைமை 6 ஆம் மட்டத்திற்கு குறையாத தேர்ச்சி சான்றிதழொன்று பெறப்பட்டிருத்தல் வேண்டும்.

**மற்றும்**

கூட்டுத்தாபனமொன்றில்/ சபை / புகழ்வாய்ந்த நியதிச்சட்ட நிறுவனமொன்றில் பொறிமுறை துறை சார்ந்த பதவியில் ஆகக் குறைந்தது ஐந்து (05) வருட பட்டப்பின் தகைமைப்பட்ட அனுபவம்.

3. பொறிமுறை துறைக்கு உரித்தான மூன்றாம் நிலை மற்றும் தொழிற்பயிற்சி கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி பயிற்சி நிலையத்தினால் வழங்கப்பட்ட தேசிய வாழ்தொழில் தகைமை 7 ஆம் மட்டத்திற்கு குறையாத தேர்ச்சி சான்றிதழொன்று பெறப்பட்டிருத்தல் வேண்டும்.

**மற்றும்**

கூட்டுத்தாபனமொன்றில்/ சபை / புகழ்வாய்ந்த நியதிச்சட்ட நிறுவனமொன்றில் பொறிமுறை துறை சார்ந்த பதவியில் ஆகக் குறைந்தது பத்து (10) வருட பட்டப்பின் தகைமைப்பட்ட அனுபவம்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (கீழேயுள்ள 1 அல்லது 2 இற்கானது)**

1. மேலே கூறப்பட்டவாறு (1 அல்லது 2 அல்லது 3) வெளிவாரி விண்ணப்பதாரிகளினால் தேவைப்படுத்தப்படும் தகைமைகளை பெற்றிருத்தல்.
2. சேவை அனுபவம்:

   பதவிக்கு உரித்தான துளையிடல் துறையில் II ஆம் தரத்தில் (எம்ஏ 2-2) முகாமைத்துவ உதவி - தொழில்நுட்பவியல் பதவியில் ஆகக் குறைந்தது ஐந்து (05) வருட திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

**வயதெல்லை:** ( 03 மற்றும் 04 இற்கானது)

வயதானது 22 வயதிற்கு குறைவில்லாமலும் 45 இற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு மேல் வயதெல்லை பிரயோகப்படுத்தப்பட மாட்டாது.

சம்பள மட்டமானது 02/2016 என்ற இலக்கமுடைய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரமானது.

ஜேஎம் 1-1 42,600-10x755-18x1,135 - 70,580 ரூபா

**பதவிக்கு பிரயோகப்படுத்தப்படும் பொது நிபந்தனைகள்:**

- தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் அவரது சம்பளத்தின் 10% ஐ ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். பணியகமானது 15% ஐ ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் மேலதிகமாக 3% ஐ ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் பங்களிப்புச் செய்யும்.
- அரச கூட்டுத்தாபனங்கள்/நியதிச்சட்ட சபைகளின் விண்ணப்பதாரிகள் அவர்களின் விண்ணப்பங்களை உரித்தான நிறுவனங்களின் தலைவர்களுடாகவே அனுப்புதல் வேண்டும்.
- வைத்தியசாலை மருத்துவ காப்புறுதி திட்டத்திற்கான தகுதி.
- வெளிநோயாளர் மருத்துவ விலைச்சிட்டைகளை மீள்நிரப்புவதற்கான தகுதி.
- விண்ணப்பதாரியின் தகுதியை சரிபார்ப்பதற்காக விண்ணப்பத்தில் இரு உறவினரல்லாத பரிந்துரையாளர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் குறிப்பிடப்படல் வேண்டும்.
- கல்விசார் மற்றும் ஏனைய உரித்தான சான்றிதழ்களின் நிழற்படப்பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

விண்ணப்பத்தை அடக்கியுள்ள தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி

குறிப்பிடப்படல் வேண்டும். 2022.06.09 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் விண்ணப்பங்கள் பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.
தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் மாத்திரமே நேர்முகப்பரீட்சையொன்றிற்கு அழைக்கப்படுவர்.

**பணிப்பாளர் நாயகம்,**
**புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகம்,**
**இல. 569, பிட்டமுல்ல பாதை, பிட்டகோட்டே.**

---

SMIB

## அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கிக்காக தடையில்லாத மின்சார வழங்கலின் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றிற்கான முன்மொழிவிற்கான அழைப்பு

| | |
|---|---|
| **பெறுகையின் விளக்கம்** | தடையில்லாத பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றின் தடையில்லாத மின்சார வழங்கல் |
| **ஏற்புடையதான மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம்** | 5,000 ரூபா |
| **விலைமனுக்கோரல் ஆவணங்களின் வழங்கல் திகதிகள்** | 2022.05.23 ஆம் திகதியிலிருந்து 2022.06.03 ஆம் திகதி வரையும் - மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் |
| **கேள்வியை மூடும் திகதி மற்றும் நேரம்** | 2022.06.06 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| **சமர்ப்பிக்க வேண்டிய விலைமனுப்பிணையின் பெறுமதி** | 60,000 ரூபா |

1. முன்மொழிவு விண்ணப்ப ஆவணங்களை கொழும்பு-03, காலி வீதி, 269 ஆம் இலக்கத்திலுள்ள அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் 4 ஆம் மாடியின் லொஜிஸ்டிக்ஸ் பிரிவின் பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் 2022.05.23 ஆம் திகதியிலிருந்து 2022.06.03 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் படிவங்கள் வழங்கப்படும்.
2. தகுதித்தன்மை தகவுத்திறன் பின்வருமாறு:
   - விலைமனுதாரர் இலங்கையில் ஒன்றிணைக்கப்பட்ட பதிவுக் கம்பனியாக இருத்தல் வேண்டும்.
   - விலைமனுதாரர் வங்கிகள்/ நிதியிடல் நிறுவனங்கள் தடையில்லாத மின்சார வழங்கலின் பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல் தொடர்பாக ஆகக் குறைந்தது 3 வருட அனுபவத்தையும் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஆகக் குறைந்தது 3 செயற்பாட்டு விபரங்கள் தொடர்பு விபரங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
   - விலைமனுதாரர் அனைத்து மாகாணங்களிலும் சேவைகளை வழங்குவதற்கான ஆற்றலும் எந்தவொரு கிளையையும் 4 மணித்தியாலங்களில் சென்றடையும் ஆற்றலையும் கொண்டிருத்தல் வேண்டும்.
   - நாடளாவியரீதியில் விலைமனுதாரர் அல்லது அதனது தாய் கம்பனியானது அல்லது துணைக்கம்பனியானது பராமரிப்பு சேவைகளை வழங்குவதற்காக கிளை வலையமைப்பைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   - விலைமனுதாரர் அவர்களின் தகைமையுடைய பணியாளர்களின் தேர்ச்சியை காட்டுவதற்காக அவர்களின் பெயர்கள் மற்றும் உடனடியாக பழுதுபார்த்தலுக்கான வேலைகளுக்கான கடையின் விபரங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.
3. மேலே சுட்டிக்காட்டியவாறு கேள்விக்குரித்தானதும் அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியினால் ஏற்றுக் கொள்ளப்படக்கூடியதுமானதும் வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்டதும் ஆகக் குறைந்த காலப்பகுதியான 2022.06.06 ஆம் திகதியிலிருந்து வருடமொன்றிற்கு செல்லுபடியாகும் தன்மையிலுமிருக்கும் விலைமனுப்பிணையொன்றுடன் பூர்த்தி செய்யப்பட்ட முன்மொழிவிற்கான விண்ணப்பங்கள் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
4. 2022.06.06 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படுமென்பதுடன் மு.ப. 10 மணிக்குப் பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்பட்டு திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்.
5. மேலதிக விபரங்கள் 0117722879 என்ற இலக்கத்தின் வழியாக அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் லொஜிஸ்டிக்ஸ் பிரிவு, பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியும்.

**பிரதான நிறைவேற்று அலுவலர்/ பொது முகாமையாளர்,**
**அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி,**
**இல. 269, காலி வீதி, கொழும்பு-03.**

---

## களனி பல்கலைக்கழகம் – இலங்கை

# வெற்றிடங்கள்

**2020/2021 கல்வி ஆண்டிற்காக கீழ்க்காணும் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் 2022.06.09ம் திகதி வரை என்னால் ஏற்கப்படும்.**

- தற்காலிக விரிவுரையாளர்
- தற்காலிக செய்விளக்கம் காட்டுநர்
- கனிஷ்ட இணை அங்கத்தவர் (fellow)

**சமூக விஞ்ஞான பீடம்**

தொலைதொடர்பு கல்விப் பிரிவு/ காட்சிப்படுத்தல் கல்விப் பிரிவு/ நூலகம் மற்றும் விஞ்ஞான கல்விப் பிரிவு/ வரலாற்று கல்விப் பிரிவு/ சமூக விஞ்ஞான கல்விப் பிரிவு/ பூகோள விஞ்ஞான கல்விப் பிரிவு/ தொல் பொருளியல் கல்விப் பிரிவு/ பொருளியல் கல்விப் பிரிவு/ சமூக கல்விப் பிரிவு/ அரசியல் கல்விப் பிரிவு/ சர்வதேச கல்விப் பிரிவு/ விளையாட்டு மற்றும் உடற்கல்வி பிரிவு/ தகவல் மற்றும் தொலைத்தொடர்பு கல்விப் பிரிவு

**பீடாதிபதி அதி**

**மானிடவியல் பீடம்**
சிங்கள கல்விப் பிரிவு/ ஹிந்தி கல்விப் பிரிவு/பாலி மற்றும் பௌத்த கல்விப் பிரிவு/ ஆங்கில கல்விப் பிரிவு/ கலாசார மற்றும் கீழைத்தேய சாஸ்திர கல்விப் பிரிவு/ அழகியற்கலை கல்விப் பிரிவு/ (கலை, திட்டமிடல் மற்றும் அரங்கேற்றல் கலைப் பிரிவு, நாடகம் மற்றும் அரங்கேற்றக்கலை மற்றும் கலைப் பிரிவு) வாஸ்து சாஸ்திர கல்வி பிரிவு/ பிறமொழி கல்விப் பிரிவு/ மேலைத்தேய சம்பிரதாய கலாசாரம் மற்றும் கிறிஸ்தவ கலாசார கல்விப் பிரிவு/ஆங்கில மொழி கற்பித்தல் கல்விப் பிரிவு

**பீடாதிபதி அலுவலகம்**
**கல்விமாணி பட்டம் (B.Ed.)**

**வணிக மற்றும் முகாமைத்துவ கல்விப் பீடம்**
**மனித வள முகாமைத்துவ கல்விப் பிரிவு**

**விண்ணப்பிக்கும் முறை:**
மேற்படி பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுவது ஒன்லைன் முறையின் மூலமாகும். விண்ணப்பத்திற்கு பிரவேசித்தல் விண்ணப்பத்தை நிரப்புவதற்கான வழிகாட்டல்கள், கல்வித் தகைமைகள் சம்பளம் மற்றும் சலுகைகள் பற்றிய தகவல்கள். https://www.kln.ac./Vacancies என்ற இணையதளத்திற்கு பிரவேசித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

ஒன்லைன் முறையில் சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 09.06.2022ம் திகதி அல்லது அதற்கு முன் சமர்ப்பித்தல் வேண்டும்.

**பதிவாளர்,**
**களனிப் பல்கலைக்கழகம்.**
2022.05.20

---

The Housewives' companion
Classifieds on
Daily News

---

SMIB

## அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி

## அம்பாறை, பத்தரமுல்ல மற்றும் கண்டி நகரங்களில் அலுவலக வசதிகள் தேவை

அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் அம்பாறை, பத்தரமுல்ல மற்றும் கண்டி கிளைகளுக்காக நகர எல்லைகளுக்குள் பின்வரும் வசதிகளைக் கொண்ட அலுவலக இடவசதி வாடகைக்கு / குத்தகைக்குப் பெற்றுக்கொள்ள தேவையாகவுள்ளது.

| கிளை | சதுர அடி |
|---|---|
| அம்பாறை | 1400 - 1750 |
| பத்தரமுல்ல | 1600 - 2000 |
| கண்டி | 3000 - 3500 |

**தேவைப்படும் வசதிகள்:**

- தரைத் தளமானது பிரதான வீதிக்கு முகப்பாக அமைந்திருத்தல் வேண்டும்.
- குறைந்தபட்சம் 4 வாகனங்களுக்கான தரிப்பிட வசதிகள் இருத்தல் வேண்டும்
- காற்றோற்ற வசதியுடன் கூடிய தனியான மின்பிறப்பாக்கி அறை
- தீக் காப்புறுதி மற்றும் மின்சார பொறியியல் சான்றிதழ்
- விசேட தேவையுடையவர்களுக்கான தனியான நுழைவாயில்
- நீர், தொலைபேசி, திரீ பேஸ் மின்சாரம், மின் பிறப்பாக்கி மற்றும் துப்புரவேற்பாட்டு வசதிகளை உள்ளடக்கிய ஏனைய அடிப்படை தேவைப்பாடுகள்
- அவசர வெளியேற்ற வாயில்
- தரையோடு பதிக்கப்பட்ட தரை

சகல விபரங்களையும் உள்ளடக்கிய முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விண்ணப்பங்களை எதிர்பார்க்கும் மாதாந்த வாடகை, சதுர அடிகளின் அளவு, கட்டிட அங்கீகார திட்ட வரைபடம், இணக்கச் சான்றிதழ் (COC), காணி உறுதியின் பிரதிகள் மற்றும் நில அளவை வரைபடம் மற்றும் ஏனைய நிபந்தனைகளையும் உள்ளடக்கி 2022-06-17ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் ஒன்றில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது பின்வரும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும். கேள்விகள் முடிவுறுத்தப்பட்டதன் பின் உடனடியாகத் திறக்கப்படும்.

**தலைவர் (பெறுகைக் குழு),**
**அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி,**
**இல. 269, காலி வீதி,**
**கொழும்பு 03.**

மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து பிரதான முகாமையாளர் (HR & Logistic) அவர்களை 011-7722879/011-7722784 எனும் தொலைபேசி இலக்கங்களில் தொடர்புகொள்ளவும்.

**பொது முகாமையாளர்,**
**அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி,**
**இல. 269, காலி வீதி,**
**கொழும்பு 03.**

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 12

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | |
| 06 | | 07 | 08 | | 09 |
| 10 | 11 | | | 12 | 13 |
| 14 | | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | | 22 | |
| | | 23 | 24 | 25 | |

பெயர் ....................
வகுப்பு ....................
தொலைபேசி இல ....................
பாடசாலை பெயர் ....................
வதிவிட முகவரி ....................
....................

.................... ....................
மாணவரின் பெயர் வகுப்பாசிரியர்/ பெற்றோர் கையொப்பம்

### இடமிருந்து வலம்

(01) இருபத்தைந்து ஆண்டுகள் நிறைவில் கொண்டாடப்படுகின்ற விழா.
(07) மனிதனுக்கு உணவு, உறையுள் போன்று இதுவும் மிகவும் அவசியம்.
(10) நாம் எமக்குரிய அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்து கொண்டு வாழ வேண்டுமானால் இதுதான் அவசியம். இல்லையேல் வாழ்வில் வறுமை வந்து சேர்ந்து விடும்.
(12) வீதியோரத்தில் கழிவுநீர் வடிந்தோடுகின்ற இடம் இது. (தலைகீழான சொல்)
(15) பாடல்கள் இயற்றுகின்ற கவிஞனை இப்பெயராலும் குறிப்பிடலாம்.
(19) மக்கள் கூட்டத்தைக் குறிக்கின்ற சொல். (தலைகீழான சொல்)
(23) வாழ்க்கையில் மற்றையோரால் எமக்குப் பிடிக்காத காரியங்கள் எத்தனை நடந்தாலும், மனதில் இந்த ஆக்ரோஷம் தோன்றக் கூடாது. (தலைகீழான சொல்)

### மேலிருந்து கீழ்

(01) எமது அன்றாட உணவில் இயற்கையான சுவையூட்டியாக இதனைப் பயன்படுத்துகின்றோம். கறி, சம்பல் போன்ற பலவகை உணவுகளுக்கும் அவசியம். இது இன்றேல் கறி சுவைப்பதில்லை.
(03) கருங்கல், மரம் போன்றவற்றில் சிலை, சித்திர வேலைப்பாடுகளை செய்வதற்குத் தேவையான செதுக்கல் உபகரணம். (தலைகீழான சொல்)
(04) வினாக்கள் தொடுத்தால், பதிலாகக் கிடைப்பது.
(09) மகாத்மா காந்தி போன்ற உத்தமர்களின் பெயர்களுக்குப் பின்னால் இச்சொல் பயன்படுத்தப்படுகின்றது.
(12) சிலப்பதிகாரத்தில் இவன் முக்கிய பாத்திரம். செய்யாத குற்றத்துக்காக மரணதண்டனைக்கு உள்ளானவன். (தலைகீழான சொல்)
(15) அனைத்து உயிர்கள் மீதும் கொள்ள வேண்டிய நேசம்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 11

### விடைகள்

**இடமிருந்து வலம்**

(01) அமைதி (04) கடை (06) இடி (08) கடுகு
(12) கல்வி (15) ஆல் (19) தலை (21) புயல்
(24) மீன்

**மேலிருந்து கீழ்**

(01) அடிமை (02) இமை (04) கடுகதி (05) குடை
(08) கல் (12) புதல்வி (18) கால்

## குறுக்கெழுத்துப் போட்டி இல: 10

### பரிசு பெறுவோர்

**முதலாம் பரிசு**
**எம்.ஆர். அப்ரி,**
தரம் 10, (ஆங்கிலப்பிரிவு)
கே/மா/சாஹிரா தேசியக்கல்லூரி,
மாவனல்ல.

**இரண்டாம் பரிசு**
**கனகசிங்கம் வினோபா,**
தரம் 06, கமு/கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலை,
69சி, வட்டவிதானை வீதி,
கல்முனை 02.

**மூன்றாம் பரிசு**
**ஜே.எம். சாஹில்,**
தரம் 05 பி, களு/ஜீலான் மத்தியக்கல்லூரி,
ஹேனமுல்லை, பானந்துறை.

### பாராட்டு பெறுவோர்

**1. பஹ்மா,**
தரம் 08ஏ, பென்ஹில் சர்வதேச பாடசாலை,
22/1ஏ, இலாவத்துறை,
கம்பளை.
**2. ஹரிலோஷன் மேகவர்ணன்,**
தரம் 07, ஸாஹிரா ஆண்கள் கல்லூரி,
கட்டுகஸ்தொட்டை
**3. நவாப் பாத்திமா ரிப்தியா,**
தரம் 05, அல் அமான் மு.ம.ம.வி.,
கல்லொலுவ,
மினுவங்கொடை.
**4. எம்.ஐ. அய்னா,**
தரம் 05,
ப/ பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரி,
தயாகுணசேகர வீதி,
பதுளை.
**5. பிரனுகா பிரசாந்த்,**
தரம் 03, மட்/வின்சன்ற் மகளிர் தேசிய பாடசாலை,
மட்டக்களப்பு.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 12
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



குறளமுதம் :

செய்வினை செய்வான் செயல்முறை அவ்வினை
உள்ளறிவான் உள்ளம் கொளல்.

***தெளிவுரை :***
*செயலை செய்கின்றவன் செய்ய வேண்டியமுறை, அந்தச் செயலின் உண்மையான இயல்பை அறிந்தவனுடைய கருத்தைத் தான் ஏற்றுக்கொள்வதாகும்.*

# ஒற்றுமையே பலம்

**“இகலெதிர் சாய்ந்தொழுக வல்லாரை யாரே மிகலூக்கும் தன்மை யவர்”** என்கிறார் வள்ளுவப் பெருந்தகை.

வேற்றுமையை விட்டு ஒற்றுமையுடன் யாரெல்லாம் வாழ்கின்றார்களோ, அவர்களை தோற்கடிக்க முடியாது என்பதே அதன் கருத்தாகும்.

ஒற்றுமை எனப்படுவது இவ்வுலகில் வாழ்கின்ற அனைத்து உயிரினங்களுக்கும் அவசியமான ஒன்றாகும். ஆதிகால மனிதர்கள் கூட்டம் கூட்டமாகவே குடிசைகள் அமைத்து வாழ்ந்து வந்தார்கள்.

கூட்டமாக வாழ்ந்து வருதல் அவர்களுக்கு பாதுகாப்பைத் தந்ததோடு, குழுவாக வேட்டையாடி அதன் மூலம் கிடைக்கின்ற உணவை பகிர்ந்துண்டு ஒற்றுமையாக வாழ்ந்தார்கள்.

மனிதர்கள் மட்டுமின்றி விலங்குகள் பறவைகள் உட்பட அனைத்து உயிரினங்களும் ஒற்றுமையாக வாழ்தலை விரும்புவதோடு, அவை பெரும்பாலும் கூட்டாகவே வாழ்கின்றன.



ஏனைய விலங்குகளால் ஆபத்து நேரும் போது ஒன்றாகத் திரண்டு அதனை எதிர்கொள்கின்றன. காடுகளில் வாழும் விலங்குகளான யானைகள், மான்கள், சிங்கங்கள் அனைத்துமே கூட்டாக வாழ்பவையே.

ஒற்றுமைக்கு மிகச்சிறந்த உதாரணமாக விளங்கும் பறவையினம் காகம். காகங்கள் ஏதேனும் சிறு உணவைக் கண்டால் கூட, சத்தமாகக் கரைந்து தன் கூட்டத்தை அழைத்தே உண்ணும்.

மேலும் தேனீக்கள் ஒற்றுமைக்கு மற்றுமொரு சிறந்த எடுத்துக்காட்டு. தேனீக்கள் தனித்தனியாக தேனை சேகரித்த போதும், அதனை சேர்ந்தே சேமித்து வைக்கின்றன.

தமது வாழ்விடத்தை ஏதேனும் ஒரு ஆபத்து நெருங்கும் போது கூட்டாகச் சென்று தாக்குகின்றன. அத்துடன் எறும்புகள், கறையான் போன்றவையும் ஒன்றாகச் சேர்ந்து மண்ணைக் குடைந்து வாழ்விடத்தை அமைக்கின்றன. இவ்வாறு விலங்குகளும் பறவைகளும் ஒற்றுமையின் அவசியத்தை உணர்ந்து கூட்டாகச் செயற்படுகின்றன.

இவ்வுலகில் வாழ்கின்ற மனிதர்கள் அனைவரும் இனம், மதம், மொழி என பிரிந்து வேற்றுமையோடு வாழ்கின்றனர். இதனால் இனமத கலவரங்களும் ஏனைய பல சச்சரவுகளும் சமூகத்தில் தோற்றம் பெற்று, மனித இனமே அழிவுப்பாதையை நோக்கி சென்று கொண்டிருக்கின்றது.

இவ்வாறான ஒரு சூழலில் ஒற்றுமையானது மிகவும் அவசியமான ஒன்றாகக் காணப்படுகின்றது. மனிதர்கள் ஒருவரை ஒருவர் புரிந்து நல்லிணக்கத்துடன் வாழ்ந்தால் மட்டுமே அனைவரும் அமைதியான சூழலில் வாழ முடியும்.

ஒவ்வொரு மனிதனும் தவறு செய்பவனாகவே படைக்கப்பட்டுள்ளான். எனவே தவறுகளை மன்னிக்கும் குணமும், புரிந்துணர்வும் அவசியமாகும்.

ஆரம்பகால மனிதர்கள் கூட்டம் கூட்டமாக இணைந்து கூட்டுக் குடும்பங்களாக வாழ்ந்தார்கள். “கூடி வாழ்ந்தால் கோடி நன்மை” என்ற பழமொழிக்கேற்ப கூட்டாக விவசாயம் செய்து உணவை பகிர்ந்துண்டு ஒற்றுமையாக வாழ்ந்தார்கள். ஆனால் தற்காலத்தில் இந்த முறைமை அருகி தனிக்குடும்பமாக வாழ்வதையே விரும்புகின்றார்கள். இதற்கு பிரதான காரணமாக விளங்குவது மக்களிடையே சகிப்புத்தன்மையும், சுயநலமும் அதிகரித்து வருவதாலாகும். எனவே மக்கள் அனைவரும் சகோதரத்துவத்துடனும், ஒருவர் மீது ஒருவர் உள்ளார்ந்த அன்புடனும் வாழவேண்டும். ஒற்றுமையுடன் வாழ்ந்தால் மட்டுமே இந்த சமுதாயம் சீர்கேடுகள் ஏதுமற்று சிறப்பாக விளங்கும்.

இயந்திரமயமான இந்த மனித வாழ்க்கை அழகாக மாற வேண்டுமாயின் நாம் அனைவரும் விட்டுக்கொடுப்புடன், ஒருவரை ஒருவர் அன்பு செய்து வாழ வேண்டும்.

**ஆர். ராஹினி,**
வெளிமடை.

## நாய்



*வீட்டைக் காவல் காக்கிறாய்*
*விரைந்து ஓடி வருகிறாய்*
*சேட்டை செய்யத்துணிகிறாய்*
*செல்லமாக குதிக்கிறாய்*

*குட்டிவாலை அசைக்கிறாய்*
*குறும்புத்தனமும் செய்கிறாய்*
*எட்டி உன்னை பிடிக்க வந்தால்*

*எல்லாத்திசையும் ஓடுகிறாய்*
*நன்றியுள்ள நாய்தான் நீ*
*நம்பிக்கையும் கொண்டாய் நீ*
*எசமான் கொண்ட எதிர்பார்ப்பை*
*இன்றும் என்றும் காப்பாய்!*

பசறையூர்
**மல்லிகா பத்மநாதன்**

## மயில்

மயில்கள் பற்றி பாடப் புத்தகத்தில் படித்திருப்போம். மயில்கள் 20 ஆண்டுகள் வரை உயிர் வாழும் தன்மை கொண்டது. ஆனால், பூங்காக்கள் மற்றும் மனித தடைக்கு உட்பட்ட பகுதிகளில் 40 ஆண்டுகள் வரை உயிர்வாழும். இந்தியாவில் பெரும்பாலான மயில்கள் மனிதர்கள் வேட்டையாடுவதால் உயிரிழக்கின்றன.



பொதுவாக மயில்களின் உடல் அழகான வடிவம் கொண்டிருப்பதால் கண்களை கொள்ளை கொள்ளச் செய்கின்றன.. பெண் மயில்களை விட ஆண் மயில்கள் தான் மிகவும் அழகாக இருப்பவை. இருந்தாலும், கவிஞர்கள் ‘மயில் போல பொண்ணு ஒன்னு‘ என்று கற்பனை செய்வதெல்லாம் ஆண் மயிலை மனதில் நினைத்தே என்பது மட்டும் முரணாகவே இருக்கிறது.

மயில்களுக்கு புராணங்களிலும், கலாச்சாரத்திலும் குறிப்பிடத்தக்க இடமுண்டு. மத வழிபாடுகளிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. அதில் சரஸ்வதிக்கு அடையாளமாகவும், கிரேக்கர்கள் வழிபாட்டிலும் இடம்பிடித்துள்ளது.

வண்ணமயமான மயில்களில் சில குறிப்பிட்டவை தெரிவு செய்து, கலப்பு முறையில் மனிதர்கள் இனப்பெருக்கம் செய்வதில் மயில்கள் வண்ணமற்று உருவாகின்றன.



இதற்கு காரணம் உண்மையில் ஒரு மரபணு மாற்றமாகும். இதுவே வெள்ளை மயில்கள் உருவாக காரணம்.

மயில் எப்படி இனப்பெருக்கம் செய்கிறது என்பது பற்றி ஏராளமான கட்டுக்கதைகள் உண்டு. ஆனால் உண்மை இதுதான். பெண் மயில்களை கவர ஆண் மயில் தன் தோகைகளை விரித்து ஆடுகின்றன. பிறகு கவரப்பட்ட பெண் மயிலுடன் இனச்சேர்க்கை முடிந்தபின் பெண் மயில்கள் 3 முதல் 6 முட்டைகள் இடும். அது அடைகாத்து குஞ்சு பொரித்ததும் வளரும் வரை கோழிகளை போன்று தாய் மயில் அவற்றை பாதுகாக்கும்.

மயில்கள் ஒற்றைத் துணையுடன் வாழ்வதில்லை. அவை இனச்சேர்க்கைக்கு வெவ்வேறு மயில்களையே நாடுகின்றன. அதேபோல் இனப்பெருக்கக் காலத்தில் பல துணையுடனும் இணைவதில்லை.

மயில்களால் 11 வித்தியாசமான ஒலிகளை எழுப்ப முடியும். அந்த ஒலிகள் மனிதர்களுக்கு எரிச்சலூட்டுவதாகவே இருக்கும். பொதுவாக மயில்கள் மழையை அறிவிக்க ஒலி எழுப்புகின்றன. நாய்கள் எழுப்பும் ஒலியை ‘குரைத்தல்‘ என்பது போல மயில்கள் எழுப்பும் ஒலியை ‘அகவுதல்‘ என்கிறோம்.

மயில்கள் சாந்தமான பறவையாகவே பார்க்கப்படுகிறது. எளிதில் மனிதர்களுடன் பழகும் தன்மை கொண்டுள்ளது. அவை பழகும் மனிதர்களிடம் மற்றவர்கள் நெருங்கி பழகுவதை மயில்கள் விரும்புவதில்லை.

மயில்களுக்கு அழகான நீண்ட தோகை இருந்தாலும், நெடும் தூரம் பறக்க இயலாது. அவை குறிப்பிட்ட தூரம் மட்டுமே பறக்கின்றது. அதிலும் குறிப்பாக தன்னை ஆபத்திலிருந்து காத்துக்கொள்ளவே பறக்கின்றன.

மயில்கள் தாவரங்கள், விதைகள், பூக்கள், எறும்புகள், தானியங்கள் மற்றும் சிறிய பாம்புகள், தவளைகள், வண்ணத்துப்பூச்சிகள், எலிகள் உள்ளிட்டவற்றை உண்ணுகின்றன.

மயில்கள் அடர்ந்த காடுகளில் வாழுவதில்லை. அவை குறைந்த மரங்கள் கொண்ட நிலப்பரப்பிலேயே வாழ்கின்றன. இயற்கையாகவே அவை இந்தியா, பர்மா மற்றும் இலங்கையில் பரவலாக காணப்படும்.


மயில் தமிழில் பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகிறது. சிகி, ஞமலி, தோகை, சிகாவளம், சிகண்டி, மஞ்ஞை, ஓகரம், பிணிமுகம், கலாபி, நவிரம், பீலி, கேகயம் என பல்வேறு சொற்கள் மயிலைக் குறிக்க பயன்படுத்தப்படுகிறது. மயூரம் என்பது சமஸ்கிருத சொல்லாகும்.

வேட்டையாடுதல் மற்றும் மக்கள் தொகைப்பெருக்கம் உள்ளிட்ட காரணங்களால் மயில்களின் எண்ணிக்கை குறைந்து வருவதாக ஆய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.




மொஹமட் மஹாரிம், பாத்திமா நசீஹா பேஹம் தம்பதிகளின் புதல்விகள்

## சிறுவர் சித்திரங்கள்



**கே. கேதீஸ்,**
தரம் 08, கம்மடுவ தமிழ் மகா வித்தியாலயம்,
மாத்தளை.



**என். வினோதர்ஷன்,**
தரம் 11, கம்மடுவ தமிழ் மகா வித்தியாலயம்,
மாத்தளை.



**பி. ரமேஸ்வரன்,**
தரம் 07, கம்மடுவ தமிழ் மகா வித்தியாலயம்,
மாத்தளை.



**மு. முமேஷிகா,**
தரம் 09, கலைமகள் தமிழ் வித்தியாலயம்,
இரத்தினபுரி.

# விளையாட்டு



## இந்தியன் பிரீமியர் லீக்

# திறமை காட்டும் இலங்கை வீரர்களை பாராட்டும் சமிந்த வாஸ்



இந்தியன் பிரீமியர் லீக் தொடரில் திறமைகளை வெளிப்படுத்தி வருகின்ற இலங்கை மற்றும் இந்தியாவின் இளம் வீரர்களை பாராட்டிய இலங்கை கிரிக்கெட் முன்னாள் நட்சத்திர வேகப் பந்துவீச்சாளரான சமிந்த வாஸ், அவர்களது எதிர்காலம் எவ்வாறு அமையும் என்பது தொடர்பிலும் தனது நிலைப்பாட்டை தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு நடைபெற்ற ரி 20 உலகக் கிண்ணத் தொடரில் இலங்கை கிரிக்கெட் அணி சிறப்பாகச் செயற்பட்டது. குறித்த தொடரில் சிறப்பாகச் செயற்பட்ட வனிந்து ஹஸரங்க, துஷ்மந்த சமீர, பானுக ராஜபக்ஷ, மஹிஷ் தீக்ஷன ஆகிய வீரர்கள் தற்போது நடைபெற்று வருகின்ற இந்தியன் பிரீமியர் லீக் தொடரின் 15ஆவது அத்தியாயத்தில் தங்கள் அணிகளுக்காக சிறப்பாக விளையாடி வருகின்றனர்.

அது மாத்திரமின்றி, இந்த ஆண்டு முற்பகுதியில் நடைபெற்ற ஐசிசி இன் 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கிண்ணத் தொடரில் சிறப்பாகச் செயற்பட்ட மதீஷ பத்திரன, சென்னை சுபர் கிங்ஸ் அணியில் இடம்பிடித்து, தனது அறிமுகப் போட்டியிலேயே 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றி அசத்தியிருந்தார்.

இந்த நிலையில், இம்முறை இந்தியன் பிரீமியர் லீக் தொடரில் இடம்பிடித்து திறமைகளை வெளிப்படுத்தி வருகின்ற இலங்கை வீரர்கள் குறித்து இலங்கை அணியின் முன்னாள் நட்சத்திர வேகப் பந்துவீச்சாளரான சமிந்த வாஸ் மும்பையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையில்,

இந்த ஆண்டு இந்தியன் பிரீமியர் லீக் தொடரில் இலங்கை அணியில் உள்ள சில வீரர்களுக்கு வாய்ப்பு கிடைத்தது மற்றும்

இந்தியன் பிரீமியர் லீக் தொடரில் அவர்களால் திறமைகளை வெளிப்படுத்த முடிந்தமை மகிழ்ச்சி அளிக்கிறது, இதற்கு சிறந்த உதாரணம் வனிந்து ஹஸரங்க. அண்மைக் காலமாக இலங்கை கிரிக்கெட் அணிக்காக விளையாடி திறமைகளை வெளிப்படுத்தி வருகின்ற நட்சத்திர வீரர். வனிந்துவைப் போல இம்முறை இந்தியன் பிரீமியர் லீக் தொடரில் விளையாடி வருகின்ற ஏனைய வீரர்களும் தங்கள் பொறுப்புகளை சிறந்த முறையில் நிறைவேற்றி வருகிறார்கள். எனவே, இலங்கை அணியின் எதிர்கால நட்சத்திரங்கள் இந்தியன் பிரீமியர் லீக் தொடரில் விளையாடுவது மதிப்புக்குரியது என்று அவர் கூறினார்.

இம்முறை இந்தியன் பிரீமியர் லீக் தொடரில் திறமைகளை வெளிப்படுத்திய புதுமுக வீரர்களான திலக் வர்மா, அபிஷேக் சர்மா மற்றும் உம்ரான் மாலிக் தொடர்பிலும் சமிந்த வாஸ் கருத்து வெளியிட்டிருந்தார். இதில் ஜம்மு காஷ்மீரைச் சேர்ந்த 22 வயதான இளம் வேகப் பந்துவீச்சாளரான உம்ரான் மாலிக் இம்முறை இந்தியன் பிரீமியர் லீக் தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறார். இவர் தொடரின் அதிவேகமான பந்துவீச்சை மேற்கொண்ட வீரராக சாதனை படைத்தார். இதுவரை 13 போட்டிகளில் 21 விக்கெட்டுகளை வீழ்த்தி 2022 இந்தியன் பிரீமியர் லீக் இல் அதிக விக்கெட்டுகள் வீழ்த்தியவர்களில் நான்காவது இடத்தில் உள்ளார்.

உம்ரான் மாலிக்கின் பந்துவீச்சு திறமையை வெகுவாகப் பாராட்டிய சமிந்த வாஸ், அவர் நாளுக்கு நாள் முன்னேற்றம் கண்டு வருவதாகவும், அவர் எதிர்காலத்தில் இந்தியாவின் சிறந்த பந்து வீச்சாளராக இருப்பார் என்றும் சமிந்த வாஸ் கூறினார்.

கடந்த ஆண்டும் இந்தியன் பிரீமியர் லீக் தொடரில் விளையாடியதைப் பார்த்தேன். அவர் தொடர்ந்து அதே இடத்தில் பந்துவீசுகிறார், ரி 20 போட்டிகளில் குறிக்கோளுடன் விளையாடுவது மிகவும் முக்கியமானது. அவர் இந்தியாவுக்கு சிறந்த பந்துவீச்சாளராக இருப்பார். அவர் விரைவில் ஜஸ்பிரித் பும்ராவின் இடத்தை நிரப்புவார். இந்திய தேர்வாளர்கள் அவருக்கு ஒரு வாய்ப்பு கொடுத்தால், நிச்சயம் அவர் நீண்ட தூரம் செல்வார் என்று நான் நினைக்கிறேன்' என்று அவர் குறிப்பிட்டார்.



இந்த ஆண்டு இந்தியன் பிரீமியர் லீக் தொடரில் இளம் வீரர்களான முகேஷ் சௌத்ரி, அர்ஷ்தீப் சிங், அவேஷ் கான், மொஹ்சின் கான் ஆகியோர் தங்கள் திறமையை வெளிப்படுத்தியிருந்தனர். இதுதொடர்பில் பேசிய சமிந்த வாஸ், இந்தியாவின் முதல்தரப் போட்டி மிகவும் சிறந்த நிலையில் இருப்பதாக அவர் தெரிவித்தார்.

'இந்தியாவில் முதல்தர தொடர்கள் சிறந்த முறையில் நடத்தப்பட்டு வருகின்றன. பல முதல்தர விளையாட்டுக் கழகங்கள் திறமையான வீரர்களை உருவாக்குகின்றன. அதனால்தான் திறமையான பந்துவீச்சாளர்கள் உருவாகுவதாக' அவர் மேலும் குறிப்பிட்டார்.

## 2023 கூடைப்பந்து உலகக் கிண்ணம்:

# ரஷ்யா, பெலரஸ் அணிகளுக்கு தடை

பிலிப்பைன்ஸில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள பெண்கள் உலகக் கோப்பை கூடைப்பந்து போட்டியில் பங்கேற்க ரஷ்யா மற்றும் பெலரஸ் அணிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச கூடைப்பந்து சம்மேளனத்தின் (FIBA) செயற்குழுவின் முடிவானது மார்ச் மாதம் உக்ரைன் படையெடுப்பிற்குப் பின்னர், இந்த ஆண்டின் பிற்பகுதியில் சிட்னியில் நடந்த பெண்கள் கூடைப்பந்து உலகக் கோப்பையில் இருந்து ரஷ்யா வெளியேற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

அவர்களுக்குப் பதிலாக போர்ட்டோ ரிக்கோ போட்டியில் இடம் பெறுவார்கள் என்று FIBA உறுதிப்படுத்தியது.

FIBA கூடைப்பந்து உலகக் கோப்பை 2023 ஐரோப்பிய தகுதிச் சுற்றுப் போட்டியின் குழு பி இலிருந்து ரஷ்யா வெளியேறியது மற்றும் மாற்று அணிகள் எதுவும் நியமிக்கப்படாமல், குழு எச் இலிருந்து ரஷ்யா வெளியேறியது.

மூன்று போட்டிகளிலும் வெற்றி பெற்றதன் மூலம் ரஷ்யா தனது குழுவில் முதலிடத்தில் இருந்தது, மேலும் தொடர்ந்து இரண்டாவது போட்டியிலும் உலகக் கோப்பையை உருவாக்கும் விருப்பங்களில் ஒன்றாக இருந்திருக்கும்.

பெலரஸ் அவர்களின் குழுவில் மூன்றாவது இடத்தில் இருந்தது மற்றும் தகுதி பெற்றிருக்க வாய்ப்பில்லை.

ஹங்கேரியில் ஜூலை 9 முதல் 17 வரை நடைபெறவுள்ள இந்த ஆண்டுக்கான FIBA U17 பெண்கள் கூடைப்பந்து உலகக் கோப்பையில் இ ருந்தும் ரஷ்யாவுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.









அவர்கள் செர்பியாவால் மாற்றப்படும், கடந்த ஆண்டு FIBA U16 மகளிர் ஐரோப்பிய சேலஞ்சரின் குழு பி இல் இரண்டாவது இடத்தைப் பிடித்தது, மேலும் அந்த குழுவில் தகுதி பெறாத எந்த குழுவின் ஒரே இரண்டாவது அணியும் மூன்றாவது இடத்தைப் பிடித்த ஹங்கேரிக்கு வழங்கப்பட்டது.

இது ரஷ்யா மற்றும் பெலரஸ் அணிகள் அனைத்து FIBA தேசிய போட்டிகளிலிருந்தும் தடை செய்யப்ப டும் என்பதற்கான தடைகளின் தொகுப்பின் ஒரு பகுதியாகும்.

இந்த ஆண்டு FIBA 3x3 உலகக் கோப்பையு ம் இதில் அடங்கும், அங்கு ரஷ்யாவின் ஆண்கள் ஸ்லோவேனியா மற்றும் பெண்களுக்கு பதிலாக இஸ்ரேல் இடம் பெறுவார்கள்.2022 FIBA 3x3 U18 உலகக் கோப்பையில் இருந்து பெலாரஸ் வெளியேற்றப்பட்டது, ஆண்களுக்கான போட்டியில் லிதுவேனியாவும், பெண்களில் பெல்ஜியமும் இடம்பிடித்துள்ளன."மறு அறிவிப்பு வரும் வரை" ரஷ்யா அல்லது பெலரஸில் FIBA இனி எந்த போட்டிகளையும் நடத்தாது என்பதும் உ றுதி செய்யப்பட்டது.

ரஷ்ய கூடைப்பந்து கூட்டமைப்பு (RBF) தங்கள் வீரர்களைப் பாதுகாக்க இந்த முடிவு எடுக்கப்பட்டதாகக் கூறியது.

சர்வதேச போட்டிகளின் போது ரஷ்ய அணிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய முடியாத காரணத்தால் FIBA இன் முடிவு முதன்மையாக உள்ளது," என்று அவர்கள் ஒரு அறிக்கையில் தெரிவித்தனர்.

"அதே நேரத்தில், பல விளையாட்டுகளில் ரஷ்ய தேசிய அணிகளுடன் நடந்ததைப் போல, முழுமையான தகுதி நீக்கம் எதுவும் இல்லை.

"RBF இன் தலைமை எதிர்பார்க்கப்படுகிறது, புரிந்துகொள்கிறது மற்றும் உலகின் தற்போதைய நிலைமை தொடர்பாக இந்த முடிவை எடுக்கிறது மற்றும் FIBA பிரதிநிதிகளுடன் தொட ர்ந்து தொடர்பில் உள்ளது."

# சென்நியூஸ்ரார் விளையாட்டுக்கழக அணி, திருமகள் விளையாட்டுக்கழக அணி இறுதியாட்டத்திற்கு தகுதி



**யாழ்.விளையாட்டு நிருபர்**

சங்கானை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் சென்நியூஸ்ரார் விளையாட்டுக்கழக அணி, திருமகள் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றன.

கடந்த சனிக்கிழமை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற முதாலவது அரையிறுதியாட்டத்தில் மூளாய் வளர்மதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சென்நியூஸ்ரார் விளையாட்டுக்கழக அணிமோதிக் கொண்டது. இதில் சென்நியூஸ்ரார் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. சென்நியூஸ்ரார் விளையாட்டுக்கழக அணி சார்பில் பாசன் 2 கோலினை பதிவு செய்தார்.

இராண்டவது அரையிறுதியாட்டத்தில் அண்ணாவிளையாட்டுக் கழக அணியை எதிர்த்து திருமகள் விளையாட்டுக்கழக அணிமோதிக் கொண்டது. ஆட்ட நேர முடிவில் இரண்டு அணியனரும் தலா இரண்டு கோல்களை பதிவு செய்ய ஆட்டம் சமநிலையில் முடிவடைந்து. ஆட்டம் வெற்றி தோல்வி காண்பதற்காக வழங்கப்பட்ட சமநிலை தகர்ப்பு உதையில் திருமகள் விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

# தைக்காநகர் எவர்டொப் விளையாட்டு கழகம் பவர் சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது

**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**



அக்கரைப்பற்று பவர் விளையாட்டு கழகம் நடாத்திய அணிக்கு பதினொரு பேர் எட்டு ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட "பவர் சம்பியன் கிண்ணம் 2022" மாபெரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் சம்பியனாக அட்டாளைச்சேனை, தைக்காநகர் எவர்டொப் விளையாட்டு கழகம் தெரிவு செய்யப்பட்டது.

32 விளையாட்டு கழகங்களின் பங்குபற்றலுடன் விலகல் முறையில் நடைபெற்ற இச்சுற்றுத்தொடரின் இறுதிப்போட்டி ஆலையடிவேம்பு தர்மசங்கரி பொது விளையாட்டு மைதானத்தில் அண்மையில் இடம் பெற்றது. இறுதிப்போட்டியில், அக்கரைப்பற்று சம்பியன்ஸ் கழகத்தை எதிர்த்து தைக்காநகர் எவர்டொப் கழகம் எதிர்த்தாடி இறுதிப்போட்டியில் வெற்றிபெற்றதுடன் சம்பியன் கிண்ணம் மற்றும் பணப்பரிசும் வழங்கி வைக்கப்பட்டது.

இறுதிப்போட்டியின் சிறப்பாட்டக்காராக எவர்டொப் அணியின் வீரர் என்.எம்.சியாமும், சுற்றுத்தொடரின் சிறந்த வீரராக அதே அணியின் முஹம்மட் இனாத்தும் தெரிவு செய்யப்பட்டார்.

இச்சுற்றுத்தொடரில் அக்கரைப்பற்று சம்பியன்ஸ் கழகமானது இரண்டாவது இடத்தை பெற்றுக் கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.



## மட்டக்களப்பு மண்முனை மேற்கு

# கோட்ட மட்ட மெய்வல்லுநர் போட்டி: மகிழவெட்டுவான் வித்தியாலயம் முதலிடம்

**கல்லடி குறூப் நிருபர்**

மட்டக்களப்பு மண்முனை மேற்கு கோட்ட மட்ட மெய்வல்லுநர் 2022 ஆம் ஆண்டுக்கான போட்டி நிகழ்வுகள் மட்டக்களப்பு மண்முனை மேற்கு நாவற்காடு நாமகள் வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

மண்முனை மேற்கு கோட்டக்கல்வி பணிப்பாளர் எஸ். முருகேசுப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற கோட்ட மட்ட மெய்வல்லுநர் திறனாய்வு போட்டி நிகழ்விற்கு பிரதம அதிதியாக மண்முனை மேற்கு வலயக்கல்வி பணிப்பாளர் செல்வி அகிலா கனகசூரியம் மற்றும் விசேட அதிதிகளாக மண்முனை மேற்கு வலயக்கல்வி அலுவலக பிரதி கல்விப்பணிப்பாளர்கள், பாடசாலைகளின் அதிபர்கள் கலந்துகொண்டனர்.

மண்முனை மேற்கு கோட்டக்கல்வி பணிப்பாளர் தலைமையில் நடைபெற்ற மண்முனை மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளின் முதலாம் ஆண்டு தொடக்கம் 13 ஆம் ஆண்டு வரையிலான மாணவர்களுக்கிடையில் நடாத்தப்பட்ட 2022 ஆண்டுக்கான மெய்வல்லுநர்ந விளையாட்டு போட்டி நிகழ்வுகளில் பங்கு பற்றி வெற்றி பெற்ற பாடசாலைகளின் மாணவர்களுக்கான சான்றிதழ்களுடன் வெற்றி கிண்ணங்களும், வெற்றி பதக்கங்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இதேவேளை விளையாட்டு போட்டி நிகழ்வில் கலந்துகொண்ட பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் உடற்கல்வி ஆசிரியர்கள், பாடசாலை விளையாட்டுத்துறை பயிற்றுவிப்பாளர் இடையில் போட்டிகள் நடாத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

மண்முனை மேற்கு கல்வி கோட்ட மட்டத்தில் நடாத்தப்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான 2022 ஆண்டுக்கான மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியில் முதலாம் இடத்தினை மகிழவெட்டுவான் வித்தியாலயமும், இரண்டாம் இடத்தினை கன்னங்குடா வித்தியாலயமும், மூன்றாம் இடத்தினை நாவக்காடு நாமகள் வித்தியாலயமும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 மே மாதம் 22ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.